# நினைவுகள்



திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள்

திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NINIAVUGAL**
**Rajeswari Balasubramanim**

First Edition : **2013**

Book Design : **Snegan Publishing House**
Published By : **Sudar Publication**
Wrapper Design : **Krishna kumar**
Sudar : **2**

ISBN : **978-81-927098-0-2**

Book Size : **Demy 1/8**

Pages : 154

Price :

Printed At : **Snegan Publishing House**

Mobile : **0091 9865566410 / 7305866410**
**0091 9283178116**

---

Plot No : 130, S&P Residency, Vanagaram, Chennai - 600 095.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sri Vidya Temple Society**

*6970 East River Road, Rush, NY 14543 USA Tel: (585) 533–1970 Fax: (585) 533–1216*

## முகவுரை

ஸ்ரீமதி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்கள் பிரசித்தி பெற்ற தமிழ் விற்பன்னர், சதாவதானி ஸ்ரீலஸ்ரீ பண்டிதமணி கதிர்வேற்பிள்ளை , போன்ற பல தமிழ் அறிஞர்கள் தமிழ் உலகத்துக்கு அளித்த, ஈழத்தின் உத்திர பாகத்திலுள்ள ஆத்தியடி எனும் கிராமத்தின் பிறந்து வளர்ந்தவர். இவர் ஒரு பூர்ண தீக்ஷை பெற்ற சிரேஷ்ட ஸ்ரீவித்யா உபாசகியாவார். சிரத்தாம்பிகா என்ற தீஷா நாமம் அருளப்பட்ட இவர் பற்பல தேசங்களிலுள்ள அநேக, சைவ, சாக்த, வைஷ்ணவ ஷேத்திரங்களைத் தரிசித்து அதன் மூலம் பெற்ற அனுபவங்களை தொகுத்து நினைவுகள் என்ற தலைப்பில் , சிறு நூலாக வெளியிடுகிறார்கள். இந்த நூல் ஒருவருடைய ஷேத்ராடன அனுபவங்கள் மட்டுமல்லாது உள்நோக்கி ஊடுருவிய ஒரு ஆன்மீக பயணமாகவும் சிறப்புற அமைந்துள்ளது. இந்நூலைத் தமிழ் கூறும் நல்லுலகம் பெரும் வரபேற்பளித்து நன்மையுடைய வேண்டி, எம்பிராட்டி ஸ்ரீராஜராஜேஸ்வரி தேவியை, முழுமனத்துடன் இறைஞ்சி, வாழ்த்துகிறேன்

சைதன்யானநந்த நாத ஸரஸ்வதி ,
பீடாதிபதி, ஸ்ரீ ராஜராஜேஸ்வரீ பீடம்,
ஐக்ய அமெரிக்கா.
விஜயவருஷ, மீன மாச , அபரபஷ பஞ்சமி

*e-mail: info@srividya.org website: http://www.srividya.org*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

திருமதி இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்களின் நினைவுகள் என்னும் நூல் வெளியீட்டுக்கு வாழ்த்துரை வழங்குவதை எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

அமெரிக்காவில், நியூயோர்க்கில், ரொச்செஸ்ரரில் அமர்ந்து அருள்பாலிக்கும் ராஜராஜேஸ்வரி அம்பாளின் ஆலய ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சைதன்யானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் (ஹரன் ஐயா) அவர்களைக் குருவாக ஏற்றுக் கொண்டு ஆன்மீக ஈடேற்றம் கண்ட இராஜேஸ்வரி அக்கா, இலைமறை காயாக இருந்த அறிவுச்சுடர் பிரகாசிக்கத் தொடங்கியதன் காரணமாக, யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பதற்கு அமைய, அவர் பெற்ற ஆன்மீக யாத்திரை பற்றிய அநுபவங்களை எம்முடன் பகிர வேண்டும் என்ற நன்நோக்கோடு ஆன்மீகப் பயணத்தின் இனிய நினைவுப் பகிர்வு என்னும் நூலைத் தொகுத்து எழுதி 2012ல் வெளியிட்டு, மக்கள் மத்தியிற் பெரும் வரவேற்புப் பெற்றதுடன், தொடர்ந்தும் பல ஆக்கங்கள் வெளிவர வேண்டும் என்ற வேண்டுதல்களையும் பெற்றுக் கொண்டார்.

அதற்கிணைய இப்போது அவரது இரண்டாவது வெளியீடான நினைவுகள் என்ற நூலிற்கு வாழ்த்துரை தெரிவிப்பதோடு, அவரது முதல் நூலில் உள்ள சில விடயங்களையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நாயன்மார்களின் சரித்திரத்தைப் படிக்கும் போது, கோயில் கோயிலாகச் சென்று, பல அற்புதங்களையும் செய்து, தேவாரம், திருவாசகம் முதலியவற்றைப் பாடி சைவ சமயத்தைப் பரப்பினார்கள் என்று அறிய முடிகின்றது. இங்கு இந்த நூல் ஆசிரியர் நாடு கடந்து, உலகளாவிய ரீதியில் பல தலங்களையும் தரிசித்து கயிலை தரிசனமும் கண்டு, தன் ஆன்மீக அநுபவங்களை எம் எல்லோருடனும் பகிர்ந்து கொண்டுள்ளார். முக்கியமாக இதில் ஒன்றைக் கூற வேண்டும், கயிலை யாத்திரை பற்றிக் கூறும் போது, நாயன்மார்களின் கயிலை தரிசனம் பற்றிக் கூறி, தனது அநுபவத்தையும் பகிர்ந்து கொண்ட விதம், என் மனதை மட்டுமன்றி, வாசகர்கள் எல்லோரது மனதையும் நன்றாகவே தொட்டிருக்கும் என்பதில் ஐயம் இல்லை. இவரது கயிலை யாத்திரை பற்றிப் படிக்கும் போது நாமும் கயிலை செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தால் உந்தப்படுகிறோம்.

இராஜேஸ்வரி அக்காவின் குணாதிசயத்தைப் பற்றிய ஒரு சிறு குறிப்புடன், இரண்டாவது நூல் வெளியீட்டைப் பற்றிப் பார்ப்போம். கணவர் பாலசுப்ரமணியத்தின் வேண்டுதலுக்கு இணங்க, அவரைக் கனடாவுக்கு அழைத்து வந்து ஒரு நாள் என் வீட்டில் இவர்களைத் தங்க வைக்கும் பாக்கியம் பெற்றேன். அப்பொழுது தான் அக்காவை முழுமையாக அறியவும், உணரவும் முடிந்தது. அவரது கணவனுக்கு (எனது அத்தான்) அவர் செய்யும் சேவை என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்சிலிர்க்க வைத்தது. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் அந்த வரம் எனது அத்தான் பாலசுப்ரமணியத்துக்கு நன்றாகவே கிடைக்கப் பெற்றதை நான் உணர்ந்தேன். அத்தான் கோயிலுக்குச் செல்ல விரும்பும் போது கூட்டிச் செல்வேன். அப்பொழுது அக்கா சொன்ன வார்த்தை இப்போதும் என் காதில் ஒலிக்கிறது. நான் வீட்டில் என் தெய்வத்தை வைத்துப் பரிபாலிக்கும் போது நான் ஏன் கோயிலுக்கு போக வேண்டும். இதில் இருந்து நாம் அவர்களின் தாம்பத்திய உறவை நன்றாகவே புரிந்து கொள்ள முடியும். அக்கா, கணவனின் மறைவிற்குப் பின் உலகெங்கும் உள்ள கோயில்களிற்கெல்லாம் சென்று ஆன்ம ஈடேற்றம் கண்டு வருகிறார். இவரது இரண்டாவது நூல் நினைவுகள் முதல் நூலை விட வித்தியாசமாக அமைந்துள்ளது. இங்கு இவர் தனது பிறந்த ஊராகிய ஆத்தியடிக்கும், குலதெய்வமாகிய ஆத்தியடிப் பிள்ளையாருக்கும் மிக முக்கியத்துவம் கொடுத்து எழுதியுள்ளார். இங்கு நான் இந் நூலின் பொருளடக்கம் முழுவதையும் கூறமுயலவில்லை. காரணம் அது விளக்க உரையாக முடிந்து விடும். குறிப்பாகச் சொல்லப் போனால் இந்நூலிற் தனது ஆன்மீக அறிவு மற்றும் அநுபவத்துடன் பல வித ஆராய்ச்சிகளை நடத்தி பல தேடல்களைத் தேடி எடுத்து, பல உண்மைகளைக் கண்டறிந்து, ஆத்தியடி மக்களின் பண்பு, வாழ்க்கை நிலை என்பதோடு ஆத்தியடிப் பிள்ளையாரின் தோற்றம் தொடங்கி இன்றுவரை ஆலயத்தின் சரித்திரம், வளர்ச்சி பற்றிக் கூறும் போது, சங்கிலி மன்னன் ஆட்சி தொடங்கி, போர்த்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலச் சரித்திரங்களைத் தேடி, முழுச் சரித்திரத்தையும் தனது ஆய்வுடன் தொகுத்து இந்நூலிற் கொடுத்திருப்பது மிகவும் அழகாக அமைந்துள்ளது. ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலின் பரிபாலனம், வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பங்காற்றியோர் அனைவரையும் குறிப்பிட்டு நன்கே அமைந்துள்ளது இந் நூல். முதல் நூலில் அமையாத பல திருத்தலங்களின் வரலாற்றையும் இங்கே எழுதியுள்ளார். சுருங்கக் கூறின் ஆத்தியடி வாழ் மக்கள், ஆத்தியடியைச் சார்ந்த மக்கள் அனைவருக்கும் இந்த நூல் ஓர் சரித்திர ஏடாக, சரித்திர ஆவணமாக அமைகின்றது. எனவே எல்லோரும் இந்நூலைப் பெறுவதன் மூலம் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. அந்த நம்பிக்கையோடு இந்த நூலிற்கு வாழ்த்துரை எழுதுவதன் மூலம் எனது மட்டற்ற மகிழ்ச்சியையும், நூலாசிரியருக்கு மனமார்ந்த அன்புடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி

வணக்கம்

அன்பிற்குரிய

(ஆத்தியடியான் செல்வன்)

திருநாவுக்கரசு திருச்செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

(எம். ஜெயராமசர்மா **(M.Phil(Edu)Dip.in.(Soc)**
(முன்னாள் கல்விப்பணிப்பாளர்)

வாழ்க்கை என்பது வேறு. வாழ்தல் என்பது வேறு. இரண்டும் ஒன்றல்ல. இரண்டும் ஒன்று போல தெரிந்தாலும் இரண்டும் இரு வேறு நிலையாகும். ஆனால் நம்மில் பலரும் இரண்டும் ஒன்றே என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றோம். வாழ்க்கையை வாழ்தல் வேண்டும். பல பேர் வாழ்வதேயில்லை. திருமதி பாலசுப்ரமணியத்துக்கு வாழ்தல் என்றால் என்ன என்பது விளங்கியிருக்கிறது. அதனால் அவர் தனக்குக் கிடைத்த வாழ்க்கையை வாழ்தல் மூலம் யாவருக்கும் எடுத்துக் காட்டியிருக்கின்றார். என்றே எண்ண முடிகின்றது.

நாங்களும் அம்மா, அப்பாவுடனும், சகோதரத்துடனும், உற்றார் உறவினருடனும், நண்பர்களுடனும் இருந்திருக்கின்றோம். இருந்தாலும் கூட எங்களுக்கு அதன் அருமை, பெருமை தெரிவதில்லை. எங்களது பிறந்த இடம் பற்றியோ அதன் வரலாறு பற்றியோ நினைத்துக் கூடப் பார்ப்பதுமில்லை. அதையெல்லாம் பேசுவதால் என்ன வந்துவிடப் போகிறது என்று எண்ணி அப்படியே இருந்து விடுவோம். இதையெல்லாம் ஒரு விஷயம் என்று எடுத்துச் சொல்ல என்ன வேலையில்லாமலா நாங்கள் இருக்கின்றோம் என்றே பலரும் எண்ணுகின்றார்கள். இப்படி எண்ணிய படியால் தான் வாழ்தல் என்பதை இழந்து நிற்கின்றோம்.

ஆனால் திருமதி இராஜேஸ்வரியோ தனது நினைவில் என்ன எல்லாம் இருக்கிறதோ அத்தனையையும் எங்களின் முன் சுவையாக்கித் தந்து நிற்கின்றார். ஆத்தியடியில் தொடங்கி அமெரிக்கா வரை எங்களை அழைத்துச் சென்று தனது நினைவுகளைப் பகிர்ந்து கொள்கின்றார். பகிர்ந்து கொள்ளும் முறையைப் பார்க்கும் பொழுது இவர் பல பரிமாணங்களில் தெரிகின்றார். வரலாற்று ஆய்வாளராக, சமய சிந்தனையாளராக, சமூகவாதியாக, நல்ல கதை சொல்லும் ஆற்றலுள்ளவராக அதே வேளை யாவருக்கும் நல்லவற்றை சொல்ல வேண்டும் என்னும் துடிப்புமிக்கவராகவும் இவரைப் பார்க்க முடிகின்றது.

ஒரு கிராமத்தின் கதை என்று தொடங்கியது முதல் மலேசியாவில் சைவமும் தமிழும் என்பது வரை மிகச்சுவையாக தனது கதை சொல்லும் பாணியைக் கையாண்டு எடுத்துக் கொண்ட விஷயத்தை மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார் இராஜேஸ்வரி அவர்கள்.

ஈழத்தின் பல தலங்களின் வரலாறு சார்ந்த புதிய தகவல்களை தந்து பிரமிக்க வைத்துள்ளார். எங்குதான் தேடி எடுத்தாரோ தெரியவில்லை. அந்த அளவுக்கு அவை மிக அற்புதமாய் இருக்கின்றது. பன்னீரவதாரப் பதிகம் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்கிஷம். அதற்கான விளக்கமும், விநாயகர் பற்றிய விபரிப்பும் அருமை.

பக்கம் பதின்மூன்றில் ஒரு மதத்தால் நடந்தவைகள் இவை. இன்னும் ஒரு புது மதம் எங்கோ பல ஆயிரம் மையில்களுக்கு அப்பால் இருந்து வருகிறது. இதனால் என்ன புது விளைவுகள் வருமோ தெரியாது. ஆகவே நாம் எமது மூதாதைகள் காட்டிய வழியில் நின்று நம்முடைய சமயத்திலேயே இருக்கக்கூடிய சீர்கேடுகளைக் களைந்து நம் சமயத்தை உறுதிப்படுத்த வேண்டும். என்று சொல்வதற்கு எவ்வளவு துணிவு வேண்டும்? அதே வேளை எவ்வளவு அக்கறை வேண்டும்?

இப்படிப் பல நல்ல கருத்துக்களை எல்லாம் தாங்கி நிற்பது தான் நினைவுகள். வீடியோவில் படம் காட்டுவது போல நினைவுகள் வாயிலாக எம்மையெல்லாம் திருமதி இராஜேஸ்வரி அவர்கள் தன்னுடன் கூட்டிச் செல்கிறார். இது அவரின் எழுத்து மாயம். அவருக்கு இறைவன் கொடுத்த வரம். வயது என்பது எனக்கு ஒரு பொருட்டல்ல என்பதை நிரூபித்து நிற்கின்றார் இராஜேஸ்வரி அவர்கள். இதைத்தான் வாழ்தல் என்கின்றோம்.

அவரின் இந்த எழுத்துப்பணி மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நல்ல ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் கொடுக்க வேண்டும் என்று மனமாரப் பிரார்த்தித்து எனது இதயம் கனிந்த இந்த வாழ்த்துரையை வழங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

Dr A.சண்முகவடிவேல்

திருமதி பா. இராஜேஸ்வரியின் அறிமுகம் எனக்கு அவரன் ஆன்மீகப் பயணத்தின் இனிய நினைவுப் பகிர்வு என்ற வெளியீட்டின் மூலம் கிட்டியது. தன்னை அறிவதற்கு அரியனவாகவும் எப்பொழுதும் பொன்மேனி மீது வெண்மையான திருநீற்றை அணிந்த தோற்றமுடைய கயிலைத் திருமலையில் நீங்காது வாழும் சிவபெருமானைத் தரிசிக்கும் பேறுபெற்ற இவரின் சமய ஈடுபாட்டையும் இறைபக்தியையும் ஆற்றலையும் கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன்.

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யான்என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை

(பெரிய புராணம்)

நினைவுகள் என்ற அவரது இந்த நூலில் எனது தந்தையாரின் ஊரைப்பற்றிய பல சுவையான வரலாற்றுச் சம்பவங்களுடன் ஆத்தியடிப் பிள்ளையாரின் அன்று முதல் இன்று வரை உள்ள வளர்ச்சியையும் ஆரம்ப காலத்திலிருந்து கோயிற் திருப்பணிகளில் தம்மை அர்ப்பணித்த பெரியார்களின் சேவைகளையும் இன்று எம்மவர்களின் புலம் பெயர்ந்த வாழ்வியல் முறைகளைப் பற்றியும் அழகாகச் சித்தரித்துள்ளார்.

ஆத்தியடி மைந்தன் கோணப்பா கணபதிப்பிள்ளை அவர்கள் ஆத்தியடிப் பிள்ளையார் மீதும் சுப்பிரமணியர் மீதும் பாடிய இனிய பாமாலைகளும் அழிய விடாது பாதுகாக்க வேண்டிய தேவை கருதி இணைக்கப்பட்டுள்ளமை எழுத்தாளரின் உயரிய நோக்கத்தைப் புலப்படுத்துகின்றது.

மேலும் இந்தத் தொகுப்பில் இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள ஆலயங்களின் விபரங்களுடன் ஆசிரியரின் சொந்த அனுபவங்களையும் வெளிக் கொண்டு வந்துள்ளது போற்றுதலுக்குரியது. திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அம்மையாரின் திருவருள் தேடல் தொடர்ந்து சிறப்பாக அமைய விநாயகப் பெருமானின் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறேன்.

**DR. A. Shanmugavadivel**
**3 Deblyn Drive**
**Toronto, Ontario**
**M1S 1J5 Canada**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

திருமதி பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரி அம்மா அவர்களின் முதல் பதிப்பான ஆன்மீகப் பயணத்தின் இனிய நினைவுப் பகிர்வு என்ற நூலை சினேகன் பதிப்பகம் வெளியிட்டது. தொடர்ந்து இரண்டாவது நூலான நினைவுகள் எனும் நூலையும் சினேகன் பதிப்பகம் வெளியிடுவதில் மிகவும் பெருமை கொள்கின்றோம்.

திருமதி பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரி அம்மாவின் நினைவாற்றல் மிகவும் அற்புதம் என்பதோடு எந்த விடயத்தை சொல்ல வந்தாலும் அதில் வார்த்தை ஜாலங்கள் செய்து வாசிப்பவரை தன் நினைவுகளோடு இழுத்துச் செல்லும் திறமை உடைய இராஜேஸ்வரி அம்மா இன்னும் பல படைப்புக்கள் படைக்க இறைவன் அருள் புரிய வேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

நினைவுகள் என்னும் இந்தப் பதிப்பு வருங்கால சந்ததியினருக்கு வரலாறாக அமையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இராஜேஸ்வரி அம்மாவின் முதல் பதிப்பு நடந்து கொண்டிருந்த வேளையில் சில நாட்கள் அவரோடு பழகும் வாய்ப்பு கிடைத்ததை மிகவும் பெருமையாகவும் பெறுமதியான நாட்களாகவும் எண்ணிக் கொள்கின்றோம். இவருடைய ஆசீர்வாதம் எமக்கு என்றென்றும் வேண்டும்.

நன்றி

சினேகன் பதிப்பகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகள் நூலுடன் பயணித்த ஓர் இனிய நினைவுப் பதிவு

ரஞ்சனா பரமேஸ்வரன் (மேற்கு அவுஸ்ரேலியா)

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல இனிதாவது எங்கும் காணோம் என்பது பன்மொழிப் பாண்டித்யம் பெற்ற மகாகவி பாரதியாரின் தெளிந்த முடிவு. இத்தகைய தேமதுரத்தமிழோசையை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று அன்று பாரதியார் கனவு கண்டார். அந்தக் கனவு இன்று நனவாகிறது கண்கூடு. உலகமெங்கும் பரந்து வாழும் தமிழர் செம்மொழியான தமிழுக்கு அருந்தொண்டாற்றுகிறார்கள் என்றால் மிகையாகாது.

அவுஸ்திரேலியாவில் வாழும் ஈழத் தமிழருக்கும் இதில் பெரும் பங்குண்டு. இவர்களில் திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியமும் ஒருவர் என்று கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆன்மிகப் பயணத்தின் இனிய நினைவுப் பகிர்வு என்ற அவரது முதல் நூலுக்கு வாழ்த்துச் செய்தியனுப்பி இரண்டு வருடங்கள் முடியும் முன்பே தனது இரண்டாவது நூலுக்கு வாழ்த்துரை தர முடியுமா? என்று அவர் கேட்ட போது என்னால் நம்ப முடியவில்லை. முடிவுறும் பயணத்தில் முடிவற்ற தேடல் தொடருவதை அவரது நினைவுகள் நூலில் இருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது.

நினைவுகள் நூலில் பிரவேசிக்கும் முன் அவருடைய ஊக்கத்தையும், விடாமுயற்சியையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இந்நூலில் எனக்கு மிகவும் பிடித்த பகுதி ஒரு கிராமத்தின் கதை. இக்கதையில் இவர் தான் பிறந்து வளர்ந்த கிராமமான ஆத்தியடியையும் , அங்கு வாழ்ந்த மக்களின் குல தெய்வமான விநாயகரின் சிறப்பையும் எடுத்துக் கூறியதுடன், நாட்டை அந்நியர் வசமாகாது பாதுகாக்கப் போராடிய சங்கிலி மன்னரினதும், படையினரதும் வீரத்தையும் பெருமையுடன் கூறுகிறார்.

பெரும்பாலும் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்துக்குப் பிறகே நமது யாழ்ப்பாணச் சரித்திரம் எழுதப்பட்டதனால் போர்த்துக்கேயர்களின் வரலாற்றைப் பின்பற்றியே அவைகள் அமைந்துள்ளன. போர்த்துக்கேயரை எதிர்த்துப் போராடிய காரணத்தால் சங்கிலி மன்னரைப்பற்றி அவர்கள் இழிவாகவே எழுதியுள்ளார்கள். இதற்கு விதிவிலக்காக பேராசிரியர் குணசிங்கம் அவர்களின் இலங்கை தமிழர் பற்றிய ஆய்வு நூல் அமைந்திருந்தது. இந்நூலை அடியொற்றியே திருமதி இராஜேஸ்வரி அவர்கள் சங்கிலி மன்னரின் நாட்டுப்பற்றையும் சமயத்தில் அவர் கொண்ட நம்பிக்கையையும் எடுத்து கூறிய விதம் சுவையாக அமைந்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் குமுறல்களையும் தெளிவாகக் காண முடிகிறது. அந்நாளில் வாழ்ந்த நாகப்பர், தெய்வானை, மாதுமையாள், மாதினியாள், நீலயினார் ஆகிய பாத்திரப்படைப்புக்கள் மூலம் எம்மை ஆத்தியடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்துக்கு அழைத்துச் சென்று விட்டார் இந்த நூலாசிரியர். மாதுமை என்ற ஒரு கற்பனை நாயகி ஒரு வேளை இராஜேஸ்வரி அவர்கள் தானோ என ஓர் கற்பனை என் மனதில் எழுந்தது. போர்த்துக்கேயர் சைவ ஆலயங்களை அழிப்பதில் தீவிரமாகச் செயல்பட்டு அதனால் விநாயகர் கோயில் அழிந்து போனதும் மக்கள் ஆத்திமரத்தடியை வழிபட்டு ஆத்தியடியென்ற கிராமம் உருவானதுமான சம்பவம் அவர் மனதில் ஆழமாக படிந்திருந்த படியால்தான் இந்தக் கதையை உருவாக்கும் நினைவு அவருக்கு எழுந்தது போலும்.

மப்பின்றி கால மழை காணா மண்ணிலும்
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது.
ஏர் ஏறாது காளை இழுக்காது எனிலும்
பாறை பிளந்து பயிர் விளைப்பான் என்னூரான்.

என்று கவி பாடினான் ஒரு யாழ்ப்பாணத்தான். இந்தப் பாடலுக்கமைய விவசாயம் செய்வதற்கு வளமில்லாத சவர்த்தன்மை உள்ள நிலத்தில் வாழ்ந்த ஆத்தியடி மக்கள் நல்ல நிலமுள்ள அயல் கிராமங்களில் நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து தன்னிறைவு பெற்று வாழ்ந்தார்கள் என்பதை அவர் கூறியுள்ளார். அத்தகைய ஆத்தியடி மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட இராஜேஸ்வரி அவர்களும் ஒரு உழைப்பாளி என்றே நினைக்கத் தோன்றுகிறது.

தானும் தன் குடும்பமும் என்று வாழாது சமூக சிந்தனையாளராகவும், ஆன்மீக நாட்டமுள்ளவராகவும் எதனாலும் சலிப்படையாதவராயும் வாழ்ந்து வருவதையும் உணர முடிகிறது. ஆன்மீகம், அரசியல், சமுதாயம் எனப் பல கண் கொண்டு ஆத்தியடி கிராமத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். உள்ளத்திலே இருந்து ஊற்றெடுக்கும் நினைவுகளை எழுத்தாக்கி இந்த நூலை வெளியிட்டதுடன், கோணப்பர் கணபதிப்பிள்ளையவர்கள் முதன் முதலில் குடமுழுக்கு நடைபெற்ற போது புனைந்த தீந்தமிழ் பாமாலைகளான ஆத்தியடி நாயகன் பாமாலை , அற்புதபத்து , பன்னீரவதாரப்பதிகம் இவைகளை மீளவும் கொணர்ந்ததின் மூலம் ஆத்தியடிக்கிராமத்தின் பெருமையை உலகறியச் செய்துள்ளார் என்று கூறலாம். விநாயகப் பெருமானைப்பற்றியும் பல சுவையான தகவல்களை கூறியுள்ளார். ஈழத்துச் சித்தருக்கும் ஆத்தியடி விநாயகருக்கும் உள்ள தொடர்பையும் , வால்கடைப் பரதேசி எனக் கூறப்படும் கடையிற் சுவாமிகளின் அருள் வாக்கும் , விநாயகர் வேலாயுத வாத்தியாரின் கனவில் தோன்றி ஆதியில் கோயில் கொண்டிருந்த இடத்தைக் காட்டி அதன் காரணமாக மறைந்திருந்த விநாயகரை திரும்ப வெளிக் கொணர்ந்து ஆலயமமைத்து குட முழுக்கு கண்டது போன்ற அற்புதமான செய்திகளையும் கூறியுள்ளார். குடமுழுக்கு கண்ட நேரம் நல்ல நேரமாக அமைந்து இருக்க வேண்டும்.

ஆத்தியடி மக்கள் பெரும்பாலனோர் புலம் பெயர்ந்த போதும் கிராமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறிச்சோடிப் போகாது இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கெல்லாம் தஞ்சமளித்து மிக நெருக்கடியான நேரங்களிலெல்லாம் அவர்களை பாதுகாப்பாக வைந்திருந்தாக பெருமையுடன் கூறுவதையும் பெரிய கோயிலாக வளர்ந்து ஆறாவது குடமுழுக்குக் கண்டதையும் பார்க்கும் போது அக்கிராம மக்களின் வாழ்வோடு கோயிலும் சமயமும் எப்படி பிணைந்து இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆங்கிலேய கால ஆட்சியில் அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு, கல்வி மேம்பாடைந்த காலம் மறுமலர்ச்சி ஏற்பட்டதையும் எழுதியதோடு இவைகளுக்கு காரணமாக இருந்த ஆறுமுக நாவலர் அவர்கள் தமிழுக்கும், சமயத்துக்கும் செய்த அரும்பெரும் சேவைகளையும் விளக்கியுள்ளார். மக்களை வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது சமயம். அதை மதமாக்கி அரசியல் லாபம் தேடுவதால் ஏற்படக் கூடிய அவலங்களை இலைமறைகாயாக இந்நூலில் கூற முற்பட்டதையும் மதத்தின் பெயரோடு உள் நுளைந்து அரசியல் லாபம் கண்ட போர்த்துக்கேயரிடம் இழந்த சுதந்திரத்தை நம்மவர்கள் மீளப் பெறவில்லை என்ற ஆதங்கமும் அவருடைய எழுத்தில் காணமுடிகின்றது

இந்த நூலாசிரியர் தனது பயணத்தை தொடர்ந்து மேலும் பல ஆக்கங்களை வெளியிட ஆரோக்கியத்தை அருளுமாறு இறைவனை மனமாற வேண்டி விடை பெறுகிறேன் பலர் இந் நூலைப் படித்து பயன் பெறுவார்கள் என நம்புகிறேன்

செந்தமிழ் மக்களே வாரீர்
அறிவு நிரம்பிட வேண்டில் - உண்மை
அன்பு மருளும் அடக்கமும் வேண்டில்
உறுதிப் பொருள் பெற வேண்டில் எங்கள்
நற்றமிழ் நூல்களை ஓதிடுவீரே

(நவாலியூர் சோமசுந்தர பாரதியார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

**சட்டத்தரணி சு. ஸ்ரீகந்தராசா (பாடும் மீன்)**

திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களது நினைவுகள் என்ற இந்த நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பிட்ட ஒரு விடயம் பற்றியதாக அல்லாமல் , பல்வேறு பதிவுகளை உள்ளடக்கியதாக இந்த நூல் அமைந்துள்ளது. நூலாசிரியர் நீண்ட காலமாகத் தனது நெஞ்சிலே சுமந்திருந்த தகவல்களை, அவரது பயணங்களின் போதும் பார்த்ததும், கேட்டதும், உணர்ந்ததுமான அனுபவங்களை எல்லாம் உள்ளடக்கமாகக் கொண்டிருக்கும் இந்த நூலுக்கு நினைவுகள் என்ற தலைப்பு மிகவும் பொருத்தமானதே.

இந்து சமயத்தில் உள்ள ஈடுபாடு, சொந்த மண்ணில் உள்ள பற்று, எந்த நல்ல விடயத்தை அறிய நேர்ந்தாலும் அதனை மற்றவர்க்கும் தெரியப்படுத்திவிட வேண்டும் என்ற சமூக சிந்தனை இவை எல்லாம் தான் அவர் இந்த நூலை எழுதுவதற்குக் காரணங்களாக அமைந்திருக்க வேண்டும் என்பதை, இந்த நூலில் இடம் பெற்றுள்ள பதிவுகளில் இருந்து உணர முடிகின்றது. எழுபது, எண்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக் கிராமம் ஒன்று எப்படியிருந்திருக்கும், அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை எப்படி அமைந்திருக்கும் என்பதையெல்லாம் இன்றைய தலைமுறையினரும், எதிர்கால சந்ததியினரும் அறிந்துணரக் கூடியவாறான பல குறிப்புக்கள் இந்த நூலிலே அடங்கியுள்ளன.

நூலாசிரியர், தான் பிறந்த ஊரைப் பற்றியும், பயணம் செய்த நாடுகளைப் பற்றியும் சேகரித்து வைத்திருந்த பல தகவல்களை இந்த நுலிலே கொட்டிப் பரப்பி விட்டிருக்கிறார். புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் நிலமையைப் பற்றிய தன் கருத்தையும் நூலாசிரியர் இந் நூலில் பதிவு செய்துள்ளார். வளமான செம்மண், வற்றாத ஊற்று நீர்க்கிணறு, சத்தான உணவை அள்ளித்தரும் கடல், இவைகளை எல்லாம் போருக்குப் பலியாகக் கொடுத்துவிட்டு, குடிக்கத் தண்ணீர் காசு கொடுத்து வாங்கி, சுத்தமான காற்றை எங்கே வாங்கலாம் என அங்கலாய்த்தபடி அன்னிய நாட்டில் அகதிகளாக வாழ்வதைப் பார்க்கும் போது என்று விடியல் என நினைக்கத் தோன்றுகிறது என்ற வரிகள் மூலம் நமது சொந்த மண்ணின் செழுமையை மட்டுமன்றி, அன்னிய மண்ணின் நிலைமையையும் எடுத்துணர்த்தியுள்ளார்.

மலேசியாவைப் பற்றி எழுதும் போது ஓரிடத்தில் சீனர்கள் ஒற்றுமையாக தங்கள் சொந்தப் பணத்தில் சீன மொழிப் பள்ளிகளைக் கட்டி நடத்துகிறார்கள். தமிழர்கள் கோயில் கட்டிய அளவுக்குப் பள்ளிக்கூடம் கட்டவில்லை. கட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களிலும் ஒற்றுமையாக செயற்படுவதில்லை. அதிலும் பிரிவுகள், தமிழ் இனத்தின் சாபக்கேடு போலும் என்று குறிப்பிடுகின்றார். தமிழ் இனத்தின் மீது அவருக்கு உள்ள தணியாத பற்றே இந்த வரிகள் அவரிடமிருந்து எழுவதற்கு காரணம் எனலாம். உலகத்தில் பல நாடுகளில் உள்ள இந்து சமய ஆலயங்கள் பற்றி இந் நூலில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவில், மலேசியாவில் ................. இப்படி பல நாடுகளில் இந்து சமய வணக்கத்தலங்கள் நல்ல முறையில் இயங்கி வருவது பற்றிய அவரது பதிவுகள் எதிர் காலத்தில் வரலாற்றுக் குறிப்புக்களாகக் கொள்ளத்தக்கவை.

தமிழினம் புலம் பெயர்ந்த நாடுகளில் மட்டுமன்றி, தமிழின் தாயகங்களான இந்தியாவிலும், இலங்கையிலும் கூட தமிழ் இனத்தின் அடையாளங்களான பண்பாட்டு விடயங்களும், வணக்கத்தலங்களும், வணங்கும் முறைகளும் மாற்றம் அடைவதற்கும், மறைந்து போவதற்கும் சாத்தியங்கள் மிகவும் அதிகமாகவே உணரப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் இத்தகைய நூல்கள் எழுதப்படுவது அத்தியவசியமானது. காலங்கள் மாறலாம், கட்டிடங்கள் சாயலாம், ஆழிப்பேரலைகளால் நாடுகள் அழியலாம் ஆனால் எஞ்சியிருக்கும் மண்ணில் எழுத்தில் கிடக்கும் படைப்புக்கள் வரலாற்றின் சான்றுகளை வடிவமைத்து வாழும். எதிர்கால உலகிற்கு நமது கடந்த காலத்தை எடுத்துக் கூறும். அந்த வகையில் திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களது நினைவுகள் என்ற இந் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பல தகவல்களும் சரித்திரத்தின் சாட்சியங்களாக எதிர் காலத்தில் கொள்ளத்தக்கனவாகிப் பயன் கொடுக்கும் என்று நம்புகிறேன். அவரது எழுத்துப்பணி தொடரவும், அவர் இன்னும் பல நூல்களைப் படைக்கவும் திருவருள் துணை நிற்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மட்டற்ற மகிழ்வோடு அவரை வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ்

அன்புடன் சு. ஸ்ரீகந்தராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நினைவுகள் என்ற புத்தகத்தின் முதல் கதை நான் பிறந்த ஆத்தியடிக் கிராமத்தை மையமாகக் கொண்டு புனையப்பட்ட கதை. போர்த்துக்கேய மாலுமி வாஸ்கோடகாமா ஆசிய நாடுகளுக்குக் கடல் வழி கண்டு பிடித்து முதல் முதலில் வந்திறங்கிய இடம் கள்ளிக்கோட்டை. அந் நேரம் அங்கு நிகழ்ந்தவற்றை மையமாகக் கொண்டு "உறுமி" என்றொரு திரைப்படத்தை மலையாளத்திலும் தமிழிலும் திரையிட்டார்கள். அதைப் பார்த்த போது நம் நாட்டிற்கும் போர்த்துக்கேயர் வந்தார்களே அப்போது நம் கிராமம் எப்படி இருந்திருக்கும் என்ற என்னுடைய நினைவுகளே ஒரு கிராமத்தின் கதை உருவானதற்கு அடிப்படைக் காரணம். நம்முடைய முன்னோர்களின் வாய் வழி கேட்ட சில பழக்க வழக்கங்கள், பெயர்கள் சம்பவங்கள் சரித்திர நிகழ்வுகள் இவைகளை இணைத்து இந்தக் கதையை எழுதியுள்ளேன். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மறைந்தும், அழிந்தும் போன கோயில்கள் வழிபாடுகள் மறுபடியும் ஆரம்பித்து எப்படி உருவானது அப்போது மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை உண்மைச் சம்பங்களோடு விவரித்துள்ளேன்.

எனது முதல் புத்தகமான "ஆன்மிகப்பயணத்தின் இனிய நினைவுப் பகிர்வு" புத்தகத்தை படித்தவர்கள், மனதார வரவேற்றவர்கள், விமர்சனம் செய்தவர்கள் இவர்களே இந்த புத்தகத்தையும் எழுத தூண்டினார்கள். எங்கள் ஆத்தியடியில் நம்மவர்கள் பெரும்பாலானோர் ஊரையும், வீடுகளையும் விட்டுப் பெயர்ந்து அந்நிய நாடுகளில் தங்கள் கலாச்சாரத்துக்குப் புறம்பான சூழ்நிலையில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில் வருங்காலச் சந்ததியினருக்கு தம் முன்னோர்கள் எங்கே வாழ்ந்தார்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்ற விபரம் தெரியாமலேயே போய் விடும் இன்று அவர்களுக்கு தாங்கள் பிறந்த நாடே தங்கள் தாயகம் என்ற நிலைப்பாடு இருந்தாலும் என்றாவது ஒருநாள் அதைத் தெரிந்து கொள்ள வேண்டி வரும் போது தெரிவதற்கு சாத்தியம் இல்லாமலே போகலாம். புலம் பெயர்ந்து நம்மவர்கள் வாழும் சில நாடுகளுக்கு நான் சென்றிருந்த போது சில குழந்தைகளிடம் இந்த ஆதங்கத்தைக் காண நேர்ந்ததினால் எழுந்ததே இந்த எழுத்து முயற்சி.

விநாயகர் கோயிலில் குடமுழுக்கு அதில் பாடப்பட்ட பாமாலைகள் அதில் இடம் பெற்ற சில தத்துவக் கருத்துக்கள் அது தொடர்பான புராணக்கதைகள் இவைகள் புத்தகத்தின் முதல் பாதியில் இடம் பெற்றுள்ளன. பின் பாதி சரித்திர பிரசித்த பெற்ற சில தலங்களைப் பற்றிச் சில தகவல்களை வைத்துள்ளேன் நவீன காலக் கதைகளை எழுதுவதற்கு பல எழுத்தாளார்கள் உள்ளனர். வாசிக்கவும் பலர் உள்ளனர். அதற்கு கணணிகள் போல பல உபகரணங்கள் உண்டு.

பழங்கதைகள் எல்லாம் யார் வாசிக்கப் போகிறார்கள் எனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் கூறுவது காதில் விழத்தான் செய்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் வாசிக்கவில்லை யென்றாலும் ஆர்வமுடன் ஒருசிலர் வாசித்தாலும் போதும் என்ற துணிவுடன் இப்புத்தகத்தை நம் சமூகத்தில் வாழ்ந்து மறைந்த மூதாதையர்கள் தமிழ், சைவ, அபிமானிகள், நாட்டுப்பற்றாளர்கள் இவர்களுக்குக் காணிக்கையாக சமர்பிக்கிறேன்.

**திருமதி இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

1. ஒரு கிராமத்தின் கதை
2. போர்த்துகேயர் ஆட்சிக்கு பின் ஆத்தியடி கிராமம்
3. ஆத்தியடி நாயகன் அடைக்கலப்பாமலை
4. அற்புதானந்தப்பத்து
5. பன்னீரவதாரப்பதிகம்
6. ஆத்தியடி சுப்பிரமணியக்கடவுள் பதிகம்
7. சுப்பிரமணியக்கடவுள் பதிகவிளக்கமும் முருக வழிபாடும்
8. இருபதாம் நூற்றாண்டில் ஆத்தியடி
9. ஆத்தியடியில் நினைவுக்குரிய சிலர்
10. நாகதம்பிரான் கோயிலும் நாகரினமும்
11. சம்பில்துறை சம்புநாதேஸ்வரர்
12. நகுலேஸ்வரர் கண்ட இடர் நிறைந்த பயணம்
13. ஆஞ்சநேயர் ஆலயமும் வழிபாடும்
14. ஈழத்துச்சித்தர் மூவர்
15. அம்பிகையின் அருள் பெற்ற அடியார்கள் சிலர்
16. அம்பிகையுடன் ஆனந்தமான ஒன்பது இரவுகள்
17. மலேசியாவின் சைவமும் தமிழும்
18. ஆன்மிகப்பயணத்தின் இனிய நினைவுப்பகிர்வு நூல் பற்றிய எண்ணப்பதிவு
19. ஆன்மிகப்பயணத்தின் இனிய நினைவுப்பகிர்வு நூல் வெளியீட்டு விழா பற்றிய ஒரு நினைவு
20. முடிவாக ஒரு நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கிராமத்தின் கதை

பூரணச்சந்திரன் தன்னுடைய தண்மையான ஒளியைப் பரப்பியபடி வானத்தில் பவனி வந்து கொண்டிருந்தான். பொங்கியெழுந்து ஆர்ப்பரிக்கும் அலைகளின் நடுவே கடலில் படகு சென்று கொண்டிருந்தது. அலைகள் மேலே எழும் போது மேலே போவதும் கீழே வரும்போது கீழே விழுவதுமாக தத்தளித்த படகு குறித்த நேரத்தில் நாகதீவைச் சென்றடைய முடியாதிருந்தது. நாகத்தீவில் உள்ள ஈஸ்வரனையும், ஈஸ்வரியையும் தரிசிக்க மாதுமையாள் குடும்பத்தினர் கடலில் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

மாதுமையாளின் தந்தை நாகப்பர் வழி வழியாக வேளாண்மை செய்யும் குடும்பத்தில் பிறந்தவர். இலங்கைத் தீவின் வடமுனையில் புலோலி என்னும் ஊரில் தம்பசெட்டி என்ற கிராமம் அவர் மூதாதையர்கள் வாழ்ந்த இடம். அவர்கள் வாழ்ந்த பகுதி சின்ன தம்பசெட்டி என்று அழைக்கப்பட்டது. அப்பகுதியிலிருந்தவர்கள் வேளாண்மை செய்பவர்களாக இருந்த போதும் பெரும் நில உடமையாளர்களாக இருக்கவில்லை. அவர்கள் வாழ்ந்த பகுதி சவர்த்தன்மை உடையதாக இருந்தமையால் விவசாயத்துக்கு உகந்ததாகவும் இருக்கவில்லை.

வடமராட்சியின் பெரும் பகுதி பனங்காடாகவே இருந்தது. பெரிய தம்ப செட்டியின் சில பகுதிகளும் கெருடாவில், மந்திகை போன்ற இடங்களுமே விவசாயத்துக்கு உகந்ததாயிருந்தது. நல்ல நிலங்கள் உள்ள இடத்தில் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து கூட்டாக சேர்ந்து விவசாயம் செய்பவர்களில் நாகப்பரும் ஒருவர். உலகுக்கு உணவு அளிப்பதால் வேளாண்மைத் தொழிலே எல்லாத் தொழிலிலும் உயர்ந்தது என மதித்தனர். வேளாண்மை செய்பவர்களை வேளாளர் என்று ஓர் உயர்ந்த நிலையில் வைத்தனர்

வேளாண்மைத் தொழிலைத் இடையூறின்றிச் செய்யக் குடிமைகளையும் நியமித்தனர். வேளாளர்கள் சைவத்தையும் ,வேளாண்மையையும் இரு கண்களாக பாவித்த காரணத்தால் சைவ வேளாளர் என்றொரு நிலையிலும் வைத்துப் பேசப்பட்டனர். அங்கு வாழ்ந்த ஒவ்வொருவருக்கும் பனங்காணிகள் உடைமையாயிருந்தன. பனையின் ஒவ்வொரு பொருளும் ஏதோ வகையில் பயனைத் தந்தது. மக்களுக்கு உணவாக , மாட்டுக்கு தீனியாக, வீட்டுக்கு மரமாக, அடுப்புக்கு விறகாக மொத்தத்தில் பனைமரம் அங்குள்ளவர்களுக்குத் கற்பகத்தருவாக விளங்கியது.

சாமி, தினை, குரக்கன் போன்ற சிறு தானியங்களே பிரதான உணவாயிருந்தது. ஒவ்வொருவரும் தாங்கள் குடியிருக்கும் காணிகளில் வீடு போக எஞ்சியிருந்த நிலத்தில் தென்னை, கமுகு, பழமரங்கள் மரக்கறி வகைகள், பயிரிட்டு அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு சுய நிறைவு பெற்று வாழ்ந்தனர். தம்பசெட்டியை அடுத்து மூன்று பக்கமும் கடல் சூழ்ந்தநிலப்பகுதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்து ஓர் இறங்குதுறை இருந்தது. இங்கு பருத்தி , பஞ்சு, பருத்தித்துணி முதலியவை ஏற்றுமதி செய்யப்படுவதால் பருத்தித்துறை என அந்த இறங்குதுறை அழைக்கப்பட்டு அதை அண்டிய பகுதிகளும் பருத்தித்துறை என்றே அழைக்கப்பட்டது.

புலோலியின் மற்றப் பகுதிகளில் மரவேலை செய்பவர்கள், பொற்கொல்லர்கள், இரும்பு வேலை செய்பவர்கள் என பலதரப்பட்ட தொழில் செய்பவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அந்தந்த தொழில் செய்பவர்கள் தனித்தனியாக ஒவ்வொரு சமூகமாக வாழ்ந்து வந்தார்கள். சமயம், தமிழ், இலக்கியம் எனக் கற்றறிந்தவர்களும் அங்கு வாழ்ந்தார்கள். அங்குள்ள சிறார்களுக்கு திண்ணைக் கல்வி மூலம் கல்வி புகட்டப்பட்டு வந்தது. நாகப்பரின் முன்னோர்கள் நாக வழிபாட்டிலும், நாகேஸ்வரி வழிபாட்டிலும் நம்பிக்கை கொண்டவர்கள்.

நாகதோஷம் காரணமாக குழந்தை பிறக்காதிருப்பவர்களுக்கு நாகேஸ்வரி வழிபாட்டால் தோஷம் நீங்கி குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே உண்டு. நாகப்பர் தெய்வானை தம்பதிகளுக்கும் நீண்ட நாள் குழந்தை இல்லாமலிருந்து நாகேஸ்வரியை வேண்டிக் கொண்டபின் தான் மாதுமையாள் பிறந்தாள். அவள் பிறந்து பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிய பிறகுதான் அவர்களுக்கு அந்த வேண்டுகோளை நிறைவேற்றும் வேளை வந்தது. இதன் பொருட்டே இந்தக் கடல் பிரயாணம் அமைந்துள்ளது.

நாகப்பரின் தங்கை மாதினியாள் இளவயதில் கணவனையிழந்தாள். அவளும் அவளுடைய ஒரே மகன் நீலயினாரும் நாகப்பரின் மேற்பார்வையிலேயே வாழ்ந்து வந்தனர். நீலயினாரின் தந்தை வேலப்பர் வழி வழியாக வைத்தியம் செய்யும் குடும்பத்தில் வந்தவர். அதன் வழி நீலயினாரும் வைத்தியத்துடன் விவசாயத்தையும் கவனித்து வந்தார். அவருக்கு மாமன் மகள் மாதுமையைத் திருமணம் செய்வதாக குடும்பத்தவர் நிச்சயம் செய்திருந்தனர். மாதுமையாள் நீலயினாரை விட வயதில் அதிகம் சிறியவளாயிருந்த போதும் சைவசமயம், தமிழ்மொழி இவைகளில் ஆழ்ந்த பற்றும் பெரியவர்களிடம் மதிப்பும் கொண்டிருந்ததுடன் வரப்போவதை முன்கூட்டியே அறிந்து சொல்லும் ஒரு கூர்மையானபுத்தியும் கொண்டவளாயிருந்தாள். மாதுமையாளின் குழந்தைத்தனத்தை வெகுவாக நேசித்த நீலயினார் சமயத்தில் அவளிடமிருந்து வெளிப்படும் அறிவு ஆழமான வார்த்தைகளையும் ரசித்தார். இதனாலேயே வேறு பெண்ணைத் திருமணம்செய்ய விரும்பாது அவள் பருவமடையும் காலத்தைக் காத்திருந்தார்.

மாதுமையாளின் வேண்டுதலை நிறைவேற்ற அவள் தாய் தந்தையுடன் மாமி மாதினியாரும் அவள் மகன் நீலயினாரும் இன்னும் சில அயலவர்களும் நாகத்தீவை நோக்கிப்பயணம் செய்துகொண்டிருந்தனர். காற்றின் சாதக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகங்களுக்கு ஏற்ப கடலில் படகைச் செலுத்திப் பயணம் செய்வது பெரும் பாடாயிருந்தது. ஆபத்து ஏதும் வராதிருக்க நாகேஸ்வரருக்கு அரோகரா, நாகேஸ்வரிக்கு அரோகரா போன்ற கோஷங்களை எழுப்பி பயணத்தைத் தொடர்ந்தனர்.

கால தாமதமாக வந்த போதும் ஆபத்தில்லாமல் நாக தீவைச் சென்றடைந்தனர். அடுத்த நாள் காலையில் தாங்கள் கொண்டு வந்திருந்த உணவுப் பொருட்களைப் பரப்பிப் பொங்கல், பலகாரவகைகள் எனத் தயாரித்து நாகேஸ்வரர்களுக்கு நிவேதனம் செய்து வழிபட்ட பின் தாங்களும் பசியாறி அங்கு நின்றவர்களுக்கும் பரிமாறினர். இரண்டு, மூன்று நாட்கள் தங்கியிருந்து மனம் நிறைந்த தரிசனம் செய்து தான் ஊர் திரும்புவதாக திட்டத்துடன் வந்திருந்தனர். என்ற போதும் நாகப்பர் காதில் விழுந்த ஒரு செய்தி நாகதீவை விட்டு உடனே திரும்ப வேண்டும் எனத் தீர்மானிக்க வைத்தது.

நாகப்பரின் இந்த ஏற்பாடு மனைவி தெய்வானைக்கு பிடிக்கவில்லை. தேனீயைப் போன்று சுறுசுறுப்பாக இயங்கும் அவளுக்கு வீட்டில் நிறைய வேலைகள் உண்டு. கறவை மாடுகள், ஆடுகள், கோழிகள் இவைகளைப் பராமரிக்கவும் தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு உணவு தயாரிக்கவும் பெரும்பாலும் பொழுது சரியாகிவிடும். மிகுதி நேரத்தில் வருடம் முழுவதற்கும் பாவிக்க பனம் பண்டங்களை பதப்படுத்தி வைக்கவும் நாள், கிழமைகள் எனவும் நேரம் சரியாகிவிடும். இவைகளையெல்லாம் பார்த்துக் கொள்ள ஆட்களை ஒழுங்கு படுத்தி இவ்வளவு கஸ்டப்பட்டுக் கடலில் பிரயாணம் செய்து வந்த உடனே திரும்புவதை மனம் விரும்பாத போதும் நாகப்பர் பேச்சுக்கு எதிர் சொல்ல முடியாது புறப்பட வேண்டி இருந்தது.

வரும் போது கடலில் இருந்த கொந்தளிப்பு இப்போது இல்லை. அதனால் படகு அமைதியாக சென்று கொண்டிருந்தது. புறப்படும் போது இருந்த அதிருப்தி மறைந்து கடல்பிரயாணம் தந்த உற்சாகத்தில் மாதினியாருடனும், உடன் வந்தவர்களுடனும் பலதும் பத்தும் பேசிப் பிரயாணத்தைக் கலகலப்பாக்கினாள் தெய்வானை. மாதுமையாள் கடலையும் , வானத்தையும் வெறித்துப் பார்த்தபடி உற்சாகம் இழந்து காணப்பட்டதால் நீலயினாரும் வரும்பொழுது இருந்த உற்சாகம் வடிந்து மௌனமாக இருந்தார்.

நாகப்பரின் மனதிலும் ஏதோ சிந்தனைகள் எதுவும் பேசாது அதிலேயே மூழ்கி இருந்தார். அவர் காதில் விழுந்த செய்தியை சுற்றியே அவர் சிந்தனைகள் சென்றது. தென்னிந்தியாவின் கேரளக் கரையோரத்தில் கள்ளிக் கோட்டைத் துறைமுகத்தில் வந்திறங்கிய போர்துக்கேயர்கள் காலப்போக்கில் இலங்கையின் மேற்குக்கரையோரத்தில் கோட்டை இராச்சியத்திலும் நிலை கொண்டிருந்தனர். தங்கள் வர்த்தக நடவடிக்கைகளுக்கு, கப்பல் போக்கு வரத்துக்கும் மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைகுடாவும், பாக்கு நீரிணையும் தங்களுக்குச் சொந்தமாயிருந்தால் வசதியாய் இருக்கும் என்று பேசிக் கொள்வதும் அதற்கான வழிவகைகளை ஆராய்வதும் ஒற்றர்கள் மூலம் அறிந்திருந்த செய்தி.

போர்த்துக்கேயர் கள்ளிக் கோட்டையிலும், கோட்டை இராச்சியத்திலும் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதும் அதில் ஈர்க்கப்பட்டு கரையோர மீனவர்கள் சமூகம் மதம் மாறுவதையும் அறிந்திருந்த சங்கிலி மன்னர் யாழ்ப்பாணத்தில் அப்படி ஒரு நிலை வருவதை விரும்பவில்லை. எந்த ஒரு காரணத்திற்காகவும் அவர்கள் தொடர்பை விரும்பாத சங்கிலி மன்னர் படைகளைத் தயார் நிலையில் வைத்திருந்ததுடன் தேவையேற்பட்டால் போர் செய்யவும் தயாராயிருந்தனர் என்பதும் முன்பே அறிந்திருந்த செய்தி.

நாகத்தீவில் இப்போது கேள்விப்பட்ட செய்திப்படி போர்த்துக்கேயரின் கப்பல்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன என்பது அவரைச் சில ஆயிரம் வருடங்களுக்கு பின்னோக்கி நினைக்க வைத்தது. இலங்கேஸ்வரன் ஆண்டகாலத்துக்கு அவர் மனம் தாவிச்சென்றது. பொன்னும் மணியும் இழைத்து வானத்தைத் தொட்டு நிற்கும் மாடமாளிகைகள், அதில் சூரியனுடைய ஒளிக்கதிர்கள் படும்போது அவை மின்மினிப் பூச்சிகள் போன்று தென்படுகின்றன.

பெரிய புயல் காற்றுக் கூட இம் மாளிகையைக் கடந்து செல்லும் போது தென்றல் போன்று தழுவிச் செல்லும். மாளிகையில் பணி செய்பவர்கள் ஆகாயக் கங்கையின் நீரை அள்ளி சுத்தம் செய்கிறார்கள். வண்டினங்கள் தேவலோகத்தின் கற்பக மலரின் தேனையுண்டு அலுத்துப்போய் இங்கு மாளிகையின் நிலா முற்றத்தில் படர்ந்து நின்ற செங்கழு நீர்ப்பூவின் தேனையுண்டு உறங்கிக் கிடக்கின்றன. சந்தனம், கஸ்தூரி முதலிய வாசனைப் பொருட்கள் சிந்தியதால் கடலில் வாழும் மீன்களும் நறுமணம் வீசுகின்றது. உலகத்துயிர்கள் எல்லாம் உறையும் திருமாலின் வயிறு போன்று எல்லாப் பொருட்களும் ஒருங்கே கொண்டதாக நகரம் விளங்குகிறது. இப்படி அழகுற அமைக்கப்பட்ட நகரத்தில் ஆடிப்பாடிக் களிக்கின்றவர்களைத் தவிர கவலையில் தவிப்பவர்கள் யாருமில்லை.

இவ்வளவு வளத்தை ஆளும் மன்னனைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? தேவர்களும், தேவமாதர்களும் பணிசெய்யக் காத்திருக்கின்றனர். படை பலத்தைப் பற்றிச் சொல்வதென்றால் விற்படை பெரிதா, வேற்படை பெரிதா, வாட்படை பெரிதா, மல்லர் படை பெரிதா எதைச் சொல்வது என்று தூதுவர் திகைக்கின்றனர். இந்த நகரத்தை ஆளும் மன்னனைப் புகழுவதா அல்லது இந்த நகரத்தை உருவாக்கிய மயனைப் பற்றிச் சொல்வதா என கவிஞர்கள் திகைக்கின்றனர்.

இவை கம்ப நாட்டாழ்வான் இலங்கையைப் பற்றிக் கூறிய வர்ணனைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய பெருமையுடைய நாட்டையும், அதையாண்ட மன்னனையும் அழிக்க ஒரு கூட்டம் வந்து சேர்ந்தது. காரணம் என்ன கூறப்பட்டிருந்த போதும் முடிவாகத் தெரிந்த ஒன்று அழிவு. அதுவும் திராவிட இனத்தாரின் அழிவின் ஆரம்பம். நேரம் போவது தெரியாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்த நாகப்பர் படகு கரையடைந்த போதுதான் சிந்தனையிலிருந்து விடுபட்டு நிகழ்காலத்துக்கு வந்தார். நாகத்தீவுப் பயணத்தை ஆபத்தில்லாமல் முடித்தமைக்காக தங்கள் குலதெய்வம் விநாயகருக்கு விசேட பூஜை ஒன்று நிகழ்த்தினர். நாகப்பர் வீட்டுக்கு அருகாமையில் ஒரு காணியில் ஆத்திமரம் தழைத்து வளர்ந்திருந்தது. அதன் அடியில் ஓர் விநாயகர் மக்களால் வழிபடப்பட்டு வந்தார். எப்போது யாரால் அது வைக்கப்பட்டது என்பது ஒருவருக்கும் தெரியாது. விவசாயம் செய்பவர்கள் தங்கள் முயற்சிகள் பலிக்க வேண்டி அவரை வழிபட்டு வந்ததால் சித்தி விநாயகர் என்று அழைக்கப்பட்டார். நாகப்பரின் இளமைக் காலத்தில் சித்தி விநாயகரை மண்ணால் அமைத்த ஒரு கோயிலில் வைத்து வழிபட ஆரம்பித்தனர். ஆத்தி மரத்தினடியில் இருந்த காரணத்தினால் ஆத்தியடி சித்தி விநாயகர் எனப் பெயர் பெற்றார்.

நாகத்தீவுப் பயணத்தை அடுத்து நாகப்பர் குடும்பம் விநாயகருக்கு மோதகம், பொங்கல் என நிவேதித்து விஷேட பூஜை செய்து வழிபட்டனர். முக்கியமாக நாட்டையும் அரசனையும் காக்கும்படி வேண்டிக் கொண்டனர். இந் நிகழ்வுக்குப் பின்னர் போர்த்துக்கேயரின் சரக்குக் கப்பல்கள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன. சங்கிலி மன்னனின் உத்தரவுப்படி கப்பலிலிருந்த சரக்கு கள் பறிமுதல் செய்யப்பட்டு கப்பல்களும் அழித்து ஒழிக்கப்பட்டன. இந்நேரம் மாதுமையாள் யாழ்ப்பாணத்துக்கு பெரும் கேடு வர இருப்பதாக கூறினாள்.

நாகப்பர் பழையபடி தன்னுடைய கருமங்களில் ஈடுபடத் தொடங்கினார். ஒரு நாள் அதிகாலை நேரம் தோட்டத்துக்கு நீர் பாய்ச்ச அவரும் அவருடைய சகாக்களும் சென்றனர். இரண்டு சகாக்களும் துலாவில் ஏறி முன்னும் பின்னும் துரிதமாக நடக்க நாகப்பர் துலாவின் நுனியில் கயிற்றைப் பிடித்து பட்டை நீரை வெளியே இறைத்து விடுவார். இன்னொருவர் வாய்க்கால் வழியோடும் நீரை பயிருக்கு தேவைக்கேற்ப மடைகளை மாற்றி விடுவார். இந்த வேலை மிகவும் அவதானத்துடன் செயல்படும் ஒரு வேலை. அன்று ஏனோ நாகப்பரின் மனம் நீர் இறைப்பதில் கவனமில்லாது சிந்தனை வேறெங்கோ சென்றது. பரராசசேகர மன்னன் ஆண்ட பொற்காலம் அவர் மனதிற்குள் முன் விரிந்தது.

தமிழ்ச் சங்கம் ஆரம்பித்துத் தமிழ் செழித்து வளர்ந்திருந்தது. தமிழ் நூலகம் நிறுவப்பட்டு கல்வி மேம்பாடடைந்திருந்தது. சித்த ஆயுர்வேத வைத்திய முறைகள் வளர்ச்சி அடைந்து வைத்திய நூலும் வெளிவந்திருந்தது. முத்தும், சங்கும் அமோகமாக விளைந்து நிறைய வருமானத்தைத் தந்துகொண்டிருந்தன. மொத்தத்தில் யாழ்ப்பாண இராச்சியம் செழிப்புற்றிருந்தது. சங்கிலி மன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியிலும் இந்த நிலை தொடர்ந்திருந்தது.

இவைகளுக்கு எல்லாம் வந்திருக்கும் போர்த்துக்கேயரால் இடையூறு ஏற்படுமோ என ஒருகணம் அவர் மனம் சிந்தித்தது. இதன் விளைவு துலாக்கயிற்றில் அவர் பிடி நழுவித் தன் நினைவின்றி எங்கோ இழுத்துச் செல்லப்படுவது போல் உணர்ந்தார். அவருடைய உயிர் மேலே மேலே சென்றுகொண்டிருக்க உடல் தனித்துக் கிணற்றின் அடியில் விழுந்தது. வள்ளுவர் கூறிய "குடம்பை தனித்தொழியப் புட் பறந்தற்றே" என்பதற்கிணைய நாகப்பரின் உயிரற்ற உடலைத் தான் குடும்பத்தவர்கள் காணமுடிந்தது. இந் நேரம் அவர் குடும்பம் எதிர்பார்த்திருந்த இனிய விடயமும் நிறைவேறியது. மாதுமையாள் பருவமடைந்தாள். பெருங் கொண்டாட்டம் இன்றி இந் நிகழ்வு சாதாரணமாக நடந்தேறியது. குடும்ப தலைவனை இழந்து தவித்த மாதுமையாள் குடும்பத்திற்கு நீலயினார் தலைவராயிருந்து காரியங்களைக் குறைவற நடத்தி வந்தார்.

நாட்டில் இப்போது சரக்குக் கப்பல்களை இழந்து வெறுங்கையோடு திரும்பிச் சென்ற போர்த்துக்கேயர் தங்கள் இழப்பிற்கு நஷ்ட ஈடுகோரி யாழ்ப்பாணத்துக்கு படைகளுடன் வந்து சேர்ந்திருந்தனர். நவீன ஆயுதங்களுடன் கூடிய பலம் பொருந்திய படையுடன் போர் செய்ய விரும்பாத சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருடன் பேச்சு வார்த்தை மேற்கொண்டு அவர்களுடைய இழப்பிற்கு ஈடாக வருடந்தோறும் யானைகளும், பணமும் தருவதாக ஒப்புக் கொண்டு இரண்டு வருடத்துக்கான தொகையையும் கொடுத்து அவர்களைச் சமாதானமாக அனுப்பி வைத்திருந்தார்.

இவைகளைப் பெற்றுக் கொண்டு திரும்பிச் சென்ற போர்த்துக்கேயர் சும்மா இருக்கவில்லை. மன்னாரில் தங்கள் மதம்பரப்பும் வேலைகளை ஆரம்பித்தனர். போர்த்துக்கேயர் கொடுத்த சலுகைகளை ஏற்றுக்கொண்டு மதம் மாறிய கிறிஸ்தவர்கள் தமிழ் இராச்சியத்துக்கு எதிராகவும் அந்நியர்களுக்கு நன்றியுள்ளவர்களாகவும் செயற்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். சங்கிலி மன்னர் இந்நிலை ஏற்படும் என்பதை எதிர்பார்த்தே மதமாற்றத்தையும், இதைச் செய்விக்கும் போர்த்துக்கேயரையும் வெறுத்தார்.

இப்போது மதம் மாறியவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொண்டு தண்டனைக்குள்ளாக்கினார். அதனால் மக்களுக்கு மன்னன்மேல் வெறுப்பு உண்டாகியது. கோட்டை இராச்சியத்திலும் மன்னர் உட்பட பலர் மதம் மாறி போர்த்துக்கேயருக்கு ஆதரவாக மாறினர். எது நடந்த போதிலும் சங்கிலி மன்னர் தான் கொண்ட கொள்கையில் தளராதவராக செயல்பட்டார். நீலயினாருக்கும் மாதுமையாளுக்கும் அமைதியான முறையில் திருமணம் நடந்தேறி அத்தம்பதிகளின் நல்லறத்தின் விளைவாக மாது கருவுற்றிருந்தாள். குலம் விளங்கப் பிறக்கவிருக்கும் குழந்தையை மாதினியாளும் நீலயினாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவலோடு எதிர் பார்த்திருந்தனர். நாட்டில் நடந்து வந்த அரசியல் சர்ச்சையினாலோ என்னவோ மாதுமையாளுக்கு குழந்தை இறந்தே பிறந்தது.

குழந்தையின் இழப்பு நீலயினாரை பெரிதும் துக்கத்தில் ஆழ்த்தியது என்ற போதும் மாதுமை பிழைத்து எழும்ப வேண்டும் என்பதை மனதில் கொண்டு காரியங்களில் ஈடுபடலானார். மாதினியாள் மருமகளை கவனமாகப் பார்த்துக் கொண்டாள் என்ற போதும் மாதுமையை குழந்தையின் இழப்பை விட நாட்டின் அரசியல் வெகுவாகப் பாதித்தது.

கணவனுக்காக தன்னுடைய எண்ணங்களை அடக்கிக் கொண்டு நீலயினாருக்கு இனிய மனைவியாக இல்லறத்தில் ஈடுபட்டாள். ஆனால் மறுபடியும் குழந்தை இறந்தே பிறந்தது. நீலயினார் தன்னுடைய வைத்தியச் சுவடிகளை எல்லாம் புரட்டிப் பார்த்து மூலிகைகள் மூலம் மருந்து தயாரித்துக் கொடுத்த போதும் இந்த இரண்டு குழந்தைகளுக்கு பின் மாதுமையாள் ஏழு தடவை கருவுற்ற போதும் ஒன்றும் முழுமை பெறாமலே தவறிப்போனது. கதிர்காமக் கந்தனை மனதிலிருத்தி இருவரும் கந்தர் ஷஷ்டி விரதமிருந்தனர். சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்ற சொல்லுக்கு இணங்க, மாதுமையாள் ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். குலம் விளங்க தனக்கொரு பேரன் பிறந்ததைக் கண்ட மாதினியாள் பேரனுக்கு கந்தன் எனப் பெயரிடுமாறு கூறிவிட்டு வானுலகம் சென்றாள்.

அன்புக்கு உரியவளாய் மகன் மட்டும் உலகம் என வாழ்ந்த மாதினியின் மறைவு நீலயினாரை வெகுவாகத் தாக்கிய போதும் கந்தன் அவரை இவ்வுலகத்துக்கு கொண்டுவந்தான். அவருக்கும் மாதுமையாளுக்கும் கந்தனே உலகமாயிருந்தது. நாட்டில் இந் நேரம் குழப்பங்கள் தொடர்ந்த வண்ணமேயிருந்தன. போர்த்துக்கேயர் தங்கள் மதப்பரப்புதலைத் தொடர்ந்ததுடன், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவும் ஆயத்தம் செய்து வந்தனர். கந்தனுக்கு பத்து வயதாகும் போது போர்த்துக்கேயரின் பாரிய கடற்படை ஒன்று யாழ்ப்பாணத்தை நோக்கி படை எடுத்தது. அவர்களுக்கும் தமிழ்ப் படைகளுக்கும் நல்லூரில் பெரும் போர் நடைபெற்றது. எத்தனை வீரமாகப் போர் புரிந்த போதும் நவீன ஆயுதங்களான துப்பாக்கி, பீரங்கி முதலியவற்றைக் கொண்ட போர்த்துக்கேயருடன் எதிர்த்துப் போராட முடியாத நிலை ஏற்பட்டது. சங்கிலி மன்னர் பாதுகாப்புக் கருதி நல்லூர் கோட்டையை விட்டுக் கோப்பாயிலிருந்த தனது கோட்டைக்கு பின்வாங்க நேர்ந்தது. பின்வாங்கிச் செல்லும் போது நல்லூரிலிருந்த உணவுக் களஞ்சியத்தைத் தீக்கிரையாக்கி விட்டுச் சென்றார்.

போர்த்துக்கேயப் படைகளுக்கும் கொண்டு வந்த உணவுப் பொருட்களும், வெடி மருந்துப் பொருட்களும் முடிந்த நிலையில் போர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அவர்களும் திரும்பிச் செல்லும் முடிவுக்கு வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலி மன்னரும் கோப்பாயிலிருந்து பச்சிலைப்பள்ளிவரை பின் வாங்கிச் செல்ல நேர்ந்தது. இப்போது இரு பகுதியினரும் சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஒப்பந்தத்தில் முக்கிய விடயமாக மதமாற்றத்தைத் தடை செய்யக் கூடாது, வருடந்தோறும் திறை செலுத்த வேண்டும். இந்தக் கட்டுப்பாட்டுடன் ஒப்பந்தம் இருந்தது.

பட்டத்து இளவரசன் ஒருவனையும், முதலியார் இருவரையும் பிணையாக போர்த்துக்கேயர் பிடித்துச் சென்றனர். ஆனால் படைகள் திரும்பிப் போகும் முன் பொதுமக்களுடைய வீடுகளை ஆக்கிரமித்து அங்கிருந்த செல்வங்களையும் உணவுப் பொருட்களையும் அபகரித்தனர். சைவக் கோயில்களைச் சூறையாடி அங்கிருந்த விலைமதிப்பற்ற நகைகளையும் எடுத்துக் கொண்டதோடு அங்கிருந்த ஓலைச் சுவடிகளை எல்லாம் எரியூட்டினர். சைவ மக்கள் புனிதமாகக் கருதிய பசுவைக் கொன்று சமைத்து உண்டனர். பசுவதையைப் பொறுக்காத மக்கள் திரண்டெழுந்து கையில் கிடைத்த ஆயுதத்தால் அடித்தும், குத்தியும் எதிர்த்துத் தாக்கினர். இந்தத் தாக்குதலைப் பொறுக்காத படைகளும் , பாதிரிமாரும் திரும்பிச் சென்றனர். இந்தப் போரில் நீலயினார் தனது இன்னுயிரை ஈகம் செய்ய நேர்ந்தது பாலகனான கந்தனை மாதுமையாளின் கையில் கொடுத்து அவனை ஒழுக்க சீலனாகவும் சைவப்பற்று உள்ளவனாகவும் வளர்க்கவும் என்று கூறிவிட்டு மறைந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பிப் போன போர்த்துக்கேயர் மன்னாரைக் கைப்பற்றினர். அவர்கள் பிடித்துச் சென்ற தன் மகனை திரும்பப் பெற்று முடி சூட்ட சங்கிலி மன்னர் முயன்றும் அவர் காலத்தில் அது நிறைவேறாது போயிற்று. அவருக்குப் பின் இராச்சியத்தில் இன்னும் குழப்பம் அதிகரித்தது. பதவிக்குப் போட்டி போட்டு அந்நியர்களுக்கு காட்டிக் கொடுக்கும் செயலும் நடைபெற்றது.

தமிழனே கூலியாக மாறித் தமிழனைக் கொல்லும் செயலும் அரங்கேறியது. நாட்டில் இந்தச் செயல்கள் நடைபெறும் வேளை மாதுமையாள் வீட்டிலும் கந்தன் வளர்ந்து திருமணப் பருவம் வந்தபோது வள்ளியம்மையை திருமணத்தில் இணைத்துக் கொண்டான். வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன்படக்கூடிய வீரக்குழந்தைகளை அவனுக்குக் கொடுக்கும்படி மாதுமையாள் இறைவனை வேண்டிக் கொண்டாள்.

மாதுமையாளின் வேண்டு கோளிற்கிணங்கிக் கந்தனுக்கு ஐந்து ஆண் குழந்தைகளையும் ஒரு பெண் குழந்தையையும் இறைவன் அளித்தார். மாதுமையாள் பெரும்பாலும் குழந்தைகளுடனேயே தன்னுடைய நேரத்தைச் செலவழிப்பாள். மூத்த குழந்தைக்கு நீலயினார் வழி நீலகண்டன் எனப் பெயரிட்டனர். தந்தை வழி அவனும் வைத்தியத்தை மேற்கொண்டான். அடுத்து இருவர்களான நாகராஜனும் கணபதியும் விவசாயத்தைத் திறம்படச் செய்யக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக் கொண்டனர். மாதுமையாள் சமயம் வந்த போதெல்லாம் குழந்தைகளுக்குச் சமய உணர்வையும் நாட்டுப் பற்றையும் ஊட்டி வந்தாள்

அவள் கணவரும் குழந்தைகளின் பேரனுமான நீலயினாரின் தமிழ்ப்பற்று, கடவுள் பக்தி, நாட்டுப் பற்று இவைகளை அடிக்கடிகூறி வந்தாள். போரின் போது காயம் பட்ட வீரர்களுக்கு சிகிச்சை செய்யப் போன நீலயினாரும் மக்களோடு மக்களாக தாக்குதலில் ஈடுபட்டதும் அப்போது படைவீரன் ஒருவனின் மூர்க்கமான தாக்குதலில் படு காயமடைந்ததும், குற்றுயிராக அவரை மக்கள் வீட்டுக்கு கொணர்ந்ததும் உயிர் நீத்ததுமான சம்பவங்களையும் கூறுவாள். இதை எல்லாம் கேட்டு வளர்ந்த கடைசிக் குழந்தைகளான ஆறுமுகனும், வேலப்பனும் அவசியம் ஏற்பட்டால் போருக்குச் செல்லவும் பயிற்சி பெற்றிருந்தனர்.

ஒரு காலத்தில் நாட்டை ஆண்ட நாகரின் கதையையும் அவள் பேரக் குழந்தைகளுக்கு கூறுவதுண்டு. தொலைதூரத்தில் அசோகன் என்ற ஒரு மன்னன் போர் வெறி கொண்டு அலைந்து அதையே தொழிலாய் கொண்டிருந்தான். ஒரு முறை போரின் முடிவில் போரின் வெற்றியைக் கண்டு களிக்க போர்க்களத்திற்குச் சென்றான். அங்கே ரத்த வெள்ளத்தில் மிதந்த போர் வீரர்கள், யானைகள், குதிரைகள் இவற்றின் உடல்கள் அவனுக்கு ஒரு வகை உணர்வை உண்டாக்கியது. அப்போது மகான் ஒருவர் வந்து அவனுக்கு கிடைத்த வெற்றியின் விலையை நன்றாகப் பார்க்கும்படி கூறிய போது திகைத்த மன்னன் போரினால் ஏற்பட்ட விளைவுகளை எண்ணி வருந்தினான். அவனுடைய மனம் இளகுவதை அறிந்த மகான் நல்ல சமயத்தில் புத்தரின் போதனைகளை அவனுடைய மனதில் விதைத்தார். மனம்திருந்திய மன்னன் புத்த மதத்தைத் தழுவிக் கொண்டதுடன் அதைப்பரப்பவும் தலைப்பட்டான். அந்த மன்னன் இலங்கையை நோக்கியும் மதப் பரப்பலுக்கு ஆட்களை அனுப்பி வைத்தான். அது வரை சைவத்தை அநுசரித்து வந்த மன்னர் பரம்பரை மதத்தைப் பரப்ப வந்தவர்களின் போதனையில் மயங்கி புத்த மதத்தைத் தழுவிக் கொண்டதுடன் ஆண்டு வந்த அரசையும் ஆண்ட பகுதியையும் பௌத்த அரசாகவும் பௌத்த நாடாகவும் பிரகடனப்படுத்தியது.

மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி என்னும் சொல்லிற்கு இணங்க மக்களும் பலர் அந்த மதத்துக்கு மாறினர். இந்தப் புதுமதத்துடன் அவர்கள் கொண்டு வந்த மொழியுடன் பல மொழிகள் சேர்ந்து ஒரு புது மொழி உருவானது. இந்தப் புது மதமும் புது மொழியும் புற்று வளர்வது போல் வளர்ந்தது. இந்தப் புது வெள்ளத்தில் அமிழ்ந்து போனவர்கள் சிங்கள பௌத்தர்கள் என்றும், இதைச் சேராத திராவிட இனத்தவர்கள் சைவத் தமிழர்கள் என்றும் இரண்டு இனம் உருவாயிற்று.

இப்படியாக சின்னஞ்சிறு தீவான இலங்கையில் இரண்டு இனம் உருவான வரலாற்றைக் கூறுவாள். இந்த இரண்டு இனங்களும் மாறி மாறி முன்னிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றது. போட்டி பொறாமை இவற்றால் சண்டைகளும் ஏற்பட்டது. அந்நிய ராச்சியங்களான சோழ, பாண்டியர்களின் உதவியும் தேவைப்பட்டது. உதவிக்கு வந்தவர்கள் இவர்களுடைய சண்டையைக் கட்டுப்படுத்த முடியாத போது தாங்களே (சோழ, பாண்டியர்கள்) நாட்டை ஆண்டார்கள்.

இப்படியாக அன்னியர்கள் வருகை, அந்நிய மதங்களால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றியும் கூறுவாள். புத்த மதம் அறிவு அடிப்படையில் அமைந்த மதம். விக்கிரக வழிபாடு விழாக்கள், சாதி வேறுபாடுகள், புரோகிதர்களின் ஆதிக்கம், யாகயஞ்ஜங்கள், உயிர்பலி போன்றவற்றுக்கு புத்த மதத்தில் இடமில்லை. கடவுளையும் வேதங்களையும் அது ஏற்கவில்லை. கடவுளைப் பற்றிய ஆராய்ச்சியை விட மக்கள் சேவையே மகத்தானது என்பது அவர் கொள்கை.

அன்பு, கருணை, எல்லா உயிர்களையும் நேசித்தல், சொல்லிலும் செயலிலும் தூய்மை, வாய்மை இவையே மனித குலத்தை மேம்படுத்தும் என்பதும், ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் என்பதால் ஆசையைக் களைய வேண்டும் என்பதும் அவருடைய கொள்கை. ஆனால் அவருடைய மதத்தைத் தழுவிக் கொண்டவர்கள் அவருடைய கொள்கையைப் பின்பற்றவில்லை. பெரிய பெரிய சிலைகளைச் செய்து அதில் கொள்கைகளை அடக்கியதோடு கடமை முடிந்தது என்று தங்கள் வழி நடக்கின்றனர். ஆசைகளினால் ஏற்படும் துன்பங்களைக் களைய ஆசைகளைத் துறக்க வேண்டும். எனப் புத்தர் மொழிந்தார்.

ஒரு மதத்தால் நடந்தவைகள் இவை. இன்னும் ஒரு புது மதம் எங்கோ பல ஆயிரம் மையில்களுக்கு அப்பால் இருந்து வருகிறது. இதனால் என்ன புது விளைவுகள் வருமோ தெரியாது. ஆகவே நாம் எமது மூதாதையர்கள் காட்டிய வழியிலே நின்று நம்முடைய சமயத்திலேயே இருக்கக் கூடிய சீர்கேடுகளைக் களைந்து நம் சமயத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனப் பல வழிகளிலும் உபதேசம் செய்வாள்.

இந்தக் கால இடைவெளியில் போர்த்துக்கேயரின் கைப் பொம்மைகளாகச் செயல்பட்டவர்களே நாட்டை ஆள முடிந்தது. அல்லாதவர்கள் கொல்லப்பட்டார்கள். உயர் மட்ட பதவியிலிருந்தவர்கள் மதம் மாறினர். சில மக்களைத் திரட்டிப் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்ட சங்கிலி குமாரன் ஒருவனைக் கொன்று அவன் தலையை ஈட்டியிலே தொங்க விட்டனர். கிரிஸ்தவ மிஷனரிமார்களின் அச்சுறுத்தலுக்கும், போர் வீரர்களின் அடாவடித்தனமா சட்டதிட்டங்களுக்கும் பயந்து தென்னிந்தியாவுக்கும், வன்னிப் பெருநிலப் பரப்புக்கும் சிலர் ஓடிச் சென்றனர். திருக்கேதீஸ்வரம் போன்ற புராதனமான கோயில்கள் இடித்து அழிக்கப்பட்டன. கத்தோலிக்க ஆலயங்களும், மிஷனரிமாரின் மத நடவடிக்கைகளுக்கு காவல் நிலையங்களாகவும், மதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற மறுப்பவர்களுக்கு தண்டனை வழங்கும் நிறுவனமாகவும் செயற்பட்டன. எங்கோ ஒரு சிலர் இந்தக் கெடு பிடிகளிலிருந்து தப்ப முடிந்தது. மாதுமையாளின் பேரக் குழந்தைகளில் ஆறுமுகனும் வேலப்பனும் தமிழ்ப் படைகளுடன் சேர்ந்து போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இறுதியில் சங்கிலி குமாரன் ஒருவனின் ஆட்சியில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி முழுவதுமான ஆட்சியை தங்கள் வசமாக்க படையெடுத்தனர்.

மன்னாரில் மதம் மாறிய கிறிஸ்தவர்கள், கோட்டை இராச்சியத்திலிருந்து கூலிக்கு கொண்டு வரப்பட்டவர்கள், யாழ்ப்பாணத்தில் மதம் மாறியவர்கள் எனப் பலரின் அநுசரணையுடன் சங்கிலிகுமாரன் தோற்கடிக்கப்பட்டான். இறுதிப் போரில் மாதுமையாளின் பேரர்கள் இருவரும் பேரன் நீலயினார் போன்று தங்கள் இன்னுயிரை நாட்டுக்காக ஈந்தனர். மாதுமையாள் தன்னுடைய தள்ளாத வயதில் தமிழ்ப்படை வென்றது எனச்செய்தி வராதா என ஏக்கத்தில் உயிர் பிரியாது தவித்தாள்.

ஆறுமுகன், வேலப்பன் இருவரையும் பற்றி விசாரித்துக் கொண்டிருப்பாள். அவர்களின் முடிவு அவளுக்கு தெரிவிக்கப்பட்ட போது அவர்களை நினைத்துப் பெருமைப் பட்டாள். அவர்களின் தாய் வள்ளியம்மை மாமியார் மீது பெரும் கோபம் கொண்டாள். நீலயினாரின் பெருமைகளைச் சொல்லிச் சொல்லி அவள் தூண்டி விட்ட காரணத்தால் தன் பிள்ளைகளை இழந்ததாக பொருமினாள்.

கந்தரின் கைகளைப் பிடித்துக் கொண்டு மயங்குவதும் விழிப்பதுமாக இருந்த மாதுமையை நன்றாகத் திட்டித் தீர்த்தாள் வள்ளியம்மை. முடிவில் போர்த்துக்கேயரின் ஆதரவாளர்களால் மாதுமையின் வீட்டிற்கு அருகாமையிலிருந்த விநாயகர் கோயில் இடித்துச் சத்தம் கேட்டபோது இனித் தமிழர் மீட்சி இப்போதைக்கு இல்லை என திக்கித் திக்கிக் கூறினாள். அதற்கு மேல் பேச முடியவில்லை. கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. மாதுமையாளின் பேரன் நீலகண்டன் அவள் என்ன சொல்ல விரும்புகிறாள் என்று புரிந்து கொண்டான். விநாயகருக்கு இப்போதையை விடப் பெரிய கோயில் கட்டுகிறேன் என்று வாக்குக் கொடுத்தான். விநாயகரின் சிறு ஆலயமும் இடிக்கப்பட்ட பின் அங்கு வாழ்ந்த மக்கள் ஆத்திமரத்தையே விநாயகராக நினைத்து வழிபட்டு வந்தனர் அங்கு இருந்த சின்னஞ்சிறு விநாயகர் விக்கிரகத்தை அங்கு வாழ்ந்த அன்பர்கள் மறைத்து வைத்தனர். சின்னத்தம்பசெட்டி என்று அழைக்கப்பட்டு வந்த அந்தப் பகுதி ஆத்திமரத்தை வழிபடத் தொடங்கியதால் ஆத்தியடி என்று பெயர் வழங்கலாயிற்று.

போர் நடவடிக்கைகள், சிப்பாய்களின் நடமாட்டம், அன்னிய மதத்தவர்களின் வருகை எனப் பல காரணங்களால் அங்கு வாழ்ந்தவர்கள் ஆத்தியடிக்குள்ளேயே தங்கள் உறவு வட்டத்தை சுருக்கிக் கொண்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஆத்தியடிக் கிராமம் பிறந்த கதை. மாதுமையாளின் காலத்துக்குப் பின் முப்பத்தெட்டு ஆண்டுகள் போர்த்துக்கேயர் ஆட்சிபுரிந்தனர். இந்தக் காலப் பகுதிக்குள் கண்டி இராச்சியத்திலிருந்து படையெடுத்து வந்து யாழ்ப்பாணத்தை கைப்பற்ற கண்டி மன்னன் முயற்சி செய்தான். போர்த்துக்கேயர் மீது கொண்ட வெறுப்பினால் யாழ்ப்பாணத் தமிழ் மக்களும் ஆதரவளித்துப் போரில் ஈடுபட்டனர். படைகளின் தீவிரம் கண்டு கோட்டைக்குள் ஒளிந்து கொண்ட போர்த்துக்கேயத் தளபதி பதின் மூன்று நாட்களுக்குப் பின் திடீரென்று தாக்குதலை மேற்கொண்டு தமிழ்ப் படைகளை தோற்கடித்தான். இவைகள் மாதுமையாளின் பேரன் நீலகண்டன் காலத்தில் நடந்தேறியவை. நீலகண்டன் காலத்தில் மாதுமையாளின் கடைசி ஆசையும் நிறைவேறவில்லை.

## பின் குறிப்பு

இதன் பின்னர் இன்னொரு ஐரோப்பியர்களான டச்சுக்காரர்கள் இலங்கை மீது நாட்டம் கொண்டனர். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இயற்கைத் துறை முகங்களைக் கொண்டிருந்த திருகோணமலையும், கறுவா போன்ற வாசனைத் திரவியங்களும் ஐரோப்பியர்களைக் கவர்ந்து இழுத்தது. போர்த்துக்கேயரை நாட்டிலிருந்து விரட்டியடிக்க எண்ணம் கொண்ட கண்டி மன்னன் அதற்கு உதவி தேவைப்பட்டதனால் நவீன ஆயுதங்களுடன் கூடிய ஒரு படையையுடைய டச்சுக்காரர்களை ஆதரித்தான்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினால் இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கு கீழ் ஆளலாம் என்பது அவனுடைய அவாவாக இருந்தது. அவன் கனவும் நிறைவேறவில்லை. தமிழ் மக்கள் எண்ணெய் சட்டியிலிருந்து எரியும் நெருப்பில் விழுந்த கதையாக டச்சுக்காரர்களின் ஆட்சிக்கு மாறினார்கள். மதரீதியாகவும்,பொருளாதார ரீதியாகவும் நைந்து தமிழ் மக்கள் டச்சுக்காரருக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

கத்தோலிக்கர்களாக மாறி கல்வி வாய்ப்பைப் பெற்று உயர் பதவி வகித்தவர்கள். டச்சுக்காரருக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சி செய்தவர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அவர்கள் காலத்தில் கத்தோலிக்க தேவாலயங்கள் புரட்டஸ்தாந்து தேவாலயமாக மாற்றப்பட்டன. இப்படியே போர்த்துக்கேயர் ஆட்சி முடிவுக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்த்துக்கேயர் ஆட்சிக்குப் பின் ஆத்தியடிக் கிராமம்

இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சி திடமாக நிலை கொண்டிருந்த போது சைவமும் அதன் பாரம்பரிய அநுட்டானங்களும் மூழ்கடிக்கப்பட்டன. அதன் பின்னர் வந்த டச்சுக்காரர் ஆட்சியில் சமயம் பற்றியதளர்வான போக்கினால் மக்கள் விரத அநுட்டானங்களைத் தாங்கள் வீடுகளில் அநுட்டித்தபோதும், பகிரங்கமாக கோயில் கட்டிவழிபடப் பயந்தனர். இதனால் ஆத்தியடி விநாயகருக்கு கோயில் கட்டும் பணியும் மக்கள் மனதிலேயே இருந்து வந்தது.

போர்த்துக்கேயர் காலத்தில் வன்னியில் இருந்த பெரும்பாலான வயல் நிலங்கள் தரிசாகக் காடடைந்து போயிருந்த காரணத்தால் யானைகள் பெருகியிருந்தன. இவைகளை மலிவான விலையில் வன்னிச் சிற்றரசர்களிடம் வாங்கி இந்தியர்களுக்கு மேலதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதித்ததுடன், உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கும் வரி அறவிட்டு லாபம் சம்பாதித்தனர் டச்சுக்காரர்கள்.

தென்னிந்தியாவில் மதுரை, தஞ்சாவூர் போன்ற இடங்களில் பஞ்சத்திலடிபட்ட மக்களை அடிமைகளாக கொண்டு வந்து குடியேற்றி உணவு உற்பத்தியைப் பெருக்கி அதனாலும் லாபம் சம்பாதித்தனர். இந்த வகையில் கிடைத்த லாபத்தை மதப்பிரசாரத்துக்கும், தேவாலயங்கள் கட்டுவதிலும் செலவழித்தனர். முன்னர்கட்டப்பட்ட கத்தோலிக்க தேவாலயங்கள் புரட்டஸ்தாந்து தேவாலயமாக மாற்றப்பட்டதுடன் பெரும்பாலானோர் அந்த மதத்துக்கு மாற்றமும் செய்யப்பட்டனர்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற சிறந்த கொள்கையை விதைத்தவர் சைவத்தின் முது பெரும் குரவரான திருமூலர். பின்னால் வந்து சேர்ந்தவர்களினால் இவைகள் மறைக்கப்பட்டு அவர்களுடைய இடைச் செருகல்களை ஏற்றுக் கொண்டு, உயர்வு, தாழ்வு கூறி ஒரு சாரரைப் புறந்தள்ளிய காரணத்தால், புறந்தள்ளப்பட்டவர்கள் விரும்பியே கத்தோலிக்க மதத்துக்கும், பின்னர் புரட்டஸ்தாந்து மதத்துக்கும் மாறினர். மதம் மாறியவர்கள் கல்வி வாய்பை பெற்று உயர்வதைக் கண்டு உயர் சாதியினரும் தாங்கள் பின் தங்கி விடாதிருக்க மதம்மாறி முதலியார், உடையார், விதானையார்போன்ற பதவிகளை பெற்று வசதியாக வாழ்ந்தனர்.

இன்ன பல அரசியல் காரணங்களினால் எல்லாம் ஆத்தியடி மக்கள் பெரும் மாற்றமடையவில்லை. சைவத்திலிருந்து மதம் மாறாத காரணத்தால் பெரும் பதவிகள் பெறும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. விநாயகப் பெருமானும் மக்கள் மனதிலேயே குடி கொண்டிருந்தார். இரண்டு நூற்றாண்டுகளுக்கு இந்த நிலையே தொடர்ந்தது. காலச் சக்கரம் சுழன்று வரும் போது நிகழ்வுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுவது இயற்கை. அதற்கு இணங்க இலங்கைத் தீவின் அரசியலிலும் மாற்றம் கண்டது.

இன்னொரு ஐரோப்பியர்களான ஆங்கிலேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்தனர். சோழப் பேரரசின் காலத்திலிருந்தே வீரம் மிக்க வேளக்காரப் படையினரே தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், இராணுவ சேவையிலும், பாதுகாப்பிலும் முதலிடம் வகித்தனர். வன்னிச் சிற்றரசர்களின் காலத்தில் அவர்களின் படைகளும் வேளக்காரப் படையினரும் சேர்ந்தே வன்னிமைகள் உருவாக்கப்பட்டமையால் வன்னிச் சிற்றரசர்கள் பலம் வாய்ந்தவர்களாக இருந்தனர். அத்துடன் அந்நியர் உள்ளே புக அஞ்சும் வகையில் காடடைந்த பிரதேசமாகவும் இருந்த காரணத்தால் வன்னி இராச்சியம் அந்நியர் வசமாகாது, திறை செலுத்தும் சிற்றரசாகவே இருந்து வந்தது. கண்டி இராச்சியமும் மலைசார்ந்த அதன் புவி அமைப்பினால் அந்நியர் புகாத பாதுகாப்பான பிரதேசமாக சுதந்திரமாகவே இருந்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்ததும் மற்ற இரண்டு அரசுகளும் (போர்த்துக்கேயர், டச்சுக்காரர்) போலல்லாது லாபம் மட்டும் முக்கியமாக இல்லாது தங்கள் அதிகாரத்தை இலங்கை முழுவதுக்கும் பரவி ஆட்சியை நிரந்தரமாக தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் வன்னியையாண்ட பண்டாரவன்னியனைத் தோற்கடித்து வன்னிராச்சியத்தை கைப்பற்றினர்.

சொந்த கோபதாபங்களைத் தீர்த்துக் கொள்ள சொந்தங்களை அந்நியர்களுக்கு காட்டிக் கொடுக்கும் பண்பு காலம் காலமாக தொடர்ந்து வரும் ஒன்று. இது ஆங்கிலேயர் வரைக்கும் சாதகமாக அமைந்தது அதனால் கண்டி இராச்சியத்தையும் கைப்பற்றி இலங்கை முழுவதும் தங்கள் ஆட்சிக்குள் கொண்டு வந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியில் முந்திய அரசாங்கங்கள் போலில்லாது மற்ற மதத்தினருக்கு தங்கள் மதங்களை அநுட்டிக்கச் சுதந்திரம் அளித்தனர்.

இந்தச் சுதந்திரம் கிறிஸ்தவமிஷனரிமார்களுக்கு தாராளமாக தங்கள் மதத்தைப் பரப்ப வசதியளித்தது. ஆங்கிலேய அரசாங்கம் அவர்களுக்கு நிதியுதவி அளித்த காரணத்தால் அந்த நிதி உதவியைப் பயன்படுத்தி கல்வியைத் தங்கள் மதத்தைப்பரப்பும் கருவியாகப் பயன்படுத்தினர். இதனால் சைவ சமயத்தவரிடையே ஒரு விழிப்புணர்ச்சி உண்டாகி சைவ சமயம் மறுமலர்ச்சி பெறத் தொடங்கியது. முந்திய அரசின் காலத்தில் அழிந்து போன ஆலயங்களைப் புதுப்பிக்கவும், புதுக்கோயில்களை உருவாக்கவும் ஆரம்பித்தனர். இந் நேரம் ஆத்தியடிக் கிராமத்திலும் தாங்கள் இதயத்தில் வைத்துப் பூசித்து வந்த விநாயகப் பெருமானுக்கு ஆலயம் அமைக்க ஆத்தியடி மக்கள் எண்ணம் கொண்டனர்.

விநாயகப் பெருமானும் அன்பர்களின் மனதிலே கோயில் கொண்டிருந்த காரணத்தால் அவர்களின் ஆசையை நிறைவேற்றத் திருவுள்ளம் கொண்டார். சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் தீவிர பற்றுடையவரும், விநாயக பக்தருமான வேலாயுத வாத்தியாரின் கனவிலே தோன்றி ஆதியில் ஆத்திமர நிழலில் கோயில் கொண்டிருந்த இடத்தை காட்டியருளினார். விநாயகப் பெருமான் கனவிலே காட்டிய பிரகாரம் பற்றைகளும் புற்றுமாக மூடியிருந்த கட்டாடிச்சீமா என்ற காணியிலிருந்து விநாயகரை வெளிக் கொணர்ந்தனர். (காணிகளுக்கு வரி அறவிடும் முகமாகப் பெயரிடும் வழக்கம் டச்சுக்காரர் காலத்தில் அறிமுகமானது)

வேலாயுத வாத்தியாரும் மற்ற விநாயக அடியார்களும் சேர்ந்து வால்கடைப் பரதேசி என்கின்ற மகானின் அருள் வாக்குப் படி வெள்ள வாய்க்காலும் எறும்புப் புற்றும் அமைந்த காணியில் (தற்போதுள்ள இடத்தில்) விநாயகருக்கு கோயில் அமைத்து வழிபட ஆரம்பித்தனர். கோயில் பனை ஓலையால் வேயப்பட்ட சிறு மண்டபமும், பசுஞ் சாணத்தினால் மெழுகப்பட்ட தரையுமாக அமைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந் நிகழ்வு நடைபெற்ற வேளையில் ஆங்கிலேயர் ஆட்சி நிலைபெற்று இங்கிலாந்து அரசரால் நியமிக்கப்பட்ட தேசாதிபதி நாட்டின் தலைவராயிருந்தார். அவர் மாவட்ட அரசாங்க அதிபரினதும், நிர்வாக சபை உறுப்பினர்களதும் உதவியுடன் நாடு முழுவதையும் நிர்வகித்தார். பிரதேச அதிகாரத்தின் இருப்பிடமாகக் கச்சேரியும், அரசாங்க உதவி அதிபரின் பணிமனையும் இருந்தது.

கிராம மட்டத்தில் உடையாரும், விதானையாரும் காரியமாற்றும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஒவ்வொரு மாவட்டமும் ஒருகாவல் அதிகாரியின் கீழ் காவல்துறைப் பிரிவாக வகுக்கப்பட்டு நகரங்களின் ஒழுங்கைப் பேண விதிகள் வகுக்கப்பட்டன. ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய நீதி நிர்வாக முறைகள் வெற்றியளித்தன. பொதுமக்களின் பாதுகாப்பு முன்னெப்போதையும் விட சிறப்பாயிருந்தது. கல்வியில் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு வேலை வாய்ப்புகள் உருவாகின.

அரசியல் குழப்பங்கள், அந்நியர் குடியேற்றம் போன்ற பல காரணங்களால் வேறு கிராம மக்களுடன் உறவு கொள்ளாது ஆத்தியடிக் குள்ளேயே சுற்றி வந்த ஆத்தியடிக் கிராம மக்கள் நாட்டில் அமைதி நிலை காரணமாக அடுத்த கிராமங்களான கலட்டி, தும்பளை ஆகிய இடங்களிலுள்ள மக்களுடன் உறவு கொள்ளத் தொடங்கினர்.

இப்படியான பல முன்னேற்றங்கள் ஏற்பட்டதுடன் தமிழ்க் கலாச்சாரமும், சைவமும் செழித்து வளரத் தொடங்கியது. இந்நிலை கிறிஸ்தவ மிஷனரிமார்களை சைவ எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வைத்தது. சைவ எதிர்ப்பு பிரசாரத்தில் ஈடுபட்ட கிறிஸ்தவப் பாதிரி மார்களுக்கும், சைவர்களுக்கும் சர்ச்சை பெரிதாக வளரத் தொடங்கியது. கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்கில் சைவ சமயத்தையும், அது மக்களால் கடைப்பிடிக்கும் முறையையும் கண்டனம் செய்தனர். இந் நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகநாவலர் அவர்கள் வெஸ்லியன் மிஷன் பாடசாலையில் தமிழ், ஆங்கிலம் இரண்டும் கற்பிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

மிஷனரிமாரின் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிவதால் சைவ சமயத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்ற காரணத்தால் ஆசிரியர் பதவியைத் துறந்து சமயப் பணிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். திருமணம் செய்து கொண்டால் சுதந்திரமாக ஈடுபட முடியாது என்பதால் திருமணம் செய்து கொள்ளாது இல்லற வாழ்வையும் துறந்தார்.

சைவ சமயப் பிரசாரத்தின் முதல் படியாக 18. 12. 1847 இல் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் முதல் பிரசங்கதை ஆற்றினார். காலப் போக்கில் அவர் பிரசங்கங்கள் சுற்று வட்டார மெங்கும் பிரபலமாயின. வேதாகமத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியைப் பேசிவல் துரையவர்கள் ஒரு முறை நாவலருக்குக் கொடுத்திருந்தார். அந்தப் பணியைத் திறம்பட செய்துமுடித்த காரணத்தால் வேதாகமத்தையிட்டுப் பரந்த அறிவு பெற்றிருந்தார். அந்த அறிவு அவருக்குக் கிறிஸ்தவ சமயக் கோட்பாட்டை விமர்சிக்கப் பெரிதும் உதவியது.

இவருடைய காலத்திலேயே தான் கந்தபுராணம் கோயில்களில் ஓதும் வழக்கம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. இதையொட்டி ஆத்தியடி விநாயகர் கோயிலிலும் கந்தபுராணம், பிள்ளையார் கதை, விநாயகர் புராணம் என்பவற்றை ஓதும் வழக்கம் ஏற்பட்டது.

கிறிஸ்தவ மிஷனரிமார்கள் சைவ சமயத்துக்கு எதிராக துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள் என அச்சிட்டு வெளியிட்டனர். இப்போது நாவலர் சைவ எதிர்ப்பு பிரசாரங்களுக்கு பதில் கொடுக்க ஓர் அச்சுக் கூடத்தை நிறுவி சிறு புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றை வெளியிட்டார். அவர் வெளியிட்ட நூல்களில் முத்துக்குமாரக் கவிராயர் இயற்றிய ஞானக்கும்மி என்ற நூல் மிஷனரிமார்களின் கருத்துக்கு எதிராக இருந்தமையால் அவர்கள் அந் நூலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதற்குப் பதிலாக வச்சிரதந்தம் என்ற நூலை வெளியிட்டார். முருகப்பெருமானின் பெருமைகளைக் கூறும் திருமுருகாற்றுப் படையை வெளியிட்ட போது அவை பொய்யான கருத்துக்கள் என கிறிஸ்தவர்கள் கண்டனம் செய்தனர். முருகனின் உண்மையான தத்துவக் கருத்தை விளக்கி சுப்ரபோதம் என்னும் நூலில் கிறிஸ்தவர்களுக்கு விளக்கம் கொடுத்தார். சைவத்தூஷண பரிகாரம் என்று நாவலரால் வெளியிடப்பட்ட நூல் மிஷனரிமாரின் எதிர்ப்பைச் சமாளிக்க பெரும் ஆயுதமாகப் பயன்பட்டது

வேதாகமத்தில் காணப்படும் சடங்காசாரங்களுடன், சைவ சமயங்கள் விதிக்கும் சடங்காசாரங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்த விடயங்களையே இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் பெரும்பாலும் கொண்டிருந்தது. கிறிஸ்தவத்தையும் அதன் மதம் மாற்றும் இலட்சியங்களையும் எதிர்க்கும் நாவலரின் வெளியீடுகளில் சைவ சமயநிலை என்ற நூல் சிறப்பாக அமைந்து பயன்பட்டது. இதில் அவர் சைவக் கோயில்களில் நடைபெறும் ஊழல்களான பூசகர்களின் தவறான நடத்தை, மிருகபலி, சின்னமேளம் போன்ற சீர்கேடுகளைச் சுட்டிக் காட்டவும் தவறவில்லை.

சைவச் சிறார்களுக்கு சமயக் கல்வியைப் புகட்டும் நோக்கில் சைவப் பாடசாலையை ஆரம்பித்ததுடன் நாடெங்கிலும் சைவப் பாடசாலைகள் ஆரம்பிக்க ஊக்கம் கொடுத்தார். இந் நேரம் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களங்களில் வேலை செய்வதற்கு ஆங்கில மொழி அவசியமாயிருந்தது. ஏழை மாணவர்களில் சைவர்களாயிருப்பவர்களுக்கு ஆங்கிலக் கல்வி குதிரைக் கொம்பாய் இருந்த வேளை, நாவலர் ஆரம்பித்த பாடசாலை இயக்கம் பெரிதும் உதவியாயிருந்தது.

நாவலர் வழி சைவப் பாடசாலைகள் புலோலியிலும் ஆரம்பிக்கப்பட்டது. அதில் முதன்மையானது வை. வேலாயுதம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை. ஏழை மாணவர்களின் சமய வளர்ச்சிக்கும் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கும் இப் பாடசாலை பெரிதும் உதவியதுடன் அவர்களுக்கு வேலை வாய்ப்புப் பெறவும் வழிவகுத்தது. பின்னாளில் வேலாயுதம் அவர்களின் ஞாபகார்த்தமாக வேலாயுதம் பாடசாலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு வேலாயுதம் மகா வித்தியாலயமாக உயர்ந்து புகழ் பெற்றது.

புலோலியைச் சேர்ந்த பலர் இங்கு படித்து வெளியேறி உயர் கல்வி கற்று அரசாங்கத்திலும், பல்கலைக் கழகத்திலும் பதவி பெற்றவர்கள் என்பது இந்தப் பாடசாலையின் பெருமைகளில் ஒன்று. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இடம் கிடைக்காதவர்களுக்கு எல்லாம் தஞ்சமளித்ததும் இந்தப் பாடசாலை தான். ஆத்தியடியைச் சேர்ந்த கோணப்பர் கணபதிப்பிள்ளை அவர்கள் இந்தப் பாடசாலையின் முதல் ஆசிரியர்களுள் ஒருவர். அவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்ததுடன் தேனெனக் கவிகள் பாடும் சித்தியுடையோன் எனவும், கற்றவர் வியக்கும் கணபதிப்பிள்ளை எனவும் தமிழ் அறிஞர்களால் புகழப்பட்டவர்.

ஆரம்பகால ஆசிரியராய் இருந்ததுடன் பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆலோசனைகள் கூறி வழிகாட்டியவருமாவார். இந் நேரம் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய தேயிலை, கோப்பி, ரப்பர் போன்ற பயிர்கள் அமோகமாக விளைந்தன. ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் உருவானது. முந்திய அரசாங்கங்கள் போலல்லாது ஏற்றமதி, இறக்குமதி வர்த்தகத்தில் தனியாருக்கும் வாய்ப்பளித்த காரணத்தால் யாழ்ப்பாணத் தீபகற்பத்து மக்களும் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்த வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபடஆரம்பித்தனர். இருபதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் ஆத்தியடிக் கிராமத்திலும் பல முன்னேற்றங்கள் ஏற்படத் தொடங்கின. கிராமமக்கள் தங்கள் குல தெய்வமான விநாயகப் பெருமானுக்கு கல்லால் ஒரு கோயில் அமைக்க எண்ணம் கொண்டனர். 1901ஆம் ஆண்டில் புதிய கோயிலுக்கு அடிக்கல் நாட்டினர். கட்டிட வேலைகளை முன்னெடுத்துச் செல்லவும், அதற்கான நிதி சேகரிக்கவும் என ஒரு சபையை நிறுவினர்.

ஆத்தியடி பிள்ளையார் கோயில் தர்ம பரிபாலன சபை என்று பெயரிடப்பட்ட இச் சபைக்குத் தலைவராக ச. சபாபதிப்பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆத்தியடியைச் சேர்ந்த ஆனந்தி அம்மையாரைத் திருமணத்தில் இணைத்துக் கொண்டமையால் கலட்டியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை அவர்கள் தர்மபரிபாலன சபையில் இணைந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். இவர் ஆறுமுக நாவலரின் சைவ மறுமலர்ச்சி இயக்கத்தில் ஈடுபாடுடையவராகவும், புலால் உணவை மறுப்பவராயும் இருந்ததால் கோயில் பணிக்கு ஏற்றவராயிருந்தார்.

ஆனந்தியம்மையாரின் சகோதரி மாதுமையின் மகனான வேலுப்பிள்ளையிடம் கோயிலையும், திருப்பணிப் பொறுப்பையும் ஒப்படைத்தனர். இவரும் சிறிய தந்தை சபாபதிப் பிள்ளை போலவே சைவ உணவுப் பழக்கமும், கோயில் திருப்பணி வேலைகளில் அக்கறை உள்ளவராயுமிருந்தார். இளம் வயதிலேயே தந்தை கந்தரின் வைத்திய முறைகளைக் கற்று கைராசியான வைத்தியர் எனப் பெயர் பெற்றார்.

நாடி பிடித்து நோயைக் கண்டறிவதிலும் நோய்க்குரிய மருந்தைக் கொடுப்பதிலும் வல்லவராயிருந்தார். மருந்து தயாரிப்பதிலும் தனிச் சிரத்தை எடுத்துக் கொள்வார். எண்ணெய் வகைகள் காய்ச்சும் போதும், சூரணம், பஸ்பம் முதலியவற்றை உரலிலிட்டு இடிக்கும் போதும் குடும்பத்தினர் உதவியுடன் தானே முன்னின்று தயாரிப்பில் ஈடுபடுவார். வைத்தியத் தொழிலை வருமானம் ஈட்டும் ஒரு தொழிலாக அவர் நினைக்கவில்லை. மனித நேயமுள்ள ஒரு தொழிலாகவே கருதி வந்தார்.

வைத்தியத்துக்கு வருபவர்கள் வசதி குறைந்தவர்களாயிருந்தால் அவர்களிடம் பணம் வாங்காது மருந்து கொடுப்பதுடன் அநுபானமும் கொடுத்தனுப்புவார். தூர இடங்களிலிருந்து வரும் நோயாளிகளுக்கும் அவர்களைக் கூட்டிக்கொண்டு வரும் உறவினருக்கும் பசியாற உணவு கொடுத்து அனுப்புவார். துரதிஷ்ட வசமாக அவருடைய மருத்துவ முறைகளையோ, மருந்து தயாரிப்பு முறைகளையோ ஒருவரும் பின்பற்றவில்லை. கோயில் நிர்வாகம் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட போது ஒழுங்காக வேலை செய்து காசு சம்பாதிக்க வக்கில்லை கோயில் முகாமைத்துவத்துக்கு வந்து விட்டார் என சிலர் எள்ளி நகையாடினர். மற்றவர்களின் சீண்டுதலையோ பரிகசிப்பான வார்த்தைகளையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பொருட்படுத்துவதில்லை. கோயில் காரியத்துக்கு பகைவர் வீட்டுக்கும் போகத் தயங்கியதில்லை. தான் எடுத்த காரியமே கண்ணாக இருப்பதுடன் எதற்கும் வளைந்து கொடுக்காத பிடிவாதக்காரராயுமிருந்தார். இதனால் இவருக்குச் சில பகைவர்களும் இருந்தனர். இதில் அவர் மாமியின் கணவர் நாகப்பர் முக்கியமானவர். நாகப்பர் மகள் வேதநாயகிக்கும் வேலுப்பிள்ளைக்கும் திருமணம் செய்வதாகச் சிறு வயது முதலே நிச்சயிக்கப்பட்டிருந்தது. அறியாப் பருவத்திலே நிச்சயிக்கப்பட்ட இந்தத் திருமணம் மாமிமகள், மாமா மகன் என்ற போதும் பருவம் எய்திய பின் ஒருவரை ஒருவர் பார்த்து பழகவோ, பேசவோ வாய்ப்பு இல்லாத போதும் இருவரும் மானசீகமாக தங்கள் அன்பை வளர்த்துக் கொண்டனர். பணம் சம்பாதிக்க வழி தேடாது சேவைக்கு வைத்தியம், ஆத்ம திருப்திக்கு கோயில் தொண்டு இதற்காக ஆசாரம் இவைபோன்ற அவருடைய கொள்கைகள் நாகப்பருக்கு பிடிக்காது போயிற்று.

மகளுக்கு மணப் பருவம் வந்த போது வேறு மாப்பிள்ளை தேடுவதில் முனைந்தார். இதைப் பார்த்த வேதநாயகி பெரும் துக்கத்திலாழ்ந்தாள். உணவு, உறக்கத்தை துறக்கும் நிலைக்கு தள்ளப்பட்டாள். வேறு திருமணத்துக்கு கட்டாயப் படுத்தினால் உயிரை விடவும் தயாராயிருந்தாள். வேதநாயகியின் மூத்த சகோதரிகள் தங்கள் வீட்டுக் கடைக்குட்டிக்கு அப்படி ஒரு நிலை ஏற்படுவதை விரும்பவில்லை. வைத்தியர் குடும்பத்தினரிடம் தூது சென்றனர். வைத்தியர் குடும்பத்தினர் வேதநாயகியை மருமகளாக ஏற்றுக் கொள்ள முழு மனதுடன் ஒப்புக் கொண்டனர்.

வீட்டில் உள்ள பெண்கள் ஒன்று கூடி இரவு நேரம் வீட்டின் பின்பக்க வேலியைப் பிரித்து வேதநாயகியை ஒருவருக்கும் தெரியாமல் அழைத்துச் சென்று வைத்தியரின் பெற்றோரிடம் ஒப்படைத்தனர். அந்நாளில் இரகசியமாகவோ, அமைதியாகவோ திருமணம் நடத்த விரும்பினால் இருபகுதியும் சேர்ந்து விருந்துணவு தயாரித்து மணமக்களை உண்ண வைப்பர். சோறு கொடுப்பித்தல் என்று இதைக் கூறுவர்.

வழமையான திருமணத்தில் எல்லாச் சடங்குகளும் முடிந்தபின் நடக்கும் நிகழ்வு இது. அவசர நிலைமையில் இப்படிச் செய்வதுண்டு. நாகப்பரின் எதிர்ப்பைச் சமாளிக்க இப்படி ஒரு அவசரக் கல்யாணம் இடம் பெற்றது. மேளம் கொட்டுவதும், ஊரைக் கூட்டுவதும் வெளியுலகுக்குத் தெரியப்படுத்தவேயன்றி இல்லறம் நல்லறமாவதற்கு தாங்கள் தேர்ந்தெடுத்த துணை மீது உள்ளார்ந்த நம்பிக்கையும், பரிசுத்தமான அன்பும் ஏற்பட வேண்டும். இப்படிப்பட்ட பாசத்தில் இணையும் போதுதான் நல்லறம் கூடிவரும்.

இது தீக்குச்சியைத் தட்டியதும் பற்றும் நெருப்புப் போன்று உடனே நடந்து விடாது. திருமணம் ஒரு பூங்கா என வைத்துக் கொண்டால் பூங்காவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைந்தவுடன் அங்கே பூத்துக் குலுங்கும் பூக்களைப் (மகிழ்ச்சியை) பறித்து விட முடியாது. விதைகள் தான் முதலிலே கிடைக்கும். அவைகளை நட்டுப் பயிராக்கி பூக்கச் செய்வது தம்பதிகளின் திறமையும், முயற்சியுமே. இல்லறத்தில் நுழைபவர்கள் இதை நினைவில் வைத்துக் கொள்ளுதல் அவசியம்.

மறுநாள் காலை இந் நிகழ்வையறிந்து கொண்ட நாகப்பர் மகளுக்கு இறுதிக் காரியங்கள் செய்து தலை முழுகிக் கொண்டார். நாகப்பரின் இந்தச் செய்கையைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர அவர் குடும்பததினரால் வேறொன்றும் செய்ய முடியவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறிய கிராமமான ஆத்தியடியில் இந்தத் திருமணம் ஒரு புரட்சிகரமான நிகழ்வாக அமைந்து அந்தச் சிறு சமூகத்தில் சிறு விரிசலை உண்டாக்கியது.

வேலுப்பிள்ளை வைத்தியரின் குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக ஆத்தியடிப் பிள்ளையாரின் திருப்பணி வேலைகள் ஒருமித்த ஆதரவுடன் இடம் பெறவில்லை. உறவு, பகை என்ற உணர்வுகளைக் கடந்து கோயில் பணிக்கு உதவவந்த அன்பர்கள் சிலருடைய அநுசரணையுடன் பன்னிரண்டாண்டு முயற்சிக்குப் பின் 1913 ஆம் ஆண்டில் ஆகம முறையில் அமைந்த கோயிலுக்கு வேலுப்பிள்ளை வைத்தியர் அவர்கள் குடமுழுக்கை நிறைவேற்றி வைத்தார்.

குடமுழுக்கின் போது வைத்தியரின் மைத்துனர் கோணப்பர் கணபதிப்பிள்ளை அவர்கள் தேனினுமினிய தீந்தமிழில் விநாயகப் பெருமான் மீதும் சுப்ரமணியர் மீதும் பாமாலைகள் பாடி இறைவன் அருளுக்குப் பாத்திரமானார். இவர் வேலாயுதம் பாடசாலையில் ஆசிரியராயிருந்து பின்னர் அரசாங்கத்தில் ஜெயிலராகச் சேர்ந்து கொழும்பு சென்று விட்ட போதும் விநாயகரை மறவாது பாமாலை புனைந்தது நினைவுக்குரிய ஒன்று. பூமாலை கட்டி இறைவனுக்கு சாத்தி மகிழ்வது போன்றது தான் இந்தப் பாமாலையும். மாலை கட்டும் போது ஒவ்வொரு பூவாக எடுத்து ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டி அதற்கு மேல் சரிகை, ஜிகினா தைத்து அழகாக்குவது போல் வார்த்தைகளைத் தொடுத்து ஒவ்வொரு பாமாலையையும் எழுதியுள்ளார் இந்தப் பாடலாசிரியர்.


பூமாலை கண்ணுக்கு அழகாக தெரிகிறது. நாசிக்கு இனிய மணத்தைத் தருகிறது. அது போன்று பாமாலை காதுக்கு இனியதாக அழகான சொல்லும், சந்தமுமாக உள்ளது. பூமாலைக்கு வாசனை போன்று பாமாலைக்கு அதன் கருத்து அமைகிறது. பூவிலிருந்து தேன் வருகிறது என்றால் பாவிலிருந்து கிடைக்கும் அநுபவம் தேன் போன்று மனதிற்கு இனிமையாகிறது. ஒரே ஒரு வித்தியாசம் பூமாலை வாடிவிடும் பாமாலை உலகமுள்ளவரைக்கும் நீடிக்கும். இந்தப் பாமாலைகள் இயற்றப்பட்டு நூறு வருடங்கள் ஆகிவிட்டன. இதை எழுதியவர் எப்போதோ மறைந்து விட்ட போதும் இந்தப் பாமாலைகள் மூலம் நாம் அவரைக் காண்கின்றோம். ஆத்தியடி மண்ணில் பிறந்தவர்கள், அங்கு வாழ்ந்தவர்கள், அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் சந்ததியினருக்கும் இந்தப் பாமாலைகள் ஆத்தியடியையும் அங்கு கோயில் கொண்டிருக்கும் விநாயகரையும் நினைப்பதற்கு ஒரு சாதனமாக அமைகிறது.

சமீபத்தில் வேலாயுதம் பாடசாலையின் நூற்றாண்டு விழா மலரைப் பார்க்க நேர்ந்தது. அதில் இந்த கணபதிப்பிள்ளையைப் பற்றிய விபரம் இருந்தது. அவர் கவிதை பாடும் ஆற்றல் உள்ளவர் என்பதும் தெரிய வந்தபோதுதான் இந்தப் பாமாலைகளைத் தேடிப்பிடித்துப் பார்த்தேன். காலத்துக்கு ஏற்றவாறு சீர் பிரித்து வெளியிட்டுள்ளேன். அவர் எழுதிய கவிதைகள் ஒன்றும் பாதுகாக்கப் படவில்லை. அவர் பாட்டுக்கு சாட்சி இந்தப் பாமாலைகள் மட்டுமே.



நூலசிரியரின் மகள் பாலேஸ்வரி சகோதரர் சுப்பிரமணியம்
மற்றும்
காலம் சென்ற தாயார் சிவகாமசுந்தரி, சகோதரர் சோமசுந்தரம்
கணவர் பாலசுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

சிந்தித்தவர்கருளுஞ் சிற்பரா னந்தமய
வெந்தையே தந்திமுகா விப்பதிகஞ் - சந்தச்
சுவையும் பொருட்சுவையுஞ் சொற்சுவையும் பெற்றே
யவையடைய யீவா யருள்

## ஆத்தியடி நாயகன் அடைக்கலப் பாமாலை

1)

இந்த மாவுலகில் நண்ணுதற்கரிய வெழில் பெறு மானிடப் பிறவி
யீந்தனை முன் செய் தவத்தினாலடியேனியற்றில னொருதவமின்னே
சிந்தையிலுன்னேனுன் திருநாமஞ் சிவனடியார் குழு நாடேன்
சேருவேனின்னை நினைகிலாதவரை தீனருக்கொ ன்றையுமுதவேன்
கொந்தவிழ் முலையார் மயக்கினிலலைவேன் கோபமோடவ்வியமகலேன்
கோள்களேயுடையேன் குருவருளில்லையேல் கொடியனேன் பவக்கடல் கடந்து
அந்தமிலின்ப நின்னடிக்கமலமணையுமாறேது கொலோ வறியேன்
ஆத்தித் தண்ணீழல் கோயில் கொண்டருளும் விநாயகா வடைக்கலமுனக்கே

மண்ணுலகில் கிடைப்பதற்கு எளிதான மனிதப் பிறவியை நான் முன் செய்த தவத்தினால் அடியேனுக்கு அளித்திருந்தும் இப்பிறவியில் நான் ஒரு தவமும் செய்திலேன் இல்லை, உன்னுடைய நாமத்தை மனத்தினாலும் நினைக்க முடியவில்லை. உன்னை நினைக்காத வர்களோடு சேருகிறேனே தவிர அடியார் கூட்டத்தில் சேர மாட்டேன். இல்லாதவருக்கு ஒன்றையும் ஈயமாட்டேன். பெண்கள் மயக்கிலே திரிவதல்லாமல் வேறு நல்ல செயல்கள் புரியும் குணமிலேன். கோபம், ஆசை இவைகளை ஒழிக்க மாட்டேன். அத்தகைய கொடிய குணங்களே கொண்ட நான் இந்தச் சம்சாரக் கடலைக் கடந்து உன்னுடைய திருவடித் தாமரையைச் சேர்ந்து அளவில்லாத ஆனந்தத்தை அடையும் நாள் வருமோ? குளிர்மை நிறைந்த ஆத்திமர நிழலில் கோயில் கொண்டுள்ள விநாயகப் பெருமானே என்னைக் கரை சேர்த்து அருள் புரிவாய் என மனங்கசிந்து வேண்டுகிறார் இந்த பாடலாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2)

தேசுயர் சூரபதுமனா மவுணன் சினந்துறந்துனி சகிக்காது
தினமரன் பூசை புரிய நற்பூங்கா வைத்தனன் விண்ணவர்கோமான்
நாசமத்துவும் மடைந்தது சூழ்வால் நாரமதின்றியேயந்த
நாளிலவனு நாரதன் பணியால் நண்ணினா னுன்னை நீயதற்குத்
தேசிகன் ஞானக்குறுமுனி யெதிரே சென்று நற்கொடி யுருவெடுத்து
சிந்து காவேரி கரகநீர் சிந்தி வரித்த நின் கருணை ய தென்கோ
ஆசையைக் களைய நிதம் நினதடியிலன்புவைக்க அருளாய்
ஆத்தித் தண்ணீழல் கோயில் கொண்டருளும் விநாயகா வடைக்கலமுனக்கே

வீரம் பொருந்திய சூரபன்மன் என்னும் அசுரனால் துயருற்று மெலிந்த தேவேந்திரன் அரனைப் பூசை செய்வதற்குப் பூ வேண்டி அமைத்த பூங்கா நீரின்றி வாடிப் போனது. அப்போது நாரத மகரிஷியின் அறிவுரையைக் கேட்டு தேவர்களின் இடர்களைத் தீர்க்கும்படி விநாயகப் பெருமானிடம் தஞ்சமடைந்தான். பெருமான் அகத்திய முனிவரின் கமண்டலத்திலிருந்த காவேரி நீரைக் கவிழ்த்து ஓடச் செய்த பெருமையை வியந்துரைக்கும் இப் பாடலாசிரியர் அத்தகைய கருணை உள்ளம் கொண்ட பெருமானே ஆசைகளை விடுத்துப் பெருமானுடைய திருவடித் தாமரையை தினமும் நினைத்து வழிபட அருளும்படி தண்மையான ஆத்திமர நிழலில் கோயில் கொண்டு அருளை வாரி வழங்கும் விநாயகரிடம் அடைக்கலமடைகிறார்.

3)

அரி யயன் முனிவர் புரந்தரன்முதலாமமரரும் தேடொணாமுதலே
ஆரணப் பொருளே யாலமர் கடவுள ம்பிகை அளித்த சற்குருவே
சரவணபவருக்கு முன்னவா தந்தி முகத்தானே தனி மயிலிவர்ந்து
தகுவரையழித்து வானுலகளித்த தற்பரா கணபதி சயனே
வரதனே மன்னர் தரியலர் தேவர் வசிகரம் மாடெழிற்கல்வி
வளர் சிவஞானமுன் திருநாமமனுதின மோதும்
அரியநற் பேறதனை ஈந்து இனிதாழ்வாய் அலக்கணிற் பட்டுழல்வேனை
ஆத்தித் தண்ணீழல் கோயில் கொண்டருளும் விநாயகா வடைக்கலமுனக்கே

மும்மூர்த்திகள், முனிவர்கள், அமராதிபதி முதலிய தேவர்களும் தேடிக் காணமுடியாத முதல்வனே, வேதத்தின் சாரமானவனே, கல்லாலின் கீழமர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனும், அம்பிகையும் சேர்ந்தளித்த குருவே, முருகனுக்கு முன்னவனே, யானை முகத்தானே, மயில் மீது வந்து தகாதவர்களை அழித்த சற்குருவே, தேவர் முதல் மன்னவரும் மற்றவர்களும் விரும்பக்கூடிய வசீகரம், அழகு, கல்வி, சிவஞானம், உன்னுடைய திருநாமத்தைத் தினமும் ஓதும் அரிய பேறு இவைகளைத் தந்து இடர்களினால் அலைக்கழிக்கப்பட்டு உழல் வேனை அடைக்கலமாக்கிக் காப்பாற்றும்படி விநாயகப் பெருமானிடம் வேண்டுகிறார்.

4)

கவிமகா முனிவன் பத்தினி முகுந்தை கட்டிள வுருக்குமாங்கதனைக்
கானிடை கண்டு மயங்கினள் மிகவும் காமநோய் தலைக் கொளத்தணிப்பான்
அவன் பினே சென்று நைந்தனளவனு மிணங்கில னதற்குருத்துரைத்தா
ளணு கொணாக் குட்டநோயுடல் பிணிக்க வருங் கொடுஞ்சாப மங்கதனை
நவையற நீக்க வொருவருங் காணா னன்னினான் றஞ்சமென்று ன்னையே
நாயக நீயுமது வொழித்தாண்டாய் நாயினுங் கடையனேனிந்த
அவனியில் மிடியே பிணியதே வருத்த வலைவது கண்ணுறாயேனோ
ஆத்தித் தண்ணீழல் கோயில் கொண்டருளும் விநாயகா வடைக்கலமுனக்கே

இந்தப் பாடலில் விநாயகப் பெருமான் மன்னன் உருக்குமாங்கதனுக்கு அருள் புரிந்த கதையைக் கூறும் ஆசிரியர் தன்னுடைய கவலையையும் கூறிப் பெருமானைத் துதிக்கிறார். வறுமை, நோய் இவைகளினால் நானும் அவதியுறுகிறேனே அதை ஏன் நீ பாராமலிருக்கிறாய். உன்னையே சரணடைகிறேன் அருள் புரிந்து காப்பாற்றுவாய் என உருக்கமாக வேண்டுகிறார்.

5)

பொன்னவிர் கொன்றை நதிமதி நாகம்புனை முடிப்புண்ணியர் வலம் வா
புவியென வவரை வலமது வந்து புகலு மாங்கனி யினைப் புழைக்கை
தன்னிலே வாங்கி சங்கரன்றானே சகமவை யெலா மெனக்காட்டித்
தானவர் குழுவை வாட்டியே யமரர் தம்பதி யளித்த தற்பரனே
என்னகங் குடி கொள் ஈசனே யென்னை யென் மனை மகார் தமைக் கிளையை
இடர்மிடி யெவ்வம் பகை வினை யெவையுமீர்த்திடா தொழித்தரு ளெமக்கு
அன்பதை யுன்றன்டியினி லடியரடி யினிலயர் விலா தென்றும்
ஆத்தித் தண்ணீழல் கோயில் கொண்டருளும் விநாயகா வடைக்கலமுனக்கே

பொன்னிறமான கொன்றை மலர், கங்கைநதி, இளம்பிறை, நாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை யணிந்த அரனை வலம் வந்து மாங்கனியைப் பெற்றுக்கொண்டு அரனே உலகம் என்ற உண்மையை உணர்த்தியும் அசுரர் கூட்டத்தை எல்லாம் அழித்து தேவர்களுக்கு அவர்கள் அரசை அளித்த பெருமானே, என்னுள்ளத்தில் கோயில் கொண்ட ஈசனே, என்னை என் குடும்பத்தாரை, சுற்றத்தை இடர் வராமல் காத்து, உனதடியையும், உனதடியார் அடியையும் சலிப்பில்லாமல் வழிபடவும் அருளும்படி வேண்டுவதாக அமைந்துள்ளது இந்தப் பாடல்.

6)

நானுனக்கேது குறையதைப் புரிந்தே னானிலத் தொரு துணையின்றி
நாயினுங் கடையனாய் திரியவே யுன்றனா மமொரு பொழுதுன்னா
ஈனரோ வளகைக் குபேரனே மகவா னென்னவே வாழ்வினைப் பெறுவர்
இறைவ நீ யானுன்னடிமை யேனிந்த விழிவினைப் பெறுவது முறையோ
தேனுகர் வண்டு மொய் குழல் வலவைத் தேவியைப் பாங்கரி லுடையோய்
சிறு குடிறனியே குறவர் கோன் வளர்த்த தெய்வதக் கன்னிகையாறா
மானனமுடைய வண்ணலை மணக்கவருளிய முதல்வனே விகடா
ஆத்தித் தண்ணீழல் கோயில் கொண்டருளும் விநாயகா வடைக்கலமுனக்கே

ஆத்தி மர நிழலில் கோயில் கொண்டிருக்கும் விநாயகனே நான் உன்னை சரண் அடைந்தது இல்லாமல் வேறு ஒரு குறையும் புரியவில்லையே அப்படி இருந்தும் இப்படி இழிவுபடுகிறனே. உன்னை ஒரு பொழுதேனும் தேடாதவர்கள் குபேர வாழ்வினைப் பெறுகிறார்கள். நீ இறைவன் நான் உன் அடிமை என்பது உண்மையானால் என்னை இப்படி தவிக்க விடுவது முறையோ பெருமானே? வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய வல்லபையைப் பக்கத்தில் உடையவனே, குறவர் குடியில் வளர்ந்த வள்ளியை மணக்க ஆறுமுகனுக்கு அருளியவனே விகட சக்கர விநாயகனே என அவரிடம் அடைக்கலம் ஆகிறார் இந்த பாடலாசிரியர்.

7)

தரு செந்நெல் நாழியிரண்டினால் மூன்று பத்துடனி ரண்டெனுந் தருமந்
தந்திடு தேவி முதன் மகவாகிப் பரிந்திரந்திடு பவர்க்கினிய
வரமருடலைவ நீயென நம்பி வந்து நானடைந்தனனென்முன்
வருமுனரிய நின் திருக்கோல வடிவினைக் கண்ணுற வெளியேன்
தரிசனை செய்து மலவிருளோட்டத தனிப்பெரும ஞ்செழுந்தோது
தக்க நன்நெறியைந் தாவெனை வாதபித்தமவை வாட்டாதருளே
அரி திரு மாலோன் மருகனே முருகோனண்ணலே வரதனே சயனே
ஆத்தித் தண்ணீழல் கோயில் கொண்டருளும் விநாயகா வடைக்கலமுனக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் அளித்த இரு நாளி நெல்லைக் கொண்டு உலக மெல்லாவற்றிற்கும் முப்பத்திரண்டறங்களையும் செய்து வாழ வைக்கும் அம்பிகையின் முதல் மகனாகப் பிறந்து பரிந்து வேண்டுகிறவர்களுக்கு அருள் செய்யும் தயாநிதி என்று உன்னைச் சரணடைந்தேன். உயர்வான அஞ்சேழுத்தோதி உயர்வு பேறவும், ஆத்தி நிழலில் கோயில் கொண்டிருக்கும் உன்னை மறவாது தரிசிக்கவும் எனக்கு வாத, பித்தம் போன்ற நோய்கள் இல்லாத ஆரோக்கியத்தைத் தந்தருள்வாய். மாலின் மருமகனே, முருகனுடைய அண்ணலே, வரம் தருபவனே, வெற்றியளிப்பவனே எனப்பலவாறாக துதிக்கின்றார் இந்தப் பாடலாசிரியர்.

8)

பிள்ளை வெண்பிறையைச் சூடிய பெருமான் பிராட்டி யோடு யர் கிரிக்கயிலை
பெட்புறு மருங்கு போயினரங்கு பிரணவம் பிணைதலைப் புரிய
கள்ளுறு தாமக் குழலுமையி தென்ன காரண மென வினவுதலுங்
கருது நம் பிள்ளை வருக நீயென்று கண்ணுத லழைத்திட வந்து
வெள்ளை மாவூருமர சனுக்காக வெங்கய முகவனோடமரை
விளைத்துமுன் னொற்றைக் கொம்பினாலவனுயிரை வீட்டிய பகவனேயடியேன்
கள்ளிணை வேற்கணரி வையர் மயக்கிலலைவுறா திருக்கு நாளுளதோ
ஆத்தித் தண்ணீழல் கோயில் கொண்டருளும் விநாயகா வடைக்கலமுனக்கே

முன்னொரு நாள் தேவர்களை வாட்டிய கயமுகாசுரனை அழிக்க ஒரு மகனை உலகிற்கு அளிக்க வேண்டி இறைவன் இறைவியுடன் சேர்ந்து பிரணவ மந்திரம் எழுதப்பட்டிருந்த மண்டபத்திற்கு சென்றனர். மண்டபத்தில் வரைந்திருந்த சித்திரம் இருவருடைய தீர்க்கமான பார்வையினால் பிரணவரூப முகத்துடனும் கோடி சூரியன் உதித்தது போன்ற ஒளியுடனும் ஒரு பிள்ளையாய் வந்துதித்து பிள்ளையார் எனப் பெயர் பெற்றவரே. உன்னுடைய ஒரு கொம்பினால் கயமுகாசுரனைக் கொன்று தேவர்களுக்கு வாழ்வளித்தவரே நானும் உலக வாழ்வெனும் மயக்கத்திலிருந்து விடுபெறும் நாள் வருமோ என ஐயங்கொண்டு விநாயகப் பெருமானை சரணடைகிறார் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9)

ஏகதந்தா லம்போதரா சுமுகா வெழிற் கச கர்ணிகா விகடா
இருவினை தவிர்க்கும் கசானனா கபிலா வினியவெண் பாலச்சந்திரனே
மாகலை யளித்த கணாத்தியட்சா நவையில்லாததூம கேதுவே எம்
நடலை யழிக்கும் விக்கினராசா நற்கதியருள் கணாதிபதீ
வாகினையுடைய சூர்பகர்ணா சீர் வக்ரதுண்டா வேரம்பா
வரமருள் கந்த பூர்வசாவுன் பெயரெலா நினைந் தெளியேன்
ஆகு வாகன சிந்தாமணி சயனே யாச்சிக்கவனு தினமருளாய்
ஆத்தித் தண்ணீழல் கோயில் கொண்டருளும் விநாயகா வடைக்கலமுனக்கே

"சுமுகம்" என்றால் "நல்ல முகம்". தமிழில் இன்முகம் என்று அழகாகக் கூறப்படும். இந்த நாமம் விநாயகர் அரச்சனையில் முதலாவதுவரும் நாமம். இருதயத்தில் உள்ள அன்பும், ஆனந்தமும் முகத்திலே வெளிப்படுவது சுமுகம். இருதயத்திலே உள்ள அன்பும் ஆனந்தமும் எந்நேரமும் வெளிப்பட்டு மலர்ந்த முகத்துடன் இருப்பதால் சுமுகர் என்ற பெயர் விநாயகருக்கு ஏற்பட்டதாக கூறப்படுவதுண்டு.

இரண்டாவது நாமம் "ஏகதந்தர்" ஒரு கொம்புடையவர் எனப் பொருள்படும் இதற்குப் பல கதைகள் உண்டு. கஜமுகாசுரனைக் கொல்வதற்கு ஒரு தந்தத்தை முறித்து ஆயுதமாக உபயோகித்தவர் என்றொரு கதையும், வியாசருக்காகப் பாரதக் கதையை எழுத பேனாவாக உபயோகித்தார் என்ற ஒரு கதையும் உண்டு. கதைகள் இரண்டும் பிறருக்காகத் தன்னுடைய விலைமதிப்பற்ற தந்தத்தை இழந்து "என்பும் பிறருக்கு உரியர்" என்ற கூற்றுக்கு இலக்கணம் வகுத்தவர் பிள்ளையார்.

மூன்றாவது நாமம் "கபிலர்" பழுத்த சிவந்த நிறத்தவர் என்று இதற்குப் பொருள்படும். நான்காவது நாமம் "கஜகர்ணகர்" யானைக் காதுடையவர் என்று இதற்குப் பொருள்படும். பக்தர்கள் பண்ணும் பிரார்த்தனைகளை எல்லாம் நன்றாகக் கேட்பதற்காக யானைக் காதுகள் அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சம். யானைக்கு மதம்பிடிக்கும் வேளைகளில் கன்னத்தில் மதநீர் வழியுமாம். அதைச் சுவைக்க மொய்க்கும் ஈ, எறும்புகளை காதினால் விசிறிக் கலைப்பதற்கு வசதியாக யானைக்கு விசிறிக் காது அமைந்துள்ளது.

விநாயகர் தனக்குத் தானே சாமரம் போட்டுக் கொண்டு கரணம், காரணம்கருவி கர்த்தா எல்லாம் தாமே எனக் காட்டுகிறார் . அடுத்து "லம்போதரர்' இது பானை வயிறுடையவர் என்பதைக் குறிப்பிடுகிறது. அண்டசராசரங்களும் அவருடைய வயிற்றுக்குள்ளேயே அடங்கியிருப்பதைக் காட்டவே இப்படிப் பானை வயிறுள்ளது. அடுத்து "விகடர்" என்ற நாமம். காக்கையாகப் போய் அகத்தியரின் கமண்டலத்திலிருந்த காவேரி நீரைக் கொட்டியது , விபீஷணரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றி ஸ்ரீரங்கநாதரை தமிழ் நாட்டிற்கு தந்தது. கைலாசலிங்கத்தைக் கோகர்ணத்திலே தங்கச் செய்தது போன்ற லீலைகள் அவருடைய விகடத்தைக் காட்டி நிற்பதால் இப் பெயர் விநாயகருக்கு ஏற்பட்டது.

இவைகளெல்லாம் வெளிப் பார்வைக்கு விகடமாகத் தோன்றினாலும் உலக நன்மைக்காக அவர் புரிந்தவையாகின்றன . அடுத்து விக்னராஜா இது விக்கினங்களுக்கு தலைவர் எனப் பொருள்படுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல், வெற்றி, செல்வம், வியாதி நீக்கம் என்று பல திணைக்களங்கள் உலக அரசாங்கத்தில் உண்டு. இங்கேயெல்லாம் காரியங்கள் விக்கினங்கள் (இடையூறு) இல்லாமல் நடைபெறுவதற்கு எடுத்த உருவம் "விக்னராஜர்" சில நேரங்களில் விக்னங்களை உண்டாக்கி விக்னராஜனாகி அதைப் போக்கும் போது விநாயகராகவும் ஏகப்பரம் பொருளே விளங்குகிறார்.

அடுத்து வருவது தூமகேது தூமம் என்றால் புகை சாதாரண விறகின் புகையை தூமம் என்றும், நறுமணம் வீசும்புகையைத் தூபம் என்றும் குறிக்கப்படும். இதற்கு ஒரு தனிக் கதை உண்டு. பன்னீரவதாரக் கதைகளில் இந்தக் கதையையும் பார்க்கலாம். அடுத்து "கணாத்யக்ஷர்" இது தலைவர் எனப் பொருள்படும். கணங்களுக்கு எல்லாம் அதிபதியாக விநாயகர் கருதப்படுவதால் இந்த நாமம் வழங்குகிறது. அடுத்து பாலச்சந்திரன் பாலம் என்றால் முன்தலை இங்கே சந்திரனை வைத்திருப்பவர் என்று பொருள்படும்.

வக்ரதுண்டர் அடுத்து வரும் நாமம். வக்ரம்- வளைந்த, துண்டம்- தும்பிக்கை. வளைந்த தும்பிக்கையை உடையவராக இருப்பதால் வக்ரதுண்டர் எனப் பெயர் பெறுகிறார். இந்த அவதாரத்துக்கும். தனிக்கதை உண்டு. தும்பிக்கையை நேராகத் தொங்க விடாமல் வளைத்து வைத்திருப்பதால் தான் பிரணவரூபம் உண்டாகிறது. அடுத்து சூர்பகர்ணன் சூர்பம் - முறம் வேண்டியதை வைத்துக் கொண்டு வேண்டாததை வெளியே தள்ளுவது முறம்.

பக்தர்களின் பிரார்த்தனைகளை யெல்லாம் கேட்பதற்கு காதை விரிக்கும் போது கஜகர்ணராகிறார். வேண்டியதைத் தக்கவைத்துக் கொண்டு வேண்டாததை தள்ளிவிடும் போது முறம் போன்ற காதுடையவராயிருப்பதால் சூர்பகர்ணராகிறார். நாம் பிரார்த்தனை செய்து வேண்டும் சில காரியங்கள் எங்களுக்கு நிறை வேறாமல் போவதற்கான காரணம் இதில் விளக்கப்படுகிறது. பிரார்த்தனைகள் எல்லாவற்றையும் கேட்டு விட்டு எங்களுக்கு தேவையற்றது எனக் கருதுவதை வெளியே விட்டுவிடுவார் இறைவன்.


இதனால் பிரார்த்தனைகளும் தகுதியானவையாக, எங்களுக்கு வேண்டுவனவாக இருக்க வேண்டும். ஹேரம்பர் என்ற நாமத்துக்கு பிரித்து முழுமையான விளக்கம் சொன்னவர் இதுவரை யாரும் இல்லை. அடுத்து ஸ்கந்த பூர்வஜர் என்ற நாமம் வருகிறகு. கந்தனுக்கு முன் வந்தவர் என்று பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகிறது. அடைக்கலப் பாமாலையில் வரும் ஒன்பதாவது பாடலில் மறைகளில் கூறியபடி விநாயகரை பதினாறு நாமங்களால் அர்ச்சிக்க வரமருளும்படி ஆத்தியடி விநாயகரைச் சரணடைகிறார்.

இந்த நாமங்களுக்குரிய விளக்கம் காஞ்சி மாமுனிவர் ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்கள் அளித்த விளக்கங்களிலிருந்து கிடைத்தவையே அன்றி என்னுடைய சொந்தமான கருத்து இல்லை. இந்தப் பாடலாசிரியர் உலகுக்கு அளித்த இந்தப் பாடல்களைப் படிக்கவும், அதன் பலனை உணர்ந்து விநாயகரை இந்தப் பதினாறு நாமங்களால் அர்ச்சித்துப் பயன் பெறவும் மறைந்திருந்த இந்தப் பாடல் தொகுதியை வெளிக் கொணர்ந்துள்ளேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புதானந்தப்பத்து

1)

சனகாதி நால்வருக்கன்று கல்வானி மூற்றனி ஞான நிலை காட்டி நீ
தளையாகுமவர் பாசவினை நீக்கி நின்மலர்த் தாளினைப் புனையவைத்தாய்
எனையாள நீ கருதிலல்லவோ வெளியேநு மந்நிலை பேறு பெறுவேனிது
மாய வுலகத்திலடி யேனு மிழிவான வியல்பினைப்பெறுதல் வசமோ
தினையான போதளவு முன்றனைக் கருதாது தீமையே யுள்ளுலுத்தர்
திருவோடு புகழோடு வாழ்வுறத் திறமேது தேர்கிலே னானு மந்தோ
அனை மாது பங்கன ருடந்தி முக வெந்தையே யமரரிடர் போக்கு முதல்வா
ஆத்தி நிழல் கோயில் கொள் விநாயகக்கடவுளே யற்புதானந்தமயமே

2)

எந்தவுயிருக்கு முன்னாரருள் கிடைக்குமென்றின் சுருதி கலையாகம
மியம்பு மொழி பொய்யதோ வல்ல வெனில்லவ்வுயிரி லெளியேனு மொருவனல்லனோ
வந்த வினை விக்கினம் பனிபோல மாற்றியருள வல்ல வொரு தேவனல்லவோ
வறுமை பிணி யிகலாதியெனை நலிந்திட வுனது வன் கருத்தீது கொல்லோ
சிந்தையருணோக்கிலா திருமாந்திருந்திடத்தீயனேன் செய்த பாவமோ
தினந்தினம் நானுமிங்கலறவுங் கேட்கிலாய் சிறியனே னேது செய்வேன்
அந்தமதிழைக்க வங்குச பாச மேந்து கை யண்ணலே யைங்கரத்தோய்
ஆத்தி நிழல் கோயில் கொள் விநாயகக்கடவுளே யற்புதானந்தமயமே

3)

எனையாள வந்த வொரு குல தெய்வமுனையன்றி யில்லை வேறொருவர் கண்டா
யினிய யித வாழ்வினை யிகத்தினின் மருவிடவுமெளிய னுன் பாதாம்புயந்
தனை வந்து சேவையது புரிந்து பேரின்ப சாகரத்திடை மூழ்கவுந்
தக்க வருளின்று வருமின்று வருமென்றுளந் தாங்கிப் பொறுக்கிலேனனு
தினமதே வாதையுன்னருளதைக் காணிலேன் சின்மயானந் தகுருவே
சென்று கார்ப்பிள்ளையின் வடிவினை யெடுத்து நற்சீர்ப் பொதிய முனிவனெதிரே
அனமாடு புண்ணியக் காவேரி கரகநீரவனி மிசை தந்த முதல்வா
ஆத்தி நிழல் கோயில் கொள் விநாயகக் கடவுளே யற்புதானந்தமயமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4)

குணமேதுஞ் சற்றுமிலாத தீப்பாவியைக் கோதிலா ஞானமி லரைக்
கோபமுடனவ்வியங் கொடுமை மிக்குளரை கோள்களே சொல்லு நீர்மை
கணமேனு மொழியாத கசடரை சண்டரைக்கண்ணியம் புரிவதல்லாற்
காத்திரத்தோடு வந்தேற்றுந் தீனரைக் கண்ணினா னோக்கிலேனுன்
பணி பூண்டு மணி பூண்டு விநயஞ்செய் நீறு புனை பழவடியார் கூட்டமணுகேன்
பக்குவம் வந்து நான் பரகதியடைந்திடும் பருவமென்றுண்டு கொல்லோ
அணி பாணிப்பள்ளியைக் கொள்ளும் மான் மருகோனே யம்பிகைக்கினிய மைந்தா
ஆத்தி நிழல் கோயில் கொள் விநாயகக் கடவுளே யற்புதானந்தமயமே

5)

சந்ததமுனக்கு நான் வந்தனைபுரிந்து நின்றனி யெழுத்ததனையோதச்
சாது சன சங்கமஞ் சார்ந்திடக் கல்வி கலைசதமகன் செல்வ போகஞ்
சிந்தை களி கூர்ந்து நனி பெற்றிடத் தீராத வாதமவையுஞ்
சினந்து வரு பித்தமொடு சூழ் பிரமகத்தி நோய் சீறுவலி குன்ம காசம்
எத்தனை தொடர்பொலாக் கோள்களின் றோடம் மெமவாதை யாமெல்லாம்
மெனை வந்து நலியாமலினிய வருணல்குவா யிமாசலத் தலைவி மதலாய்
அந்தரத் துனையன்றி யாரெனக்குண்டு கொல்லாத்திரத் துதவு முதல்வா
ஆத்தி நிழல் கோயில் கொள் விநாயகக் கடவுளே யற்புதானந்தமயமே

6)

நாரணற்கு வெஞ்சாபந் தொலைத்திட்ட நாத நீ கொம்பொடித்து
நகுமேரு வரையிலே பாரத சரித்திரம் நன்கு வரை தேவனும் நீ
காராரு கண்டன் திருக்கை மாங்கனியைக் கைக் கொண்ட கடவுளு நீ
கருதடியார் வினை தீர்த்தவருக்குதவு வள்ளனீ கலைமதிக்குற்ற சாபம்
வராது நீக்கியரு ளைங்கரக் கடவுளு நீ மகபதி வடுக்கண் மாற்றி
வல்லமையை வாமத்தில் வைத்தருளு முதல்வ நீ மன் பொதிய முனிவனுக்கும்
ஆராத ஞான கலையூட்டுதேசிகனு நீ யருளுநீ அடியனுக்கும்
ஆத்தி நிழல் கோயில் கொள் விநாயகக் கடவுளே யற்புதானந்தமயமே

7)

சிந்தூர முகத்தானே மூஷிக மிவர்ந்திடுஞ் சிற்பராதற்பராபுன்
சிந்தைக் கடங்காத செல்வமே முத்தி தரு சித்தனே யேகநாதா
பந்த வினை பாற்றிடும் பாசாங்குசத்தனே பனிவரைப் பிராட்டியார்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியமுலை யமுதுண்ட விக்கின விநாயகா பராபரச் சோதி வடிவே
வந்தனை புரிந்திடும் மன்னுயிற்கருளதும் மற்றது செயாயுயிர்க்கு
வன் மறக் கருணையுஞ் செய்திடும் பகவனே வானவர்க்குலகளித்த
அந்தமில் சேய்க்கு முன் வந்த மாகுன்றமே யடியனேற்குற்ற குருவே
ஆத்தி நிழல் கோயில் கொள் விநாயகக் கடவுளே யற்புதானந்தமயமே

8)

ஏழைக்கிரங்கிடச்சித்த நிற்க்கில்லையோ வெளியனேன் பட்ட பாட்டை
யிலவினிற் பஞ்சுதான் பட்டதோ சொல்லவோ வெண்ணவோ முடிவு பெறுமோ
பேழையுத்தரனே பிள்ளை மதி சூடியருள் பிஞ்ஞகனமர்ந்த பொருளே
பெட்புடைய பிள்ளை நானன்னை நீ யென்று பேருவகை யோடிருந்தேனந்தோ
தாழ்வினைப் பிள்ளையதடைந்திடத் தாங்கியே தாய வளிருப்பதுண்டோ
தாய்மனம் பித்து நற் சேய் மனம் கல் எனச் சாற்று மொழி பொய் மொழியதோ
ஆழ்வினைக் கென்னை வெவ்விரையதாய் விடுகிலுன்னாரருட் கேற்ற மென்னோ
ஆத்தி நிழல் கோயில் கொள் விநாயகக் கடவுளே யற்புதானந்தமயமே

9)

பிள்ளைதான் செய்திடும் பிழையைப் பொறுப்பது பிதாவுக்கிழுக்கதாமோ
பெருமானே பொல்லேற் கிரங்கிடில் பேருலகு பேசு மென்றச்சமோ தான்
வெள்ளை வாரண மேவு வேந்தனுக்காகவேதியன் காசிபற்கு
வேழமெனப் பிள்ளையாய் வந்தன்று வெவ்வசுரர்இருவர் தம்மை
உள்ளவர் கொதித்திடக்கோறல் புரி தேவனே யுத்தமர்க்குற்றகுருவே
யுவமிக் கொணாத வோங்கார பிரணவ ரூபவுயர்வுறு மறைக்கு முதலே
அள்ளிநற் காவேரி யகத்தியர்க் கருளினோயடிய னிடர் தீர்த்தருளாய்
ஆத்தி நிழல் கோயில் கொள் விநாயகக் கடவுளே யற்புதானந்தமயமே

10)

தஞ்சமென வந்தவர்க்கபயமே தந்திடு தயாநிதிக் கடவுளே
றமியனேன் படர் தரக் கொழு கொம்பில்லாவொரு தனிக் கொடிக்கிணையாகியே
நெஞ்சு புண்ணாக நின்றிங்கு நானேங்கவும் நீயதைத் தேர்கிலாயோ
நின்மலா சுத்தநற் சோதியா யோங்கியே நீண்ட மாலன்னமூர்ந்தோன்
வஞ்சக மனத் தினாற் பிரமமெனவே வெழுகாலை யவன் செருக்கையழித்த
வள்ளறன் மைந்தனே யைங்கரத் தேவனே வாமனப் படிவமுடையோய்
அஞ்சமர் புரி தந்தி முகவனைச் செற்றாகுவாகனத் தமர்ந்தவனே
ஆத்தி நிழல் கோயில் கொள் விநாயகக் கடவுளே யற்புதானந்தமயமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரவதாரப் பதிகம்

1) வக்ரதுண்டர்

ஆன்ம கோடிகளெல்லா முன்னகத் தொடுங் கினாராறுதற் கோர் பிரளயத்
தது செல்லத் தனு கரண புவன போகத்தை யவ்வவர் வினையினுக் கீடதா
யளித்தவர்கவர் கன்ம வொப்பினின சேவடி யருளிட வுன்னி நீயுந்
தான் பெயருரு முன் நடு வீறுமில்லாத் தனிப் பரஞ்சோதி வடிவே
சக வக்ரதுண்ட நன்மூர்த்தியாய் மண் போந்து தந்தை முன் முத் தேவரும்
சராசரம் படைத்தளித் தொடுக்குமுத் தொழிற்குமே தந்தவர் பிரமை கொள்ள
மேன்மை பெறு மேதினியிப் பேத மவையாவையும் விளக்கி நின் அகட்டினுள்ளே
வேதனின் புதல்விமார் மருங்கினிலமர்ந்து வேண்டி னர்க்கருள் மேலோர்
வேந்தனின் வடுக்களையு ருக்குமாங்கதனு ற்ற வெங்குட்ட நோய்தனையும்
மான் தவழ் மதியினின் சாபமுந் தீர்த்திட்ட வள்ளலே கசானனத்தோய்
மன்னு திருவாத்தியடி விக்கின விநாயகா வல்வினையினீ டிழுந்து
வந்தடைந்தேன் உன்னைச் சரணாக நானுமே வரமெனக் கருள்வாயே

இந்தப் பாடலின் ஆசிரியர் முதலில் ஆன்மாவைப் பற்றிக் கூறுகிறார். ஆன்மா - சீவன் அல்லது உயிர் இந்த உயிரைப் பற்றியிருப்பது பாசம், தளை என இரண்டு. இவற்றிலிருந்து விடுபட்டு இறைவனைச் சென்றடைய மேற்கொண்ட பயணமே இவ்வுலக வாழ்வு. சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்பது இதுவே இந்த உயிரின் பயணத்திற்கு தங்குமிடமாக அமைந்ததே உடம்பு. இந்த உடம்பு எடுத்ததனால் ஏற்படும் துன்பங்கள் குளிர், காற்று, வெப்பம் போன்றவைகளால் ஏற்படும் புறத்துன்பங்கள். ஆசை, கோபம் முதலியவற்றால் ஏற்படும் உள்ளத் துன்பங்கள் இவைகளிலிருந்து ஓய்வு பெறுவதற்கு பிரளயத்தை உண்டாக்கித் தன்னுள்ளேயே உயிர்களை ஒடுக்கிக் கொள்கிறார்.

சில காலம் ஓய்வெடுத்துக் கொண்ட பின் மீண்டும் அவ்வுயிர்களுக்கு உடம்பு, மனம் இடம் அநுபவிக்கும் பொருட்கள் முதலியவற்றைக் கொடுத்து அவர்கள் அவர்கள் கர்ம வினைக்கு ஏற்றபடி (நன்மை, தீமை என இரண்டும்) மோட்சம் அடைய செய்கிறார். சைவசிந்தாந்தத்தின் இந்தக் கொள்கைப்படி உயிர் பல உடம்புகளில் தங்கி செயல்பட வேண்டியிருக்கிறது. புல்லாகிப் பூடாய் புழுவாகி என்ற மாணிக்கவாசகரின் திருவாசகம் நமக்கு இதை உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வக்ரதுண்ட விநாயகர்

உலகம் தோன்றுவதற்கு மூல காரணமான மூர்த்தி விநாயக மூர்த்தி என்றும், அவரே மும் மூர்த்திகளையும் படைத்தார் என்றும் விநாயக புராணம் கூறுகிறது. இவரையே வக்ரதுண்டவிநாயகர் என அழைக்கிறோம். அவருடைய மூன்று குணங்களிலிருந்தும் மும்மூர்த்திகள் தோன்றினர். மும் மூர்த்திகளும் தங்களைப் படைத்தவரைக் காண விரும்பினர். பல காலம் அவர்கள் செய்த முயற்சியின் பலனாக வக்ரதுண்ட மூர்த்தியாகத் தோன்றி வயிற்றினுள்ளே உலகங்கள் எல்லாமும், உயிர்கள் எல்லாமும் அடங்கியிருப்பதைக் காட்டினார். பிரமனிடம் அறிவாற்றலாகிய ஞான சக்தியையும், செயலாற்றலாகிய கிரியா சக்தியையும் மனதில் தியானித்துப் படைத்தல் தொழிலை ஆரம்பிக்கும் படி ஆசீர்வாதம் செய்தருளினார். பிரமாவும் அதன்படி இரண்டு சக்திகளையும் தியானம் செய்யவும் சித்தி, புத்தி என்ற இருவரும் (இரு சக்திகளும்) அவருடைய படைப்புத் தொழிலுக்கு துணையாக வந்ததால் அவர்கள் பிரமாவின் புத்திரிகளாயினர். இப்போது விநாயகப் பெருமானை அந்த இரண்டு சக்திகளின் நடுவே வைத்து தியானம் செய்து படைப்பு தொழிலை பிரம்மா ஆரம்பித்தார்.

இதனாலேயே ஆனைமுகனைத் தரிசித்து காரியங்கள் ஆரம்பிக்கும் வழக்கம் ஏற்பட்டது. சித்தி, புத்தி சமேத விநாயகர் என்று அழைப்பது இதையே. இந்த வரலாற்றைக் கூறும் முன் உருவம் என்பதற்கு முன்பு உள்ள ஜோதி வடிவைக் கூறும் இப் பாடலாசிரியர் ஆன்மாக்களுக்கு அருள் புரியும் இறைவனின் கருணையைக் கூறுகிறார். அவருடைய கருணைக்கு உதாரணமாக பல கதைகளைக் கூறுகிறார். முதலில் வருவது இந்திரனுக்கு ஏற்பட்ட இடர் பற்றிய கதை. அகத்திய முனிவர் கமண்டலத்திலிருந்த காவேரி நீரைக் காக வடிவில் சென்று கவிழ்த்த கதை பல இடங்களில் கையாளப்படுகிறது இக் கவிதைகளில் என்பதுடன் எல்லோரும் அறிந்த கதையும் கூட.

அடுத்து இடம் பெறுவது ருக்குமாங்கதன் கதை. ருக்குமாங்கதன் என்ற அரசன் ஒரு நாள் காட்டிற்கு வேட்டையாடப் பரிவாரங்களுடன் சென்றான். வேட்டையாடி வரும் வேளை உடன் வந்தவர்களைப் பிரிந்து வேட்டையாடிக் கொண்டு நெடும் தூரம் சென்று விட்டான். பசியும், தாகமும் ஏற்பட்டுக் களைத்த போது அங்கே கவிமகா முனிவரின் ஆச்சிரமத்தைக் கண்டான். ஆச்சிரமத்தில் முனிவரின் பத்தினி முகுந்தையைக் கண்டு தாகத்துக்கு நீர் தந்துதவும் படி வேண்டினான். ருக்குமாங்கதனின் அழகில் மயங்கிய முகுந்தை அரசனை தன் ஆசைக்கு வயப்படுத்த முயன்றாள். அவளுடைய ஆசைக்கு இணங்க மறுத்த அரசனுக்கு குட்டநோய் உண்டாகச் சாபமிட்டாள்.

பசி, தூக்கம் இவற்றினாலும் நோயின் கொடுமையினாலும் வருந்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டில் அலைந்து திரியும் போது திரிலோக சஞ்சாரியான நாரதரைக் கண்டான். தன்னை வணங்கிய அரசனுக்கு கணேசப் பெருமானை வழிபடும்படி அறிவுரை கூறிச் சென்றார் நாரத மகரிஷி. இந்தக் கதையைக் கூறி சந்திரனுக்கு ஏற்பட்ட சாபம் தீர்த்த கதையையும் கூறுகிறார். இந்தக் கதையும் எல்லோரும் அறிந்த ஒன்று தான். இவைகளையெல்லாம் கூறி இவர்களுக்கு எல்லாம் அருள் செய்த விநாயகனே எனக்கும் அருள் செய்வாய் என வேண்டுகிறார் இந்தப் பக்தர்.

வக்ரதுண்டர் என்ற விநாயகருடைய முதல் அவதார நாமத்தைப் பார்த்தால் வளைந்த தும்பிக்கை உடையவர் என்றும், மாயையைத் துண்டிப்பவர் என்றும் பொருளுண்டு. விநாயக வழிபாடு பற்றிப் பல விதமான அபிப்பிராயங்கள் உண்டு. எனினும் சைவ சித்தாந்தப்படி சிவன் என்று உண்டோ அன்றே விநாயகனும் உண்டு. சிவனுடைய இருபத்தைந்து மகேசுர மூர்த்தங்களில் விநாயக மூர்த்தியும் ஒன்று. இவர் கஜமுகாநுக்கிரக மூர்த்தி எனப்படுகிறார்.

கடவுளுக்கு உருவம் இல்லை என்ற போதும் காரிய நிமித்தம் உருவையும் எடுத்துக் கொள்கிறார். அப்படி எடுத்துக்கொண்டவை தான் மகேசுர மூர்த்தங்கள். இவை சிவத்தின் ஒரு அம்சமேயன்றி சிவத்துக்கு வேறானது அல்ல ஏகநாதனே நவந்தரு பேதமாவான் என்ற சைவ சிந்தாந்த கருத்து. இவ்வுண்மையை விளக்கி நிற்கிறது. கடவுளுக்கு மகன் உண்டா ? மனைவி உண்டா? என்று கேட்பவர்களும் உண்டு. இறைவனுக்கு சொல்லப்படும் உறவு முறைகள் நமக்கிருக்கும் உறவு முறைகள் போன்றதன்று. ஆனால் நம் போன்றவர்கள் சுலபமாக விளங்கிக் கொள்ள நாம் வழங்கும் உறவு முறைகளைக் கூறிப் புராணக்கதைகள் வரையப்பட்டுள்ளன. இந்த உண்மையை நாம் புரிந்து கொண்டால் கேள்விக்கு இடமில்லை.

### 2) **சிந்தாமணி விநாயகர்**

அந்தணர் கபிலருக்காக நற்சித்தியோடு புத்திபாகத்
தமரவோர் தந்தமும் கரிமுகமும் மீரிரண்டத்தமுந்துதிக் கரமும்முன்
றக்கமீர் கழல்களும் மோதகம் மழு மாலை யரவிந்த மேந்து வடிவிற்
சந்தமுறு சிந்தாமணி விநாயகனெனச் சாற்று பேரவ தாரமாய்ச்
சனித்தரியிவரந்தம் முனியினுக் கிடரினைத் தயையிலா திழைத்த நனிசீர்த்
தவத்தினின் வலியனாங் கணனை நீ தடித்தவன் றருக்கினாற் கவர்ந்த வுயிரின்
பந்த மதொழிக்கு சிந்தாமணியினையுயப் பரமனடியார்க்கு நல்கிப்
பங்கயன் மாலுமே காணொணாச் சோதியாம் பகவர்க்கு கந்தகுமார
பக்தி யோடனுதினம் பரவுவார் தமக்கு நேர் பல்லிடரைனீக்கி
வந்தை சேர் பரகதி வழங்கிடுங் கருணையின் வள்ளலே சித்தி யோக
மன்னு திருவாத்தியடி விக்ன விநாயகா வல்வினையி னீடழிந்து
வந்தடந்தேனுனைச் சரணாக நானுமே வரமெனக் கருள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2) சிந்தாமணி விநாயகர் கதை

விநாயகப் பெருமானின் உருவத்தை முழுமையாக இந்தப் பாடலில் விவரிக்கிறார் பாடலாசிரியர். ஓம் என்றபிரணவத்தின் உருவமான யானைமுகமும், அதற்கு சிறப்புத் தரும் துதிக்கையும், விலைமதிப்பற்ற ஒரு தந்தமும், மோதகம், மழுமாலை , தாமரை மலர் இவைகளை ஏந்திய நாலு திருக்கரங்களும், கால்கள் இரண்டுமாகக் கபிலமுனிவருக்கு கணன் என்ற அரசனால் ஏற்பட்ட துயரை நீக்க சிந்தாமணி விநாயகராக அவதரித்த கதையைக் கூறுகிறார்.

ஓம் என்ற ஒலியே உலகின் ஆரம்ப ஒலி என்பதும் அதற்கு உருவமே பிரணவரூபம் என்பதும் அதையே விநாயகர் உருவமாகக் கொண்டுள்ளார் என்பதும் தத்துவம். பூஜை செய்வதற்குத் தாமரை மலர், ஜபம் செய்வதற்கு மாலை, பகைவரை அழிக்க மழு ஆயுதம், மோதகம் உணவுப் பொருள் என்ற போதும் அதுவும் ஞானத்தைக் குறிப்பது என்று சொல்லப்படுகிறது. இப்படி விநாயக உருவத்தின் தத்துவங்களைக் கூறிய ஆசிரியர் சிந்தாமணி விநாயகரான கதையை அடுத்து கூறுகிறார்.

முன்னொரு காலத்தில் கணராஜன் என்னும் அரசன் பிரமதேவனிடம் வரம் பெற்று மூவுலகங்களையும் ஆண்டு வந்தான். ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்று வெகு நேரம் வேட்டையாடிக் களைப்படைந்தான். அதைப் பார்த்த கபில முனிவர் அவனையும் அவன் படை வீரர்களையும் அழைத்து வந்து தன்னுடைய ஆச்சிரமத்தில் தங்கச் செய்து உணவுண்டு பசியாறிப் போகுமாறு உபசரித்தார். மன்னனும் மகிழ்வுடன் அதற்குச் சம்மதித்தான்.

கபில முனிவர் தன்னுடைய மார்பில் அணிந்திருந்த சிந்தாமணியைப் பார்த்து என்னுடைய ஆச்சிரமத்துக்கு வந்திருக்கும் அனைவருக்கும் பசியாற அறுசுவை உணவோடு விருந்து வைக்க வேண்டும் என விண்ணப்பித்தார். உடனேயே அந்த சிந்தாமணியின் சக்தியால் அந்தக் காட்டில் மாடமாளிகை கூட கோபுரங்களுடன் கூடிய ஒரு நகரம் உண்டானது. அரசனுக்கும் அவன் பரிவாரங்களுக்கும் வேண்டிய உணவு வகைகளும் கணப்பொழுதில் தயாராயின.

கபில முனிவர் அரசனுக்கும், சேனைக்கும் வயிறார உணவிட்டு மகிழ்ந்தார். கண்ணிமைக்கும் நேரத்தில் நகரத்தை உண்டாக்கி தனக்கும் படைகளுக்கும் அமுதளித்த சிந்தாமணியைப் பார்த்து வியந்ததுடன், எப்படியாவது அதைத் தனதாக்கிக் கொள்ள அரசன் விரும்பினான். முனிவரைப் பார்த்து தங்கள் தவ வலிமையினாலே நினைத்த காரியத்தைச் சாதிக்க வல்லவரான தங்களுக்கு இந்த மணி எதற்கு அதை எனக்கு கொடுங்கள் என கேட்டான். முனிவர் உயிரினும் மேலாக மதித்திருந்த மணியைக் கொடுக்க விரும்பாது வேறு எதை வேண்டுமானாலும் கேள் தருகிறேன் என்றார். இந்தப் பதிலைக் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபமடைந்த அரசன் முனிவரிடமிருந்து சிந்தாமணியைப் பலவந்தமாக பறித்துக் கொண்டான்.

சிந்தாமணியைப் பறிகொடுத்த கபிலர் விநாயகப் பெருமானை நினைத்து தவம் செய்தார். விநாயகப் பெருமானும் அவன் தவத்துக்கு இரங்கி அவருக்கு காட்சியளித்து சிந்தாமணியை மீட்டுத் தருவதாக வாக்களித்ததுடன் முனிவர் ஆச்சிரமத்திலேயே தங்கியிருந்தார். கணராஜன் இந்தச் செய்தியை எப்படியோ அறிந்து கொண்டான். விநாயகப் பெருமானுடன் போரிடப் படைகளுடன் ஆச்சிரமத்துக்கு சென்றான். அவனுடன் போர் புரிந்து அவனைச் சங்கரித்து சிந்தாமணியை கபில முனிவருக்கு மீட்டுக் கொடுத்த விநாயகரின் திருவடிகளிலே முனிவர் பணிந்து தங்கள் திருமேனியிலே சிந்தாமணியை தரித்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விநாயகப் பெருமான் அதைத் தன் கண்டத்திலேயே தரித்து சிந்தாமணி விநாயகரானார். கபில முனிவருடைய ஆச்சிரமத்தில் தங்கியதால் கபிலர் என்று பெயரும் பெற்றார். இதற்குப் பழுத்த சிவந்த நிறமுடையவர் என்றும் பொருள் படும். இந்தக் கதையைக் கூறிய அப்பாடலாசிரியர் தனக்கும் அருளும்படி ஆத்தியடி விநாயகரை வேண்டுகிறார். நிலையான இன்பம் தரும் விநாயகரைச் சேர பக்திதான் சுலபமான வழியெனக் கண்ட பெரியோர் கூறி வைத்ததுதான் இந்தக் கதைப் பாடல்கள்.

பக்தி நெறிமுறையைக் கடைப்பிடிக்க மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் ஏற்படும் செயல்கள் தூய்மையானதாக இருத்தல் அவசியம். இப்படித் திரிகரண சுத்தியோடு பக்தி செய்யும் போது மெஞ்ஞானம் வளரும். பக்தி வழியை திரிகரண சுத்தியோடும் ஒருமைப்பாட்டுடனும் கடைப்பிடித்து ஆற்றல் பெற்றவர்கள் நம் நால்வர் பெருமக்கள். அவர்கள் காட்டிய வழியிலே இந்தப் பாடலாசிரியரும் இறைவனை சரணாகதி அடைந்ததைக் காணலாம்.

### 3) **கஜானன விநாயகர்**

செங்கமலவாசியின் கொட்டாவிதனில் வந்த சிந்தூரனாமவுணனுஞ்
சீர்சகப் பொருளெல்லாம் பொடிபடுத் தரவணைச் செல்வனும் திசை முகனுமே
திடுக்கிடவொடுக்கிவன் செருக்கினாற் கயிலையில் திரிபுராந்தகனோடு
வங்கையுடனமராடு வேளை யோர் வேதியன் மகனாக விருவர் நடுவே
வந்து நின் பரசுதன்னை நாட்டி யவ்வவுணனின் மத மொழித்தெந்தையன்பார்
மலை மாது வயிற்றினில் கருவதாய் வளரவ்ுன் சிரசை வவ்வவவுணன்
சங்கரன் மதலை நீ சிரசிலா முண்டமாய் சனித்து நின்னாடல் காட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பெரும் கஜமுகாசுரன்தலை பொருத்தியே கஜானனப் பேர் தாங்கியே
தரியலர்க் கிடியேறு போலாளியூர்ந்து வெந் தகுவனாஞ் சிந்தூரச்சூர்
மங்கிடக் குழைத்து மத்தகத்தினிற் பூசியே மன்பதை மகிழவே தான்
மன்னு திருஆத்தியடி விக்கின விநாயகா வல்வினையி னீடழிந்து
வந்தடைந்தேனுன்னைச் சரணாக நானுமே வரமெனக்கருள்வாயே

இப் பாடலில் சிந்தூரன் என்னும் அவுணனை அடக்கிய கதையைக் கூறி விநாயகப் பெருமானை தனக்கும் அருள் புரிய வேண்டுகிறார். இடர்கள் இல்லாமல் எந்த மனிதரும் எக் காலத்திலும் வாழ்ந்திருக்க முடியாது. இதுவே இறை வழிபாட்டின் ஆரம்பம். இதையே புராணங்களிலும் காண்கின்றோம். இவைகள் எல்லாம் வெறும் கதைகள் என்று கூறுபவர்களும் உண்டு. கதைகள் என்ற போதும் அவை உயர்ந்த தத்துவத்தைக் குறிப்பதாகவே இருக்கும்.

### கஜானன விநாயகர்

ஒரு சமயம் நான்முகன் பெரிதாக கொட்டாவி விட்டபோது அவர் வாயிலிருந்து செக்கசிவந்த நிறமும், திக்கெட்டும் பரவக்கூடிய நறுமணத்தோடும், மன்மதன் போன்ற அழகோடும் தோன்றியவன் சிந்தூரன். அவனுக்கு தந்தை நான்முகன் அளவிலா வரங்ளைக் கொடுத்தனுப்பினார். அந்த வரங்களில் எவர் உடலை கோபத்தோடு இறுக்கமாகக் கட்டித் தழுவுகிறானோ அவர்கள் சாம்பலாகி விடுவார்கள் என்பதும் ஒன்று. அளவிலா மகிழ்ச்சியோடு புறப்பட்ட சிந்தூரன் போகும் முன்பு நான்முகன் கொடுத்த வரத்தை அவரிடமே சோதிக்க நினைத்தான்.

அறிவற்றவனுக்கு அளவிலா வரத்தை அள்ளிக் கொடுத்த அறியாமையை நொந்து கொண்டு தந்தை நாராயணரிடம் ஓடிச் சென்று தஞ்சமடைந்தார். தந்திரத்தில் வல்ல நாராயணர் அவனைத் திசை திருப்ப ஒரு வழியைக் கையாண்டார். பிரமன் வண்டு ஏறினால் கூட தாங்காத தாமரைப் பூவிலிருப்பவன், நானோ கேவலம் ஒரு சின்ன ஆலிலையில் குடியிருப்பவன். உனக்கு சமமானவர் கயிலைமலையில் இருக்கும் சிவன் தான் அவரிடம் சென்று சோதித்துப் பார் எனத் திசை திருப்பி விட்டார்.

சிந்தூரன் இதைக் கேட்டு கைலாசத்துக்கு ஓடிச் சென்றான். நிஷ்டையிலிருந்த கயிலை நாதன் கண் விழித்துப் பார்த்தார். அவரைப் பார்த்ததுமே கட்டித் தழுவ முயன்றான் சிந்தூரன். அவனுக்கும் தந்தைக்கும் நடுவே விநாயகப் பெருமான் கண்ணிமைக்கும் நேரத்தில் நின்றார். நின்றதோடு மட்டுமல்லாது நீங்கள் இருவரும் கட்டித் தழுவுவதை விட்டு ஆயுதம் எடுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் செய்து யார் பலசாலி என்பதைத் தீர்மானியுங்கள் என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

இருவரும் அதற்குச் சம்மதித்து போர் புரியத் தொடங்கினர். விநாயகப் பெருமான் தன்னுடைய பரசு என்னும் ஆயுதத்தை அவர்களுக்கு நடுவே வைத்து விட்டுப் போர் புரிவதை வேடிக்கை பார்த்தபடி நின்றார். சிந்தூரனும், சங்கரரும் நீண்ட நேரம் ஆயுதங்களால் போர் புரிந்தும் வெற்றி தோல்வியை தீர்மானிக்க முடியவில்லை. அலுத்துப் போன சிந்தூரன் சிவனை கட்டித் தழுவ முயன்றான். இப்போது நடுவேயிருந்த பரசு ஆயுதம் மேலே எழும்பி அவனைத் தாக்கியது. அதற்கு மேல் கயிலையில் நிற்க விரும்பாது சிந்தூரன் பூலோகத்துக்குச் சென்றான். பூலோகம் சென்ற சிந்தூரன் கண்ணில் பட்டதையெல்லாம் சாம்பலாக்கி பாழ்படுத்தியதுடன் அமர லோகத்தையும் அழிக்கப் புறப்பட்டு வந்தான். பிரமன் முதற் தேவரெல்லாம் கூடி விநாயகப் பெருமானை வணங்கினர். அவர்களுக்கு உதவ வேண்டி உமையம்மையின் வயிற்றில் குழந்தையாய் வளர தொடங்கினார். இந்த விடயம் அசரீரி மூலம் சிந்தூரன் தெரிந்து கொண்டான். தன்னை அழிக்க வளர்ந்து வரும் குழந்தையை கருவிலேயே கொல்லத் தீர்மானித்து வாயுவின் உருவில் உமையம்மை தங்கியிருந்த பூங்காவுக்குச் சென்று உமையின் வயிற்றில் இருந்த குழந்தையின் சிரசை அறுத்துச் சென்றான்.

குழந்தை சிரசில்லாமலே பிறந்தது. உமையம்மை முதல் தேவர்கள் வரை எல்லோரும் வியப்போடும், கவலையோடும் பார்த்தனர். அவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் சிரசில்லாக் குழந்தை பேசிற்று. திரிகால ஞானியான நாரதர் இதைப் பார்த்து பிள்ளையாரே தாங்கள் தலையில்லாமல் பிறந்ததற்கு காரணம் என்ன என வினாவினர். முன்னொரு காலத்தில் கஜமுகாசுரன் பெற்ற வரத்தின்படி தேவர்களும், முனிவர்களும் பூஜிக்கும் பாக்கியத்தை அவன் பெற வேண்டும் என்பதற்காக இச்சூழ் நிலையை உருவாக்கியதாக பிள்ளையார் கூறினார். நாரதர் விடுவதாயில்லை. அதென்ன கஜமுகாசுரனின் கதை என துருவிக்கேட்டார்.

மகேசன் என்றொரு சிவபக்தன் மன்னனாக நீதி நெறி தவறாது நாட்டை ஆண்டு வந்தான். வியாழ பகவான் ஒரு நாள் அவனுடைய அரண்மனைக்கு வந்தார். மன்னன் அளித்த உபசாரத்தில் மகிழ்ந்த வியாழ பகவான் உனது சிரம் தேவர், மூவராலும் மற்றோராலும் வணங்கப்படும் என வாக்கு நல்கினார். அரசனும் மகிழ்ந்து தங்கள் அருள்வாக்கு எப்போது பலிக்கும் என வியாழ பகவானைக் கேட்டார். யானையின் வயிற்றில் எப்போது பிறக்கிறாயோ அப்போது பலிக்கும் எனக் கூறிவிட்டு வியாழ பகவான் சென்று விட்டார்.

அவர் கூறிய வாக்குப் பலிக்கும் நேரம் வந்த போது மன்னன் ஒரு நாள் சேனைகளுடன் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த நாரத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவரை வணங்காது சென்றான். கோபமடைந்த முனிவரும் அடுத்த பிறவியில் யானையாகப் பிறப்பாய் எனச் சாபமிட்டுச் சென்றார். யானையாகப் பிறந்த போதும் முன் செய்த புண்ணியத்தால் சிவபக்தி உடையதாயிருந்தது. ஒருநாள் உமையம்மை தங்கியிருந்த மண்டபத்தை முட்டித் தள்ளியது. இதைக் கண்ட சிவன் கோபமடைந்து யானையின் தலையைத் துண்டித்தார். பூர்வ புண்ணியத்தால் யானையின் வாயிலிருந்து சிவாயநம என்ற அஞ்செழுத்து மந்திரம் வெளிப்பட்டது.

இதைக் கேட்ட பரமேஸ்வரனும் தன்னுடைய பக்தனைச் சிரச்சேதம் செய்ததையிட்டு வருந்தி விரும்பியதைக் கேள் தருகிறேன் என்றார். தங்கள் பாத சேவையை தவிர வேறேதையும் விரும்பவில்லை என யானை சொல்லிற்று யானையின் தோலை உரித்து போர்த்துக் கொண்டார். அதனால் சிவபக்தனாயிருந்த யானை சிவனின் ஆடையாகும் பேறைப் பெற்றது. அதன் தலை பாதுகாப்பாக உள்ளது. நான் தேவர்களும், மற்றோரும் பூசிக்க கூடியதாகக் கஜமுகாசுரன் தலையைத் தாங்கி சிந்தூரனை ஆட்கொள்வேன் என விநாயகப் பெருமான் கூறினார்.

விநாயகப் பெருமான் பரிமள கந்தம் வீசும் சிந்தூரனின் உடலை வாரி எடுத்து நசுக்கி தன்னுடைய மந்தகத்தில் பூசிக்கொண்டார். அவன் உயிர் அவருடைய திருவடியில் ஐக்கியமானது. இந்தக் கதையை கூறிய பாடலாசிரியர் அவனுக்கு நல்லருள் வழங்கியது போல தனக்கும் கதியருள வேண்டுகின்றார். விநாயகன் என்ற சொல்லுக்கு விநாயகன்- தனக்கு மேல் தலைவன் இல்லாதவன் என்று பொருள் சொல்லப்படுகிறது. விநாயகருக்கு யானை முகம் ஏற்பட்டதுக்கு இன்னும் வேறு கதைகளும் உண்டு. தத்துவங்களை ஒவ்வொருவரும் காலத்துக்கு ஏற்ற பாணியில் தங்கள் மனதில் கண்டதை கதை ரூபத்தில் எழுதியிருப்பதால் ஒன்றுக்கு ஒன்று சில வேளை முரணாகவும் தோன்றக்கூடும். இறை அநுபவம் என்பது ஆராய்ச்சிக்கு உட்பட்டதல்ல உணர்வுகளின் சங்கமம் என்பதால் ஆராய்ச்சிகளுக்கும் அப்பாற்பட்டவை.

### 4) **விக்கின விநாயகர்**

போகியினேவலாலெ மரூப விக்கினன் புகழேகவதி யரசையும்
புரிந்த சீர் மகத்தையுமழித்து வெஞ்செருக்கினால் புங்கவர் தவத்தரானோர்
போற்றிடும் யாகங்கள் யாவையும் போக்கிடப் புரந்திரன்றவத்தரன்னோன்
சாகசந் தாங்கிடாதுன்னை வேண்டிடவு நீ தந்தி முக நான்கு கரமுந்
தனித் துதிக்கையுடன் பராசுவமுனியகந் தங்கி சூர்க் கிரவுஞ்சனின்
சாபத்தை நீக்கிடுங் கருணையாவலன்னவன்றாங்கிட்ட கோலமாகும்
ஆகுவினையூர்ந்து வெமரூபியை யொடுக்கி நும்மத்த மொளி ரங்குசத்தா
லவனியிட ரோட்டி விக்கினராச ரென்னவோரபி தான மேற்று மேதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்ம போகங்களைப் பசுக்களுக்கு கூட்டியே யவர் பக்குவமானபோதே
வாகு கெட வாணவ மலத்தினைப் போக்கியாள் வல்லபைக் குகந்த குருவே
மன்னு திருஆத்தியடி விக்கின விநாயகா வல்வினையி னீடழிந்து
வந்தடைந்தேனுன்னைச் சரணாக நானுமே வரமெனக்கருள்வாயே

இப்பாடலில் எமரூபன் என்பவன் இந்திரனின் வேலையாளாக வந்து முனிவர்கள் , தவசிகளுக்கு இடர் இழைத்த போது விநாகப் பெருமான் தோன்றிக் காப்பாற்றிய கதையை இப் பாடலாசிரியர் கூறுகின்றார். இந்திரன் என்பது தேவலோகத்தின் தலைவர் பதவி. உலக நடைமுறையில் மக்களால் தேர்ந்தெடுக்கும் தலைவர் பதவியோ , அல்லது பரம்பரை பரம்பரையாக மன்னர் ஆட்சி முறையில் ஒருவருக்கு வருவதோ போன்று இல்லை. இது இறைவனால் உலக இயக்கத்திற்காகக் கொடுக்கப்படுவது.

இந்தப் பதவிக்கு ஆகமங்களில் குறிக்கப்பட்டிருக்கின்ற படி சிவ புண்ணியங்கள் (யாகங்கள்) செய்திருப்பவர்கள் தான் வரலாம். இந்த பதவி வகிப்பவர்களுக்கு விசேடமான போக பாக்கியங்கள் , அதிகாரங்கள் கொடுக்கப்படும். இவர்கள் தங்கள் பதவியை உபயோகித்து பிழையான செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் பதவி பறிக்கப்படும். சில வேளைகளில் தண்டனையும் கொடுக்கப்படும்.

இந்த வேளை பூலோகத்தில் குறிக்கப்பட்ட இந்த பதவிக்குறிய புண்ணியங்களை யார் செய்திருக்கின்றார்களோ அவர்களுக்கு இந்தப்பதவி கொடுக்கப்படும். இதனால் பதவியில் இருப்பவர்கள் இந்தப் புண்ணியங்களைச் செய்து பூலோகத்தில் இருப்பவர்கள் தங்களுக்கு போட்டியாக வந்து விடக் கூடாது என்பதற்காக அவர்களை யாகம் போன்ற புண்ணியங்களைச் செய்ய விடாது தடுப்பார்கள். இப்படி ஒரு முறை நடந்த கதையும் அதனால் விநாயகப் பெருமான் தோன்றி அருள் செய்த கதையும் தான் விக்கின விநாயகர் கதையாக இடம் பெறுகின்றன.

**விக்கின விநாயகர்**

இமய மலைக்கும் விந்திய மலைக்கும் நடுவே ஏகவதியென்ற நகரத்தை அபிநந்தனன் என்ற அரசன் ஆண்டு வந்தான். இவன் ஒரு மாபெரும் யாகம் ஒன்றைச் செய்ய ஆரம்பித்தான். கலகப் பிரியர் நாரதர் மூலம் இந்த செய்தியை அறிந்த தேவலோகாதிபதி இந்திரன் யாகம் செய்யும் அபிநந்தனன் யாகத்தின் மூலம் சொர்க்க போகத்தை பெற்றுத் தன்னுடைய பதவிக்கு போட்டியாக வந்து விடுவான் என அச்சம் கொண்டு எமரூபன் என்பவனை அனுப்பி யாகத்தைக் குழப்பும்படி ஏவி விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் சொன்னதற்கிணங்க எமரூபன் அபிநந்தன மன்னனுடைய யாகசாலைக்குள் புகுந்து யாகத்துக்கு எனச் சேர்த்து வைத்திருந்த பொருட்களை எல்லாம் சிதைத்ததோடு பூமியில் எங்கு எல்லாம் யாகம் நடக்கிறதோ அங்கு எல்லாம் சென்று யாகம் நடக்காதவாறு தடுத்து வந்தான். அவனுடைய அட்டூழியம் தாளாது வருந்திய முனிவர் ஆனோர் விநாயகப் பெருமானிடம் முறையிட்டனர். அவர்களுடைய துயரத்தைத் தீர்க்க எண்ணம் கொண்ட விநாயப் பெருமான் தன்னுடைய இயல்பான தோற்றத்தோடு குழந்தை வடிவிலே பராசுவ முனிவரின் ஆசிரமத்துக்கு அருகில் உள்ள தடாகக் கரையில் உள்ள புல் தரையில் படுத்து இருந்தார்.

தடாகத்துக்கு நீராட வந்திருந்த பராசுவ முனிவர் குழந்தையைக் கண்டு வேதங்களுக்கு எட்டாத விநாயகப் பெருமானே குழந்தையாக வந்திருப்பதை உணர்ந்து மகிழ்ச்சியுடன் ஆசிரமத்துக்கு எடுத்துச் சென்று வளர்க்கலானர். விநாயகரும் நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமாக வளர்ந்தார். ஒரு நாள் பெருச்சாளி ஒன்று அவ்விடம் வந்து ஆச்சிரமத்தில் இருந்த ஏட்டுச் சுவடிகளையும் துணிமணிகளையும் கடித்துக் குதறித் துவம்சம் பண்ணியது. பெருமான் தன்னுடைய பாசத்தை ஏவி அதை பிடித்து வரச்செய்தார்.

ஒரு காலத்தில் சௌபதி என்னும் முனிவர் மனைவி மனோரமையுடன் இமயமலை சாரலில் தங்கியிருந்து தன்னிடம் வருபவர்களுக்கு அறநூல்ககளை உபதேசித்துக் கொண்டிருந்தார். சிவ பக்தர்களாக வாழ்ந்த அந்த ரிஷிதம்பதிகளின் இனிய இல்லறத்தக்கு இடையூறாகக் கிரவுஞ்சன் என்றொரு கந்தர்வன் வந்து சேர்ந்தான். முனிவர் நீராட சென்றிருந்த வேளை தனித்திருந்த ரிஷி பத்தினியின் அழகில் மயங்கிய கிரவுஞ்சன் ரிஷி பத்தினியிடம் தகாத முறையில் நெருங்கினான். அந் நேரம் நீராடச் சென்றிருந்த முனிவர் திரும்பி வந்தார். நடந்திருக்கக் கூடியதை உணர்ந்த ரிஷி பெருச்சாளியாக போவாய் எனச் சாபமிட்டார்.

கந்தர்வன் தனது தவறை ஒப்புக் கொண்டு தவ முனிவர் கால்களில் சரணடைந்தான். அவன் மனம் தவறையுணர்ந்து கொண்டதை அறிந்த முனிவர் இரங்கிய போதும் என் வாக்கு பொய்க்காது. சாபத்துக்கு விமோசனமுண்டு என்று அதையும் கூறினார். விநாயகப் பெருமான் பராசுவ முனிவரின் ஆசிரமத்தில் அவதாரம் செய்யும் போது அவருக்கு வாகனமாகி தேவர்களுக்கு கிட்டாத பாக்கியத்தை நீ பெறுவாய் என்றார். அந்தக்கணமே கிரவுஞ்சன் மலை போன்ற பெருச்சாளி வடிவில் அலைந்து திரிந்தான்.

பாசத்தினால் பிடித்து வரப்பட்ட பெருச்சாளி விநாயகப் பெருமானிடம் தன்னுடைய கதையைக் கூறி சரணடைந்தது. விநாயகப் பெருமான் பெருச்சாளியை தன் வாகனமாக்கி அதிலமர்ந்து முனிவருக்கு விக்கினம் செய்த எமரூபனை அடக்கினார். இந்திரனின் சொற்படி தான் இப்படி நடந்து கொண்டதாக எமரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானிடம் சரணடைந்து தன்னுடைய நாமத்தையும் தரித்துக் கொள்ள வேண்டும் என விநாயகரிடம் வேண்டிக் கொண்டான். மக்களுக்கு விக்கினங்கள் செய்த உன்னை ஏற்றுக்கொண்டதால் விக்கினராஜன் என்ற பெயரும் இனி வழங்கும் என்று அருளினார்.

விக்கினங்களைத் தந்து விக்கினங்களை நீக்குபவராக இருப்பதால் விக்கினங்களுக்கு அரசர் என்ற பொருளைச் சொல்லுபவர்களும் உண்டு. நோயை நீக்க சத்திர சிகிச்சை செய்யும் வைத்தியர் போன்று விக்கினங்களைத் தந்து விக்கினங்களை நீக்குவதால் விக்கினராஜர் ஆகிறார் என்றும் கொள்ளலாம். இவைகளைக் கூறிச் சரணடைகிறார் இந்தப் பாடலாசிரியர். சரணாகதி ஒன்று தான் ஈடேறும் மார்க்கம் என்பதை இந்தப் பெரியவர் நமக்கு உணர்த்துகிறார்.

### 5) மயூரேசர்

ஆனை மாமுகத்துடனுதித்து உயிரெல்லாம் அளித்திடும் பரம குரு நீ
யற்புதக் கலாபமூர்ந்தருண் மயூரேசனென் றவனி நுனி போற்ற வேதா
னவதரி தயனாதி தேவருக் கெண்ணிலா வலக்கணைச் செய்த சூட்சித்
தானையந் தலைவனாங் கமலாசுரனெனுந் தானவக் குரிசி றன்னைச்
சங்கரித்தின்னுமோர் கற்பத்திலவ் வுருதாங்கி யுமையம்மையார்க்கே
தனயனாய் தோன்றி வெஞ்சிந்துராசன்பெருந் தந்திரத் தலைமை வாய்ந்த
தானவக் குழுவெலாஞ் செகுத்து மவ் வவுணனைச் சமரினிற் றடிந்தும் மேலோர்
தங்கு தீஞ் சிறையினின் றெடுத்துமே யவனின் றந்தைக்கு மரசளித்தே
சண்முகப் பெருமானுக்குன்றனித் தோகையைத் தந்தகப் பிரமை கொண்ட
மான் மகன் மாலுமே தேடொணச் சோதியாய் வந்த பிறைசூடிமதலாய்
மன்னு திருவாத்தியடி விக்கின விநாயகா வல்லினையி னீடிழந்து
வந்தடைந்தேனுனைச் சரணாக நானுமே வரமெனக் கருள்வாயே

இந்த பாடலில் கமலாசுரன் என்ற அரக்கனை ஒழித்த கதையைக் கூறிய பின்பு ஒரு முறை சண்முக பெருமான் சூரபத்மனுடன் போரிட்டு இந்திரன் மகனை சிறைமீட்டு இராச்சியத்தை அளித்த கதையை கூறி அயன் மால் காணச் சோதியான சிவன்மகனே, ஆத்தியடியில் அமர்ந்தவனே எனக்கும் அருள்வாய் என வேண்டுகின்றார்.

மயூரேசர்

முன்னொரு காலத்தில் கமலாசுரன் என்னும் அசுரனுக்கும் தேவர்களுக்கும் நீண்ட காலமாக யுத்தம் நடந்தது. இறுதியில் தேவர்கள் வேதப் புத்தகங்களையே கருவிகளாக்கி அசுரர்கள் மீது ஏவினர். இதனால் சக்தியிழந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர்கள் சண்டையை விட்டு ஓடி ஒளிந்து கொண்டனர். ஒளிந்து கொண்ட அசுரர்கள் தருணம் பார்த்து தங்கள் சக்தியை மூழ்கடித்த அந்த வேதப் புத்தகங்களை பிரமதேவன் தியானத்தில் இருந்தபோது கவர்ந்து சென்று ஒளித்து வைத்தனர். இதனால் வேதநெறி வழக்கில்லாது போய் உலகில் பசியும் பஞ்சமும் தாண்டவமாடியது.

தேவர்கள் ஒன்று சேர்ந்து விநாயகப் பெருமானை வேண்டிக் கொள்ள பெருமானும் அவர்கள் வேண்டு கோளுக்கு இணங்கி வேதியர் உருவில் வந்து வேதாகமங்களைத் தாமே அவர்களுக்கு உபதேசித்தார். மறுபடியும் வேதநெறி தழைத்தோங்கியது. நாடு சுபீட்சமடைந்தது. அசுரர்கள் இதை அறிந்து கோபமடைந்து இதற்கு காரணமான வேதியர் மேல் படையெடுத்தனர். பெருமானே வேதியர் உருவிலிருந்ததை அறியாத அசுரர்கள் சாதாரணமான பிராமணன் தானே லேசாக வென்றுவிடலாம் என நினைத்தனர்.

விநாயகப் பெருமான் மயில் மீது அமர்ந்து உக்கிரமாகப் போர் புரிந்து அசுரர்களை வென்று வேதங்களைப் பாதுகாத்தருளினார். இதனால் மயூரேச விநாயகர் என்ற பெயரும் பெற்றார். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் சிந்து நதிக் கரையில் சிந்து என்னும் அரசன் பெரும் புகழுடனும், வீரத்துடனும் ஆண்டு வந்தான். வீரம் கட்டுக்கடங்காத போது மற்றவர்களைத் துன்புறுத்துவது மகிழ்ச்சியான ஒரு பொழுது போக்காகி விடுகிறது. இந்த வழக்கப்படி சிந்துராஜனும் தேவர்களுக்கு கஷ்டம் கொடுக்கத் தொடங்கிய போது விநாயகப் பெருமான் மயிலேறிப் போருக்குச் சென்றார்.

துணைப் படைகளாக சுப்ரமணியர், வீரபத்ரர் போன்ற பலபடைகள் சென்று போரிட்டன. வழமைபோல் இறை சக்தியே வென்றது. சண்முகப் பெருமான் சூரனுடன் போரிட்ட கதையையும் கூறுகிறார் இந்தப் பாடலாசிரியர். பல பெயர்களில் கூறப்பட்டாலும் இறை சக்தி ஒன்றே. அசுரசக்தியென்னும் ஆணவத்தை அருள் என்கின்ற இறை அடக்குவதே தத்துவம். இதையே இப் பாடலாசிரியரும் கூறி வேண்டுதல் செய்கிறார்.

### 6) பாலசந்திரர்

தேவமாதரசி நற்திலோத்தமை வனப்பினிற் றிகைப்புண்டு தேனுவூர்தி
சிந்திட்ட வீரியத்துதித்த தீயவுணனாஞ் சீறு மனலாசு ரனுமே
செருக்கினாலுயிரெலாம் பொடிபடுத்திடவுமே செற்றிடலவனையுந்தா
னாவ தோர் வகையினைக் காண்கிலாதுன்னையே யவர்க்குற்ற தஞ்சமென்றே
யணைந்திடப் பிஞ்ஞகன் மதலையா யன்று மோ ரந்தணச் சிறுவனுருவா
யவனடைந்த சுரனை விழுங்கியவ்வனலுமே யடர்ந்துன்னைப் பற்றினாற் போற்
பாவனையாக நீ பண்ணிடப் பரந்ததே பாருலனைத்து மந்தோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கயன் முதலவாந் தேவரும் படிவரும் பச்சை யறுகர்ச் சனையினாற்
பரவ வது நீங்கும்படி செய்த வாடலாற் பாலசந்திரனெ ன்னு மோர்
மாபெரும் பேரினைத் தாங்கிடுந் தாரகா மாயவற்கினிய மருகா
மன்னு திருவாத்தியடி விக்கின விநாயகா வல்வினையி னீடிழந்து
வந்தடைந்தேனுன்னைச் சரணாக நானுமே வரமெனக் கருள்வாயே

இந்த பாடலின் ஆசிரியர் அனலாசுரன் கதையை கூறுகிறார். இந்தக் கதையுடன் அறுகம்புல் அர்ச்சனைக்கு வந்த கதையும் சேருகிறது. இவைகளை கூறி தனக்கும் அருள் வேண்டி நிற்கிறார் இந்த பாடலாசிரியர். அருளாளர்கள் ஆத்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை தெரிந்து கொண்டவர்கள், நிச்சயமாக நம்மைக் காப்பாற்றுவான் என்பது உறுதியாக தெரிந்திருப்பார்கள் என்றாலும் ஒரு வேளை இறைவன் நம்மைக் கைவிட்டுவிட்டால் என்ன செய்வது என்ற சந்தேகம் கொள்கிறது மனசு அதனால் திரும்ப திரும்ப இறைவனை வேண்டி நிற்கிறது.

திரும்பத் திரும்பக் கூறும் போது கேட்பவர் மனதில் ஆழமான உணர்வை ஏற்படுத்துவதால் அதுவே வரமாக மாறிவிடுகிறது. இதனால் தான் அருளாளர்களின் பாடல்களை மனனம் செய்து திரும்ப திரும்பப் பாடும் போது பலன் கிடைக்கும் என்கிறார்கள் சான்றோர்.

## பாலச்சந்திரர்

முன்னொரு காலத்தில் யமதர்மராஜனின் மகனாக அனலாசுரன் பிறந்தான். அவன் தேகத்தின் வலிமையும் , அதிலிருந்து வீசிய வெப்பத்தையும் தாங்காது, தந்தை தர்மராஜன் ஒளிந்து கொண்டார். வலிமை மிகுதியால் அவன் தேவர்கள் உட்பட எல்லோரையும் துன்புறுத்தத் தொடங்கினான். வழமை போல விநாயகப் பெருமான் தேவர்களையும், மற்றவர்களையும் காக்கும் பொருட்டு அனலாசுரனைத் தூக்கித் தன் வாயில் போட்டு விழுங்கினார். இந்த உலகத்தவர்களை பல விதத்திலும் துன்புறுத்தி விட்டாய் என்னுடைய வயிற்றில் இன்னும் பல உலகங்கள் இருக்கின்றன இனிமேல் அவைகளை ஒரு கை பார் எனக் கூறினார்.

இதைப் பார்த்து தேவர்கள் அதிசயித்தனர். அதிசயத்தோடுநின்று விடாது அவர்கள் வயிற்றில் ஒரு வேதனை உண்டாயிற்று. பிள்ளையாரின் வயிற்றில் அனலாசுரன் சென்றதும் அவனுடைய வெப்பம் எல்லோர் வயிற்றையும் தாக்கிய து. தேவர்களுக்கு உதவும்வகையில் சந்திரன் தனது தண்மையான கிரணங்களை விநாயகரின்வயிற்றில் பொழிந்தான். திருமால் ஏராளமான தாமரை மலர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கொண்டு வந்து விநாயகரின் வயிற்றைத் தடவினார். வருணதேவன் குளிர்ந்த நீரால் விநாயகரின் வயிற்றுக்கு அபிடேகம் செய்தான். சிவபெருமான் தான் அணிந்திருந்த பாம்பை விநாயகரின் வயிற்றில் அணிவித்தார்.

எவர் எது செய்து குளிர்விக்க நினைத்த போதும் வெப்பம் தணியவில்லை. முனிவர்கள் எல்லோரும் (ஆயிரக்கணக்கானவர்கள்) ஒன்று கூடி விநாயகருடைய திருவடியிலிருந்து திருமுடி வரை அறுகம்புல்லால் அர்ச்சனை செய்தனர். அப்போது மூவுலகமும் குளிர்ந்தது. அன்று முதல் அறுகம்புல் மற்றெல்லாவற்றையும் விட உயர்ந்த அர்ச்சனைப் பொருளாக விளங்கி வருகிறது. நெருப்பிலும் கொடுமையான வெப்பமுடைய அசுரனை விழுங்கித் தங்களைக் காத்து சந்திரனைப் போன்று குளிர்ச்சியைத் தந்ததால் பாலச்சந்திரன் என்னும் நாமமும் விநாயகருக்கு வழங்கலாயிற்று.

இந்தக் கதையைக் கூறிய இந்தப் பாடலாசிரியர் தனக்கும் அருள் வேண் டுகிறார்.

7) **தூமகேது விநாயகர்**

உன்னருள் வசத்தினாலுலகளந்தோனு நல்லுயர் தவச் செல்விசுமுதைக்
குத்தமக் குழவியா யவள் வயின் வளரவே யோங்கு பேர் தூமாசுரன்
னன்றுருவிலா வாகாச வாக்கினிற் றிடுக்கிட்டுறு செய்திடச் சிசுக்கே
யுன்னி வெவ்வீரரை விடுத்திடத்தானுமோ வும்பருங் காணவொண்ணா
யுமையவட் கமர்ந்த சீர் மதலை நீ சுமுதை பாலோங்கி யோர் பாலனாக
வூட்டியேயவள் முலைப் பாலவடனக்கிடருறுத்த வங்கணைந்த வீரர்
தன்னையுந் தூமாசுரனையு நின் வாயெழுந் தனிப்பெரும் புகையினாலே
தடிந்து மன்னோனரசவள் வயின் சலசலோசனற் களித தவளை அவடன்
றனயனையுங் காத்துயர்த் தூமகேதென்ற பெயர்சாற்றியே கருணைநிதியாம்
வண்ணமயிலூர்ந்தும்பர் காத்த வற்கண்ணனே மலைமுனிக்குகந்த குருவே
மன்னு திருவாத்தியடி விக்கினவிநாயகா வல்வினையி னீடிழந்து
வந்தடைந்தேனுன்னைச் சரணாக நானுமேவரமேனக் கருள்வாயே

இந்தப் பாடலில் தூமசூரன் என்பவனின் கதையைக் கூறுகிறார். கூறிப் பின்னர் தனக்கும் அருள் வேண்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு காலத்தில் தூமராஜன் என்பவன் அசுர குடும்பத்தில் பிறந்தான். அசுர குலத்தில் பிறந்திருந்தும் முன் செய் புண்ணியத்தால் சிவபக்தனாகவும், தானதர்மங்களில் சிறந்தவனாகவும் விளங்கினான். அவன் செய்த நல்ல வினைப் பயன் முடிவடையும் நேரம், அவனிடம் அசுரகுல தன்மைகள் குடிகொள்ளத் தொடங்கின. அதன் பின் அப்போதைக்கப்போது சிறிது நல்லுணர்வு வந்த போது அவனுடைய மந்திரிகள் துர்ப்போதனை செய்து அவன் மனதைக் குழப்பினர்.

வழக்கம் போல் தீய சக்திகளை அழிக்கத் திருவுள்ளம் கொண்ட விநாயகப் பெருமான் விஷ்ணு அம்சமாக ஒரு குழந்தையை சுமுதை என்ற பெயருடைய அரசியின் வயிற்றிலே வளரச் செய்தார். இதை எப்படியோ அறிந்த தூமராஜன் அரசியையும், அரசனையும் கொல்வதற்கு ஆட்களை அனுப்பினான். அவன் அனுப்பி வைத்த வீரர்கள் அரசனையும் கர்ப்பவதியான அரசியையும் காட்டுக்குத் தூக்கிச் சென்று கொல்ல எத்தனிக்கும் வேளை விநாயகப் பெருமான் கொலையாளிகளை விரட்டியடித்தார். குழந்தை வடிவிலே வந்து கொலையாளிகளை விரட்டிய விநாயகர் சுமுதையின் மடியிலேயமர்ந்து அவள் கொடுத்த பாலமுதை உண்டார்.

தான் அனுப்பிய வீரார்கள் விரட்டியடிக்கப்பட்டதை அறிந்த தூமராஜன் பெரும் படையுடன் காட்டுக்கு புறப்பட்டு வந்தான். அப்போது சுமுதையின் மடியிலே விளையாடிக் கொண்டிருந்த பாலச்சந்திர மூர்த்தி தூமாசுரன் வெளியிட்ட விஷப்புகைகளை எல்லாம் விழுங்கிக் கொண்டார். இனிமேல் புகை விட முடியாது களைத்துப் போய் தூமராஜன் என்ன செய்யலாம் என சிந்திக்கும் வேளையில் விநாயகப் பெருமான் விழுங்கிய புகையை வெளியே விடவும் அது பந்து போலச் சுழன்று சுழன்று எல்லாத் திசைகளிலும் பரவிக் காடே இருளில் மூழ்கியது.

தூமராஜனும் படையினரும் புகையின் சீற்றத்தைத் தாங்காது மயங்கி விழுந்து மடிந்தனர். அரசியின் வயிற்றிலிருந்த குழந்தை உரிய காலத்திலே பிறந்து இராச்சியத்தை ஆளும் என ஆசி கூறி விநாயகப் பெருமான் சென்றார். தூமத்தினால் அசுரனையும், படைகளையும் ஒழித்த காரணத்தினால் தூமகேது விநாயகர் என்ற பெயரும் வழங்கலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணேசர் + கணபதி**

(8) (9)

ஏக வெயிறத்தனே பலியினுக் கழிவிலாவெழி லாயுடிரிபுரமுநீ
யீயவு மிமையவர்க் கெண்ணிலா விடரினை யிழைத் தனனதற்கவருமோ
ஏறிவர்ந்தருட் டிரி புராந்தகன் சரணகத்திருத்தி வந்தரற்றிடத்தஞ்
சோகமதை யெந்தையு மகற்றுதற்கு ன்னினான் சோதி மயமானவரின்
சுந்தர முகத்தினிற் கணேசரவதாரமாய்த் தோன்றி வெம்பலியை வாட்டத்
தோற்றமளித்த சிவனேசருக்கு கெளியனே கடவுளர்க் கிடுக்கணீக்க
வாகு பெறி மாசலத் தலைவியோடுமாபதி மகிழ்வுறப் பிரணவத்தின்
வந்த மா கணபதிப் பேர் கொளவதாரமாய் வர வரிக் கஜமுகனை நின்
மாதனிக் கொம்பினால் வாட்டி யன்னோனெழும் வன் பெருச்சாளியான
வாகன மிவர்ந்தரி யராவுருப் போக்கியே மத கஜமுகத்தினோடு
மன்னு திருவாத்தியடி விக்கின விநாயகா வல்வினையி னீடிழந்து
வந்தடைந்தேனுன்னைச் சரணாக நானுமே வரமேனக் கருள்வாயே

இந்தப் பாடலில் திரிபுரனின் கதையைக் கூறுகிறார் ஆசிரியர். பின்னர் சிவ - பார்வதி தம்பதிகளின் பார்வையினால் பிரணவருப விநாயகராய் அவதரித்து கஜமுகனை கொன்ற கதையைக் கூறுகிறார். பிறகு திருமாலின் சாபம் தீர்த்திட அருளிய கதையைக் கூறித் தனக்கும் அருள் வேண்டி நிற்கிறார்.

**கணபதி+கணேசர்**

முன்பொரு காலத்தில் திரிபுரன் என்ற அரசன் எட்டுத் திக்குகளிலும் புகழ் பரவ ஆட்சி செய்து வந்தான். இவன் விநாயகப் பெருமானின் ஏகாட்சர மந்திரத்தை ஜபித்துக் கடும் தவமிருந்து விரும்பியது எல்லாம் பெறக் கூடிய வரத்தைப் பெற்று இருந்தான். அதன் பயனாக திரிபுரங்களையும் ஆளக்கூடிய வல்லமையுடன் மூன்று பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு திரிபுரங்களையும் உண்டாக்கி, அங்கே எல்லாம் நினைத்த மாத்திரத்தே போய் வரக்கூடிய வாகனங்களும் உருவாக்கி ஆள்வதற்க்கு அவர்களை அனுப்பி வைத்தான்.

இவர்களுக்கெல்லாம் ஏக சக்கரவர்த்தியாக ஆண்டு வந்தான். இவர்களுடைய ஆட்சியில் தேவர்களெல்லாம் ஓடி ஒளிய நேர்ந்தது. தேவர்கள் தங்கள் இன்னல்கள் தீர விநாயகப் பெருமானை வேண்டினார்கள். அவர்களுடைய கஸ்டத்தை தீர்ப்பதாக ஒப்புக் கொண்ட பெருமானும் பிராமண வடிவில் திரிபுரனிடம் சென்றார். தன்னை நாடி வந்த வேதியரை திரிபுரன் அன்போடு வரவேற்று உபசரித்தான். வேண்டுவது என்ன கூறுங்கள் தருகிறேன் என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலை மலையில் சிந்தாமணி விக்கிரகம் ஒன்று இருக்கிறது. சிவபார்வதி தினமும் பூஜை செய்யும் அந்த விக்கிரகத்தை எடுத்துக் கொண்டு வந்து எனக்குத் தரவேண்டும் எனக் கேட்டார். வேதியர்கள் கேட்பதை கொடுக்கும் பழக்கம் உள்ள திரிபுரனும் அவர் கேட்டதை பெற்றுத் தருவதாக வாக்களித்தான். அதனை எடுத்து வர உடனே ஏவலர்களை அனுப்பி வைத்தான். அவன் அனுப்பி வைத்த ஏவலாளர்கள் வெறுங்கையுடன் திரும்பி வந்தது மட்டும் அல்ல சிவன் உங்களை போருக்கு அழைக்கின்றார் என்று கூறினர்.

விநாயகரின் அருளைப் பெற்று ஏராளமான வரங்களையும் அவரிடம் பெற்ற திரிபுரனை அழிப்பதற்கு அவர் அருள் வேண்டும் என நினைத்து சிவனும் அவருடைய ஏகாட்சர மந்திரத்தைத் தியானிக்க அவர் முகத்திலிருந்து ஐந்து முகத்தோடு கணேசர் என்னும் நாமத்தோடு வெளிப்பட்டு திரிபுரனை அழிக்கும் சக்தியை அவருக்கு கொடுத்தருளினார். போருக்குப் புறப்பட்டு வந்த திரிபுரனையும் அவன் உண்டாக்கிய திரிபுரங்களையும் நீறாக்கித் தேவர்களைக் காத்தார். இந்தப் பாடலின் முதற் பகுதியில் இந்தக் கதையைக் கூறிய பாடலாசிரியர் இன்னுமொரு காலத்தில் சிவனும் உமையும் சித்திர மண்டபம் ஒன்றில் உலாவி வரும் போது சித்திரம் ஒன்றில் கண்ட பிரணவ ரூபத்தை உற்றுப் பார்க்கவும் பிரணவரூப விநாயகர் அவதரித்து கஜமுகனை அழித்த கதையையும் கூறுகிறார்.

நம் நாட்டில் இந்தக் கஜமுகர் அவதாரக் கதை பிரபல்யமான ஒன்று. ஆலயங்களில் எல்லாம் பிள்ளையார் கதையாக ஓதப்படும். கஜமுகன் போர் என, விழாவாக நிகழ்வதும் வழமையான ஒன்று. இத்துடன் இன்னுமொரு கதையும் இந்தப் பாடலில் வருகிறது. ஒருநாள் உமையும் சிவனும் விஷ்ணுவைச் சாட்சியாக வைத்து சொக்கட்டான் விளையாடினர். விளையாட்டின் போது சிவன் வென்றதாக விஷ்ணு பொய் கூறவும் உமையம்மை கோபங்கொண்டு "விஷ்ணுவை பாம்பாகிப் போ" என சாபமிட்டார்.

விஷ்ணு விநாயகரை வழிபட்டு சாப விமோசனம் பெற்றதாக புராணம் கூறும் கதைதான் இதுவும். அரி அரா உருப்போக்கிய என்ற வரி இந்தக் கதையைக் கூறுகிறது. இறைசக்தி ஒன்றே தான் என்ற போதும் வேண்டும் போது வேறு வேறு உருவங்கள் எடுத்துக் கொண்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. விரும்பிய வடிவினில் நாங்களும் வழிபடலாம் என்பதனை நாமும் உணர்கின்றோம். இந்தப் பாடலாசிரியர் மறவாது எனக்கும் அருள் வேண்டும் என விநாயகரிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) **மகாற்கடரி**

மங்கையோர் பங்கினன் வரமிகப் பெற்றவெம் மாயையின் வலியரான
மாலிநற்றேவாந்தகனராந்தகன் செய்யும் வன் கொடுமை கோறலுக்கே
வானவருமன்பதையு முன்னையே சரணதாய் வந்தடைந் திடவுமேவெண்
டிங்கள் செஞ்சடையணித் தேவு தன் மதலை நீ திசைமுகனுமாதவனுமே
தேடொண மகோற்கடரென்னு மவதாரமாய்ச் செனித்துமே காசிபற்குந்
தெரிவை யதிதிக்கும் நன் மதலையாயன்றுமே சித்திரன் சாப நீக்கித்
தங்கு சீர்க் காசியிற் சிறுவரோடாடியே தகவுடன் சித்தி புத்தி
தமை மணந்து றுவலைப் புரிந்தவப் பாரதக் தகுவரோ டவர் குழுவையுந்
தடிந்து மத்தலத்தினிற் றாராபதி மகற்குமே புரோகிதனாகி
மங்கல வளந்தரு பிரணவச் சொரூபியாம் வரதனே யேகநாதா
மன்னு திருவாத்தியடி விக்கின விநாயகா வல்வினையி னீடிழந்து
வந்தடைந்தேனுன்னைச் சரணாக நானுமே வரமேனக் கருள்வாயே

இந்தப் பாடலில் தேவாந்தகன், நராந்தகன் என்ற இரு சகோதரர்களின் கதையைக் கூறி , சித்திரன் என்னும் கந்தர்வனின் சாபம் நீக்கிய கதையையும், காசிராஜனின் மகனுக்கு திருமணம் முடித்து வைக்க புரோகிதராக வந்ததையும் கூறி வேண்டுகிறார்.

**மகோற்கட விநாயகர்**

தேவாந்தகன், நாராந்தகன் என்று இரு சகோதரர்கள். வேதியர் குலத்தில் பிறந்த இவர்கள் இருவரும் கடும் தவம் செய்து அளவில்லா வரங்கள் பெற்று அரசாட்சி செய்து வந்தார்கள். வழமை போல இவர்கள் மிகுந்த பலம் பெற்று விட்ட காரணத்தால் மக்களை வருத்தும் எண்ணம் மேலோங்கிற்று. பெரும் அட்டகாசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் அதனால் மக்கள் துன்பமடைய நேர்ந்தது. தேவர்கள் முதல் மற்றவர்களையும் காக்க காசிபமுனிவர் அதிதி தம்பதிகளுக்கு குழந்தையாய் விநாயகப் பெருமான் அவதரித்தார்.

அவர்கள் இருவரும் மகோற்கடர் எனப் பெயரிட்டு வளர்த்தனர். இங்கு குழந்தையாய் வளர்ந்த நாளில் பிருகு முனிவரின் சாபத்தால் முதலையாகிப் போன சித்திரன் என்ற காந்தர்வனின் சாபம் நீக்கியருளியதுடன். காசி நகரில் சிறுவர்களுடன் பல திருவிளையாடல்களைச் செய்தருளியவர். காசி ராஜனுடைய மகனுடைய திருணத்திற்கு புரோகிதராகவும் செயற்பட்டிருக்கிறார். இத்துடன் மகோற்கடருக்கும் சித்தி, புத்தி என்ற இரு தேவியருக்கும் திருமணம் நடந்ததாகப் புராணம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11) உருண்டி விநாயகர் 12) வல்லபை கணேசர்

பிரமாசுரன் வரச்செருக்கரித்திட வவன் பிள்ளையாந் துராதசனுமே
பெருந் தவமியற்றியே பிஞ்ஞகனிடம் வரப் பேற்றினாற் றாதையைச் செற்ற
பிரமனின் பிதா முதற் தேவரை வருத்தவே பேரருளுருபமான
வரைமகள் முகத்து டுண்டிராசவதாரமாய் வந்தவு ணனுயிரை நீயும்
வாங்கியோர் கணியனாய் க்காசிசேர்ந்திவோதனன் மருளறுத்தருந்தவர்க்கே
வரன் காசியுற வாக்கிய யைங்கரத்தேவவுன் வாமத்தி லுற்றவம்மை
சராசரப் பொருடனாலலா தியங்காதெனத் தருக்கித்து நின்ற வதனாற்
சார்ந்திட்ட வினையினைப் போக்க வல்லபையெனத்தவன் மரீசிக்கு மகளாய்த்
தங்கவே யவணணைந்தவளை நீ மணத்தலாற்றந்தி முகமான வுருவே
வரதனே வல்லபைக் கணேசனென்ற பேரினால் மன்பதைகள் போற்றவேதான்
மன்னு திருவாத்தியடி விக்கின விநாயகா வல்வினையி னீடிழந்து
வந்தடைந்தேனுன்னைச் சரணாக நானுமே வரமேனக் கருள்வாயே

இந்தப் பாடலில் பிரமாசுரன் கதையை முதலில் கூறி அவன் மகன் துராதசன் கதையைக் கூறுகிறார். பின்னர் துண்டிரான் என்ற பெயரில் அவதாரம் செய்து துண்டிராசனின் செருக்கழித்து சோதிடன் உருவத்தில் காசி மன்னனிடம் சென்று காசிநாதரை விஸ்வ நாதருக்குரிய தாக்கி மரீசி முனிவருக்கு மகளாக வந்துதித்த வல்லபைத் தேவியை மணந்து வல்லபை கணபதி என்ற பெயரைப் பெற்ற வரலாற்றைக் கூறி தனக்கும் அருள் வேண்டுகிறார். மனித வாழ்வில் இன்று இன்பமாக இருப்பவை நாளை துன்பமாக மாறி விடுகிறது. இன்று துன்பமாக இருப்பது நாளை அளவற்ற இன்பத்தைத் தருகிறது. இப்படி இன்ப துன்பங்களில் நிலையற்றுத் தடுமாறும் உயிர்களுக்கு இறைவனடிதான் நிலையான இன்பத்தைத் தரும் என்பதைத் தங்கள் அனுபவத்தில் உணர்ந்து கொண்டவர்கள் யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக, என்னும் நோக்கில் கூறிச் சென்றது தான் பக்தி மார்க்கம். இவ்வழி சென்று எல்லோரும் பயன் பெறுவதையே இந்தக் கதைகள், பாடல்கள் உணர்த்துகின்றன.

பிரமாசுரன் சிவனை நோக்கித் தவம் செய்து பல வரங்கள் பெற்றான். அவன் பெற்ற வரத்தின்படி யார் தலையில் கை வைத்தாலும் அவர்கள் சாம்பலாகிப் போய் விடுவார்கள் என்பதும் ஒன்று. இதைச் சிவனிடமே சோதிக்க விரும்பினான். அவன் எண்ணத்தை தெரிந்து கொண்ட சிவன் மறைந்து விட்டார். அவனால் வரக்கூடிய ஆபத்தைப் புரிந்து கொண்ட மகாவிஷ்ணு மோகினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவெடுத்து நடனமாடி அவனையும் நடனமாடச் செய்து அவனைத் தன்னுடைய தலையிலேயே கையை வைக்கச் செய்து சாம்பலாக்கிய கதை வழமையாக அறிந்த ஒன்று. இதன் பின் அவனுடைய மகன் துராதசன் தந்தையைப் போலவே தவம் செய்து சிவனிடம் நல்ல வரங்களைப் பெற்று தன்னுடைய தந்தையை தந்திரமாகக் கொன்ற மகாவிஷ்ணுவையும் மற்ற தேவர்களையும் ஒழித்துக் கட்ட படையெடுத்து வந்தான். இப்போது தேவர்கள் எல்லாம் பூலோகத்தில் காசிநகர் சென்று ஒளிந்து கொண்டார்கள். துராதசன் அங்கேயும் துரத்திச் சென்றான். விசுவ நாதன் அவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு கேதாரம் சென்று விட்டார். விசுவநாதரும் மற்ற தேவர்களும் ஓடி ஒளிந்து கொள்ள துராதசன் காசி நகரையும் தனதாக்கி ஆட்சி செய்ய தொடங்கினான். அவனுடைய கொடுங்கோலாட்சியில் நெறி முறைகள் தவறிப்போய் தான தர்மங்கள் நலியவும், தேவர்கள் அவிப்பாகம் கிடைக்காது பசியால் வாடும் நிலை ஏற்பட்டது. தேவர்களும் விநாயகப் பெருமானிடம் முறையிட்டனர். விநாயகப் பெருமான் தோன்றி தேவர்களைக் காப்பாற்றுவதாக வாக்களித்தார்.

இதையறிந்த துராதசன் விநாயகப் பெருமானை எதிர்த்துப் படையெடுத்து வந்தான். சிவபிரானிடம் பெற்ற அருமையான வரங்களை வீணடிக்காது நீதியுடன் அரசாளும்படி சமாதானமாக விநாயகர் அவனிடம் கூறியும், அவன் அதை விரும்பாது போர் செய்து, தோற்றுப் போய் பெருமானிடம் சரணடைந்தான். நீதி நெறி தவறாது ஆட்சி செய்யும்படி புத்திமதி கூறி ஆசீர்வதித்து அனுப்பினார். அன்று முதல் காசி விஸ்வநாதருக்கு எதிரே வக்ரதுண்ட மூர்த்தியாக எழுந்தருளினார். இதனால் அவருக்கு உடுண்டி விநாயகர் எனவும், காசி நகருக்கு உடுண்டி நகரம் எனவும் பெயர் வழங்கலாயிற்று.

இந்தச் சம்பவங்களுக்குப் பின்னர் காசி நகர் தேவர்கள் புக முடியாத நகராயிருந்தது. இவ் வேளை காசிக்கு திரும்பிச் செல்ல விரும்பிய விசுவநாதர் விநாயகருக்கு அதைத் தெரிவிக்கவும் விநாயகப் பெருமான் துண்டிராசன் என்ற பெயரில் சோதிடனாக மன்னனிடம் சென்று தந்திரமாகப் பேசி விசுவநாதரை பழையபடி காசிக்குத் திரும்ப வைத்தார். இதையெல்லாம் கூறிய இப்பாடலாசிரியர் இன்னுமொரு கதையையும் கூறகிறார்.

சிவன் சக்தி இருவருக்குள் ஒரு போட்டி உருவானது. ஒரு முறை தன்னால் தான் உலகம் இயங்குகிறது என்று சக்தி அகம்பாவம் கொள்ளவும், சிவனின்றி சக்தி இல்லை என்பதை உலகத்துக்கு காட்ட உலகத்தில் உள்ள சக்திகளையெல்லாம் சிவன் தனக்குள் ஒடுக்கிக் கொண்டார். இதனால் உலகம் இயங்குதலின்றி இருளில் மூழ்கியது. இப்போது தன் தவறை உணர்ந்து கொண்ட சக்தி உலகத்தை இருளில் மூழ்கடித்த பாவத்தை போக்கப் பிராயச்சித்தம் செய்ய விரும்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரானும் "பூலோகத்தில் மரீசி என்பவர் உன்னைப் பிள்ளையாக அடையத் தவம் செய்து வருகிறார். அவருக்குப் பிள்ளையாகி வளர்ந்து வா தக்க சமயத்தில் வந்து ஆட்கொள்கிறேன்" என்று அருளினார். அதன்படி தேவியும் மரீசி முனிவர் இடத்தில் குழந்தையாய் வளரத் தொடங்கினார். மரீசியும் அவர் மனைவியும் குழந்தைக்கு வல்லபை எனப் பெயரிட்டு சீராட்டி வளர்த்தனர். இக்கதையில் கூறப்படும் மகாவிஷ்ணுவும் சிவனின் ஓர் அம்சமே. இருபத்தைந்து மாகேசுர மூர்த்திகளில் மகாவிஷ்ணுவும் ஒருவரே. இது சைவ சிந்தாந்தம் சொல்லும் கருத்து. "அரியும் சிவனும் ஒன்று" என்ற வாக்கினால் இதை உணரலாம்.

முத்தொழில்கள் புரிவதாகக் கூறப்படும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் இன்னும் இந்திரன் , வாயு வர்ணன் போன்றவர்கள் எல்லோரும் தேவர்கள் உலக இயக்கத்திற்க்காக இறைவனால் அளிக்கப்பட்ட பதவிகள். ஆன்ம வர்க்கத்தில் உயர்ந்த புண்ணியங்களைச் செய்தவர்கள் இந்த பதவிக்கு நியமிக்க படுவார்கள். இவர்களுக்கு மனிதர்களை விட அதீதமான சக்தியும் (super narural power) உண்டு.

சிவத்திற்கும் சிவத்தின் அம்சமான இருபத்தைந்து மாகேசுர மூர்த்தங்களுக்கும் , புராணங்களில் கூறப்பட்ட மும்மூர்த்திகளுக்கும் பேதம் விளங்காது குழம்பிய நிலையில் வேறு வேறான சமயங்களாக சைவம், வைஷ்ணவம், காணபத்தியம், சௌரம், சாக்தம், கௌமாரம் எனப் பலவாகி ஒவ் வொன்றும் தங்கள் கடவுளே முழுமுதல் என்றும் வாதிட ஆரம்பித்தன. இதற்கு வசதியாக புராணங்களும் பலபல கதைகள் கூறியுள்ளன.

புராணக் கதைகளில் உள்ள தாத்பரியங்களை பௌராணிகர்கள் தங்கள் மனதில் தோன்றியபடி வியாக்கியானம் செய்தனர். அவர்கள் சொல்வளம், இசைஞானம், ஆகியவற்றினால் சொல்லும் கதைகளை மனதில் பதித்துக் கொண்டு வழி வழியாக வந்த கதைகளே வழக்கில் உள்ளன. கதைக்குள் உள்ள உண்மைப் பொருளைக் கண்டறிய முடியவில்லை.

கடவுள் ஒருவரே! சைவ சித்தாந்தத்தில் சிவம் என்று சொல்லப்படுகிறது. சிவத்திலிருந்து அருள் வெளிப்படும் போது அது சக்தியாகிறது. சக்தியே சிவனின் திருமேனியாகிறது. இதையே சேக்கிழார் "கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி" என்று கூறுகிறார். சிவமும் சக்தியும் எப்போதும் பிரிவில்லாமல் இணைந்தே இருப்பது இந்த அருளைப் பிரித்து அம்மையாக வழிபடுவதில் சுகம் கண்டவர்கள் சக்தியை தனியாகவும் வழிபடத் தொடங்கினார்கள்.

மரீசியும் அவர் மனைவியும் சீராட்டி வளர்த்த குழந்தையை உரிய பருவம் வந்ததும் சிவபிரான் மூலப் பரம் பொருளான விநாயகர் உருவத்தில் தோன்றி வல்லபையை மணந்து கொண்டார். இதுவே வல்லபை சமேத கணபதி என்ற சொல் வருவதற்கு வழி வகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்தியடிச் சுப்ரமணியக் கடவுள் பதிகம்

1)

திரு வதனமிருமூன்றுமீ ராறு தோளும் சினத்தவடி வேலபயமும்
சீலீமுகமும ங்குசம் வச்சிரங் கொடியொடு சிலை தண்டு மழு பங்கயம்
வரதமொடு மணியேறு பன்னிருகரங்களும் வலமிடந் தேவிமாரும்
வந்திடும் கோலமே காட்டி எனையாளுவாய் வந்த அடியாரவர்கு
வரமருளு முருகேச வள்ளலே தாரகனை வாட்டிய ருள் உம்பர் கோனே
வல் வினையினேன் வலமார் கலியினலையுண்டு வாட்டமுறல நிகிலாயோ
கரிமுகற்கு ற்ற ஒரு தம்பியே திங்களணி கண்ணுதற்கினிய மைந்தா
கவினாத்தியந் தளியின் வடபாலமர்ந்தருளு கந்தசாமிக் கடவுளே

2)

நீரினிற் குமிழன்ன நிலையற்ற காயத்தை நிலையெனக் கருதி நாளும்
நித்தனே முற்பவத் தொடர்பிலோ மற்றேதோ நெஞ்சினிற் கொண்ட வெல்லாம்
பாரினிற் செய்துமே பாவியென்றுலகிற் பகர்ந்திடும் பரிசு பெற்ற
பதடிக்கு ளாக்கினாய் பண்ணவர்க் கிறைவனே பக்தர்கட் குற்ற வினையை
வேரோடழித்திட்ட வேற்படைக்குரவனே வேதனு க்கன்றுதித்த
வீண் செருக் கோட்டியே பிரணவப் போருடன்னை விமலர்க் குரைத்த முதல்வா
கார் குழற் தெய்வத் தையலை க்குறமகட் கன்னியை மணந்த தலைவா
கவினாத்தியந் தளியின் வடபாலமர்ந்தருளு கந்தசாமிக் கடவுளே

3)

உன்னை நானென்று முள்ளுருகி வந்தனை புரிந்துன் னரிய ஆறெழுத்தை
உச்சரித்து னதன்பர் கூட்டத்தை நாடிடவும் முன்னடித் தொண்டு செயவும்
பன்னு தமிழ் பாடிடுஞ் சக்தியும் துன்பங்கள் பரவாதவி ன்பத்தையும்
பல் வளத்தோடு சுக சீவனப் பெருமையும் பகைவர் வந்தடி பணிந்து
நன்னயம் பேசிடுந்தலை மையும் மன்னர் நல்வசீகரப் பேறுமிதய
நண்பர் சேய் மனையாதி யேவர்க்கும் அன்னம் நயந்திடும் உயர் வாழ்வும்
கன்னல் வில் மதனைக் காய்ந்த சிவபாலனே காசினியில் எனக்கருளுவாய்
கவினாத்தியந் தளியின் வடபாலமர்ந்தருளு கந்தசாமிக் கடவுளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4)

பன்னிரு புயத்தனே பங்கயாசனனன்று பகரொணாப் பிரணவத்தைப்
பரமற்கு ரைத்திட்ட பகவனே மலைமாது பாலனே கார்த்திகேயா
என்னிரு கண்மணியான குமரவேளே முருக ஈசற்கு கந்த மைந்தா
இனிய மால் மருகனே தும்பி முகவற் கிளையவா குறிஞ்சி வேந்தா
வண்ண மயிலூர்ந்து வெஞ்சூருங்கிழியவே வடிவேலை வாங்கு முதல்வா
வாகுடன் செல்வமுங் கல்விகலை ஞானமும் வளர் போகமாயுளுஞ் சீரும்
பன்னிரு வளங்களுந் தந்தென்னை யாளுவாய் கருணாகரத் தெய்வமாய்
கவினாத்தியந் தளியின் வடபாலமர்ந்தருளு கந்தசாமிக் கடவுளே

5)

பொன்னகர்க்கிறைமகன் சூர்ச்சிறைபட்டு வெம்பொருமலைக் கேட்டிரங்கிப்
போந்துமே யஞ்சலென்ற பயமீந்தவனும் நீ போதியிற் குகையகத்து
மன்குரிசில் நக்கீரனாற்றுப் படைக்கவ வன் வன்சிறையை நீக்கியாண்ட
வல்லவொரு தேவுநீ ஞானமொடு கல்விகலை அவ்வைக்க கத்தியர்குச்
சொன்ன தேசிகனுநீ வள்ளியைத் தினைப்புனஞ் சேர்வு செய்வேடனுநீ
சூருடல் கிழித்திட்ட வெற்றிவேற் பெருமநீ தோகை யிலிவர்ந்து தெய்வக்
கன்னியை மணந்தமரரிடர் தீர்த்த குமரனே கடையனேனிடர் தவிர்ப்பாய்
கவினாத்தியந் தளியின் வடபாலமர்ந்தருளு கந்தசாமிக் கடவுளே

6)

செந்தி வேல் முருகா திருப்பரங்குன்றனே திரு ஏரகத்தமரும்
சிற்பரக் குழகனே திருவாவினன் குடிச் சின்மயானந்த வடிவே
வந்தடியார்க் கருள் வழங்கு காங்கேயனே வரைபக எறிந்த குமரா
வானவர்கடொழ நின்ற வண்ணமயில் வாகனா
வள்ளியை திருடி நீலகந்தமலர் தணிகைமலை சார் தெய்வானை நற் காந்தா குறிஞ்சி வேந்தா
கணபதிக் கிளையவா குன்று தோறாடலிற் கருணையோட மர்ந்த குகனே
கந்துகம்பூட்டு நேர்ச் சேவலங் கொடியனே நின்கழலை யென் தலை சூட்டுவாய்
கவினாத்தியந் தளியின் வடபாலமர்ந்தருளு கந்தசாமிக் கடவுளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7)

எந்த நாளு ன்னருட் சிந்துவின் மூழ்குவேனே மையேன் செய்த பாவ
மேகு நாளுளதோ வுன்னடிப் போது நான் என்று தான் புனைவனந்தோ
சந்ததமி டர் கடற்பட்டு நானலையவும் சண்டனுக் காளாகவே
தற்காத்திடற்கு னக்கன்பு சற்றில்லையோசாமீ நீயறியாததோ
பந்தமதரிந்திடும் பகவனீயல்லையோ பராபரச் சோதி வடிவே
பண்ணவர்க்கருளு தவறுமுகத் தண்ணலே பக்தர்கட் குற்ற குருவே
கந்தவகை யைந்தினுங் கட்டுண்டு மாயாது கருணைதந் தெனையாளுவாய்
கவினாத்தியந் தளியின் வடபாலமர்ந்தருளு கந்தசாமிக் கடவுளே

8)

தாயிலாக் கன்று போனிலை குலைந்துளந் தவித்திடும் தனயன் யானும்
தாவிப்படர்ந்திடக் கொழுகொம்பில்லாத் தனிக்கொடி நிகர்த் தீண்டு நைந்து
தீயினிற் பட்டதோர் மெழுகு போலென்றுமே சிந்தை மிகவுருகியந்தோ
திகைத்து நின்றிடவு முன்னருளைக் காட்டிலாய் சிறிய னேற்குய்வுமுண்டோ
நாயினுங் கடையனாய் நானிலந்தனிலலையவோ நாயகா வெனை விதித்தனை
தேவருக்குற்ற வெவ்விடரினைப் போக்கு மார்வங்கொள்ள றுமுகத்தோய்
காயு மாருயிருக்கிரங்கி நின்றுமே கன்ம வனு போக மூட்டும்
கவினாத்தியந் தளியின் வடபாலமர்ந்தருளும் கந்தசாமிக் கடவுளே

9)


தந்தை தாய் குரு தெய்வமுனையன்றி யிந்தச்சகத்துமிசை வேறுமுண்டோ
தருதி நீ தனு கரண புவன போகங்களைச் சாருயிர் கர்மப்பேறாய்
வந்திடும் பாசமல நீக்கிடுங் கருணையின் மாயை யாவையு மந்தோ
வரவொடு போக்குறுமி யல்பல்லால் மற்றுமோர் நிலையவாமோ
சிந்தை யதழுங்கி நின்றிங்கன மரற்றிடச் சித்த நினக்குண்டு கொல்லோ
சிவசுதா வெளியனேன் செய் பாவப்பிழையதே பொறுத்துன் சீர் பாத மீந்தருள்வாய்
கந்தி மா கதலி வாய்க்காற் புளிக் கற்பகத் தரு நேர்ந்த
கவினாத்தியந் தளியின் வடபாலமர்ந்தருளு கந்தசாமிக் கடவுளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10)

சரவணத் தடாக த்தமர்ந்தாறு கார்திகைத் தாய்முலைப்
பாலருந்தித்
தனித்த வடி வேற்குலிசமாதியாம் படையினைத் தாங்கி
யச்சூரனோடு
பொருதவனை வாட்டியுன் பாதமலர் சூட்டியும் புனிதர்
சிறை மீட்டுமன்னோர்
பூங்கழற் தெய்வதக் களிறினை மணந்ததும் புணரிவாய்ச்
செந்தி வந்து
திருநிகர்ச் சுந்தரப் பிராட்டியாம் வள்ளியைத் திருவதுவை
செய்து வேடர்
சீர்க்குலம் வாழ்ந்திடச் செய்தது முனக்கியற் றிருவருட்
பெருமையன்றோ
கரியமால் பிரமனுந் தேடொணாச் சோதியாங்
கண்ணுதல் தந்ததற்பரா
கவினாத்தியந் தளியின் வடபாலமர்ந்தருளு
கந்தசாமிக் கடவுளே



ஆத்தியடி விநாயகரைச் சித்திரத்தேரில் பவனி வரச்செய்தும் முருகனைச் தனிச் சந்நதியில் எழுந்தருள வைத்தும் அருள் பெற்ற தம்பதிகள்
வேலுப்பிள்ளை அன்னைபூரணியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியக் கடவுள் பதிக விளக்கமும் முருக வழிபாடும்

சுப்ரமணியன் என்றால் சு + பிரம்ம + அணியன் என்று மூன்றாகப் பிரிக்கலாம். சு என்றால் விசேடம், பிரம்ம என்றால் பிரம்மம், அணியன் என்றால் வந்தவன் என்று பொருள்படும். தமிழில் கடவுள் என்று நாம் சொல்வதை வேத வழக்கில் பிரம்மம் என்று சொல்வார்கள். விசேடப் பிரமமாக வந்தவன் என்பது இந்த சுப்ரமணியனுக்குப் பொருளாகிறது. வடமொழியில் சுப்ரமணியன் என்ற பெயரும், தமிழில் முருகன் என்ற பெயரும் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன. இந்தப் பாடலாசிரியர் முருகனின் வடிவழகைக் கூறுகிறார். அடியவருக்கு அருளும் குணத்தைப் புகழ்கிறார். பிரணவப் பொருளை ஈசனுக்குரைத்த பெருமையைக் கூறுகிறார். சரவணத்தமர்ந்து ஆறு கார்த்திகைத் தாய்மார் மடியில் தவழ்ந்த கருணையைக் கூறுகிறார். நக்கீரன் பாடிய ஆற்றுப்படையைக் கேட்டு அவருக்கு அருள் செய்த கதையைக் கூறுகிறார். மன்மதனை கண்களால் எரித்த கதை, வேற்படையின் பெருமையென்பவற்றைக் கூறியவர் ஆத்திமரத்துக்கு வடபாலமர்ந்திருக்கும் கந்தசாமியே எனக்கும் அருள் என மனமுருகி வேண்டுகிறார்.

திரும்பத் திரும்ப பல பேர்களால் துதித்து வேண்டுகிறார். கருணையுள்ளவன் இறைவன் அருள் செய்வான் என நம்பிய போதும் மனித மனம் சந்தேகம் கொள்கிறது. குறிப்பிட்ட இடத்திற்கு பயணம் செய்வதற்கு புகையிரத நிலையம் செல்கிறோம். அதற்குரிய வண்டியில் ஏறுகிறோம். வண்டியில் ஏறியபிறகு சந்தேகம் வந்துவிடுகிறது. இது குறிப்பிட்ட இடத்துக்கு போகும் வண்டிதானா எனப் பக்கத்திலுள்ளவரைக் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்கிறோம். இது போன்றே பக்தர்கள் திரும்பத் திரும்ப இறைவனைக் கேட்டுக்கொண்டிருப்பதும். முருக வழிபாடு எப்போது தொடங்கியது எனத் திட்டவட்டமாக கூறமுடியாத போதும் அகழ்வாராய்ச்சிகள் முலம் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் மூலம் 2500 வருடங்களுக்கு முன்னதாகவே இந்த முருக வழிபாடு இருந்ததாக அறிஞர்களின் கருத்து அமைகிறது. வடமொழியாளர்களின் வழிபாட்டு முறைக்கும், நம் பழந்தமிழர் வழிபாட்டு முறைக்கும் வேறுபாடு உண்டு என்றும் சொல்லப்படுகிறது.

எந்த வழிபாடு எப்போது தொடங்கியது என்ற விடயம் ஆராய்ச்சிக்குரியது என்ற போதும் இன்று நாம் காணும் வழிபாடு இரண்டும் இணைந்ததாகவே உள்ளது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்கள் இந்த இரண்டு மரபுகளையும் மனதில் கொண்டு சைவசித்தாந்த கருத்துக்களையும் இணைத்து கந்தபுராணம் என்ற நூலை எமக்கு தந்துள்ளார்.

கந்தபுராணத்தில் அவர் கூறிய கருத்தை நோக்கும் போது சிவனும் ஆறுமுகனும் ஒருவரே என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது. தீய சக்திகளை ஒடுக்கித் தேவர்களுக்கு அருள் புரிய எடுத்த மூர்த்தம் என்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து கொள்கிறோம். புராணம் கூறும் உற்பவத்தை உற்று நோக்கின் சிவபெருமானின் ஆறு திருமுகங்களில் இருந்தும் ஆறு தீப்பொறிகள் தோன்றி கங்கை ஆற்றினால் எடுத்துச் செல்லப்பட்டு சரவணத்தமர்கிறது.

சரவணத்தில் ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களுமாக ஒரு குழந்தை அவதரிக்கிறது. இந்த உற்பவ காலம் தான் இந்த ஆறு நாட்கள். அதை நாம் கந்தஷஷ்டி விரதமாக அனுட்டிக்கிறோம். பின்னர் சரவணத்தில் தோன்றிய குழந்தை ஆறு கார்த்திகைப் பெண்களின் மடியில் அமரவேண்டி ஆறு குழந்தைகளாகி வளர்கிறது. கௌரி இந்தக் குழந்தைகள் ஆறையும் கட்டியணைக்கும் போது ஆறு குழந்தைகள் மீண்டும் ஒன்றாகின்றன. சரவணத்தில் உதித்த காரணத்தால் சரவணபவன் என்றும் கட்டியணைத்து ஒன்றாக்கியதால் கந்தன் என்றும் பெயர் பெறுகிறான்.

சூரபத்மனின் தீய குணத்தை அழித்து சேவலும் மயிலுமாக ஆட்கொண்டருளிய நிகழ்வை சூரசங்காரமாக கந்தஷஷ்டி இறுதி நாட்களில் கொண்டாடுகிறோம். இம்முறை தாயகம் சென்றிருந்த போது நல்லூர் முருகன் கோயிலில் இந்நிகழ்வைக் காணும் வாய்ப்பைப் பெற்றேன். பிற்பகல் மூன்று மணிக்கெல்லாம் கோயிலுக்குள் சென்று விட்டேன். அபிடேகம் நடைபெற்று உள் சுற்றுப் பூஜைகள் முடியும் வரை மக்கள் அதிகம் வரவில்லை. அமைதியாகப் பூஜைகளைப் பார்க்க முடிந்தது. அதன் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் தொகை அதிகரிக்கவும் நெரிசலில் வெளியே வரக் கஷ்டமாய் இருக்கும் என்பதால் வெளி வாசலில் வந்து நின்றேன். மக்கள் கூட்டம் வரத் தொடங்கியது, வந்து கொண்டே இருந்தது. வந்தவர்கள் உள்ளே சென்று கொண்டிருந்ததால் வெளியே நிற்பது சுகமாயிருந்தது. நேரம் செல்லச் செல்ல வெளியே நிற்பவர்கள் தொகையும் கூடிக்கொண்டே வந்தது. சுவாமி உள்வீதி வலம் வந்த பின் வெளி வாசலுக்கு வரும் போது உள்ளேயிருந்தவர்கள் எல்லோரும் வெளியே வரவும் மக்கள் கூட்டம் கடல் அலையென நிரம்பியது.

புலம்பெயர்ந்த மக்கள் பெரும்பாலானோர் வெளிநாடு சென்று விட்ட பிறகு இன்னும் இத்தனை மக்கள் குடா நாட்டில் வாழ்கிறார்கள் என அதிசயிக்க வைத்தது. திரண்ட மக்கள் கூட்டத்தின் மத்தியில் முருகப் பெருமான் ஆடியசைந்து வந்து வெளிமண்டபத்தில் நின்று கொள்கிறான். நல்லைக் கந்தனின் உருவம் ஒரு தனியழகு. அவனுடைய அலங்காரம் இன்னொரு வித அழகு. அலங்காரக் கந்தன் என்று கூறப்படும் கந்தனின் அழகை விபரிக்க வார்த்தைகள் இல்லை எனலாம்.

நாரதர் உடையணிந்து ஒருவர் வருகிறார். புராணக் கதைகளின் படி நாரதர் முதலில் வந்து உளவு சொல்பவர். இவருக்குப் பின் வீரவாகு தேவர் கம்பீரமாக உடையணிந்து போருக்குரிய ஆயுதம் தரித்து வருகிறார். இதன்பின்னர் மற்ற எட்டு வீரர்களும் (நவவீரர்கள்) வந்து இணைந்து ஒன்பதாகின்றனர். வாசலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றபடியே தாரகனை சங்கரித்து விடுகிறார். அடுத்து சிங்க முகனின் சங்காரம். சுவாமி வீதி வலம் வரும் போது வழியிலே இந் நிகழ்வு இடம்பெறும். ஒவ்வொரு முறை வெட்டும் போதும் சிங்கமுகனின் தலை முளைக்கும். காட்டாற்று வெள்ளம் போல் பெருகி வந்த மக்கள் கூட்டத்தில் வீதியில் சுவாமியைப் பின்தொடர்வது சாத்தியமாயிருக்கவில்லை. வீதி வலம் வந்து ஈசான மூலையில் சூரசங்காரம் நடைபெறும் என்பதால் அங்கே நின்றேன்.

வெகு உக்கிரமாக போர் நடைபெற்றது. பல விதமான கோலங்களில் இருளாக, பறவையாக, முடிவில் மாமரமாகி வந்த போது முருகனின் வேல் சென்று மாவறுப்பதுமான காட்சிகள் நாடகம் போன்று நடைபெற்றுக் கண்ணுக்கும் கருத்துக்கும் பெரு விருந்தாக அமைந்தது. இதையே சங்கரன்பிள்ளை சட்டியில் மாவறுத்தார் என்று வேடிக்கையாகக் கூறுவர்.

நல்லூர் கோயிலில் முருகவழிபாடு பற்றி பல சர்ச்சைகள் நடைபெற்றதுண்டு. என்றபோதும் முருகனின் அருளுக்கும், அடியவர்களின் பக்திக்கும் இன்றுவரை இடையூறின்றி கோயில் நடைபெற்று வருகிறது. அந்நாளிலிருந்து ஆகமவழிபாட்டு முறையிலும், அன்பு நெறி வழியிலும் கோயில் வளர்ந்து வருவது கண்கூடு. மட்டக்களப்பு மக்கள் பழந்தமிழர் வழக்கிலே உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது என்ற வாக்குப்படி மொழி, இனம், சாதி இவற்றைக் கடந்து அன்பு நெறிப்பூசைக்கு முதலிடம் கொடுக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

பாணமையிலிருந்து கூமுணை செல்லும் காட்டுப்பாதையோரமாக கடற்கரையில் அமைந்த உகந்த மலை முருகன் கோயிலில் வள்ளி நாச்சியார் மட்டுமே கோயில் கொண்டுள்ளார். மண்டூர் முருகன் கோயிலிலும் தெய்வானைக்கு கோயில் இருப்பினும் கதிர்காமத்தைப் போன்று திருவிழாக் காலங்களில் வள்ளிநாயகியின் கோயிலில் மட்டுமே ஊர்வலம் தங்கிச் செல்லும். மட்டக்களப்புப் பிரதேசக் கோயில்களில் இப்படி சில வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம்.உகந்தை மலை முருகன் கோயில் கருவறையில் பிள்ளையாரும், தங்க வேலும் காணப்படும். மயிலுக்கு பதில் இங்கே மூஷிகமே காணப்படுகிறது. மாமாங்கப் பிள்ளையார் கோயில் கருவறையில் சுயமாக தோன்றிய லிங்கம் உள்ளது. இந்தச் சுயம்பு லிங்கத்துக்கு விநாயகர் அங்கி அணிவிக்கப்பட்டுள்ளது. ஆண்களும் பெண்களும் இறை உருவங்களைத் தொட்டு வணங்கலாம் என்ற வழக்கமும் சில கோயில்களில் உள்ளது.

வெருகல் என்னும் இடத்தில் உள்ள முருகன் கோயிலில் ஆதியிலே சுயம்புவாக தோன்றிய ஒரு வேல் மட்டுமே வழிபாட்டுக்குரியதாய் இருந்தது. இது ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் என்று அழைக்கப்பட்டு வந்தது. பின்னாளில் ஆகம முறையில் கோயில் அமைக்கும் போது வேலைக் கதிர்காம சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலிலும் முருகனைச் சித்திரவேலாயுத சுவாமி கோயிலிலும் எழுந்தருளப் பண்ணினர். சித்திர வேலாயுத சுவாமி கோயில் கதிர்காமம் போன்றே மௌன பூசை நடைபெறுகிறது. ஆறு, மலை, சோலைகள் என யாவும் கதிர்காமச் சூழலை ஒத்துக் காணப்படுவதால் சின்னக் கதிர்காமம் என்றே இதனை அழைக்கின்றனர்.

மாவிட்ட புரம் கந்தசாமி கோயிலிலும் ஆதியில் மாமரம் ஒன்றின் கீழ் வேல் ஒன்றினை வைத்து வழிபட்டுள்ளனர். இப்பகுதி மக்கள் தாங்கள் விளைவிக்கும் பயிர்கள் செழிப்பாக வளர்ந்து தங்கள் வாழ்வு வளம் பெற அன்பு வழிபாட்டு முறைப்படி இறைவனைத் தாமே நீராட்டி, பூவிட்டுச் செந்தமிழால் இறைவனைப் பாடி வழிபட்டு வந்துள்ளனர். வேலே உன்னைக் கந்தவேள் எனக் கண்டு கவலை தீர்ந்தோம் என்று மக்கள் வழிபட்டு வந்தனர். வேல் வழிபாடு நடைபெற்று வந்த கோயில் கடவைப்பிரதேசத்தின் செழிப்பைக் கண்ட அரச குடும்பத்தினர் அங்கே முருகனுக்கு ஒரு அழகிய கோயில் அமைக்க எண்ணம் கொண்டனர். பழைய வேல் வழிபாட்டு முறை மாறி ஆகம வழியில் அழகான உயர் சிற்ப வேலைப்பாடுகளுடனான கோயிலாக மாவிட்ட புரத்தில் கோயில் உருவானது. வட பகுதியில் செல்வச்சந்நிதி மட்டுமே பழைய மரபினை மாற்றாது வழிபடும் பிரசித்தி பெற்ற கோயிலாக உள்ளது.

முருகப் பெருமான் அவதாரம் செய்து தீய சக்திகளை ஒடுக்கி ஆட்கொண்ட பிறகு தங்களுக்கு விடுதலை அளித்த நன்றிக் கடனுக்குத் தேவர்கள் ஒன்றுகூடி இந்திரன் வளர்த்த தெய்வானையை திருமணம் செய்து வைக்கிறார்கள். இந் நிகழ்வு திருக்கல்யாணமாக கோயில்களில் நடைபெறுவது உண்டு.

டென்மார்க் நாட்டில் ஓபன்றோ நகரில் (ஜெர்மன் நாட்டின் எல்லைக் கருகில்) ஈழத்தைச் சேர்ந்த சிவசேகரசர்மா அவர்கள் ஒரு நாகபூசணியம்மன் கோயிலை உருவாக்கியுள்ளார். இம்முறை அந்த ஆலயத்தில் திருக்கல்யாண வைபவத்தைப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றேன். நம்முடைய கலாச்சாரத்துக்கு புறம்பான ஒரு நாட்டில் குளிர் மிகுந்த மாதத்தில் அடியார்கள் கந்தஷஷ்டி விரதம் அனுஷ்டிப்பதும் திரளாக கோயிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்வதும், மாலை கட்டுதல் போன்ற எல்லா விதமான சரியைத் தொண்டுகள் ஈடுபடுவதும் ஒரு யுகப்புரட்சி எனலாம்.

வேதகாலம் எனப்படும் ஆதிகாலம் கி.மு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் என்று அறிஞர்கள் கூற்றாக உள்ளது. விஞ்ஞானத் துறையில் முன்னேறிவிட்டோம் கடவுள் எதற்கு என்று பகுத்தறிவாளர்கள் முழங்கிய போதும், அணுவாயுதம், ஆக்கிரமிப்பு, கணனி என ஆரவாரங்கள் எல்லாம் இருந்த போதும் மனிதனிடமுள்ள ஆன்மீக நம்பிக்கை அழிந்து போய் விடவில்லை என்பதை நாடுகள் கடந்தும் வழிபாடுகள் இந்த வகையில் நடைபெறுவது எடுத்துக்காட்டுகிறது. சமயமும் சமய நம்பிக்கைகளும் வாழும் என நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆன்மீகப் பயணத்தின் நினைவுப் பகிர்வு நூல் வெளியீட்டு விழா



ஆன்மீகப் பயணத்தின் நினைவுப் பகிர்வு நூல் வெளியீட்டு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானம்பா அம்மையாருடன் நூலாசிரியர்



சகஸ்ர நாமம் பொறித்த காசு மாலையுடன்
ராஜராஜேஸ்வரி அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்தியடிப்பிள்ளையார்கோயில்மேற்குவாசல்





திருமதிஇராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின்
ஆத்தியடி வீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆன்மீகப் பயணத்தின் நினைவுப் பகிர்வு நூல் வெளியீட்டு விழா



நூலாசிரியரின் 75வது பிறந்தநாள்விழா (டென்மார்க்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடாவில் ஆத்தியடி



ஆத்தியடி மகளிர் (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடாவில் ஆத்தியடி



கனடாவில் ஆத்தியடி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஹரன் ஐயாவுடன் நூலாசிரியர்



தேரில் ராஜராஜேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆத்தியடி பிள்ளையார் சின்னத்தேர்



ஆத்தியடி தேர்



ஆத்தியடி பிள்ளையார் தேரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய ஆத்தியடி



இன்றைய ஆத்தியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவுஸ்ரேலியாவில் நம்மவர் திருமணம்



ஜேர்மனியில் ஆத்தியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





டென்மார்க் முருகன் கோயில் (Stenlille) ஓவியங்களும்
மற்றும்
உற்சக மூர்த்திகள் வள்ளி தெய்வானையும் முருகனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபதாம் நூற்றாண்டில் ஆத்தியடி

ஆத்திமரத்தடியில் ஒரு சின்னக்காணியில் இருந்த விநாயகரை வெள்ளம் ஓடும் வாய்க்கால் கரையில் (கிட்டத்தட்ட 40 பரப்பு) பரந்த நிலப்பரப்பில் எழுந்தருளப் பண்ணியதான நிகழ்வு இடம் பெற்றது. இது வேலாயுதவாத்தியாரின் காலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிக்கால் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வு. முதலில் அன்புநெறிப் பூஜையாக அமைந்தது. இதன் பின்னர் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ச.சபாபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் தர்மபரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டு கல்லால் கோயில் அமைக்கும் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. 1913ம் ஆண்டில் வேலுப்பிள்ளை வைத்தியரின் முகாமைத்துவத்தில் கல்லால் கோயில் எழுப்பப்பட்டு குடமுழுக்கு இடம்பெற்றது. குடமுழுக்குக்கு முன்னும், பின்னுமாக 40 ஆண்டுகள் அவரே முகாமையாளராகத் தொண்டு செய்துள்ளார். இந்தக் காலப் பகுதியில் ஆத்தியடியைச் சேர்ந்த பலர் அரசாங்க சேவையிலும், ஆசிரிய சேவையிலும் சேர்ந்து வெளியூர்களில் பரந்துபட்டு வாழத் தொடங்கி விட்டனர்.

கலட்டி, தம்பசெட்டி, தும்பளை ஆகிய இடத்து மக்களுடன் உறவில் இணையத் தொடங்கினர். ஆத்தியடிப் பெண்களோடு சம்பந்தம் கொள்பவர்கள் ஆத்தியடி வாசியாகி விடுவர். கலட்டி, தும்பளையில் பெண் எடுத்தால் அவர்கள் அவ்விடத்து வாசியாகி விடுவர். அந் நாளில் பெண்கள் வேலை செய்து பொருள் தேடாமல் வீட்டிலேயே குடும்பத் தலைவியாகக் கடமையாற்றுவதால் பெண்கள் பாதுகாப்புக் கருதித் தாய் தந்தையர் பெண்களுக்குக் காணி, வீடு, நகையெனத் தகுதிக்கேற்பக் கொடுப்பது வழக்கமாயிருந்தது. பின்னாளில் இதுவே சீதனம் என்று ஒரு வேண்டாத வழக்கமாக மாறியது. ஆத்தியடியில் மக்கள் தொகை வளர்ச்சி பெற வீடுகளும் தேவைப்பட்டன. பனங்காணிகள் எல்லாம் பெரும்பாலும் வீடாகின. கொஞ்சம் வீடுகளும் பனங்கூடலுமாக இருந்த இடம் மக்கள் செறிந்து வாழும் குடியிருப்பாக மாறியது. பின்னாளில் உணவுப் பழக்கத்தில் நெல் அரிசிப்பாவனை அதிகமாகியதால் பனம் பண்டங்கள் ருசிக்க மட்டும் உண்ணும் உணவாக மாறின.

வேலுப்பிள்ளை வைத்தியர் தன்னுடைய இறுதி நாளில் கோயில் முகாமைத்துவ பொறுப்பை தன்னுடைய தங்கை மகள் சிவகாம சுந்தரியின் கணவர் ச. சோ சரவணமுத்து அவர்களிடம் ஒப்படைத்து இறைவனடி சேர்ந்தார். கோயில் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சரவணமுத்து அவர்கள் கோயில் உடனடியாகப் புனர்நிர்மானம் செய்ய வேண்டிய தேவையை உணர்ந்து தர்ம பரிபாலன சபையை உடனே கூட்டினார். சபையினர் நிர்வாகத்திற்கு என நிர்வாக சபை ஒன்றினை தெரிவு செய்து திருப்பணி வேலையை ஆரம்பிக்க அவர்களிடம் ஒப்படைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் திருப்பணி வேலைகளுக்கும் முகாமைத்துவத்துக்கும் சரவணமுத்து நியமிக்கப்பட்டார். அவருடைய சகலன் மார்களான நா.வேலுப்பிள்ளை, ச.சிவகுருநாதர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இரண்டாவது குடமுழுக்கு 1944ம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றது. இந்தக் காலகட்டத்திலேயே கோயில் சுற்று மண்டபங்கள் அமைந்து வெளிப்புறச் சுற்றுமதில்கள் போடப்பட்டு கோயில் கொஞ்சம் முன்னேற்றம் கண்டது. அதன் பின்னர் அலங்கார உற்சவமாக அது நாள் வரை நடைபெற்று வந்த உற்சவம் கொடிமரம் நாட்டப் பெற்று கொடியேற்றும் மகா உற்சவமாக நடைபெறத் தொடங்கியது.

நவராத்திரி, சிவராத்திரி, கந்தர்ஷஷ்டி, மகோற்சவம் போன்ற பல விழாக்களுடன் பிள்ளையார் கோயில் சிறப்புற நடை பெற்று வந்தது. ஆத்தியடியில் இந்நேரம் வாழ்ந்தவர்களின் இளைய சந்ததிகள் சட்ட வல்லுனர்களாக, பொறி இயலாளர்களாக, மருத்துவர்களாக எல்லாத்துறையிலும் உயர்ந்து நின்றனர். இங்கு வாழ்ந்தவர்களின் ஏகோபித்த ஆதரவுடன் 1967ம் ஆண்டு சரவணமுத்து சோமசுந்தரம் அவர்களால் மூன்றாவது முடமுழுக்கும், ச.சிவசுப்ரமணியம் அவர்களால் நான்காவது குடமுழுக்கு 1983லும் இடம் பெற்றது.

இந்தக் கால கட்டத்தில் விநாயகப் பெருமான் சித்திரத் தேரில் பவனிவரத் தொடங்கிவிட்டார். சித்திரத் தேர் பற்றியும் ஒரு சுவையான சிறுகதையுண்டு. விநாயகப் பெருமானுக்குச் சித்திரத் தேரில் பவனிவரும் ஆசை வந்ததன் காரணமாக அவ்வூர் அன்பர் பாலசுப்ரமணியம் அவர்களுடைய மனதில் இந்த ஆசையை உண்டாக்கினார். எல்லாக் கோயில்களிலும் நிதி சேகரித்துச் சித்திரத் தேர் செய்கிறார்களே நாமும் ஏன் செய்யக்கூடாது என பாலசுப்ரமணியம் எண்ணினார். தன்னுடைய அந்த விருப்பத்தை மகள் பவானியிடம் சொன்னார். நடன நிகழ்ச்சிகள் மூலம் நிதிசேகரித்து சித்திரத் தேர் அமைப்பது என இருவரும் தீர்மானித்தனர். இந்நேரம் பவானியை பேட்டி கண்ட பத்திரிகை நிருபர் ஒருவர் "வருங்காலத்தில் உங்களுக்கு ஏதாவது சாதிக்கும் எண்ணம் உண்டா" ?எனக் கேட்டபோது ஆத்தியடி விநாயகருக்கு, என்னுடைய நடன நிகழ்ச்சி மூலம் நிதி சேகரித்துச் சித்திரத்தேர் செய்ய வேண்டும் என்று ஒரு திட்டம் உண்டு எனச் சொன்னார்.

இந்தச் செய்தி காதில் விழுந்ததும் திருமதி அன்னபூரணம் அவர்களுக்கு இந்தத் தேரை தானே செய்ய வேண்டும் என ஆசை எழுந்தது. முதல் விடயமாக பெண்கள் நாட்டியம் ஆடுவது அவருக்குப் பிடிக்காத ஒன்று, அதிலும் நாட்டியம் செய்து பணம் சேகரிப்பது நினைக்க முடியாத ஒன்று.

"ஆரவாரம் ஒன்றும் வேண்டாம் என்னிடம் உள்ள காசைப் போட்டு தேர் செய்யப்போகிறேன்" என்று சித்திரத் தேர் வேலையை உடனே ஆரம்பித்து விட்டார். வைத்தியர் வேலுப்பிள்ளையின் மூத்த மகளான அன்னபூரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகவே இறைபக்தி கொண்டவர். நினைத்த காரியத்தை முடிக்கும் ஆற்றலும் அவரிடம் இருந்தது. இவரும் இவர் கணவர் வேலுப்பிள்ளையும் இருவேறு துருவங்கள். ஒரு காரியத்தைத் தீர ஆலோசித்து ஆற அமர காரியங்களைச் செய்பவர் வேலுப்பிள்ளை. நினைத்ததை உடனே நடாத்தி முடிக்கும் குணம் அன்ன பூரணத்துடையது. இதன் காரணமாக ஆரம்ப காலங்களில் இருவருக்கும் மனசு ஒத்துப்போகாது பிரிந்தும் இருந்ததுண்டு. இந்நாளில் ஒத்துவரவில்லை என்றால் விவாகரத்துப் பெற்று இருவரும் பிரிந்து விடுவார்கள். அந்நாளில் அந்த வழக்கமில்லை. மகனின் வருங்காலத்தை உத்தேசித்து பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்தனர்.

வேலுப்பிள்ளை காட்டிலாகாவில் றேஞ்சராக பதவியில் சேர்ந்து உயர் அதிகாரியாக பதவியேற்று ஓய்வு பெற்றவர். எந்த விடயம் ஒத்து வரவில்லை யென்றாலும் சிக்கனமான வாழ்க்கைக்கும், கடுமையான உழைப்பிற்கும் இவர்கள் மனமொத்த தம்பதிகள். இவர்கள் உழைப்பால் தரிசான நிலங்கள் எல்லாம் மாமரம், பலாமரம், கமுகு, தென்னை, வாழையென வளர்ந்து பயனை அள்ளித் தந்தன. இதனால் செல்வமும் சேர்ந்தது. ஆரம்பத்தில் எப்படி இருந்த போதும் பின்னாளில் ஒற்றுமைக்கு இலக்கணமாக வாழ்ந்தார்கள் இந்தத் தம்பதிகள். தேர் செய்வதற்க்கு பொருத்தமானவர்கள் இவர்கள் தான் எனப் பிள்ளையார் நினைத்தார் போலும். அவர்களுக்கே இந்தப் புண்ணியத்தை சேர்ப்போம் என்று இந்த அரிய பணியை அவர்களிடம் ஒப்படைத்தார். பெருமானின் அருளால் சித்திரத் தேர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாகவும் வளர்ந்தது. இவர்களின் மகன் பாலசுப்பிரமணியம் பவானியின் நடனத்தைப் பாடசாலைகள் பலவற்றில் நிகழ்த்தி அதில் சேகரித்த நிதியுடன் தேருக்கென தெரிந்தவர்கள் உறவினார்கள் சிலரிடம் நிதி சேகரித்துத் தேர் நிதிக்கு அளித்தார். மடிப்பிச்சை பெற்று வேண்டுதல் நிறை வேற்றுவது போல இதுவும் ஒரு வேண்டுதல் தான் என்னிடம் வசதியிருக்கிறது. நான் செய்வேன் என்று செய்வதை விட என்னிடம் வசதியில்லை மற்றவர்களிடம் வேண்டியாவது இறைவனுக்கு செய்ய வேண்டும் என்று செய்யும் போது பலன் அதிகம் என்பார்கள்.

நாம் மற்றவர்களிடம் இரக்கும் போது தாழ்ந்து போகின்றோம். நம்முடைய அகம்பாவம் அழிந்து நாம் புனிதர்களாகிறோம் என்பது ஒன்று இறை பணியில் பங்கு கொள்வதற்கு நாம் மற்றவருக்கும் வாய்ப்பளிப்பது இன்னொன்று. இதனால் பயன் இரட்டிப்பாகின்றது தேர் வேலைகள் முடிந்து ஒரு நல்ல நாளில் வெள்ளோட்டம் விடப்பட்டது. விநாயகப் பெருமான் சித்திரத் தேரிலே பவனிவரத் தொடங்கி விட்டார்.

தொழில்நுட்பம், கல்வி வளர்ச்சி, நீதித்துறை, காவல்துறை சட்ட ஒழுங்குகள் என நாடு முன்னேற்றம் கண்டது. ஆங்கிலேயர் ஆட்சியில் இருபதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் நடுப் பகுதி வரை இவ்விதம் முன்னேறிய நாடு அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற ஆட்சி (மக்கள் பலத்தைக் கொண்டு தீர்மானிக்கும்) முறை காரணமாக அவர்கள் நாட்டை விட்டு வெளியேறிய போது பல சிக்கல்களும் உண்டாயின.

வரலாற்றுக் காலம் தொட்டு பாரம்பரிய பிரதேசங்களையும், தனித்துவமான கலை கலாச்சாரம், சமயம், மொழி முதலியவற்றைக் கொண்டு தனி அரசுளாக இருந்த இரண்டு இராச்சியங்களை தங்கள் வசதிக்காக ஒரே நிர்வாகத்தில் ஒற்றை ஆட்சியைக் கொண்டு வந்தனர். அவர்கள் மேற்கொண்ட அரசியல் நடைமுறைகளினாலும் மக்கள் வேலை வாய்ப்புக் கருதி பரந்து பட்டு வாழத் தொடங்கியமையும் காரணமாக சிறுபான்மை, பெரும்பான்மை என இரண்டு இனம் உருவாகியது.

ஆங்கிலேயர் நாட்டை விட்டுச் செல்லும் போது பெரும் பான்மையினரிடம் ஆட்சிப்பொறுப்பை விட்டுச் சென்றனர். ஒரு சாரருக்கு மட்டுமே ஆளும் உரிமை யை நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரம் வழி வகுத்தது. கேட்கும் உரிமை இழந்து, பயமின்றி வாழும் உரிமையும் இழக்க நேர்ந்ததால் சிறுபான்மையாக்கபட்ட இனம் நாட்டை விட்டு வெளியேறும் நிலைமை ஏற்பட்டது. 83இல் நாலாவது குடமுழுக்குக்குப் பின் பெரும்பாலானவர்கள் புலம் பெயர்ந்து சென்றனர். உலகின் மூலை முடுக்கு எல்லாம் புலம் பெயர நேரிட்டது.

ஆத்தியடி கிராமமும் இதற்கு விதி விலக்காக அமையவில்லை. பெரும்பலோர் புலம் பெயர்ந்து சென்ற போதும் கிராமம் வெறிச்சோடிப் போகவில்லை. அதி உயர் பாதுகாப்பு வலயமாக கணிக்கப்பட்டு ராணுவத்தின் சொந்தமான இடங்களில் வாழ்ந்த மக்கள் ஆத்தியடியில் குடியேறினர். இடம் பெயர்ந்து வந்தவர்களும் விநாயகப் பெருமானை தங்கள் காவல் தெய்வமாக வழிபடத் தொடங்கினர். நாட்டின் மிக மிக நெருக்கடியான நாட்களில் எல்லாம் விநாயகப் பெருமான் தங்களைப் பாதுகாக்கிறார் என்று எண்ணினர். அவர்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. மிகவும் அண்மையில் ராணுவ முகாம் அமைந்திருந்த போதும் ஆத்தியடியில் வாழ்ந்தவர்கள் பாதிப்பில்லாமல் வாழ்ந்தார்கள்.

இதனால் நெருக்கடி வேளையிலும் விநாயகர் கோயிலுக்கு க. சண்முகநாதன் தலைமையில் குட முழுக்கு தடையில்லாமல் நிறைவேறியது. ஆதியில் பிள்ளையார் கோயிலை சுற்றி கொஞ்சம் குடும்பங்களே வாழ்ந்தன. இன்று பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் எனப் பெருகிய வாரிசுகள் எல்லாம் வாழ்வதற்கு குறைந்தது நானூறு வீடுகளாவது தேவைப்படும். நகரத்து வீடுகள் போல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்ட வேண்டி ஏற்படும் இதனால் ஆத்தியடிப் பிள்ளையார் எல்லோரையும் புலம் பெயர வைத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியோடு அவர்களை வாழ வழி வகுத்து அவர்கள் மூலம் தான் பெரிய கோயிலில் குடிகொள்ள விரும்பினார் போலும்.ஆத்தியடி மண்ணின் வாரிசுகள் அவர் விருப்பத்தை தவறாது நிறைவேற்றி வைத்தனர் என்றால் மிகையில்லை. ஆத்தியடி மண்ணில் பிள்ளையார் கோயிலைச் சுற்றி வாழ்ந்தவர்கள் எல்லோருக்கும் கோயில் சமய வழிபாட்டு இடமாக மட்டுமில்லாது சமுதாய முன்னேற்ற நிலையமாகவும் விளங்கியதெனலாம். நம்மவர்கள் புலம் பெயர்ந்து குடியேறிய நாடுகளில் எல்லாவற்றையும் விட கனடாவில் அதிகமானோர் வசிக்கின்றனர். ஒவ்வொரு ஊரைச் சேர்ந்தவர்களும் கோடைக்காலத்தில் தங்கள் ஊரவர்களுடன் ஒன்று கூடுவது வழக்கம். ஒன்று சேர்ந்து சுற்றுலா செல்வது, விளையாட்டுப் போட்டி, விருந்துணவு என நிகழ்வுகளில் ஒன்று கூடுவதும் வழக்கம் வெளிநாடுகளில் இருந்து தங்கள் ஊரவர்கள் வரும் போதும் ஒன்று கூடி வரவேற்பதுமுண்டு.

இப்படி ஓர் ஒன்று கூடலில் நானும் கலந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றேன். அந்த நாள் ஞாபகம் வந்ததே அன்று போல் இல்லையே இன்று என என்னுள் ஆத்தியடியில் வாழ்ந்த காலத்து நினைவுகள் எழுந்தன. வாடைக் காற்றுக் காலத்தில் மாலை நேரமானதும் சிறுவர்கள் தங்கள் பட்டங்களுடன் ஒன்று கூடி வந்து விளையாடுவார்கள். என்னுடையது பெரிது, என்னுடைய விண் சத்தம் கூடியது. எனப் போட்டி போட்டுக்கொண்டு பட்டம் ஏற்றுவது ஒரு கலகலப்பான நிகழ்வு.

அபூர்வமாக சில வேளைகளில் பத்துத் தலை ராவணன் கொடி போன்று பெரிய பட்டங்கள் அயல் கிராமத்தில் உள்ளவர்கள் கொண்டுவந்து ஆத்தியடி வெட்டையில் ஏற்றுவதுண்டு. பல உருவங்களில், பல வர்ணங்களில் பட்டங்கள் வானத்தில் பறப்பதைக் காணலாம். பட்டம் ஏற்றாத நாட்களில் சிறுவர்கள், பெரியவர்கள் என வேறு வேறு விளையாட்டில் ஈடுபட்டிருப்பார்கள். கோயில் மண்டபத்திலிருந்து அரட்டையடிக்கவும் ஒரு கூட்டம் வரும்.


கிறிஸ்மஸ், ஈஸ்ரர் போன்ற பண்டிகைக்கு நீண்ட லீவு கிடைக்கும். அந் நாளில் வெளியூரில் வேலை செய்பவர்களால் ஊர் நிரம்பியிருக்கும். எங்கள் நெருங்கிய உறவினரும் ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு மிக அருகாமையில் வாழ்ந்தவருமான திருமதி சந்திரசேகரம் அவர்களைக் கனடாவில் சந்தித்தேன். இவர் ஊக்கம், பிரயாசை, விடா முயற்சி இவைகளுக்கு உதாரணமாக வாழ்ந்தவர் என்பதுடன் ஆத்தியடி பிள்ளையாரிடம் அளவற்ற அன்புபூண்டவர். இவருடைய கணவரும் அப்படியே. அரசாங்க சேவையில் இருந்த போதும் பிள்ளையார் கதை, புராணபடனம் இவைகளை விரத நியமங்களுடன் படித்து வந்தவர். நீண்ட பல வருடங்கள் இத் தொண்டை செய்ததாகவும், கோயில் நிர்வாகத்திலும் முகாமைத்துவத்திலும் பங்கு கொண்டவர் என்றும் திருமதி சந்திரசேகரம் சொன்னார். மேலும் குருவி கூடு கூடுகட்டியது போல் சிறுகச் சிறுகக் கட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டையும், ஆத்தியடிப் பிள்ளையாரையும் விட்டு வந்துவிட்டோமே என்ற கவலையைத் தவிர தனக்கு வேறு கவலை இல்லையென அவர் சொன்னதைக் கேட்ட போது மனதைத் தொடுவதாயிருந்தது. ஆத்தியடிப் பிள்ளையாருடனும் அவர் வாழ்ந்த வீட்டுடனும் அவருக்கு இருந்த ஆத்மார்த்தமான தொடர்பை எண்ணி மனம் நெகிழ்ந்தேன்.

இவருடைய இளைய சகோதரர் ராஜரட்னம் மிகவும் தளர்ந்த நிலையில் காணப்பட்ட போதும் மிகவும் தெளிவாகப் பழைய விடயங்களை நினைவு கூர்ந்தார். லிகிதராக அரசாங்க சேவையில் சேர்ந்து விடா முயற்சியினால் கணக்காளராக பதவியுயர்வு பெற்று ஓய்வுபெற்றவர். பதவி கிடைத்த சான்றிதழ்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதாகப் பெருமையுடன் காட்டினார். இவர்களின் மூத்த சகோதரர் குமாரவேலு அவர்கள் மெல்போணில் எங்கள் வீட்டுக்கு அருகாமையில் வசித்தவர். சில வருடங்களுக்கு முன் காலமான இவர் ஒரு சிறந்த தமிழ் அபிமானியும், சமூக சேவையாளருமாவார். யாருக்கு யார் என்ன உறவு எனப் பிரித்துச் சொல்ல முடியாதபடி ஒரே மாவில் பிழிந்த இடியப்பம் போன்றவர்கள். ஆத்தியடி மக்கள் எல்லோரும் ஒரே வேரில் வந்தவர்கள் எனலாம்.



இளையர் கல்வி தேர்ச்சி சங்க உறுப்பினரும் ஆசிரியர் நடன சபாபதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்தியடி நினைவுக்குரிய சிலர்

ஆத்தியடியின் நினைவுக்குறிய சிலரில் வேலாயுத வாத்தியார் முதன்மையானவர். இவர் மறைந்திருந்த கோயிலை வெளிக்கொணர்ந்தவராகின்றார். இவருடைய சந்ததியில் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் , கொள்ளுப்பேரன், பேத்திகள் என ஐந்து தலைமுறையினர். இவர்களில் பெரும்பாலானோர் , பொறியியலாளர்கள், மருத்துவர்கள், சட்ட வல்லுனர்கள், நில அளவையாளரெனத் தாயகத்தில் வாழ்ந்திருந்து புலம் பெயர்ந்தவர்கள் போக விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரே இன்று தாயகத்தில் வாழ்கின்றார்கள். ஆகம முறையில் கல்லால் கோயில் அமைத்து குட முழுக்குக் கண்டவராகவும், நீண்ட நாள் கோயில் முகாமைத்துவத்தில் இருந்தவராகவும் நினைவுக்குரியவர் வேலுப்பிள்ளை வைத்தியர் அவர்கள். இவர் தம் சந்ததியிலும் ஒரு சிலர் தான் இன்று ஆத்தியடியில் வாழ்கின்றார்கள். இரண்டாவது குடமுழுக்குக் கண்ட சரவணமுத்து அவர்களும் ஆத்தியடி சமூகத்தில் ஒரு தனியிடம் வகித்த நினைவுக்குரியவர் ஆகின்றார். இவர் குடும்பத்தில் இன்று ஆத்தியடியில் ஒருவரும் இல்லை.

மூன்றாவது குடமுழுக்கு கண்ட சரவணமுத்துவின் மகன் சோமசுந்தரமும் நினைவுக்குரிய ஒருவராக வாழ்ந்துள்ளார். நாலாவது குடமுழுக்கு கண்ட ச. சிவசுப்பிரமணியமும் அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர். சேவையில் இருந்த போதும், அதன் பின்னரும் கோயில் நிர்வாகத்திலும், தொண்டிலும் ஈடுபட்டிருந்தவர் என்பதுடன் புராண படனம், பிள்ளையார் கதை இவற்றிலும் ஈடுபாடுடையவராயிருந்திருக்கிறார். இவர் குடும்பத்தவர் சிலர் இன்னும் ஆத்தியடியில் வாழ்கின்றார்கள்.

ஐந்தாவது குடமுழுக்குக் கண்டவரும் வேலுப்பிள்ளை வைத்தியருக்கு பிறகு நீண்ட நாள் கோயில் முகாமைத்துவத் தொண்டு புரிந்தவருமான க. சண்முகநாதன் நினைவுக்குரியவர் ஆகின்றார். இவர் தந்தையார் ச. கணபதிப்பிள்ளையவர்களும் கோயில் தொண்டில் ஈடுபட்டிருந்தவர் என்பதுடன் தான் பார்த்து வந்த ஆசிரியத் தொழிலுடன் விஷக்கடி மருந்துவத்தைப் பகுதி நேர சேவையாகச் செய்து வந்தவர். இது இவருக்கு தந்தை வழி வந்தது. இ வ ர் க ள் தவிர ஆத்தியடியில் வாழ்ந்திருந்து சமய வாழ்வுக்கும், கோயில் தொண்டிற்கும் உதாரணமாக வாழ்ந்த மிக முக்கியமானவர்களில் க. வேல்முருகு அவர்கள் முதலிடம் வகிக்கின்றார். இவரைப் போன்றே ச. குழந்தைவேலு அவர்களும் நினைவுக்குரியவராகின்றார். க. வேல்முருகு அவர்கள் அப்பர் காட்டிய சரியை நெறியை ஆத்தியடியில் அறிமுகப்படுத்தினவர். வீதிகளை உழவாரப் படை கொண்டு சுத்தம் செய்தல் , கோயில் மண்டபங்கள் நாள்தோறும் நீர் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவுதல், பூங்காவனத்தில் மரங்களுக்கு நீர் பாய்ச்சுதல் போன்ற தொண்டு புரிந்தவர்.

விபூதி , ருத்திராக்கம் , போன்ற சிவச்சின்னங்களையணிந்து தவறாது ஆலயதரிசனம் , புராண படனம் , திருமுறையோதல் , திருப்பணி கைங்கரியங்கள் முதலியவற்றில் ஈடுபட்டிந்ததுடன் கோயில் நிர்வாகத்துக்கு வழிகாட்டியாகவும் இருந்திருக்கின்றார். இவர் நூறாண்டுகள் சீவித்திருந்த பெருமைக்கும் உரியவர். சாமியாரென்றே எல்லோராலும் பெருமையாக அழைக்கப்பட்டவர் . இவர் குடும்பத்தில் ஒரு சிலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ச. குழந்தைவேலு அவர்கள் கோயில் நிர்வாகத்தில் மட்டும் அல்லாது , ஆத்தியடி சமூகத்தில் நடக்கும் வைதிகச் சடங்குகள் எல்லாவற்றுக்கும் (திருமணம், அந்திமக் கிரியைகள்) முன் நின்று வழிகாட்டி நடத்தி வைக்கும் ஒரு பெரியவர். சைவ வேளாளர் என்ற நிலைக்கமைய வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டவர். பக்தி சிரத்தையுடன் விநாயக விரதம் , புராண படனம் முதலிய விரத காலங்களில் முறைப்படி விரதம் அநுட்டித்தவர். விவசாயம் செய்து ஒய்வு எடுத்துக் கொண்ட பின்னும் வீட்டில் வீண் பொழுதைக் போக்காது பனையோலையினால் பெட்டி, பாய், கடகம், போன்ற பன்னை வேலைப் பொருட்கள் செய்து தன்னைச் சேர்ந்தவருக்கும் கொடுத்து தானும் பாவிப்பார்.

இவர் மகன் வழிப் பேரன் திரு சண்முகவடிவேலு அவர்கள் இன்று கனடா நாட்டில் உலகச் சைவப் பேரவை, முதலியவற்றில் அங்கம் வகித்து சைவ சிந்தாந்த வகுப்பு, உலக சைவ மாநாடு போன்ற விடயங்களில் ஈடுபாடு உள்ளவராக இருந்து சைவத்தின் பெருமைகளை இன்றைய சிறார்கள், இளைஞர்கள் அறிந்து கொள்ள வைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது திரு குழந்தைவேலுப் பெரியாரை நினைவூட்டுவதாக உள்ளது.

இன்றைய சிறார்கள் சிலர் அந்நியகலாச்சாரத்தில் மூழ்கிப் போனவர்களாகவும், தாய் தந்தையர் நாட்டை நினைக்கவும் விருப்பமற்றவர்களாகவும் வளர்ந்து வருவது கண் கூடு. யாழ்ப்பாணம், ஈழம், இலங்கை போன்ற தமிழ் பெயர்களே இன்றைய சிறாருக்கு தெரியக் கூடியதாக இல்லை. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து தெய்வத் தமிழையும் சைவத்தையும் வளர்த்த அறிஞர்களை எங்கே அறியப் போகிறார்கள்.

ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், மட்டுவில் க.வேற்பிள்ளை சுவாமி நாத பண்டிதர், சிவ சங்கர பண்டிதர், காசி வாசி செந்திநாத ஜயர், சி.வை தாமதோதரப்பிள்ளை, போன்ற அறிஞர்களை எல்லாம் எங்கே அறியப் போறார்கள்? இன்றைய யுவர்கள், யுவதிகளின் கருத்துப்படி ஸ்ரீலங்கா என்றாலே "கறிக்கலாச்சாரத்தவர்கள்" என்ற நினைப்பே மேலோங்கியிருப்பதைக் காணலாம். மெல்போன் நகரில் ஒரு தமிழர் விழாவுக்குச் சென்றிருந்தேன். விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பாளர்கள் நம் சிறார்க்கு நம் கலாச்சாரத்தை உணர்த்தும் முகமாகப் பொங்கல், பட்டமேற்றல், இத்துடன் நம் பாரம்பரிய விளையாட்டுக்கள், நாடகம், நடனம், பேச்சு என முழு நாள் நிகழ்வாக ஒழுங்கு செய்திருந்தார்கள். ஒரு வேடிக்கையான நிகழ்வாக இளம் சந்ததியினர் தங்கள் சந்தேகங்களை பெரியவர்களிடம் கேட்பதாகவும் பெரியவர்கள் பதில் உரைப்பதாகவும் ஒரு நிகழ்வு இடம் பெற்றது. பல தரப்பட்ட கேள்விகள் எழுப்பப்பட்டது. அதில் ஒரு சிறுமி கேட்ட கேள்வி என் மனதில் இடம் பிடித்துக் கொண்டது. எல்லா வீடுகளிலும் வேறு வேறு நாட்டு உணவுகளான பீட்சா, பாஸ்ரா, நூடில்ஸ், இவைகள் தினமும் செய்கிறார்கள். எங்கள் அம்மா மட்டும் ஏன் சோறு, பிட்டு, இடியப்பம், தோசை என ஸ்ரீலங்காச் சாப்பாடுகளே தினமும் செய்கின்றார் என்பது தான் அந்தக் கேள்வி .

அந்தத் தாய் தன்னுடைய இருபத்தைந்தாவது வயதில் அவுஸ்திரேலியா வந்திருந்தால் அத்தனை வருடங்கள் பழகிய சாப்பாடு அவர்களுக்கு உகந்ததாயிருக்கலாம். மாறுதலுக்கு மற்ற நாட்டவர் உணவையும் சில வேளைகளில் சுவைத்துப் பார்க்கலாம். மற்றவர்களுடன் உண்ணும்போது (வீட்டுக்கு வெளியே) அவர்கள் உணவுக்கு மதிப்புக் கொடுப்பது பண்பு. வீட்டிலும் அதைக் கடைப்பிடிப்பது அவசியமா? இதை அங்கே நான் சொல்லவில்லை மனதில் நினைத்துக் கொண்டேன். சொன்னால் அதிகப் பிரசங்கித் தனமாக மற்றவர்களுக்குத் தெரியலாம்.

இப்படி உணவு, உடை போன்ற விடயங்களிலே கூட மேல் நாட்டுக் கலாச்சாரத்துக்கு மதிப்பளிக்கும் இன்றைய சமுதாயச் சிறுவர்கள் எங்கே நம் பாரம்பரிய மரபு வழி அநுட்டானங்களுக்கு மதிப்பளிப்பார்கள். ஆனால் கனடாவில், அமெரிக்காவில் சண்முகவடிவேல் ஐயா, ஹரன் ஐயா போன்றவர்கள் இதற்கு முயற்சி செய்கிறார்கள். சிறிதளவு வெற்றியும் கண்டுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

சு.சிதம்பரப்பிள்ளையவர்கள் ஆசிரியராக கடமையாற்றியவர். தமிழிலும், சைவத்திலும் கடல் போன்ற ஆழமான அறிவுடையவர். இவர் சைவத்தின் மூன்று கண்களான சிவஞான போதம் முதலான சாத்திரங்கள், திருமுறை போன்ற தோத்திரங்கள், புராணங்கள் ஆகியவற்றில் நிரம்பிய புலமையுடையவர். சிவனுக்கு மூன்று கண்கள் உள்ளது, சிவனை நாம் அறிந்து கொள்வதற்கு இந்த மூன்று கண்கள் நமக்கு வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து. புராண படனத்துக்குரிய ராக ஞானமும் , உச்சரிப்புத் திறனும் இயல்பாகவே அமைந்ததுடன் பயன் சொல்லக் கூடிய ஆற்றலும் உள்ளவர். இவர் குடும்பத்தவர் சிலர் இன்னும் ஆத்தியடியில் வாழ்ந்து விநாயகரைத் தரிசிக்கும் பேறுடையவர்களாயிருக்கிறார்கள்.

நூற்றுக்கணக்கானவர்களை இந்த பட்டியலில் சேர்க்கலாம். பட்டியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டு கொண்டே போகும். எல்லோரும் மேலே சொன்ன குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அவர்கள் வழி வந்தவர்களும் தான். ஆறாவது குடமுழுக்கை நடத்தி வைத்த சதாசிவம், சபாதிப்பிள்ளை இருவரும் ஒரே சந்ததி தான். சபாதிப்பிள்ளை கனடாவில் இருந்து வந்து நிறைவேற்றி வைத்தமை நினைவுக்குறிய ஒன்று சதாசிவத்தின் தகப்பனாரும் (ச. சிவ குருநாதர்) கோயில் தொண்டில் ஈடுபட்டவர்தான் என்பது நினைவுக்குறிய ஒன்று.

ஆத்தியடிக்கு பெருமை சேர்த்து தந்தவர்கள் வரிசையில் இன்று முதலிடம் வகிப்பவர் பிரஞ்சு அரசாங்கத்தால் சேவேலியே விருது கிடைக்கப் பெற்றுக் கௌரவிக்கப்பட்ட நா. வேலுப்பிள்ளை அவர்கள். தந்தையின் பெயரேயே தன் பிள்ளைக்கு வைக்கும் வழக்கம் அந் நாளில் இருந்தது. அப்படித் தந்தையின் பெயரைத் தாங்குவதால் பெயரன் என்று ஏற்பட்டு பேரன் என்று மருவியதாக சொல்வார்கள். இவர் தந்தையின் தந்தையும் நா. வேலுப்பிள்ளைதான் இவரும் ஆத்தியடியில் மணிகாரர் பதவி வகித்தவர். தமிழரசர்கள் காலத்திலிருந்தே முதலியார், முகாந்திரம், மணியகாரர், போன்ற பதவிகள் பரம்பரை பரம்பரையாக வழங்கப்பட்டு வந்தன. அந்த விதிக்கு விலக்காக சாதாரண குடும்பத்தில் பிறந்து அரசாங்க சேவையில் விகிதராகச் சேர்ந்து தன்னுடைய உழைப்பாலும் ஊக்கத்தினாலும் மணியகாரன் பதவி வகித்து நினைவுக்குரியவராகிறார்.

இதுமட்டுமல்லாது ஆத்தியடியில் இளஞ்சிறார்களுக்கென இளஞ்சிறார்கள் இலக்கியச் சங்கம் ( Y.B.L.A ) என்ற பெயரின் நா. வேலுப்பிள்ளையவர்களைத் தலைவராக கொண்டு இவருடைய சிறிய தந்தையார் வீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இச் சங்கத்தின் ஆரம்ப காலத்தில் வே. ராமசாமி அவர்கள் போஷகராகவும் சி. கனகசபை அவர்கள் செயலாளராகவும் செயலாற்றி இச் சங்கத்தின் முன்னோடிகளாகக் கணிக்கப்படுகின்றனர். வே. ராமசாமி அவர்கள் வேலாயுத வாத்தியாரின் மகன் என்பது குறிப்பிடக் கூடிய ஒன்று. பின்னாளில் இளம் வாலிபர் இலக்கியச்சங்கம் என்ற பெயரில் இளைஞர்களை விளையாட்டுத்துறை, சமயக்கல்வி, நாடகம், சமூகசேவை போன்ற பணிகளில் பயிற்றுவிக்கும் நிலையமாகவும் இருந்திருக்கிறது.

இவர்கள் காலத்தில் பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டு பலரின் பாராட்டுக்களைப் பெற்றது வரலாறு. இவைகளில் கணபதிப்பிள்ளை அவர்களின் உடையார் மிடுக்கு என்ற நாடகம் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டதுடன், அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கி புத்தளத்திலும் மேடையேற்றப்பட்டது நினைவுக்குரிய ஒன்று. பல பெரியவர்கள் வந்து இளைஞர்களுக்கு ஊக்கமளித்து வாழ்த்திச் சென்றதும் உண்டு. இவர்களில் சுவாமி விபுலானந்தர் அவர்கள் வருகை தந்தது குறிப்பிடத்தக்க ஒன்று.


ஆத்தியடி இளைஞர்களுக்கு கல்வியில் ஊக்கமளித்து அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த சாதாரணபரீட்சை, உயர்தரப் பரீட்சை ஆகியவைகளில் சித்தி பெற வழிகாட்டியவர் திரு நடனசபாபதி அவர்கள். இவர் ஒரு தமிழ் அபிமானியும் சமூகசேவையாளருமாவார். இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ரங்கூனில் இருந்து கால் நடையாக இந்தியா வந்து சேர்ந்த குடும்பங்களில் ஆத்தியடியைச் சேர்ந்த இவர்கள் குடும்பமும் ஒன்று. இன்று கலட்டியை வதிவிடமாகக் கொண்ட இவரும் அவர் மனைவியும் நீண்ட நாளாகப் புனருத்தாரணம் செய்ப்படாதிருந்த பன்னையடி வீரசக்தி விநாயகரை புனரமைத்து குடமுழுக்கு செய்தவர்களில் முன்னணியில் நின்று இப்பணியில் பங்கு பற்ற மற்றோருக்கும் ஊக்கப்படுத்தியவர்களாகிறார்கள்.

காலப்போக்கில் வேலை, உயர் கல்வி எனப்பல காரணங்களால் இளைஞர்கள் வெளியூர்களில் வதிவிடம் தேடிக் கொண்டமையால் இச் சங்கம் இயங்காது போயிற்று. பின்னர் ஆத்தியடிச் சனசமூகநிலையம் என்ற பெயரில் இயங்கி ஒரு பாலர் பள்ளி நடைபெற்று வந்தது. தென்மராட்சி, வலிகாமம் முதலிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்து ஆத்தியடியில் வாழ்ந்த சிறுவர்களுக்கு கல்வியில் பெரிதும் கை கொடுத்தது. இப் பாடசாலைச் சிறார்கள் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் நடாத்தும் போட்டிகளில் கணிசமான பரிசில்களைப் பெற்றது நினைவுக்குரிய ஒன்று. இன்று ஆத்தியடியில் பாலர் முன்பள்ளி என்ற பெயரில் நடைபெறுகிறது. ஆத்தியடியில் நினைவுக்குரியவர்களின் முதல்வர்களில் ஒருவராகப்பட்ட வேலாயுதவாத்தியாரின் சந்ததியில் வந்தவர் திரு ஆனந்தகுமாரசாமியவர்கள் உயர் நீதியரசர் பதவி வகித்து ஆத்தியடியில் நினைவுக்குரிய ஒருவராக வாழ்ந்தது குறிப்பிடக்கூடிய ஒன்று.



சரவணமுத்து சிவகாமிசுந்தரி தம்பதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம் பெயர்ந்த நம்மவர்

கனடாவில் மட்டுமல்ல இன்னும் பல நாடுகளில் நம்மவர்கள் வாழ்கிறார்கள். நம் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் மறவாதவர்களாகவும் உள்ளனர். நாளைய சந்ததியினர் என்ன செய்யப் போகிறார்கள். புலம் பெயர்ந்து வாழும் நாடே அவர்கள் நாடாகவும் கலந்து பட்ட கலாச்சாரமே அவர்கள் கலாச்சாரமும் ஆக இருக்கப் போகிறது. மேல் நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் வசதியான வாழ்க்கை அமைத்துக் கொண்டார்கள். ஆனால் அங்கெல்லாம் செல்ல வசதி கிடைக்காது. தமிழ் நாட்டுக்குச் சென்று இராமேஸ்வரம், மதுரை, திண்டுக்கல் போன்ற இடங்களிலுள்ள முகாம்களில் அகதி அந்தஸ்துடன் சிலர் இன்னல் வாழ்க்கை வாழ்கிறார்கள். வேறு வேறு முகாம்களில் உள்ளவர்களைச் சந்தித்து திருமணத்தில் இணைந்து குழந்தை குட்டிகளுடன் வாழ்வதையும் காணமுடிகிறது. பெயின்ற் அடித்தல், தச்சு வேலை, தையல் வேலை எனத் தங்களுக்குத் தெரிந்த தொழிலைச் செய்து அரசாங்கம் தரும் சிறு உதவியையும் பெற்று வாழ்கிறார்கள். வெளிநாடுகளில் உள்ள தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொண்டு திருமண உறவை ஏற்படுத்தி வெளிநாடு செல்லும் வாய்ப்பைச் சிலர் பெறுகின்றனர். வெளிநாட்டில் உள்ள உறவுகளின் உதவியால் அகதி அந்தஸ்தில் சொந்தமாக வாழ்பவர்களும் உண்டு.

இராமேஸ்வரம் முகாமில் உள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்யச் சம்மதித்து ஒரு மாப்பிளை சென்னை வருகிறார். பெண்ணும், பெண்ணின் உறவினர்களும் சென்னை வந்து அவரைச் சந்தித்து திருமணத்திற்கு வேண்டிய நகை, துணி முதலியவை வாங்கிக் கொண்டு இரு பகுதியினரும் சேர்ந்து மதுரை செல்கின்றனர். அங்கே மீனாட்சி கோயிலில் திருமணம். அங்கே திருமணம் முடித்து பெண்ணும் மாப்பிளையும் கனடா செல்வர். உறவுகள் ராமேஸ்வரத்துக்கு திரும்பிச் செல்லும்.

இந்தக் குடும்பத்தினர் வலிகாமம் பகுதியில் சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வாழ்ந்து வந்தவர்கள். தோட்டம், வீடு, பொருட்கள் எல்லாவற்றையும் விட்டு உயிரை மட்டும் சுமந்து வந்தவர்கள். தாயகம் திரும்பிச் செல்ல விருப்பமில்லையா ? எனக் கேட்டேன். கடந்த காலத்தில் பட்ட நோவு இன்னும் மாறவில்லை. சொந்த நாட்டிற்கு அகதி போல் சென்று வாழ்வமைக்க தெம்புமில்லை என்றனர். குறிக்கோள் எதுவுமின்றி அவர்கள் வாழ்க்கை நகர்கிறது.

நிரந்தரமாக சென்னையில் வசிக்கும் ஒரு குடும்பத்தையும் சந்தித்தேன். அவர்கள் வீட்டில் இரட்டை வால்கள் உண்டு இரண்டும் ஆண் குழந்தைகள். எந்த நேரமும் மழலை மொழியில் கிசுகிசுவென ஏதாவது பேசிக் கொண்டிருப்பார்கள். நான்கே வயதான இவர்கள் படு சுட்டிகள். எல்.கே.ஜி படிக்கும் இவர்கள் படிப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியோ மற்ற விவகாரங்கள் இவர்களுக்கு அத்துப்படி. சினிமா அறிவு அபாரம். நடிகர் சூரியா மீது அளவுக்கு அதிகமான அபிமானம். சூரியா என்றால் இப்படிச் செய்ய மாட்டான் என்றால் செய்து கொண்டிருப்பதை உடனே விட்டு விடுவார்கள். இதனால் துடுக்கையடக்க இது ஒரு வழி பெற்றோருக்கு. சூரியா என்றால் இப்படி செய்வான் என்று சாப்பிட அடம் பிடிக்கும் போது சொன்னால் எவ்வளவு பிடிக்காத சாப்பாடு என்றாலும் உடனே சாப்பிட்டு விடுவார்கள். நல்லவற்றுக்கு உதாரணம் சூரியா என்றால் கூடாதவைகளுக்கு உதாரணம் வடிவேலு. வடிவேலுதான் இப்படிச் செய்வான் என்றால் போதும் அதைச் செய்யாமல் விட்டு விடுவார்கள். இது சென்னை வாழ்க்கையின் பிரதிபலிப்பாயிருக்கலாம்.

இவர்களுடைய தகப்பன் 1995 இல் இடம் பெயர்ந்து ஐரோப்பா சென்றவர். பத்து வருடங்களின் பின்பும் வதிவிடம் கிடைக்காத காரணத்தால் தமிழ் நாடு வந்தவர். தாயார் 2006 இல் தமிழ் நாடு வந்தவர். இருவரும் மாமன் மகள் மாமி மகன் என்பதால் இல்லறத்தில் இணைந்து கொண்டனர். இந்தத் தம்பதிகள் தங்களுக்குத் தெரிந்த தொழிலைச் செய்து தங்கள் முன்னேற்றத்துக்கு பாடுபடுவதுடன் நண்பர்கள், விருந்தினர்களை உளமார வரவேற்று உபசரிப்பது மனதை நெகிழச் செய்கிறது.

இவர்களும் வலிகாமம் பகுதியைச் சேர்ந்தவர்கள். வளமான செம்மண், வற்றாத ஊற்று நீர்க்கிணறு, சத்தான உணவை அள்ளித் தரும் கடல் இவைகளையெல்லாம் போருக்கு பலியாகக் கொடுத்து விட்டு, குடிக்கத் தண்ணீர் காசு கொடுத்து வாங்கி, சுத்தமான காற்றை எங்கே வாங்கலாம் என அங்கலாய்த்தபடி அந்நிய நாட்டில் அகதிகளாக வாழ்வதைப் பார்க்கும் போது என்று விடியல் என நினைக்கத் தோன்றுகிறது.

ஆன்மீகப் பயணத்தின் இனிய நினைவுப் பகிர்வு என்ற புத்தகத்தின் அச்சுவேலைக்குப் போயிருந்த போது இந்தத் தம்பதிகளைச் சந்தித்தேன். இவர்கள் வீட்டில் தான் மற்றக் குடும்பத்தினரையும் சந்தித்தேன். என்னுடைய புத்தகத்தைப் பதிப்பித்து உதவிய சினேகன் பதிப்பக உரிமையாளரும் அவர் மனைவியும் தான். இந்த இரட்டை வால்களின் பெற்றோர்கள். சமீபத்தில் ஒரு திரைப்படத்தில் தோன்றியதாகச் சொன்னார்கள்.

என்னுடைய புத்தகத்தின் வெற்றிக்கு ரவிக்குமாரின் ஒத்துழைப்பும் ஒரு காரணம் என்பதால் இது என் நினைவில் தோன்றியது. அவர்களுக்கு வளமான எதிர்காலம் அமைய பிரார்த்திக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகதம்பிரான் கோயிலும் நாகரினமும்

யாழ்குடா நாட்டின் வடமுனையில் பருத்தித்துறை நகரின் வட கிழக்கே 18 கிமீ தொலைவில் மருதங்கேணி வீதியில் நாகர் கோயில் என்னும் கிராமத்தில், மருதமும் நெய்தலும் பொருந்திய இடத்தில் நாகதம்பிரான் கோயில் ஒன்றுண்டு. 2000ம் ஆண்டு இவ்வூர் மக்கள் அனைவரும் இடம் பெயர நேரிட்டது. நாதம்பிரான் கோயிலும் பூஜை வழிபாடின்றிப் பாழடைந்தது. நிலங்களும் காடாகிப் போயிற்று. 2009ம் ஆண்டில் மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் குடியேறத் தொடங்கினார்கள். நாகதம்பிரான் கோயிலும் திருப்பணி வேலைகள் இடம்பெற்று 4. 6. 2012ம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது.

இலங்கையில் பூர்விககுடிகள் நாகர் என்றும், இவர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒரு காலம் சிறந்த ஆட்சிக்கு உதாரணமாக நாகரினம் விளங்கியதாகவும், நாகரிகம் என்ற சொல்லே இவர்களில் இருந்துதான் வந்ததாகவும் செய்திகளுண்டு. நாகர்கள் போன்று நாக வழிபாடும் தொன்மையானது. இந்த நாகர் கோயில் நாகதம்பிரான் கோயிலில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புராதன லிங்கம் அமைந்துள்ளது. ஆதியில் மக்கள் மரவடியையே வழிபட்டு வந்தார்கள். பின்னர் அவ்வூரை ஆண்ட அரசன் அங்கு வாழ்ந்த மேகாம்புரி என்ற பொற் கொல்லன் மூலம் ஒரு கோயில் அமைக்க எண்ணம் கொண்டான்.

அரசனுடைய எண்ணத்தை நிறைவேற்றத் திருவுளம் கொண்ட இறைவன் பொற்கொல்லனின் கனவில் தோன்றி ஆத்திமரத்திலே ஆதிநாதனின் உருவத்தைக் காண்பாய். அதன் படி அரசனின் ஆணையை முடிப்பாய் என்று கூறினார். மறு நாள் வைகறைப் பொழுதில் மரவடியை வழிபடச் சென்ற போது ஐந்து தலை நாகம் ஒன்று படம் விரித்து ஆடுவது போன்று ஒரு காட்சியை ஆத்தி மரத்திலே கண்டான். உடனே அந்தக் காட்சி அவன் மனத்திலே நிலைத்தது. ஐந்து தலைநாகம் படம் விரித்து நிற்க அதன் கீழ் . இறைவன் சிவலிங்க வடிவில் வீற்றிருப்பது போன்று ஒரு வடிவம் அமைத்தான். அதை மூலவராக கொண்டு அமைந்தது தான் நாகதம்பிரான் ஆலயம். "பாதம் முதல் பையரவு கொண்டணி பொறுத்தி" எனவும் "உருவெங்கும் அங்கம் அவையார ஆடலரவம்" எனவும் உள்ள சொற்றொடர்களால் இறைவனுக்கும் அரவுக்கும் உள்ள தொடர்பு தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அரவம் , ஐவாய் அரவு, ஒற்றைப்பட அரவு போன்ற பல சொற்களால் சிவன் அணிந்துள்ள அரவு தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

நாவரசர் பெருமான் தன்னுடைய தேவாரத்தில் "யானை உரித்தபிரான் பொறிவாய் அரவம் சேர்ப்பது வானத் திரைகடல் சூழுலகம் தனைக் காப்பது காரணமாக என்றும் சடைமேல் படமணி நாகமன்றோ எம்பிரானுக்கு அழகியதே என்றும் கூறுகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் முடி சூடா மன்னராகத் திகழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுசமய கடவுளரைப் பற்றி நாற்பாதாயிரத்துக்கு மேற்பட்ட பாமாலைகளைத் புனைந்து வண்ணச்சரபம் என்ற பெயருடன் திகழ்ந்தவர் தண்டபாணி சுவாமிகள். இவர் சிவபெருமான் திருவடிவினைக் கீழ் கண்டவாறு கூறுகின்றார்.

"எண்ணெழுத் திண்டோள் ஆறமர் சடைக்காடு
ஐவாய் நாற்கரன் மான்மழு மூவிலைச் சூலம்
இருண்ட நேர்க்களம் ஒன்றே ஓர் உரு"

இப்படிப் பலராலும் நாகத்துடன் சிவனுக்கும் உள்ள தொடர்பு பாடப்பட்டிருக்கிறது.

நாகதம்பிரான் கோயிலோடு தொடர்பு பட்ட பல அற்புதங்கள் கூறப்படுவதுடன் நாகதம்பிரான் கோயில் அமைந்திருக்கும் நாகர்கோயில் ஈழத்தின் ஒரு ராசதானியாக இருந்தாகக் கூறுவாரும் உண்டு. போர்த்துக்கேயர் காலத்தில் தென் இந்தியாவில் திருவனந்தபுரத்தில் இயற்கை அழிவினால் மக்கள் தொகை குறைந்து போக அவ்வூரை அந்நேரம் ஆட்சி செய்த பறங்கியர்கள் வேறு ஊர்களிருந்து ஆட்களைக் பிடித்து வருமாறு கப்பலுடன் நாலா பக்கமும் ஆட்களை அனுப்பினர்.

பல ஊர்களில் இருந்து ஆட்களை ஏற்றி வந்த அரச ஊழியர்கள் நாகர் கோயிலுக்கும் வந்து ஏராளமான மக்களை ஏற்றினர். ஏற்றிய பின்னர் கப்பல் அசைய மறுத்தது. அப்போது அங்கிருந்த சாமியார் ஒருவர் இவ்வூர் குஞ்சுகளை இறக்கினால் கப்பல் அசையும் எனக் கூறினார். இத்தனை மக்களில் இவ்வூர் மக்களை எப்படி அடையாளம் காண்பது என்று அதிகாரிகள் திகைத்தனர். சாமியார் அப்போது அவ்வூர் மக்களை அடையாளம் காட்டுவதாக முன்வந்து அரிசிமாவை எடுத்து மக்கள் கூட்டத்தை நோக்கி வீசி எறிந்தார். அவர் வீசியெறிந்த மா அவ்வூர் மக்கள் நெற்றியில் பொட்டாக விழுந்தது. கப்பல் அதிகாரிகள் அவ்வூர் மக்களை அடையாளம் கண்டு இறக்கி விடவும் கப்பல் நகரத் தொடங்கியது. அதன் நினைவாக ஆண்டு தோறும் கப்பல் திருவிழா நடைபெறுவதாக ஒரு கதை சொல்லப்படுவதுண்டு. இது தவிர கப்பல் திருவிழா பற்றி வழி வழியாக வழங்கிவரும் கதையும் ஒன்றுண்டு.

போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் இளைஞர்களைப் பலவந்தமாகப் படையில் சேர்க்கும் வழக்கம் உண்டு. அப்படி ஒரு முறை ஏராளமான இளைஞர்களை படையில் சேர்த்துப் பயிற்சி அளிப்பதற்கெனக் கோவாவுக்கு அனுப்பக் கப்பலில் ஏற்றினர். அப்போது இளைஞர்களின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றும்படி நாகதம்பிரானிடம் மனமுருகி வேண்டினர். இறைவன் அவர்களுடைய வேண்டு கோளுக்கிணங்கி இளைஞர்கள் இருந்த கப்பலின் பாய்மரத்தில் நாகபாம்பாகத் தோன்றினார். கப்பல் தலைவன் பாம்பைக் கண்டதும் பாம்பை நோக்கி துப்பாக்கியால் சுட்டான். சூடுபட்ட பாம்பு பல நூறு துண்டுகளாகச் சிதறிக் கப்பலுக்குள் விழுந்தது. பாம்பின் ஒவ்வொரு துண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பாக மாறிப் படமெடுத்து ஆடியது. இந்நேரம் புயல் ஒன்று உருவாகிக் கப்பல் கவிழ்ந்து விடும் நிலை ஏற்பட்டது. கப்பல் தலைவன் கப்பலின் பாரத்தைக் குறைக்க எண்ணி கப்பலில் இருந்த இளைஞர்கள் சிலரை கப்பலிலிருந்து இறக்கி விட்டான். ஒவ்வொரு இளைஞனும் இறங்கும் போதும் ஒவ்வொரு பாம்பும் இறங்கியது. இதைப் பார்த்த கப்பல் தலைவன் எல்லா இளைஞர்களையும் இறக்கி விடும்படி கட்டளையிட்டான். எல்லா இளைஞர்களும் இறங்கிய பின்னரும் ஒரு பாம்பு இறங்காமல் சீறிக்கொண்டு படமெடுத்தாடியது. கப்பல் ஊழியர்கள் கப்பலைச் சுற்றி தேடிப் பார்த்தனர் சமையலறையில் ஒரு இளைஞன் ஒளிந்திருப்து தெரிந்தது. அதிகாரிகள் அவனை இறக்கி விட்டதும் கடைசிப் பாம்பும் இறங்கிச் சென்றது. புயலும் தணிந்து கப்பல் புறப்பட்டுச் சென்றது. ஆண்டு தோறும் இதன் நினைவாக கப்பல் திருவிழா நடை பெறுவதும் அது போர்த்துக்கேயருடன் சம்பந்தப் பட்டது என்பதும் நீண்ட நாளாக நம்பப்படும் ஒரு செய்தி.

வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த உற்சவத்தின் இறுதி நாளன்று அதை முடித்துக் கொண்டு நாகர் கோயிலுக்குப் புறப்பட்டுச் சென்று இரவிரவாகக் கப்பல் திருவிழாவைப் பார்த்து விட்டு அதிகாலை திரும்பி வருவார்கள். அந்நாளில் பொழுது போக்கும், கேளிக்கையும் திருவிழாக்கள் என்பதால் வெகு உற்சாகமாக மக்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

கப்பல் திருவிழா அன்று கப்பல் ஒன்று செய்து வெள்ளைப் பறங்கியர்கள் போல், தமிழ் இளைஞர்களைப் போல், மக்களைப் போல் உடையணிந்து இந்த வரலாற்றை நாடகம் போல் தத்ரூபமாக நடித்துக் காட்டுவார்கள். ஒரு சிவராத்திரி அன்று எங்கள் இசைக்கலைப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய போது (எழுபதுகளில்) நானும் இக் கோயிலுக்குச் சென்றிருந்தேன். அப்போது சிறிய கோயிலாகத் தானிருந்தது. இப்போது எல்லா ஊர்களிலிருந்தும் வெளிநாடு சென்று வாழ்பவர்கள் இருப்பதால் அவர்கள் தாங்கள் வழிபட்டு வந்த தெய்வத்திற்குப் பெரிய கோயில் கட்ட எனத் தாராளமாக நிதி உதவுவதால் தாயகத்தில் சிறு கோயிலாக இருந்தவைகள் எல்லாம் பெரிய கோயிலாக மாறி வருவது கண்கூடு.

நாகர் கோயிலைச் சேர்ந்த மக்கள் சிலர் இடம் பெயர்ந்து எங்கள் ஊரான ஆத்தியடியில் இப்போது வாழ்கிறார்கள். 2012இல் நடைபெற்ற குடமுழுக்குக் காண நானும் அவர்களுடன் சென்று வந்தேன். இந்தக் குட முழுக்குத் தரிசனம் பண்டைய நாகர்கள் பற்றிய நினைப்பை எனக்குள் ஏற்படுத்தியது. முன்னொரு காலத்தில் சிறப்போடு வாழ்ந்த நாகரினம் வரலாற்றிலிருந்து ஏன் மறைந்து போனார்கள் என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருந்து உள்ளது. இதனால் இன்றைய சரித்திர ஆய்வாளர்கள் ஆய்வு செய்து பல தகவல்களை வெளிக் கொணர்ந்துள்ளார்கள். ஆய்வுகளின் விளைவாக நாகரினத்தவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வரலாற்றைத் தொடக்கி வைத்தவர்களாகவும், கி.மு மூன்றாம் நூற்றாண்டு வரை (பௌத்தம் வரும் வரை) பெருங்கற் பண்பாட்டுச் சிற்பிகளாக நாகர்கள் இருந்திருப்பதாகவும் ஆய்வாளர்களின் கருத்து அமைகிறது. நாகர் இன மக்களை அமானுஷ்யர்களாக, அரக்கர்களாக கருதிய காலம் மாறி இலங்கைத் தீவின் வரலாற்று மற்றும் பண்பாட்டுத் தோற்றத்தின் பிதாமகர்கள் என்றும் சான்றுகளுடன் எடுத்துக் காட்டக் கூடியவர்களாக இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தொல்லியல் ஆய்வுகள், அகழ்வாராய்ச்சியில் பெற்ற பல ஆதாரங்கள் நாகர் மரபினரின் சமயம், செறிவு, இருப்புகள் முதலியவற்றைத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாய் இருக்கிறது.

தென்னிந்தியாவில் கேரளம் மற்றும் இந்தோனேஷியா, யாவா, வட இந்தியாவில் நாகாலந்து ஆகிய இடங்களில் நாகர் இனமும் அவர்களது பண்பாடு சம்பந்தமானவையும் புராதான காலத்தில் அரசியல் இறைமையுடன் இருந்தவையுமான தடயங்கள் கிடைத்துள்ளன. இவர்கள் நீரியல் வளத்தின் முகாமையாளர்களாக, நிலச் சொந்தக்காரர்களாக, வணிக வளத்தைப் பாதுகாப்பவர்களாக வாழ்ந்திருந்ததாகவும் நம்பப்படுகிறது. இந்த நாக வம்சத்தினருடைய நாணயங்கள் இலங்கையின் முக்கிய துறைமுகங்களான மாந்தை, வல்லிபுரம், நாகர்கோயில், கந்தரோடை, போன்ற மையங்களில் கிடைத்துள்ளது. வைத்திய கலாநிதி எவ். ஆர் சேவியர் என்பவர் தன்னுடைய (land of letters) என்ற நூலில் இந்த நாகரினம் பற்றிய பல செய்திகளை நம்பகமான தகவல்களுடன் கூறியுள்ளார்.

நஞ்சுறைவன் பற்கள் கொடு நாகரின மைந்தர்
பொன் செய் கொடுந்தாழ் இரும்புரிசை மதில் காக்க
எஞ்சுதலில் வீதிபல எங்கணும் நிறைந்து
மிஞ்சவரு போகவதி நகரத்தே

என இராமாயணத்தில் ஒரு நாகர் தலைநகர் வர்ணிக்கப்பட்டுள்ளது. திருமூலர் வர்ணித்த சிவபூமியும், ஈஸ்வர வழிபாடும் நாகர்களின் சொந்தமாயிருந்திருக்கிறது. மஹிந்த தேரரின் வருகையால் மூத்த சிவனின் மகன் தேவநம்பிய தீசனாக மாறியதாலும், அரசனைத் தொடர்ந்து புத்த சங்கத்தில் மக்களும் அமிழ்ந்து கொண்டதாலும் நாகர் வம்சத்தினரின் பங்களிப்புகள் வரலாற்றிலிருந்து மறைக்கப்பட்டு விட்டன. பௌத்த மதத்தை நிலைநாட்டவும், பாதுகாக்கவும் வந்த காவலர்களினால் அரசின் உதவியுடன் எழுதப்பட்ட பாளி நூல்களில் பௌத்தத்தின் பின் தான் சரித்திரம் ஆரம்பிக்கிறது. பௌத்த நாடாகப் புனைவதற்கு தடையாகக் காணப்பட்ட வம்ச பாரம்பரியங்களின் செய்திகள் மறைக்கப்பட்டு விட்டன. நாகர் வம்சத் திராவிடர்கள், அந்நியர்களாகப், படையெடுப்பாளர்களாக, மரக்கலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திறங்கிய வணிகர்களாக வர்ணிக்கப்பட்டுள்ளதுடன், நாகர் வம்சத் திராவிடப் பெயர்கள் மற்ற இனப் பாரம்பரியத்தோடு இணைக்கப்பட்டு விட்டதை மிகவும் விரிவாக ஆய்வு செய்து எவ். ஆர் சேவியர் அவர்கள் தன்னுடைய நூலில் எழுதியுள்ளார். அநுராதபுரத்தை ஆண்ட நாக வம்ச ஆட்சியாளர்களின் பெயர்கள் சில ஆதிப்பிரமிக் கல்வெட்டுகளிலும் நாணயங்களிலும் காணப்படுவதை பேராசிரியர் புஷ்பரட்னம் அவர்கள் தனது தொல்லியல் சான்றுகள் காட்டும் நாக நாட்டு மரபுகள் என்ற நூலில் விரிவாகக் கூறியுள்ளார். இரு வேறு காலத்தில் இரு வேறு மரபுகளுக்கு உரியதாயிருந்த இரு பெரும் வம்சப் பாரம்பரியங்களை ஒன்றாக்கி ஒரு பெரிய இனத்தின் தோற்றம் பற்றிய கதையை சரித்திர ஆசிரியர்கள் உருவாக்கியிருப்பதை சேவியர் அவர்கள் கூறியுள்ளார்.

ஈழத்தில் நாகர்களோடு தொடர்பு பட்ட வழிபாட்டுத் தலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமல்லாது கிழக்கில் மட்டக்களப்பிலும் உள்ளது. மட்டக்களப்பிலிருந்து தெற்கே மண்முனைத் துறைமுகத்தினூடாக சுமார் பதினாறு கி.மீ தொலைவில் பண்டார வெளிக் கிராமத்துக்கு மேற்கே படையாண்ட குளத்து வயல்களின் எல்லையில் இக் கோயில் அமைந்துள்ளது. நவீன கால ஆராய்சியாளர்கள் நம்ப முடியாத ஐதீகக் கதைகள் இக் கோயிலைப் பற்றி உண்டு. மண்முனையென்ற ஊரில் வாழ்ந்த கலிங்கப் பெண்ணுக்கு ஐந்து பெண் குழந்தைகள். அதில் கடைசிக் குழந்தை பிறந்த போது அவளோடு சேர்த்து ஒரு நாக பாம்பும் பிறந்தது. அதனால் அந்தக் குழந்தைக்கு நாகம்மை என்று பெயர் வைத்தனர். மூத்த பெண்கள் நாலும் திருமணமாகி வேறு இடத்துக்கு சென்று விட்டனர். காலக் கிரமத்தில் நாகம்மைக்கும் திருமணம் ஆகியது. ஒரு குழந்தை பிறந்தவுடன் கணவன் இறந்து விட நாகம்மை தாயுடன் வாழ்ந்து வந்தாள்.

நாகம்மாளின் தாய் காலமான போது சகோதரிகளுடன் ஏற்பட்ட பாகப் பிரிவினைச் சண்டையில் வெறுப்படைந்த நாகம்மை தான் வணங்கி வந்த கண்ணகி சிலையை எடுத்துக் கொண்டு மண்முனையை விட்டுப் புறப்பட்டு மனம் போன வழியே நடந்து சென்றாள். மட்டக்களப்பு வாவியைக் கடந்து மகிழடித் தீவுக்கு வடக்கேயுள்ள குளத்தினூடாக வந்து கொண்டிருந்த போது அவ்வூர் மக்கள் கன்றுக் குட்டிக்குப் பால் கொடுப்பதற்கு காட்டெருமையைப் பிடிக்க மரத்தின் மேலிருந்து கயிற்றை வீசினர். எருமை நாகம்மையை நோக்கி ஓடத் தொடங்கியது. தன் போக்கில் நடந்து கொண்டிருந்த நாகம்மை எருமை தன்னை நோக்கி ஓடிவருவதைக் கவனிக்கவில்லை.


எருமை அருகே வந்த போது திடுக்கிட்ட நாகம்மை கையில் வைத்திருந்த குழந்தையையும், பெட்டியிலிருந்த கண்ணகி சிலையையும் கீழே வைத்து விட்டு எருமையின் கொம்புகளை தன் இரு கைகளிலும் பிடித்தாள். ஊர்மக்கள் ஓடிவந்து காட்டெருமையை பிடித்துக் கொண்டதுடன் எருமையை அடக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணை வியப்புடன் பார்த்தனர். அங்கேயிருந்த பெட்டியைக் கண்டதும், அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று அறியவும் ஆவல் கொண்டனர். பெட்டிக்குள் இருந்த சிலையை அவ்வூர் மக்களுக்கு காட்டினாள். அந்தச் சிலையின் மகிமையால் தான் எருமையை அடக்க அவளால் முடிந்தது எனத் தீர்மானித்த மக்கள் மகிழடித் தீவில் வைத்துத் தாங்கள் வழிபடுவதற்கு அந்தச் சிலையைத் தரும்படி கேட்டனர். அவளும் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அம்மன் சிலையை அவர்களுக்கு கொடுத்தாள்.

நாகம்மையோடு தொடர்ந்து வந்த நாகம் படையாண்ட குளத்து வயல்களின் எல்லைக் காட்டிலுள்ள ஒரு புற்றில் புகுந்து கொண்டது. நாகதம்பிரான் என அப்புற்றைப் போற்றிப் பொங்கிப் படைத்து வழிபட்டு வந்தனர். நாளடைவில் இந்த நாதகதம்பிரான் பெயரும் புகழும் அயல் கிராமங்களுக்கும் பரவியது. கல்லினால் அமைக்கப்பட்ட நாக விக்கிரகம் ஒன்று சிம்மாசனத்தின் மேல் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இவ்விக்கிரகத்தின் பின்னால் இரண்டு துவாரங்கள் நிலத்தை நோக்கிப் போகுமாறு அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் துவாரத்தின் வழியே உற்சவ காலங்களில் நாகங்கள் வெளிப்பட்டு வந்து விக்கிரகத்தைச் சுற்றிப் படுக்குமாம். பூசை நேரத்தில் மற்றவர்களுக்கு உபத்திரவமில்லாமல் படுத்திருப்பதும், பூசை முடிந்து கதவுகள் பூட்டப்பட்டதும் வெளிப்பட்டு வந்து விளையாடிக் கொண்டிருப்பதையும் மக்கள் பார்ப்பதுண்டு எனக் கூறப்படுகின்றது. நாகர் மரபில் வந்த போடியார் பரம்பரையினர் இன்னும் கிழக்கிலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பில் துறை சம்பு நாதேஸ்வரர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலிகாமம் வடமேற்குப் பிரதேசத்தில் சமுத்திரக் கரையோரமாக பொன்னாலைக் கடற்கரைக்கும், மாதகல் கடற்கரைக்கும் இடையே அமைந்துள்ள நிலப்பரப்பே சம்பில் துறையாகும். 2500 ஆண்டுகளுக்கு முன்பு ஈழத்தின் புகழ் பெற்ற பட்டணங்களில் ஒன்றாக இருந்தது இந்த சம்பில் துறை. ஆதிகாலத்தில் கிழக்கே பர்மா தொடங்கி தெற்கே சீனா வரை ஆப்பிரிக்காவின் தெற்குக் கரை வரை வடக்கே விந்திய மலை வரை விரிந்திருந்த நிலப்பரப்பே குமரிக்கண்டம் என்றழைக்கப்பட்டது. கடற் கோளினால் பிரிக்கப்பட்டு இலங்கை தனித் தீவாக மாறியதுடன் பல இடங்கள் கடலுள்ளும் அழிந்து போயின. காலத்துக்கு காலம் ஏற்பட்ட கடற்கோளினால் தமிழகமும் ஈழத்தின் வடபகுதி நிலப்பரப்புகளும் மாற்றம் கண்டன.

அந்நாளில் செட்டி நாட்டுச் செட்டிமார்கள் காவிரிப் பூம்பட்டணத்தில் பண்ட மாற்று வியாபாரத்தில் ஈடுபட்டு பல தேசத்தவர்களுடன் தொடர்பு கொண்டவர்களாயிருந்தனர். அந்நேரம் ஈழத்திலும் தங்கள் வாழ்விடங்களை அமைத்து ஆதிக்கம் செலுத்தினர். ஈழத்தின் வடபகுதியில் அவர்கள் வாழ்ந்து ஆதிக்கம் செலுத்திய இடங்களில் சம்பில்துறைத் துறைமுகம் அடங்கிய பிரதேசமும் ஒன்று. அந்தப் பகுதி சோழபுரம் என்றழைக்கப்பட்டுச் சோழியபுரம் என மருவி இப்போது சுழிபுரம் என்றழைக்கப்படுகிறது. அன்றைய சோழபுரத்தின் வடமேற்குக் கரையோரம் செட்டிக்குறிச்சி என்ற பெயரால் அழைக்கப்பட்ட இடமும் ஒன்று இருந்தது. இன்றும் அப்பெயர் வழக்கிலுண்டு என்ற போதும் செட்டி நாட்டுக் குடிகள் இன்று அருகிப் போய்விட்டன.

செட்டியார் பெருங்குடி மக்கள் ஆழ்ந்த சைவப்பற்றுள்ளவர்கள். சென்ற இடங்களிலெல்லாம் சைவ ஆலயங்களை அமைத்து வழிபட்டு வந்தனர். இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள சிவாலயங்கள் இந்த உண்மைக்கு சான்றாயிருக்கிறது. 2500 ஆண்டுகளுக்கு முன்பு சம்பில்துறைப் பட்டினமாக இருந்த போது செட்டிமார் இங்குள்ள சம்பு நாதேஸ்வரம் ஆலயத்தைப் பேணியுள்ளனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இந்த இடம் சம்புநாத ஷேத்திரம் என்று விளங்கியதாக தஷிண கைலாசபுராணம் கூறுகிறது. இது கடற்கோளினால் அழிந்து போனபிறகு வன்னிய அரசன் ஆட்சியில் வைரவன் என்ற வேளாண் பெருமகன் நிலத்தைப் பண்படுத்த வெட்டிய போது வெளிப்பட்ட சிவலிங்கத்தை அரசன் ஆதரவுடன் பிரதிட்டை செய்து கோயிலாக்கினர்.

சேரநாட்டில் கண்ணகி வழிபாட்டுக்கு வழி கோலிய சேரன்செங்குட்டுவன் ஆட்சிக் காலத்தில் அவன் முதல் முதலில் கட்டிய கண்ணகி கோயில் குடமுழுக்கு வைபவத்தைக் காண கஜபாகு மன்னன் இந்தச் சம்பில்துறைத் துறைமுகத்தின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி சேர நாடு சென்றான். சேர நாட்டிலிருந்து திரும்பி வரும் போது தான் கொண்டு வந்த கண்ணகி சிலைகளில் ஒன்றை சம்பில்துறை சம்பு நாதேஸ்வரர் கோயிலைப் பேணிவந்த செட்டிமாரிடம் கொடுத்துச் சென்றான். செட்டிமார் கண்ணகிக்கும் ஒரு கோயில் கட்டிப் பேணிவந்தனர். மீண்டும் ஏற்பட்ட கடற்கோளினால் இரண்டு கோயில்களும் சேதமடைந்தன. 1820ம் ஆண்டு செட்டி குறிச்சியில் கண்ணகிக்கு மீண்டும் கோயிலெழும்பியது. சம்புநாதேஸ்வரர் ஆலயம் அறுபது தலை முறைகளாக பரம்பரை பரம்பரையாக ஒரு தனிகுடும்ப சொத்தாக இருந்து பல தடவைகள் பல இடங்களுக்கு மாறிமாறி வந்துள்ளது. 1992இல் இந்த ஆலயமும் குண்டு வீச்சில் சேதமடைந்தது.

1999இல் ஆலயத்தைப் பரிபாலித்து வந்த கடைசிக் குடும்பத்தினர், அயல் கிராமங்களை கூட்டி மகாசபை ஒன்று உருவாக்கி ஆலயத்தின் சொத்துக்களை எல்லாம் ஒப்படைத்து விட்டு வெளியேறினர். குண்டு வீச்சில் மூர்த்திகள் உட்பட சுக்கு நூறாகச் சிதைந்து தரைமட்டமாக்கப்பட்ட பின்னர் சிறு கோயிலொன்றினைத் தற்காலிகமாக அமைத்து சம்பு நாதரை எழுந்தருள செய்தனர். 2001ம் ஆண்டு இவ்வாலயத்தின் புணர் நிர்மாணப்பணி மீண்டும் ஆரம்பமாகியது. அவ்வூர் மக்கள் ஒன்றிணைந்து ஆலயத்தின் தொன்மையான வரலாற்றை நிலை நிறுத்த பல நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தினர். இதனால் 2008ம் ஆண்டில் வரலாற்று புகழ் மிக்க இக் கோயிலில் சிறப்பாகக் குட முழுக்கு நடந்தேறியது.

சங்கமித்தை வந்திறங்கிய இடம் என்று மகாவம்சம் கூறும் செய்தியின் பிரகாரம் சம்பில்துறைப் பிரதேசத்தில் பல கோடி ரூபா செலவு செய்து பெரிய அளவில் புத்த விகாரை கட்டப்பட்டுள்ளது. பல மக்களுக்கு உடமையாக இருந்த காணிகள் அரசாங்கத்தால் உடமையாக்கப்பட்டு இப்பணி நடந்தேறியது. இங்கு தமிழ் மக்களின் நடமாட்டமும் தடை செய்யப்பட்டுள்ளது. பர்ணசாலைகள் பூஞ்சோலைகள் என உருவாக்கப்பட்டு சங்கமித்தபுர எனப் பெயரிடப்பட்டள்ளது. காலச்சக்கரம் சுழன்று வரும் போது எதுவும் மாறலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகுலேஸ்வரம் கண்ட இடர் நிறைந்த பயணம்

1990 ம் ஆண்டின் கேதார கௌரி விரதத்திற்கென ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த சமயம் ராணுவ விமானங்களின் குண்டு வீச்சு ஆரம்பமாகியது. கூடியிருந்த பக்தர்கள் அலறியடித்துக் கொண்டு நாலா பக்கமும் சிதறி ஒடினர். தெய்வச் செயலாக ஒருவருக்கும் உயிராபத்து ஏற்படாத போதும் ஒருவருடைய இடக்கை துண்டிக்கப்பட்டது. சில மணி நேரத்துக்கு பின் குண்டு வீச்சு ஒய்ந்தது. அதன் பின்னர் சிவாச்சாரியார் வெளியேறினார்.

அடுத்து வந்த இரண்டு நாட்களில் ஷெல், பீரங்கி , விமானக் குண்டு என மும்முனைக் தாக்குதலில் கருவறையைத் தவிர மற்ற இடங்களெல்லாம் பலத்த சேதத்துக்குள்ளாகியது. கீரிமலை பிரதேசத்திலுள்ள மக்களெல்லாம் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர். அந்த பிரதேசம் முழுவதும் உயர் பாதுகாப்பு வலையமாகி ஒருவரும் செல்ல முடியாத நிலை உண்டாகியது. வாழையடி வாழையாக ஆலயத்தில் பூசை செய்யும் உரிமை பெற்ற மரபில் வந்த நகுலேஸ்வர குருக்கள் கோயிலுக்கு செல்ல முடியவில்லை என மனம் வருந்தினார்.

பூசலார் நாயனார் போன்று மனதிலே கோயில் கட்டிப் பூசை செய்தபடி கோயிலுக்கு செல்லும் நாளை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார். ஏழு ஆண்டுகளுக்கு பின் அவர் எதிர்பார்த்துத் தவமிருந்த அந்த நாளும் வந்தது. 1997 ம் ஆண்டு அரசாங்க அதிபர், கலாச்சார அமைச்சின் உதவிப்பணியாளர், கிராமசேவகர், பொறியியலாளர் அடங்கிய ஒரு குழு நிறுவப்பட்டு இராணுவத்தினரின் கண்காணிப்பில் சிவாச்சாரியார் அவர்கள் சென்று பார்வையிட முடிந்தது. கோயிலைச் சென்று பார்த்தபோது அங்கே கண்ட காட்சி சிவாச்சாரியாரின் குருதியை உறைய வைத்தது. கோயிலின் வட கிழக்குப் பகுதி முற்றாகச் சேதமடைந்திருந்தது. விளக்குகள், சமையலுக்குரிய பாத்திரங்கள் , பஞ்ச லோகத்திலான விலை மதிப்பற்ற விக்கிரகங்கள், கோயிலுக்குச் சொந்தமான பல லட்சம் பெறுமதியான தங்க நகைகள் எதுவுமே அங்கிருக்கவில்லை.

கருங்கல் விக்கிரகங்கள் பல உடைந்தும் பல பற்றைகளுக்குள் வீசப்பட்டும் இருந்தன. வாகனங்கள் எல்லாம் சிதைந்து போயிருந்தன. இவைகள் எல்லாவற்றுக்கும் மேலான விடயம் கோயிலின் முன்பகுதி துப்பரவாக்கப்பட்டு அங்கிருந்த அரச மரத்தின் கீழ் புத்தர் சிலை ஒன்று முளைத்திருந்தது. இவைகள் எல்லாவற்றுக்கும் சிகரமாக தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் எழுதப்பட்ட வேத சிவாகம நூல்கள், ஜோதிடம், மருத்துவம் சம்பந்தமான ஏட்டுச் சுவடிகள் கொண்ட நூலகம் ஒன்று சிவாச்சாரியாரின் இல்லத்தில் பரம்பரை பரம்பரையாக இருந்து வந்தது. அந்த நூலகம் முற்றாக இடித்து தரைமட்டமாக்கப்பட்டு நூல்கள் எல்லாம் அழிந்து போயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையெல்லாம் பார்த்த சிவாச்சாரியார் கோயிலைத் திரும்பக் கட்டியெழுப்பும் நாளை நோக்கித் தவமிருந்தார். அவர் மனதில் இந்தக் கோயிலின் வரலாற்றுச் சம்பவங்கள் ஒவ்வொன்றாக விரிந்தன. பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரமும் மற்ற ஈஸ்ரவங்கள் போலவே இலங்கை வேந்தன் காலத்தில் உருவானதும் கடல் கோளினால் அழிந்து போனதும் ஐதீகமான குறிப்பு.

கடலுள் அமிழ்ந்து போக எஞ்சியிருந்த பாகம் சிறு குன்றுபோல் நின்று அவ்விடத்தில் வைத்து வழிபடப்பட்ட சிவலிங்கம் சடையம்மா மடத்துக்கு அருகில் இன்றும் இருக்கிறது. இரண்டாவது கோயில் சோழர் ஆட்சிக் காலத்தில் மூன்று பிரகாரங்களுடன், ஐந்து கோபுரங்களுடன் கூடியதாயிருந்து கி. பி 1621ம் ஆண்டில் போர்த்துக்கேயர் காலத்தில் இடித் தொழிக்கப்பட்டது வரலாறு.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் காலத்தில் சிதைந்து போன கோயில்களைப் புதுப்பித்தல் ஓர் இயக்கமாக உருவாகிச் செயற்பட்ட போது பரம்பரைப் பூசகர்களாக இருந்த பூசகர் குடும்பத்தினரும், நாவலரின் பிரசாரத்தில் தூண்டப்பட்ட அவ்வூர் சைவ மக்களும் சேர்ந்து கோயிலை உருவாக்கி 1885இல் கோயிலுக்கு குடமுழுக்கு நிகழ்த்தினர். மூன்றாவது கோயிலும் 1918ம் ஆண்டில் தற்சேயலாக ஏற்பட்ட விபத்தாகத் தீப்பிடித்து எரிந்து போயிற்று.

கோயில் பூசகராயிருந்த குமாரசாமிக் குருக்கள் கோயிலைத் திருப்பிக் கட்ட எத்தனையோ தடவைகள் முயன்றும் அவர் வாழ்நாளில் அது சாத்தியம் ஆகவில்லை. பல தசாப்தங்களின் பின் அவர் மகன் நகுலேஸ்வரக் குருக்களின் முயற்சியில் 1953இல் திருப்பணிகள் இடம் பெற்று குடமுழுக்கு நிறைவேறியது. முந்திய கோயில் கூரைகள் ஓலையினால் வேயப்பட்டிருந்த காரணத்தினால் எளிதில் தீப்பிடிக்க முடிந்தது. என்பதால் இம்முறை உறுதியானதாகவும் பிரமாண்டமானதாகவும் அமைந்து ஓட்டினால் வேயப்பட்டது. பாராளமன்ற உறுப்பினரும் அடங்காத் தமிழர் முன்னணி தலைவருமான சுந்தரலிங்கமும் அவர் சகோதரரும் இதைப் பொறுப்பேற்றுச் செய்தனர். ஸ்ரீநகுலேஸ்வரக் குருக்கள் தனது ஆரம்பக் கல்வியை பன்னாலைக் கனகசபை வித்தியாலயத்திலும், ஆங்கிலக்கல்வியை நடேஸ்வராக் கல்லூரியிலும் பின்னர் குரு குலக் கல்வியை ஆலயத்தின் பராசீனா என்ற சமஸ்கிருத பாடசாலையிலும் மாதகல் ஏரம்ப ஐயரிடமும் தனது தந்தையிடமும் பயின்றார். தந்தையுடன் சேர்ந்து உதவியாளராக பணிபுரிந்ததால் கோயில் கிரியைகளிலும் திருப்பணிக் கட்டிட வேலைகளிலும் பயிற்சி பெற்றிருந்த காரணத்தினால் தனது 22வது வயதில் தந்தை மறைந்த போது கோயில் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நிர்வகிக்க சுலபமாயிருந்தது.

இதன் பின்னர் தமிழ் நாட்டின் புகழ் பெற்ற கோயில்களுக்கு யாத்திரை செய்து அங்குள்ள பூஜை முறைகளையும், சிற்ப அமைப்பு முறைகளையும் அறிந்து வந்தார். 1946ம் ஆண்டு மாவை ஆதீனத்தைச் சேர்ந்த சிவ ஸ்ரீகுமார சுவாமிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் நகுலேஸ்வரருக்கு சிவாச்சாரிய அபிடேகம் செய்து வைத்தார். 1953ம் ஆண்டில் நடைபெற்ற குடமுழுக்கு வைபவத்தை சேலம் சிவஸ்ரீசிவ சுப்ரமணியக் குருக்கள் பிரதிட்டா குருவாக இருந்து நடத்தி வைக்க உதவிக் குருக்களாக நகுலேஸ்வரக் குருக்கள் பணிபுரியும் வாய்ப்புப் பெற்றார்.

நித்திய பூஜையுடன் விஷேட தினங்களிலும் பணியாற்றியும் மகோற்சவ காலங்களிலும் சிவாச்சாரியாராகப் பல காலம் பணி செய்த பின் 1973இல் நடந்த குடமுழுக்கில் பிரதிட்டா குருவாக இருந்து நடத்தி வைக்கும் வாய்ப்பைப் பெற்றார். 1982ம் ஆண்டில் ஒன்பது தளங்களில் 108 அடி உயரத்தில் கோபுரம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர் நாட்டுநிலமை காரணமாக கை விடப்பட்டது. 1990ஆம் ஆண்டில் கோயில் சிதைந்து போன பின்னர் தந்தையின் இறுதிக் காலத்தில் அவருக்கு கொடுத்த வாக்குறுதியை எண்ணி நித்தம் நித்தம் வருந்திக் கொண்டேயிருந்தார். அவர் வருத்தத்திற்கு செவி சாய்த்த இறைவன் திருப்பணி வேலைகளைச் செய்யத் தொடங்கும் வாய்ப்பை நகுலேஸ்வரருக்கு கொடுத்தருளினார்.

கோயிலை அழித்தொழிக்க காரணமாயிருந்த அரசாங்கமே ஒரு பகுதிப் பணம் கொடுக்க முன்வந்தது. போர் நிறுத்தம் ஏற்பட்டுத் திருப்பணி வேலைகளை ஆரம்பித்த வேளை பலர் எதிர்ப்பு தெரிவித்தனர். அதியுயர் பாதுகாப்பு வலயமாகக் கணிக்கப்பட்டு இராணுவத்தின் கையிலே பிரதேசம் இருந்தது. மக்கள் குடியேறத் தொடங்கவில்லை. போர் முடிவுக்கு வரவில்லை. மீண்டும் சேதப்படாது என்பதற்கு என்ன நிச்சயம்? எனப் பலவாறாகக் கண்டனம் செய்தனர்.

குருக்கள் அவர்கள் நம்பிக்கை ஒன்றையே அத்திவாரமாகக் கொண்டு திருப்பணியை மேற் கொண்ட போதும் வேலையை ஆரம்பித்த நாட்களில் பெரும் சோதனைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாள் கட்டிட வேலைக்கும் தொழிலாளரை அழைத்துக் கொண்டு போகும் போதும் பல மணிநேரம் அவர்களை காக்க வைத்து பலத்த சோதனைக்கு உட்படுத்தி தான் விடுவார்கள். அதனால் சில மணி நேரம் தான் வேலை செய்யக்கூடியதாக இருந்தது.

இறைவனுக்கு நிவேதிக்கக் கொண்டு செல்லும் உணவைத் திறந்து அளைந்து பார்பார்கள். அவர்கள் அளைந்த உணவை அவர்கள் முன்னாலே வீசி எறிந்து விட்டு குருக்கள் நாள் முழுவதும் பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட்டது. காலம் செல்லச்செல்ல இராணுவத்தினர் கோயிலுக்கு வந்து வழிபாடு செய்யத் தொடங்கினது மட்டும் அல்ல நிர்மாண வேலையிலும் பங்கு பற்றத் தொடங்கினார்கள். ராணுவத்துடன் சுமுகமான உறவு ஏற்பட தொடங்கியதும் கோயில் ராணுவத்துக்கு போய்ச் சேர போகிறது என்றும் பலர் குற்றம் சாட்டத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுலேஸ்வரக் குருக்கள் தனி ஆளாக நின்று ஓரளவு வேலைகளை முடித்துள்ளார். உள் வீதி மண்டபங்களும், உயர்ந்த நுட்ப வேலைப்பாடுடைய தூண்களும் மிகவும் நன்றாகவே செய்யப்பட்டிருக்கின்றன. பார்வதி பரமேஸ்வரர்களின் திருமணம் அதில் நான்முகன் திருமணச் சடங்கியற்றுவது. திருமால் தாரை வார்த்துக் கொடுப்பது முதலிய நிகழ்வுகள் சித்திரங்களாக சுவரில் அழகாக வரையப்பட்டுள்ளன.

அசுரர்களும் தேவர்களும் பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால விஷம் எழுந்தது, அதை நீலகண்டன் உண்டது, பகீரதன் தவத்துக்கு இரங்கி கங்கை பூவுலகுக்கு வந்ததுமான புராணக்கதைகளும் அழகான ஓவியங்களாக வரையப்பட்டிருக்கின்றன. நவக்கிரகங்கள் புதுமையான முறையில் தமக்குரிய வாகனங்களில் தேவியருடன் அமர்ந்த நிலையில் காணக்கூடியதாக உள்ளது.

ஒரு பெரிய லிங்கத்தில் ஆயிரத்தெட்டு லிங்கங்கள் அமைந்த சகஸ்ர லிங்கம் ஒன்றும் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இவ்விலிங்கத்தை சுற்றி வந்தால் ஆயிரத்தெட்டு லிங்கங்களைச் சுற்றி வந்த பலன் கிடைக்கும் என்பது இதன் விஷேடத்தன்மை. இலங்கையில் இவ்வகை லிங்கம் முதன் முதலில் இங்குதான் பிரதிட்டை செய்யப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது. அரசாங்கம் கொடுத்த உதவித் தொகையுடன் லண்டனில் வாழும் நகுலேஸ்வர அறக்கட்டளை நிறுவனத்தின் உதவிப் பணமும், பல்வேறு நாடுகளில் வாழும் நகுலேஸ்வர பக்தர்களின் உதவிப் பணமும் சேர்த்து அத்தியாவசிய திருப்பணிகள் முடிந்து பன்னிரெண்டாண்டு விடா முயற்சியில் 39 வருடங்களின் பின் இக் கோயிலில் 6 . 02 . 2012 அன்று ஆறாவது குடமுழுக்கு இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்த சிவாச்சாரியார்களுடன் தமிழ் நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வந்த சிவாச்சாரியார்களின் வேத பாராயணம், ஓதுவார்களின் திருமுறை, நாமசங்கீர்த்தனம், மேளவாத்திய ஒலி, நாதஸ்வரத்தில் ஒலித்த மல்லாரி , கேரளத்திலிருந்து சிவ நடனத்துக்குப் பிரத்தியோகமாக வாசிக்கும் செண்டை மேள ஒலி இவைகளோடு அடியார்களின் அரோஹரா கோஷம் வானத்தை முட்ட இறைவனை ஆவாஹனம் செய்த நிறைகுடங்கள் வீதிவலம் வந்து வாசலை அடைந்த போது திடீரென்று வானம் கருமையடைந்து மழைத்துளிகள் சிந்தின.

வர்ண பகவானின் ஆசீர்வாதம் எனக் கருதி சிவாச்சாரியார்களும், மக்களும் புளகாங்கிதமடைந்தனர். நகுலேஸ்வரக் குருக்கள் தனது 87வது வயதில் 65 வருடங்களை நகுலேஸ்வர சேவையில் கழித்தவர் இது நாள் வரை அடைந்திராத மகிழ்ச்சியை அடைந்தார். ராஜ கோபுர வேலைகள் முடிவடைந்து 2013ஆம் ஆண்டு தை மாதத்தில் கோபுரத்துக்கு குடமுழுக்குச் செய்வதாக திட்டமிட்டிருந்தார்கள்.

அதன் பின்னர் போகும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை குடமுழுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவத்தன்று நடந்த திருக்கல்யாண வைபவமும் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் மும்மூர்த்திகளாக வந்துஅருளை வாரி வழங்கினார் இறைவன். குடமுழுக்கு முடிந்ததும் தான் உலகுக்கு வந்த காரியம் முடிவடைந்து விட்டது என நினைத்து. குருக்களின் காரியம்யாவிலும் கை கோர்த்து நின்ற தேவநாயகி அம்மா இறைவனடி சேர்ந்து விட்டார்.

பண்டைய நாட்களைப் போல் ஐந்து தேர் ஓடவேண்டும், பல பாகங்களில் இருந்து வரும் பக்தர்கள் தங்குவதற்கு நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் அமைக்க வேண்டும், முன்னாளில் நடந்து வந்த சிவநெறிக் கழகம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமாக வளர்ந்து பல நாடுகளிலிருந்தும் சைவ சித்தாந்த வல்லுனர்கள் நகுலேஸ்வரத்துக்கு வந்து ஆராய்ச்சி செய்வதற்கு வசதி செய்ய வேண்டும். வேத பாடசாலை அமைத்து வேதாகமங்கள் இளைய சந்ததியினருக்கு கற்றுக் கொடுக்கவும், திருமுறைகளை முறைப்படி ஓதுவதற்குப் பயிற்சியளிக்கவும் வசதிகள் ஏற்படுத்த வேண்டும். எனப் பாரிய திட்டங்கள் குருக்கள் ஐயாவின் மனதில் இருப்பதாகச் சொன்னார்.

குருக்களின் குடும்பத்தினர் இந்தக் குருக்களின் கனவுகளை நிறைவேற்றுவார் என நம்பலாம். கோயிலைத் தவிர சிவபூமி அமைப்பினரால் அழகான மண்டபம் ஒன்றும், மடமும் கட்டப்பட்டுள்ளன. கோயில் குடமுழுக்கு வைபவத்துக்கு முன் ரிஷிதொண்டு நாதன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சுற்றுலா வருபவர்கள் சும்மா பார்த்துப் போகாமல் பக்தி சிரத்தையுடன் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிப் போவதைக் காணும்போது மனதுக்கு நிறைவு ஏற்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஞ்சநேயர் ஆலயமும் வழிபாடும்

மனிதரை மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைப்பது சமயம். மக்களுக்கு சமுதாய வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும், வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கவும் வழிகாட்டுவது சமயம். எந்த சமயமாயிருந்தாலும் வழிகள் வேறு வேறான போதிலும் குறிக்கோள் ஒன்றே. காலத்துக்கு காலம் மகான்களும் ஞானிகளும் தோன்றி மக்களுடைய மனதை வழிபாட்டின் மூலம் பண்படுத்த நெறிகளை வகுத்துள்ளனர்.

ஈழத்தில் அன்பு நெறியிலும் ஆகம நெறியிலும் வழிபடக் கூடியதாகப் பல ஆலயங்கள் உள்ள போதும் ஆஞ்சநேயருக்குத் தனிக் கோயில் அரிது. பெருமாள் கோயிலில் வைரவருக்குப் பதிலாக ஆஞ்சநேயர் உண்டு. மற்ற ஆலயங்களில் அதுவும் இல்லை. இன்றைய காலத்தில் சர்வதேச நடைமுறையில் எல்லாக் கோயில்களிலும் ஆஞ்சநேயருக்கு இடமுண்டு. ஆஞ்சநேயர் கடுமையான பிரமச்சாரியத்தைக் கடைப்பிடிப்பவர் என்பதால் வீடுகளில் அவருடைய படத்தையோ உருவத்தையோ வைத்திருக்கக் கூடாது என்ற எண்ணமே பரவலாக பெரும்பாலானோரிடம் இருந்தது.

மாறி வரும் உலகில் இந்த நிலை மாறி ஆஞ்சநேயரை சகலரும் வணங்கலாம் என்ற கொள்கை பரவி விட்டது. அவருக்கு தனி ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக ஈழத்தில் தெகிவளையில் போதிருக்கராம வீதியில் அமைந்துள்ள ஆஞ்சநேயர் ஆலயத்தைக் கூறலாம். முன்னாளில் விகாரலேன் என்றழைக்கப்பட்ட இந்த வீதி ஆஞ்சநேயர் கோயில் அமைப்பதற்கென்றே மாற்றப்பட்டதைப் போல ராம என்ற பெயரைச் சேர்த்து அமைந்துள்ளது. ராம நாமம் கேட்கும் இடங்களிலெல்லாம் கூப்பிய கையுடன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிய அருபியாக இருந்து கொண்டு வேண்டுவோர்க்கு, உதவிக்கு ஓடோடி வரும் கருணை வள்ளலாக அநுமான் வர்ணிக்கப்பட்டுள்ளார். ஞானம், பலம், பக்தி, வீரம், சேவை இவைகளின் மொத்த உருவம் எனக் கூறப்படுவதுண்டு.

ஸ்ரீசந்திர சேகர சுவாமிகள் இதன் கர்த்தாவாக இருந்து ஆரம்பித்தவர் எனச் சொல்லப்படுகிறது. வாடகை வீட்டிலே தொடங்கிய வழிபாடு நாளடைவில் பெரிய ஆலயமாக வளர்ந்துள்ளது. நாவலப்பிட்டியில் கல்யாணி- மாதவன் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த சுவாமிகள் சிறு வயதிலேயே ஆஞ்சநேய பக்தராயிருந்ததுடன் பிறருடைய துன்பங்களுக்காக ஆஞ்சநேயரை வேண்டிக் கொண்டு அவர்களுடைய கஷ்டங்களைத் தீர்த்து வைக்கும் சுபாவத்துடன் இருந்தார்.நண்பர்கள் பலருக்காக மன்றாடி அவர்களுடைய கஷ்டங்களைத் தீர்த்து வைப்பதைக் கேள்விப்பட்டு பலர் அவரிடம் வரத் தொடங்கினர். காலப்போக்கில் தங்கள் கஷ்டங்களை கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர்கள் தொகை அதிகரித்த போது வாடகை வீடு மக்கள் வரவும் வழிபடவும் போதாமலிருந்தது. 1996ம் ஆண்டில் அன்பர்களின் ஆதரவுடன் தற்போதுள்ள இடத்தில் ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டை செய்தனர்.

ஆஞ்சநேயரின் மகத்துவம் பரவத் தொடங்கி உயர் மட்டப் பிரமுகர்களும் வந்து தங்கள் கஷ்டங்களைக் கூறி நிவர்த்தி பெற்றனர். கோயிலிலுள்ள பஞ்சமுக ஆஞ்சநேய விக்கிரகம் ஐந்தடிக்கு மேல் உயரமுள்ள கருங்கல்லிலான பிரமாண்ட உருவ அமைப்புடையது. ஆஞ்சநேயருக்கு முன்பாக லக்குவன் சமேத சீதா ராம தம்பதிகள் எழுந்தருளியிருக்கின்றனர். ராமருக்குப் பின்புறமாக ஆயுள்வேதத்தின் தந்தையாகக் கருதப்படும் தன்வந்தரி பகவான் உள்ளார். இவரை வணங்கிய பிறகே ஆஞ்சநேயரை வணங்க வேண்டும் என ஒரு முறை இங்கு உள்ளது. ஒரு முகமும் முப்பத்திரெண்டு கரங்களும் கொண்ட ஓர் அபூர்வ தெய்வமாக சீனர்கள் வணங்கும் ஒனியன் என்ற பெண் தெய்வமும் அங்கு அமைக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர்களின் சின்னமான சிலுவை, புத்தர் பிரான், முகமதியர்களின் பிறைச்சின்னம், இவைகளுடன் சர்வ மதமும் சங்கமித்த ஓர் இடமாக உள்ளது. நவக்கிரகங்கள் நேர் வரிசையில் அமைந்திருப்பதோடு அவைகளைச் சுற்றி வருவது தவறு என்ற கருத்தும் இங்கு போதிக்கப்படுகிறது. நவக்கிரகங்களுக்கு நடு நாயகமாக சூரிய பகவான் உள்ளர். அவருக்கு முன்னால் சிறிய ஆஞ்சநேயர் எழுந்தருளி இருக்கிறார். இவரைக் கறுப்பர் என மக்கள் அன்போடு அழைக்கின்றனர்.

இந்த ஆஞ்சநேயருக்கு பக்தர்கள் பாலபிடேகம் செய்து, மலர் மாலை சூட்டி வழிபட அநுமதித்துள்ளனர். இன்னொரு சிறப்பம்சமாக மூலஸ்தானத்தில் 53 அடி ஆளமுள்ள குழாய் கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அயோத்தியில் ராமபிரான்தீர்த்தமாடிய இடத்திலிருந்தும், பஞ்ச நதிகளிலிருந்தும் புண்ணியதீர்த்தமும், மண்ணும் கொண்டு வந்து கலசத்தில் விட்டு கலசத்தைத் தங்கத்தால் நிரப்பி கிணற்றின் அடியில் வைக்கப்பட்டுள்ளது. கலசத்தின் மூடியில் செப்புக் கம்பிகளை இணைத்து அக் கம்பிகளை ஆஞ்சநேயர் பாதத்திலும், ராமபிரான் பாதத்திலும் தொடுமாறு அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஆலயத்தின் மூர்த்திகளில் விசேட சக்தி ஏற்பட்டு ஆலயத்தைத் தரிசிப்போர் மீதும் அச்சக்தி பரவும் என நம்பப்படுகிறது. ஆஞ்சநேயரின் பஞ்சமுகமும் ஆழமான கருத்துக்களை உள்ளடக்கியதாக உள்ளது. வடக்கு முகம் கருட முகம் இது விஷத்திலிருந்து காப்பாற்றுவது. இரண்டாவது ஹயக்ரீவர் அஞ்ஞானத்தையழித்து மெஞ்ஞானத்தை அருளும் இந்த முகம். நடு முகம் ஆஞ்சநேயர் முகம் பக்தர்களைக் காப்பாற்றுவது. அடுத்து வரும் முகம் எதிரிகளை நிர்மூலமாக்குவது. ஐந்தாவது திருமுகம் வராக முகம் பூமியை மீட்ட முகம். பஞ்ச முகங்களையும் தரிசிக்கும் போது வணங்குவோர் உடலிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலும் அவருடைய குண இயல்புகள் பதியும் என்பது நம்பிக்கை. கோயிலுக்குச் செல்லும் போது உடலும் உள்ளமும் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பது சைவ சமயத்தில் வலிதாகச் சொல்லப்பட்ட ஒரு விதி. இதை எவ்வளவு தூரம் நாமெல்லாம் கடைப்பிடிக்கிறோம் என்பது கேள்விக்குரிய ஒன்று. ஆஞ்சநேயர் கோயிலில் பக்தர்கள் எப்படி கோயிலுக்கு வர வேண்டும் என்பதை வாசலிலே எழுதி வைத்துள்ளார்கள்.

வாசலிலே மஞ்சள் கலந்த நீர் இரண்டு பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ளது. போகிறவர்கள் மஞ்சள் நீரை எடுத்துத் தலையில் தெளித்துவிட்டு உள்ளே தரிசனத்துக்குச் செல்ல வேண்டும். ஞாயிறு தோறும் விஷேட அபிடேகங்கள் இடம்பெற்று ஆதாரனைக்குப் பிறகு அன்னதானமும் வழங்கப்படும். விஷேடமாக சரஸ்வதி தேவி கொலு இருப்பதால் பூரணை நாட்களில் ஏராளமான மாணவர்கள் கூடுகிறார்கள். இந்த மாணவர்களுக்காக சுவாமிகள் மன்றாடுவதுடன் தேனும், கற்கண்டும் தன்னுடைய கைகளாலே ஊட்டி விடுகிறார்.

லக்குமி பூஜை நடைபெறும் காலங்களில் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு கைவிஷேடமும் கொடுத்து சுவாமிகள் ஆசீர்வதிப்பார். ஆஞ்சநேயரைத் தேரில் ஏற்றக்கூடாது எனப் பலரும் எதிர்த்த போதும் அவர் எனக்கு அநுமதி வழங்கியுள்ளார். எனக் கூறி அழகான ஒருதேர் அமைத்து வருடந்தோறும் தேரில் ஆரோகணித்து ஆஞ்சநேயர்வருகிறார். வழிபடுவதோடு நின்று விடாமல் வேண்டுதல்களையும் கூற வேண்டும் என்ற கருத்தையும் மக்களிடையே ஆழமாக பதிய வைத்துள்ளார்.

காலையும் மாலையும் பூஜையைத் தொடர்ந்து கூட்டுப் பிரார்த்தனை இடம்பெறும். இந்நேரம் மக்களுக்காக சுவாமிகள் மன்றாடுவது ஒரு தனித்துவமான செயல். கொஞ்சம் அச்சம் தருவதாயுமிருக்கும். கையிலிருக்கும் கோலினால் சுவரிலிருக்கும் படங்களில் பளார் பளார் என அடிப்பார். கதாயுதத்தினால் தன்னுடைய நெஞ்சிலும் அடிப்பார். வாய்விட்டுக் கத்துவார். சஞ்சீவி மலையைச் சுமந்தவனே, சீதையைக் கண்டவனே, என்று பல பெயர்களால் கூவி அழைப்பார்.

மலை போலக் கவலைகள் ஐயா, கடல் போலத் துன்பங்கள் ஐயா, பிள்ளைகளின் துன்பக் குறைகளைத் தீருமையா எனக் கண்களில் நீர் மல்கக் கத்துவார், மன்றாடுவார். பூஜைக்கு நடுவில் அவரிடம் ஆஞ்சநேயர் வந்து விடுவார், திடீரென்று அவர் தோற்றம் மாறிவிடும். வானரமாகவே மாறிவிடுவார். துள்ளிக் குதித்துக் குத்துக் கரணம் அடித்து உர் உர் என்று சத்தமிடுவார். கம்பிக்குள் தனது பருத்த உடலை உள்ளே நுழைப்பார். பாம்பு மாதிரி ஊர்ந்து கொண்டு தீபங்களுக்கு மேலே ஏறிச் போவார்.


பூசைகள் மங்களம் பாடிக் கற்பூரதீபம் காட்டியதுடன் நிறைவு பெறும். பூசைகள் நிறைவு பெற்றதும் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டு அடியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டங்களைக், கவலைகளைத் தீர்க்கும் படி வேண்டிக் கொண்டு வீபூதியை அடியவர்களின் நெற்றியிலிடுவார். அபிடேகம் செய்யப்பட்ட பஞ்சாமிர்தம், பழங்கள், நிவேதனம் செய்யப்பட்ட மற்ற உணவு வகைகள் வழங்கப்படும். நாட்டு நிலமை காரணமாக பல இன்னல்களுக்கு உட்பட்ட மக்கள் அவற்றிலிருந்து விடுதலை பெற இக் கோயிலை நாடி வருகின்றனர். மேலை நாடுகளிலும் அவர் புகழ் பரவியுள்ளது.

லண்டன், கனடா போன்ற நாடுகளுக்கும் சென்று தன்னுடைய பணியைத் தொடர்கிறார். காவி வேட்டி, அநுமான் தாடி, பெரிய தொப்பை இது தான் சந்திரசேகர சுவாமிகளின் தோற்றம். காலை பத்து மணியிலிருந்து இரவு பதினொரு மணிவரை திறந்திருக்கும் இந்த ஆலயம். எந்நேரமும் பக்தர்கள் வந்து வழிபட்டுச் செல்கிறார்கள். விஞ்ஞானம் வளர்ச்சி பெற்ற இந்த யுகத்தில் இப்படியும் செயல்கள் நடைபெறுவதும் ஓர் அதிசயம் என்றே சொல்லலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துச் சித்தர் மூவர்

மைசூர் சிருங்கேரி மடத்தின் சங்கராச்சாரிய பீடத்தில் 32வது தலைவராக வீற்றிருந்து அருட் செங்கோலோச்சிய நரசிம்ம பாரதியவர்கள் இணையற்ற ஆத்ம சித்தி கைவரப் பெற்றவர். பல ஞானிகளையும், யோகிகளையும் சிருஷ்டித்த பெருமையுடைய இவர் தனது அறுபத்திரண்டு திருவருள் ஆட்சிக் காலத்தில் நாற்பது ஆண்டுகள் திக் விஜயத்தில் கழித்தவர். தன்னுடைய சீடர் அபிநவநரசிம்மருடன் ஊர் ஊராகச் சென்று மக்களிடையே சமய மறுமலர்ச்சியை உண்டாக்கினார்.

நரசிம்மபாரதி அவர்களிடம் சீடராகி முத்தியானந்தா என்னும் தீட்சா நாமம் பெற்றவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கடையிற் சுவாமிகள். ஈழத்துச் சித்தர் வரிசையில் ஆதிகடைநாதன் என்று ஆராத அன்புடன் கொண்டாடப்படுபவர் கடையிற் சுவாமிகள். நீதியரசராயிருந்த இவருக்கு ஒரு முறை குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டிய தேவையேற்பட்டது. யூரிமார் குற்றவாளியை கொலைகாரனாக ஏக மனதாகத் தீர்ப்புக் கூறிய போதும் நீதிபதிக்கு குற்றவாளியாய் அவனை நினைக்க மனம் ஒப்புக் கொள்ளவில்லை. நானார்? இவனார்? இவனுக்கு தூக்குத் தண்டனை விதிக்க எனக்கு என்ன உரிமை இப்படிச் சிந்தனை நீண்டு சென்றது.

முடிவில் நீதியரசர் பதவியைத் துறந்தார். உலக வாழ்க்கையை விட்டு ஆன்மீகத்தைத் தேடி அலைந்தார். குருவைக் கண்டு முத்தியானந்தராக மாறினார். இவர் இலங்கைக்கு வரக் காரணமாயிருந்தவர். யாழ்ப்பாணத்து வைரமுத்துச் செட்டியார் அவர்கள். இவர் ஒரு முறை இந்திய யாத்திரை சென்ற போது முத்தியானந்தருடைய தரிசனம் அவருக்குக் கிடைத்தது. ஈழத்தில் சைவம் மறுமலர்ச்சி பெறத் தொடங்கிய நேரம் அது. அந்நேரம் சுவாமிகள் ஈழத்துக்கு வந்தால் நன்றாயிருக்கும் என எண்ணிய செட்டியார் சுவாமிகளை ஈழத்துக்கு வரும்படி அழைத்தார். செட்டியாரின் வேண்டு கோளுக்கிணங்கிய சுவாமிகள் இலங்கைக்கு வர்த்தகப் பொருட்களை ஏற்றி வரும் கப்பல் ஒன்றில் ஊர்காவற்றுறையில் வந்திறங்கினார்.

ஊர்காவற்றுறையிலிருந்து கால் நடையாக யாழ்ப்பாணத்தை நோக்கி வந்த போது முதல் முதல் தங்கியிருந்த இடம் மண்டைதீவு. பின்னர் யாழ்ப்பாணம் சென்ற சுவாமிகள் பெரியகடையையே தனது வசிப்பிடமாகக் கொண்டார். இதனால் அவரை மக்கள் கடையிற் சுவாமிகள் என்றழைக்கத் தொடங்கினார். சுவாமிகள் பெரிய கடையில் வாழ்ந்த நாளில் பொன்னம்மா என்ற பெண்மீது அவர் பார்வை திரும்பியது. சுவாமிகளிடம் பக்தி கொண்ட பெண்ணுக்கு வீட்டில் பெருங் கஷ்டம் ஏற்பட்டது. செய்து வந்த வியாபாரத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாட்டிற்கே கஷ்டம் என்ற நிலை ஏற்பட்டது.

சுவாமிகள் ஒரு நாள் பொன்னம்மாவிடம் சென்று தாகமாயிருக்குத் தேத்தண்ணி கொண்டா என்று கேட்டார். உடனே பொன்னம்மா அழத் தொடங்கினாள். அடியவர்களை உபசரிப்பதில் மனங்கோணாத பொன்னம்மாள் அழுவதைக் கண்ட சுவாமிகள் தேத்தண்ணி தானே கேட்டனான் அதுக்கு ஏன் அழுகிறாய் எனக் கேட்டார். பொன்னம்மா இன்னும் பலமாக அழுது தேத்தண்ணி போடுவதற்கு ஒரு சாமானும் வீட்டில் இல்லை என்றாள்.

தேத்தண்ணிக்குத் தானே சாமான்கள் இல்லை கொண்டு வா தண்ணியைக் குடிப்பம் என்று சுவாமிகள் சொல்லவும் பொன்னம்மா செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். தண்ணீரை வாங்கிக் குடித்த சாமியார் சொம்பைக் கொடுத்து விட்டுப் போகும்போது வாயிலிருந்த தண்ணீரை பொன்னம்மாவின் மேல் துப்பி விட்டுச் சென்றார். வெண்குஷ்டம் போன்று திட்டுத் திட்டாக வெள்ளை படர்ந்த தன்னுடைய கைகளில் நன்றாக சாமியார் துப்பிவிட்ட தண்ணீரைத் தேய்த்தாள் உடனே கையிலிருந்த வெண் திட்டுக்கள் மறைந்தன. தூரத்திலிருந்து இந் நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்த ரொட்டிக்கடைக் காரர் ஒருவர், அது நாள் வரைக்கும் சாமியாரை அரைப் பயித்தியம் என நினைத்திருந்தவர் (பிச்சைக்கார சிறுவர்களுடன் தெருவோரத்தில் இருந்து சாப்பிட்டு படுத்துத் திரிபவரை வேறு எப்படி நினைக்க முடியும்) இந் நிகழ்வைப் பார்த்தபிறகு சாமியாரை எப்படியேனும் ஒரு முறை பார்க்க வேண்டும் என அலைந்தார். ஒரு நாள் ஒரு மரத்தடியில் சாமியார் அரைகுறை நித்திரையில் இருந்தபோது வாயிலிருந்து வடிந்த எச்சிலைத் துடைத்தெடுத்துச் சாப்பிட்டுவிட்டார். அதற்குப் பின் அவருக்கு லாட்டரிச் சீட்டில் ஒரு லட்சம் ரூபாய் விழுந்து பெரும் பணக்காரனானார்.

சுவாமிகள் செய்யும் அற்புதங்கள் பல அந் நாளில் கடைகளுக்குப் போவார். சாமான்களை எல்லாம் எடுத்து போகிற வருகிறவர்களுக்கு கொடுப்பார். கல்லாவைத் திறந்து காசை அள்ளி எல்லோருக்கும் விநியோகிப்பார். கடைக்காரர்கள் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். ஏனெனில் சாமியார் கைபட்ட வேளை அவர்களுக்கு குரு சந்திரயோகம் அடித்துவிடும். தங்கள் கடைக்கும் சுவாமிகள் வரமாட்டாரா எனறு கடைக்காரர்கள் தவம் இருப்பார்கள். ஆனால் எல்லோருக்கும் அந்த அருள் கிடைப்பதில்லை. பொன்னம்மாவின் கஷ்டங்களை நீக்க எண்ணங் கொண்ட சுவாமிகள் ஒரு நாள் ஏராளமான அடியார்களுடன் சென்றார். தாலியைத் தவிர வேறு எதுவுமில்லாத அந்த அம்மையார் தாலியைக் கழற்றிக் கொடுத்து சாப்பாட்டுக்கு வேண்டிய பொருட்கள் வாங்கி வருமாறு கணவனின் கையில் கொடுத்தாள். அன்றைய தினம் அடியார்கள் வயிராற உண்டு சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் அடுத்த நாள் தனியாக பொன்னம்மா வீட்டுக்கு போய் ஒரு இரும்புத் துண்டு கொண்டு வருமாறு கூறினார். பொன்னம்மா வளவு முழுவதும் தேடி ஒரு துருப்பிடித்த இரும்புத் துண்டு ஒன்று கொண்டு வந்து கொடுத்தாள். சுவாமிகள் அதைத் துப்பரவாக்கி துணியில் சுற்றி இதைக் கொண்டு போய் பெட்டியில் வை என கொடுத்து விட்டுச் சென்றார். சில நாட்களின் பின் அவள் பெட்டியைத் திறந்தபோது இரும்புத்துண்டு தங்கமாகத் தோன்றியது.

கடைக்கு எடுத்துச் சென்று உரசிப் பார்த்த போது அது பத்தரைமாத்து தங்கமாக மாறியிருந்தது. எல்லோரும் சுவாமியின் கருணையை நினைத்து கண்ணீர் வடித்து நின்றனர். சுவாமிகள் அன்பர்களின் வீட்டில் போய் சாப்பிடுவது வழக்கம். அவருடன் அடியார்களும் சேர்ந்து செல்வார். சாப்பாடு கொடுப்பவர்கள் வருகிறவர்களுக்கு எல்லாம் மனங்கோணாது சாப்பாடு கொடுப்பார்கள். இதைப் பார்த்த சாப்பாட்டுப் பிரியர்களும் அவரைத் தொடர்ந்து செல்லத் தொடங்கினர்.

ஒரு நாள் சாமியாரைத் தொடர்ந்து சாப்பாட்டுப் பிரியர்கள் செல்லும் போது வழியிலே மெழுகு உருக்கிக் கொண்டிருந்தவனிடம் சுவாமிகள் கையை நீட்டினார். செய்வதறியாது திகைத்தவன் அவர் கையில் ஒரு அகப்பை மெழுகை ஊற்றினான். பின் தொடர்ந்து வந்தவர்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள். சுவாமிகள் எல்லோரும் காணக் கையிலிருந்த மெழுகைக் குடித்துவிட்டு வாருங்கள் எல்லோரும் வாங்கிக் குடியுங்கள் என்று கூப்பிட்டார். பின் வாங்கியவர்கள் ஓட்டம் எடுத்தார்கள். சுவாமி அன்பர்களுடைய வீடுகளில் அதுவும் ஏழைகளின் வீடுகளிலும் உணவு சாப்பிடுவார். அவர்கள் அவருக்கு தாம் வழமையாகச் சாப்பிடும் மச்சம், மாமிசம், மது என எல்லாவற்றையும் கொடுப்பார்கள். விருப்பு வெறுப்பு அற்றவரான சுவாமிகள் அந்த உணவுகளையும் வாங்கிச் சாப்பிடுவார். இது வைதீக வழி வந்தவர்களுக்கு கோபத்தை உண்டாக்கியது. யோகர் சுவாமிகளின் குருவான செல்லப்பா சுவாமிகளுக்குச் சகிக்க முடியவில்லை.

அவரால் அது நம்பமுடியாத விடயமாகவும் இருந்தமையால் அவரைச் சோதிக்க எண்ணி ஒரு போத்தல் சாராயத்துடன் சுவாமிகளைத் தேடி பெரிய கடைக்குச் சென்றார். போத்தலைச் சால்வையால் சுற்றி மறைத்துக் கொண்டு அருகில் உட்கார்ந்ததும் ஓஹோ நீயும் எனக்குச் சாராய விருந்தளிக்க விரும்பி விட்டாயா? சரி பின்னாலை மறைத்து வைத்திருக்கும் போத்தலை எடுத்துத் திற நீயும் நானும் இங்கே இருக்கிறவர்களுடன் குடிக்கலாம் என்றார்.

பயத்துடன் செல்லப்பா சுவாமிகள் போத்தலை எடுத்துத் திறந்தபோது திரவம் ஆவியாகக் காற்றோடு காற்றாக போயிற்று. குரு நாதரின் பாதங்களை இறுக்கப் பிடித்து கண்ணீரால் கழுவிவிட்டுச் செல்லப்பா சுவாமிகள் சென்றார். சுவாமிகள் பேய்பிடித்தவர் போல் பெரிய கடைத் தெரு வழியே திரிந்த காலத்தில் ஒரு நாள் பைத்தியம் என்று பிடித்து மனநோய் வைத்தியசாலைக்கு அனுப்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானித்து காவல் நிலையத்துக்குப் பிடித்துச் சென்று ஓர் அறையில் பூட்டி வைத்தனர். அடுத்தநாள் ஆயத்தமாகி கதவைத் திறந்த போது அவர் அங்கே இருக்கவில்லை. அவர் பெரிய கடை வீதியில் இருந்தார். இதனால் காவல் உத்தியோகத்தர் பலர் அவருடைய பக்தரானார்கள். அவர்களில் ஒருவர் சின்னத்தம்பி சார்ஜனாவார் அவரைப் பிற்காலத்தில் சார்ஜன் சாமி என்றழைப்பார்.

கடையில் சுவாமிகள் தன்னுடைய கடைசிக் காலத்தில் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த நீராவியடியிலேயே நிலையாக இருந்தார்கள். நீராவியடிப் பிள்ளையார் கோயில் தென் மேற்குத் திசையில் ஒரு குடிசையில் சுவாமிகள் குடியிருந்தார்கள். அங்கேயே சமாதி நிலையும் கூடியது. அந்த காலத்தில் சுவாமிகளுடனிருந்த பலருடைய முயற்சியால் சமாதிக் கோயில் ஒன்று எழுப்பப்பட்டது. ஹரன் ஐயா எப்போதும் சொல்வதுண்டு யாழ்ப்பாணம் போகிறவர்கள் கடையிற் சுவாமிகளின் சமாதியைப் போய்ப் பாருங்கள் என்று.

கடைசிமுறை யாழ்ப்பாணம் சென்றிருந்த போது கடையிற் சுவாமிகளின் சமாதி கோயிலுக்குப் போயிருந்தேன். பல இடங்களில் விசாரித்து பல ஒழுங்கைகள் சுற்றி வந்து கடைசியாக ஓர் இடத்தில் கோயிலைக் கண்டோம். அது திருவெம்பாவைக் காலம் காலை ஒன்பது மணிக்கு வந்தால் பூஜை பார்க்கலாம் என்று சொல்லியிருந்தார்கள். அதிகாலையிலே எழுந்து பருத்தித்துறையிலிருந்து கோயிலுக்கு வந்து சேரும் போது மணி ஒன்பது. அப்போது தான் ஒருவர் கோயிலைத் திறந்தார். எங்களைப் பார்த்ததும் தூரத்திலிருந்து வருபவர்களாகத் தெரிந்ததால் கோயில் ஐயா வந்து விடுவார் வந்ததும் பூஜை தொடங்கும் என்று உபசரித்தார். அதன் பின் உபயக்காரர்கள் வந்தார்கள் அண்டை அயலிலிருந்து சிலர் வந்தனர். கோயில் ஐயாவும் ஆற அமரப் பத்து மணிக்கு வந்து சேர்ந்தார்.

கால தாமதமாக வந்த போதும் முறைப்படி அபிடேகம் செய்து பூஜை செய்தார். அதன் பின் ஓதுவார் ஒருவர் திருவெம்பாவை இருபது பாடல்களும் பாடித் தீபாராதனை முடித்து பிரசாதம் பெற்றுத் திரும்பினோம். அங்கே ஐயா வருகைக்காக காத்திருந்த வேளை கோயில் சொந்தக்காரருடன் பேசினேன். தன்னுடைய சந்ததியினர் தான் இந்தக் கோயிலை நடாத்தி வந்ததாகவும் இப்போது தான் நடாத்துவதாகவும் சொன்னார்.

சிறு சமாதி கோயிலாக இருந்ததாகவும் பின்னாளில் சுற்று மண்டபம் அம்பாள் சன்நிதி, முருகன் என விஸ்தரிக்கப்பட்டதாகவும் இப்போது வசந்த மண்டபத்திற்கான வேலைகள் நடை பெறுவதாகவும் சொன்னார். முடிந்ததும் குடமுழுக்கு செய்யப்படும் எனவும் சொன்னார். கடைசியில் சுவாமிகளின் சீடராக செல்லப்பா சுவாமிகளைச் சொல்வதுண்டு. ஆனால் செல்லப்பருக்கு குருவுமில்லை சீடருமில்லை என யோகர் சுவாமிகள் சொன்னதாகவும் செய்திகளுண்டு. மறைந்த போயிருந்த ஆத்தியடி விநாயகர் ஆலயத்தை வெளிக்கொணர அருள் வாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த வால்கடைப் பரதேசி என்று கூறப்பட்டவர் இந்தக் கடையிற் சுவாமிகள் எனவும் நம்பப் படுகிறது.

வட்டுக் கோட்டையிலிருந்து வந்து குடியேறி விவசாயம் செய்த பெரியார் வல்லிபுரத்துக்கும், சின்னம்மாவுக்கும் பிறந்தவர் செல்லப்பா சுவாமிகள் இவர் சைவப் பிரகாச வித்தியாசாலை, மத்தியகல்லூரி முதலிய பாடசாலைகளில் கல்வி கற்று யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆய்வாளராக வேலை செய்தார்.

நல்லூர் மண் எல்லாம் சிவலிங்கம் என்று சொல்வார்கள். அதன் படி அந்த மண்ணிலே உருண்டு புரண்ட செல்லப்பருக்கு ஞான நிலை கூடியது. உத்தியோகத்தைத் துறந்தார். ஊரும் உலகமும் நித்திரை கொள்ளும் போது நல்லூர்க் கோயிலுக்குச் சென்று முருகனை நோக்கிக் கத்துவார். தமக்குள்ளேயே சிரிப்பார். இதைப் பார்த்த உறவினர்கள் அவரை விசர் செல்லப்பா என்று அழைக்கத் தொடங்கினார்.

கொழும்புத்துறை, கைதடி, திருநெல்வேலி போன்ற இடங்களுக்குப் பிச்சை எடுக்கச் செல்வார். மார்க்கண்டு சுவாமிகள் ஆச்சிரமம் அமைத்த இடத்திற்கும் அடிக்கடி செல்லுவார். செல்லப்பாவின் உண்மை நிலை அறியாத ஊரவர்கள் அவருக்கு விலங்கு மாட்டினர். அவ் வழியே வந்த கடையிற் சுவாமிகளின் பார்வை செல்லப்பரின் மீது பட்டது. பைத்தியம் முற்றி விட்டது அவிழ்த்து விடுங்கள் என்று கூறி ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து வெற்றிலையில் வைத்துத் தலைக்கு மேலே குடையாகப் பிடித்து "ஓடடா" எனக் கூறினார். அதுவே அவருக்கு ஞானதீட்சை ஆயிற்று.

செல்லப்பருக்கு யோகர் சுவாமிகள் ஒருவரே சீடர். வேறு ஒருவராலும் அவரை அறிந்த கொள்ள முடியவில்லை. மனத்தாலும் நினைக்க முடியாத செல்லப்பா சுவாமிகளின் கடைக்கண் பார்வை கிடைக்கப் பெற்றவர்கள் பாக்கியவான்கள். சேர். பொன் ராமநாதன் அவர்கள் ராமநாதன் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டிய வேளை தாமே மருதனாமடம் சென்று தன்னுடைய கையால் செய்த ஒரு விசிறியைக் கொடுத்துவிட்டு நான்கு மகா வாக்கியங்கள் உபதேசித்து விட்டு வந்தார்.

திருநெல்வேலிக் குருக்கள் செல்லப்பா சுவாமிகளிடம் அன்பு பூண்டவர். மாலை வேளைகளில் கோயில் பிரசாதத்தை அவருக்குக் கொடுப்பது வழக்கம். ஒரு நாள் வழக்கம் போல் பிரசாதம் கொடுக்க வந்த குருக்களை இது தீட்டு கொண்டு போ என பேசித் துரத்தினார். குருக்கள் வீடு சென்ற பிறகுதான் தன்னுடைய பிள்ளை பிரசாதத்தை எச்சில் படுத்தியிருப்பதை அறிந்தார்.

இளைஞரான யோகநாதன் ஒரு நாள் நண்பர்களுடன் தேரடியை நோக்கி வந்த கொண்டிருந்த போது முட்டாளைப் போல் தேரடியில் படுத்திருந்த செல்லப்பா "யாரடா நீ பாரடா உள்ளே" என உறுமினார். அதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகநாதனுக்கு தீட்சா மந்திரமானது. யோகரைப் பல சோதனைகளுக்கு உட்படுத்திப் பக்குவப்படுத்தினார். ஒரு தாயார் எப்படிச் சாப்பிடாது அடம் பிடிக்கும் குழந்தையை விளையாட்டுக் காட்டி ஊட்டுகிறனோ அது போன்று உண்மையான குருவும் சிஷ்யன் தகுதிக்கேற்ப ஆத்ம ஞானத்தை உபதேசம் செய்து பக்குவப்படுத்துவார். அதற்கு உதாரணமாக யோகர் சுவாமிகளையும் செல்லப்பரையும் சொல்லலாம்.

இருவரும் சேர்ந்து சமைப்பார்கள் சாப்பிடப் போகும் நேரம் உனக்கென்ன சாப்பாடு என்று சொல்லிச் சோற்றுப் பானையை உடைப்பார் அல்லது சாப்பாட்டை காக்கா குருவிகளுக்கு போடுவார். முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவார். ஒரு நாள் பார்ப்பதெல்லாம் பரம் என்பர். ஒரு நாள் யாரறிவார் நாமறியோம் என்பார். முன்னுக்குப் பின் முரணாகப் பேசியே யோகரை ஆட்கொண்டார். மகா வாக்கியங்கள் என உலகோரால் போற்றப்படும்

நாமறியோம்,<br>
எப்பவோ முடிந்தது,<br>
முழுதும் உண்மை,<br>
ஒரு பொல்லாப்பும் இல்லை

என்ற நான்கும் செல்லப்பரால் யோகருக்கு உபதேசிக்கப் பட்டவையே. இம் மந்திரங்கள் எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் டெல்லி மாநகரத்தில் பொற் தகடுகளில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. என யோகர் சுவாமிகள் கூறியுள்ளார்.

தாய் தந்தையர்கள் நம்மை இந்த உலகுக்கு கொண்டு வந்தவர்கள். உலகத்தில் நன்றாக வாழவழி வகுத்துத் தருபவர்கள் என்ற போதும் அவர்களும் ஆசா பாசங்களில் தடுமாறுவதால் ஆன்மாவின் பயணத்துக்கு வழி காட்ட அவர்களால் முடிவதில்லை. அதற்கு குருவையே நாட வேண்டும். நாடிய குருவிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். குரு காட்டும் வழி வீண் போகாது என்ற திடமான நம்பிக்கை வேண்டும். அப்படியான நம்பிக்கை யோகர் சுவாமிகளுக்கு செல்லப்பாவிடமிருந்தது.

எல்லாம் வல்ல இறைவனாகச் செல்லப்பரைப் பற்றி யோகர் சுவாமிகள் கூறும் சில வரிகள்.

காட்டினிலே காளியுடன் கூத்தாடும் கண்ணுதலோன்<br>
நாட்டினிலே ஞான குருவாய் நயந்து வந்து<br>
மீட்டானவன்றன் மலரடியை<br>
மாட்சிமை சேர் நல்லை நகர் தேரடியில் கண்டேன்<br>
மாலயனும் தேடியறியா மலரடிகள்<br>
கோல அருட்குருவாய் குவலயத்தில் போந்து<br>
காலப் பெரும் பகையைத் தானீக்கியாண்டானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலம் புகழும் நல்லை நகர் தேரடியில் கண்டேன்.

ரமண மகரிஷிக்கு அண்ணாமலையானே குருவாக வாய்த்தது போல் செல்லப்ப தேசிகருக்கு நல்லூரானே குருவாக வாய்த்தார். இவர் தனது ஐம்பத்தைந்து வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

செல்லப்பா சுவாமிகளின் உடல் சமாதி வைக்கப்படாமல் எரியூட்டப்பட்டது. என்பதால் அவருக்கு ஒரு நினைவாலயம் அமைக்கப்பட்டிருப்பதாகச் செய்திகளுண்டு. பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. யோகர் சுவாமிகள் செல்லப்பரின் குணாதிசயங்களைப் பற்றி பின்வருமாறு கூறியிருக்கிறார்.

சிரித்து நல்லூர் வீதியில் திரிபவர்.
வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்.
பாதிச் சாமத்தின் பின் பள்ளி கொள்பவர்.
உல்லாசமான நடையுடையோன்
பித்தர் என்று பிறர் பேசும் திறத்தான்
ஆரறிவாரென்று அடிக்கடி சொல்வார்.
நீறு மேனியான் நெற்றியில் பொட்டு மேனியான்.
தேரடிப் படியில் சிங்காரமாகக் கிடப்பான்.

இப்படியான குரு சிஷ்ய உறவு வருவது மிக மிக அபூர்வமான ஒன்று செல்லப்பர் தான் கொண்ட கோலத்தை யாரும் சந்தேகப்படாமல் நடித்துக் காட்டி விட்டு சென்றார் எனவும் யோகர் சுவாமிகள் கூறியிருக்கிறார்.

"யாழ்ப்பாணத்தானுக்குச் சாமி காட்டாதே காட்டினால் தலையில் ஏறிவிடுவான்" என்று யோகர் சுவாமிகளுக்கு செல்லப்பர் எச்சரித்திருந்த போதும் யோகர் சுவாமிகள் பலரை ஆசீர்வதித்து ஆண்டி முதல் அரசன் வரை தம்மை அண்டியோருக்கு அருள் புரிந்திருக்கிறார். யோகர் சுவாமிகளைப் பார்த்துச் செல்லப்பர் ஒரு நாள் எங்காவது வேர் விராயைப் பார்த்துப் போ என ஏசித்துரத்தினார். யோகர் சுவாமிகள் கொழும்புத் துறைப் பிள்ளையார் கோயிலின் முன்னிருந்த இலுப்பை மரத்தைத் தமது இருப்பிடமாகக் கொண்டார். நன்னியர் என்ற முரட்டுப் பக்தர் ஒருவர் செல்லப்பா சுவாமிகளை கட்டி வைத்து பால், பழம் பஞ்சாமிர்தம் முதலியவற்றால் அபிடேகம் செய்து புனிதமடைந்தது அந்த இலுப்பை மரம் . சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் வந்த போது அவ்வழியே குதிரை வண்டியில் சென்ற போது அது பாலைவனத்துப் பசுந்தரை என்று அந்த இடத்தைப் பார்த்து கூறியதாகச் செய்தியுண்டு. ஈழத்தின் நான்கு திசைகளிலும் நான்கு சமாதிக் கோயில்கள் உள்ளன. வடக்கே நீராவியடியில் கடையிற் சுவாமி சமாதியும், தெற்கே குயின்ஸ்பரியில் நவநாதச் சித்தரின் சமாதியும், மேற்கே முகத்துவாரத்தில் பெரியானைக் குட்டிச் சுவாமிகளின் சமாதியும், கிழக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைதீவில் சித்தானைக் குட்டிச் சுவாமிகளின் சமாதியும் விளங்குகின்றன.

செல்லப்பா சுவாமிகள் உயிருடன் இருந்த போது தன்னைப் படமெடுக்க அனுமதித்ததில்லை. நல்லூரில் அச்சுக்கூடம் நடத்திய அந்தணர் ஒருவர் சிறு வயதில் தாம் கண்டு மனதில் பதித்து வைத்திருந்தபடி வரைந்த ஒரு படம் தான் இன்று செல்லப்பா சுவாமிகளின் படமாகத் திகழ்கிறது. யோகர் சுவாமிகள் இலுப்பை மரத்தடியில் இருந்த கோலத்தில் உள்ள படம் ஒன்று அவர் சமாதியில் வைக்கப்பட்டுள்ளது. அதைப் பார்க்கும் போது அவரை உயிருடன் பார்ப்பதைப் போன்ற ஒரு பிரமிப்பை உண்டாக்கியது.

குரு சிஷ்ய உறவுக்கு உதாரணமாக இன்னொரு கதை ஹரன் ஐயா அவர்களின் சொற்பொழிவில் நான் கேட்டது. திருக்கோவலூரில் ஞானானந்தர் என்ற ஒரு சித்தர் வாழ்ந்திருந்தார். இவர் அறுநூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்திருந்த ஞானி. கதிர்காமத்திலுள்ள கதிரமலையில் வேல் நாட்டியவருமாவார். ஒருநாள் இவரைச் சந்திக்க தேயிலைத் தோட்டத்திலிருந்து ஒரு பெரியவர் தன்னுடைய மகனையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தார். ஞானானந்தரை தரிசித்த பின்பு அவருக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என அந்த பெரியவர் விரும்பினார். சுவாமிகளிடம் உங்களுக்கு என்ன கொடுக்கலாம் என்று கேட்டார். உங்கள் பையனை என்னிடம் விட்டுச் செல்லுங்கள் என ஞானானந்தர் சொல்லவும் மறு பேச்சின்றி அந்த பெரியவர் சிறுவனை அவரிடம் விட்டுச்சென்றார்.

குருநாதரிடம் விட்டுச் சென்ற சிறுவன் அங்கு நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் கலந்து கொள்வான். அங்கு நடைபெறும் வேதபாராயணங்கள் அவனுக்கு புரியவில்லை. குருநாதரிடம் சொல்லிக் கவலைப்பட்ட சிறுவனைக் சமாதானப் படுத்தி இப்போது போய்க் படுத்துக்கொள் பிறகு பார்க்கலாம் என்றார். சிறுவனும் போய்க் படுத்துக் கொண்டான். நித்திரையில் அவனுக்கு ஒரு கனவு வந்தது. கனவில் அவனுடைய குருநாதர் அவனை ஒரு கிடங்கு வெட்டும் படி கூறுகின்றார். வெட்டிய கிடங்கில் அங்கிருந்த புத்தகங்களை எல்லாம் போட்டு மண்ணை நிரப்பும்படி கூறுகின்றார். அவனும் அப்படியே செய்கின்றான். முடிவில் அவனைக் கிடங்கின் மேல் உட்கார வைக்கிறார்.

அடுத்த நாள் காலை நித்திரை விட்டெழுந்து வழமைபோல் வேதபாராயணத்துக்கு சென்ற போது அவனுக்கு எல்லாமே துல்லியமாக விளங்கியது. அந்தச் சிறுவன் வேறு யாருமில்லை ஹரிதாஸ் ஸ்வாமிகள் தான். கலியுகத்தில் நாமசங்கீர்த்தனம் செய்து உய்ய வழி காட்டினவர். பூர்வ ஜென்மக் கொடுப்பினையினால் அவருக்குக் குருவின் அருள் பூரணமாக ஓர் இரவில் வாய்த்தது. அது போன்று எல்லோருக்கும் கிடைக்கும் என எதிர் பார்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பிகையின் அருள் பெற்ற அடியார்கள் சிலர்

### நெமிலி ஸ்ரீ பாலா

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் வட்டம் நெமிலி என்ற ஊரில் வாழ்ந்திருந்த சுப்ரமணியர் ஐயர் என்பவரின் கனவிலே அன்னை பாலா தோன்றி ஆற்றிலே வருவேன் அழைத்துச் செல் என வாக்குக் கொடுத்தாள். அன்னையின் அருள் வாக்குப்படி ஆற்றங்கரையிலே தேடி அலைந்த சுப்ரமணியம் அன்னையைக் காணாது மனம் வருந்தத் தொடங்கிய வேளையில் ஆற்றிலே மிதந்து வந்தாள் அன்னை பாலா.

ஆற்றிலே வந்த பாலா விரலளவேயானவள். சின்னஞ் சிறு பாலாவை ஐயர் தன்னுடைய இல்லத்திலேயே சிற்றாடையுடுத்திச் சிங்காரமாகக் கொலுவீற்றிருக்கச் செய்தார். பாலா லீலா வினோதினி என்ற லலிதா சஹஸ்ர நாமத்திலே வரும் வரிகளுக்கு வடிவமாகக் குழந்தை வடிவிலே கோலோச்சி வருகிறாள். ஸ்ரீ வித்தியா தீட்சைக்கு முதலாக அங்கம் வகிக்கும் தேவி ஸ்ரீ பாலா தான். ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் அமைப்புக் கொண்ட பாலா எப்போதும் ஒன்பது வயது சிறுமியின் தோற்றம் கொண்டவள்.

சுப்ரமணிய ஐயருக்குப் பிறகு இந்தக் கோயில் அவர் குடும்பத்தினரால் ஆதரிக்கப்பட்டு வருகிறது. சீர்காழி கோவிந்தராஜன், வீரமணி, வாணி ஜெயராம் ஆகியோர்களால் பாடப்பட்ட பாலா பாடல்கள் பிரபலமானவை. மெல்லிசை மன்னர் விஸ்வநாதனும் வந்து அன்னையைத் தரிசித்து அன்னையின் பாடல்களைப் பாடிச் சென்றிருக்கின்றார். டென்மார்க், அமெரிக்கா, லண்டன், ஜேர்மனி போன்ற இடங்களிலிருந்தெல்லாம் தேவியை தரிசிக்க அடியார்கள் வருகிறார்கள்.

நவராத்திரி ஒன்பது நாளும் அன்னை பாலாவுக்கு நடை பெறும் விழாவை பிரம்மோற்சம் என்று கூறலாம். பாலாவின் உபாசனை விதிகள் ஸ்ரீவித்தியா அம்சமாகப் போற்றப்படுகிறது. ஸ்ரீ மாதா, ஸ்ரீமஹாராக்ஞீ என்று போற்றப்படும் ஸ்ரீலலிதா மஹா திரிபுரசுந்தரி சக்கரவர்த்தி என்றால் பாலா திரிபுர சுந்தரி பட்டத்து இளவரசியாகிறாள். ஆதிசங்கரர் வழி வந்த காஞ்சிசந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளும் இந்தக் கோயிலுக்கு வந்து பாலாவைத் தரிசனம் செய்து பாலாவின் புகழைக் கூறியிருக்கிறார்.

கோயில் என்னும் போது பெரிய கோபுரமோ விமானமோ எதிர்பார்க்க முடியாது. சிறிய வீடுதான் அன்னையின் ஆலயம். இந்த ஆலயத்தின் பெருமையை ஹரன் ஐயா மூலம் தான் தெரிந்து கொண்டேன். அவர் அருளும் அதனால் எழுந்த ஆர்வமும் தான் இந்தத் தரிசனம். பாலாவின் கோயிலுக்கு நீங்கள் வரவில்லை அவள் உங்களை அழைத்திருக்கிறாள். அவள் அழைப்பின்றி நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்க முடியாது என எழில்மணி ஐயா அவர்கள் கூறியதுடன் கீழ்க்கண்ட வாசகங்களையும் கூறினார்.

எல்லோரும் ஒரு சேரக் கைவிட்டு விட்டாலும்
இல்லையெனச் சொல்லி கை கழுவி விட்டாலும்
என் பிஞ்சுக் கரங்கள் உன்னைக் காப்பாற்றும்.
கடைசிவரை காப்பாற்றும்

இது பாலா உனக்களிக்கும் உறுதியெனக் கூறி மேற்படி வாசகங்கள் அச்சிட்ட ஒரு பையில் பாலாவின் படங்கள் ஒலிநாடாக்கள் புத்தகங்கள் முதலியவற்றைத் தந்து ஆசீர்வதித்தார்.

நீ தனியாக இருப்பதாக என்றும் நினைக்க வேண்டாம். பாலா உன்னுடன் என்றும் இருப்பாள். என அவர் கூறியதைக் கேட்டு

அளவில்லா மகிழச்சி அடைந்தேன். உறவுகள், சுற்றம் என ஆயிரம் இருந்தாலும் ஆன்மாவின் பயணத்துக்கு மனிதர்கள் ஒருவரும் துணையாக வருவதில்லை.

"நாளும் கோளும் ஏது சிவ நாயகி துணைவரும் போது"

**பொற் கோயில் நாராயணி**

வேலூர் மாவட்டத்தில் கொடிமலை என்ற ஊரில் பிரமாண்டமான பொற்கோயிலில் குடிகொண்டிருப்பவள் நாராயணி. ஸ்ரீ புரம் என்று அழைக்கப்படும் இந்தக் கோயிலை உருவாக்கியவரை சக்தி அம்மா என்று அழைக்கின்றனர். வைஷ்ணவர்கள் முழு முதல் தெய்வமாக போற்றும் தெய்வம் நாராயணர். அது போன்று தேவிகளில் முதன்மையானவளாக போற்றப்படுபவள் நாராயணி.

அகில உலகங்களுக்கும் செல்வமளிப்பவளாக ஆராதிக்கப்படுபவளும் நாராயணியே. நாராயணிக்கு அமைந்த முதல் தனிக் கோயில் இது எனச் சொல்லப்படுகிறது. இரண்டு கி.மீ தூரத்துக்கு நட்சத்திர வடிவில் அமைந்த பாதை வழியே நடந்து சென்றால் தேவி கொலு வீற்றிருக்கும் மண்டபத்தை அடையலாம். நட்சத்திர பாதை வழியெங்கும் நாராயண அவதாரத்தை சித்தரிக்கும் சிலைகளும், சப்தமாதர்கள், அஷ்டலக்ஷ்மிகள் எனச் சிற்பங்களும் அமைக்கப்பட்டிருப்பதுடன் அங்கங்கே கீதையின் வாசகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

கொலு மண்டபத்தை முப்பத்தெட்டு தங்கத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இருபத்திரெண்டு தூண்கள் யானை வடிவிலும், பதினேழு தூண்கள் அன்னத்தின் வடிவிலும் தாங்கி நிற்கின்றன. நீராழிக்கு நடுவே அமைந்த மண்டபத்தில் வைரங்கள், முத்துக்கள் , இழைத்த ஆபணரங்கள் அணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாண்டமான தூங்கு விளக்குகள் ஒளியைச் சிந்த தங்கத் தாமரையில் நாராயணி அமர்ந்திருக்கிறாள். பார்ப்பவர்களை பூலோகத்தில் இருக்கிறோமோ வைகுண்டத்தில் இருக்கிறோமோ எனச் சந்தேகம் கொள்ள வைக்கிறது. ஆயிரத்தெட்டு இதழ்களைக் கொண்ட தீப அமைப்பு கலையம்சம் நிறைந்தது. கருவறை, அர்த்த மண்டபம், மஹா மண்டபம், என முறையே அமைந்துள்ளது. எட்டுப்பட்டை வடிவில் அமைந்த கோபுரம் உட்பட நான்கு தங்கக் கோபுரங்கள் பகலில் சூரிய ஒளியிலும் இரவில் மின்னொளியிலும் தகதகக்கின்றன. எங்கு திரும்பினாலும் சங்கு சக்கரங்கள் காட்சி தருகிறது.

திருவேங்கடத்தில் அமர்ந்திருக்கும் வேங்கடநாதன் கோயிலுக்குச் சமேதையாக இந்த நாராயணி கோயில் அமைந்துள்ளது. கோயிலுக்கு வெளிப்புறத்தில் நாற்பது அடி உயரமுள்ள ஒரு செயற்கை நீர் வீழ்ச்சி உள்ளது. பச்சைப் பசேலென்று பட்டுக் கம்பளம் விரித்தது போன்ற புற்தரைகளும் ஒழுங்காக நடப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்காண மரங்களும் இயற்கையும் செயற்கையும் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

நாட்டில் எவ்வளவோ தேவைகள் இருக்கும் போது நாராயணிக்கு பொற்கோயில் எதற்கு ? எனச் சிலர் சொல்கிற போதும் தனி ஒருவராகக் காணப்படும் சக்தி அம்மா மிக இள வயதில் இப்படி ஒரு கோயிலை உருவாக்கியது பெரிய சாதனை என்றே சொல்லலாம். மனிதனின் தேவைகள் என்றுமே முடிவதில்லை. ஈழத்திரு நாட்டிலும் இப்படி அம்மன் அருள் பெற்ற அடியார்கள் இருக்கின்றனர்.

**வேவிலந்தை முத்துமாரியம்மன்**

வடமராட்சிப் பகுதியில், புலோலியில் அல்வாய் என்றொரு கிராமம் அலைவாயிலில் (கடல்முகப்பில்) இருப்பதால் அலைவாய் மருவி அல்வாய் என மாறியதாகச் சொல்பவர்கள் உண்டு. இங்கு கோயில் கொண்டிருக்கும் அம்பிகை ஆலவாய் சம்பந்தப்பட்டிருப்பதால் ஆலவாய் திரிந்து அல்வாய் என்றதாக இன்னொரு காரணமும் சொல்லப்படுகிறது.

ஊரின் கிழக்கே மண் அரித்துத் தாழ்ந்த பிரதேசம் ஒன்று மாரி காலத்தில் கடல் போலக் காட்சியளிக்கும் அந்தப் பிரதேசத்தில் ஒரு கிணறு. கிணறின் உள்ளே உடம்பு தெரியாத படி ஒரு கைமட்டும் வெளியே நீண்டு தெரியும். பிச்சை கேட்கும் பாவனையில் அது இருக்கும். அது ஒரு பெண் தெய்வத்தின் கை என்றும் பலி கேட்டு கை நீட்டுகிறது என்றும் ஒரு கதை உலாவுவதுண்டு. பஞ்ச கன்னியரைப் பலி கொடுத்தால் கிடாரத்தில் பொன் கொடுப்பாளாம் அந்தப் பெண் தெய்வம். இது செவிவழிக் கதையே. கன்னியரைப் பலி கொடுக்க ஒருவரும் முன்வராததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடாரத்தில் பொன்னும் ஒருவருக்கும் கிடைக்கவில்லை. மாயம் நிறைந்த அந்தக் கை இருக்கும் காரணத்தால் அந்தப் பகுதி மாயக்கை என வழங்கலாயிற்று. இங்கே வீரமாப்பாணார் என்றொரு செல்வந்தர் இருந்தார் அவருடைய திரண்ட செல்வத்துக்கு வாரிசாக ஒரு பெண் குழந்தை பிறந்தாள்.

குழந்தைக்கு வள்ளிநாயகி எனப் பெயரிட்டுச் சீராட்டி வளர்த்தனர். வளர்ந்து மணப்பருவம் எய்தியதும் தகுந்த மணமகனைத் தேடி மணம் செய்து வைத்தனர். வள்ளிநாயகி மணமான சில நாட்களிலேயே விதவையானாள். அவள் அதையிட்டு மனமொடிந்து போகாது சக்தி வழிபாடொன்றையே சிந்தையாகக் கொண்டு வாழ்ந்து வந்தாள். மீனாட்சியம்மனை தரிசிக்க ஆண்டு தோறும் தோணியேறி ஆலவாய்க்கு சென்று வருவாள். ஒருமுறை அம்மனைத் தரிசிக்க சென்ற போது அங்கு கண்ட அழகான அம்மன் சிலை ஒன்றை வாங்கி வந்தாள். சிலையை போற்றி பாதுகாத்துப் பூஜை செய்து வந்தாள். வள்ளி நாயகி தன்னுடைய இறுதிக் காலம் நெருங்கும் போது தனக்குப் பின் அம்பிகையை ஆதரிப்பார் யார் எனக் கவலை கொண்டாள்.

வள்ளிநாயகியின் கனவிலே ஒருநாள் அம்மன் தோன்றி வேம்பும் இலந்தையும் உள்ள உங்கள் காணியில் கோயில் கட்டிப் பூஜை செய்யும்படி அருள் வாக்குரைத்தாள். வள்ளிநாயகி அம்மனின் விருப்பத்தை ஊரவர்களுக்கு தெரிவிக்க அவர்கள் வேம்பும் இலந்தையும் இருந்த காணியில் கோயில் அமைத்தனர். அம்பிகையை அங்கு எழுந்தருளப் பண்ணி முத்துமாரி எனப் பெயரிட்டனர். இதுவே வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆயிற்று.

சிறு ஆலயமாகவும், கிராமிய முறையில் அன்பு நெறிப் பூசைகளைக் கொண்டதாகவும் இருந்த ஆலயம் இன்று ஆகம நெறியில் அமைந்த பிரமாண்டமான ஆலயமாக எழும்பி அதற்கேற்ற பூஜை முறைகள், திருவிழாக்கள் என நடைபெற்று வருகிறது. ஒரு முறைதேர்த் திருவிழாவுக்குச் சென்று தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றேன். வடமராட்சிப் பகுதியில் அமைந்த பெரிய கோயிலாக இதையும் கூறலாம்.

போர் காரணமாகப் புலம்பெயந்த பெரும்பாலோர் தாங்கள் தாயகத்தில் இருந்த போது வழிபட்டு வந்த கோயில்களை மறவாது நிதியுதவி அளிப்பதால் சாதாரணமாக மரத்தடியில் வழிபட்டுவந்த வைரவர் கோயில் தொடக்கம் பல கோயில்கள் கட்டிடங்களாகி வர்ணம் பூசப்பட்டு சிறப்பாக விளங்குவதைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில்**

தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்தப் பன்றித்தலைச்சி அம்மன் கோயில். பக்தர் ஒருவருக்கு அருள் செய்ய எடுத்த கோலத்தினால் அதன் வழிப் பெயர் கோயிலுக்கு அமைந்தது. கண்ணகி வழிபாடு கி.பி இரண்டாம் நூற்றாண்டில் கயவாகு மன்னன் ஆட்சிக் காலத்தில் ஆரம்பமானது. கண்ணகி வழிப்பாட்டில் தீராத நோய்களும் தீரும் என்பது மக்களின் நம்பிக்கை.

கண்ணகியம்மனின் தீவிர பக்தர் ஒருவர் ஒருநாள் கோபத்தில் பகைவர் ஒருவருடைய ஆட்டை வெட்டிவிட்டார். கோபம் மாறிய பிறகு தான் செய்த காரியத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளை எண்ணிப் பார்த்த போது தீராத கவலை கொண்டார். இவ்வுண்மை தெரிய வரும்போது சட்டத்தின் பிடியில் அகப்படவும், அதனால் கிடைக்க கூடிய தண்டனையையும் எண்ணிப் பார்த்த போது அவருடைய எண்சாண் உடலும் குறுகியது. சித்தம் கலங்கியது.

ஓடோடி சென்று கண்ணகித் தாயிடம் சரணடைந்தார். தாயை வேண்டி செய்த பிழையை மன்னிக்க கோரும் போது எந்தத் தாய்த் தான் பொறுக்கமாட்டாள். கண்ணகியம்மா என்றால் என்ன? மீனாட்சியம்மா என்றால் என்ன? எல்லோரும் தாயல்லவா. சோதனைக்கு வந்த காவலாளிகளுக்கு ஆட்டுத்தலை பன்றித்தலையாக தெரிந்தது. இதனால் பக்தர் தண்டனையில் இருந்து தப்பித்து கொண்டார். அவர் அதற்கு பின்னால் அன்னையின் பணிக்கு தன்னை அர்பணித்துக் கொண்டார்.

அன்று முதல் கண்ணகியம்மன் என்ற பெயர் முக்கியத்துவம் குறைந்து பன்றித்தலைச்சியம்மன் என்ற பெயர் பிரபலமாயிற்று. ஆரம்பத்தில் சிறு குடிசையில் பூவும் , நீரும் , தீபமும், பொங்கலும் மட்டுமே அன்புடன் செய்யப்பட்டு வந்த பூசை முறைகள் மாற்றமடைந்து ஆகம முறையில் கோயில் அமைத்து பூசைகளும் அவ்வழியே நடைபெறத் தொடங்கின.

சுமார் அறுபத்தைந்து பரப்பு நிலத்தில் அமைந்துள்ள இக்கோயிலில் இன்று கண்ணகியம்மனோடு ராஜ ராஜேஸ்வரி , சிவகாமி, ஸ்ரீசக்கரம் , எனப் பல படிகள் வளர்ச்சி கண்டு அதற்குறிய பூசைகளும் நடைபெற்று வருவதுடன் மூன்று நிலைகளுடன் கூடிய ராஜ கோபுரம் ஒன்றும் உருவாகி குடமுழுக்கும் கண்டது. போக்கு வரத்து வசதி இல்லாத பண்டைய நாட்களில் கால் நடையாகவும் , மாட்டு வண்டியிலும் மக்கள் இக்கோயிலுக்கு வருவதுண்டு.


முதலில் இங்குள்ள தீர்த்தத்தில் நீராடித் தூய்மை பெற்று பொங்கல், பலகாரம், போன்ற உணவு வகைகளைத் தயாரித்து கோயில் வாசலில் அன்னைக்கு படைத்து அடியார்களுக்கும் வழங்குவர். அன்புடன் அடியார்கள் நிவேதிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை அன்னையும் ஏற்று அவர்களுக்கு அருளை வாரி வழங்குவதாக அடியார்களின் நம்பிக்கை. பங்குனி மாத வெய்யிலில் பல ஊர்களில் இருந்தும் வரும் பக்தர்களுக்கு தாக சாந்தியளிக்கத் தண்ணீர் பந்தல் கைங்கரியமுண்டு.

கொடிய நோய்களில் இருந்து சுகம் பெறுவோர் வேண்டிக் கொள்வதுண்டு. அதன் படி நோய் நீங்கியதும் நேர்த்திகளைத் நிறைவேற்றக் காவடி, பாற்சொம்பு, கண்மலர் தானம், என்பவை ஏராளம். அன்பு நெறிகளில் அமைந்த கோயில்களில் ஆகம முறைகளிலும் பூசை செய்யலாம். ஆகம முறையில் அமைந்த கோயில்களில் அன்பு நெறி பூசை செய்ய இயலாது. பெரிய புராணத்தில் தொண்டர்கள் எந்த ஆகமத்தையும் பின் பற்றாது தங்கள் வழியிலே வழிபட்டு மோட்சம் அடைந்தாக வரலாறு கூறுகிறது. இதைக்காரணமாகக் கொண்டு ஒழுங்கான பூசை செய்வதற்கு அலுத்தவர்கள் எல்லாம் அன்புப் பூசை செய்கின்றோம் , மனதால் பூசை செய்கின்றோம் என்று சொல்லி விட முடியாது. ஆரம்பத்தில் அன்பு இல்லாவிட்டாலும் ஒழுங்கு முறையில் செய்து வரும் போது அன்பும் , அருளும் தானகவே வந்து சேர்ந்து விடும் என்பது அறிஞர்களின் கருத்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பிகையுடன் ஆனந்தமான ஒன்பது இரவுகள்

அமெரிக்க நாட்டில் அருளை வாரி வழங்கிக்கொண்டிருக்கும் அன்னை ராஜராஜேஸ்வரி கோலோச்சும் இடம் நியூயோர்க் மாநிலத்தில் உள்ள ரஷ் நகரம். ஒவ்வொர் ஆண்டும் பிரம்மோத்ஸவமாக சாரதா நவராத்திரியின் போது நடைபெறும் விழா இவ்வாண்டு 28. 9. 13 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 . 10. 13 குளிர்த்தியுடன் நிறைவு பெற்றது. நவராத்திரி ஒன்பது திங்களும் இவ்வாலயத்தில் தங்கி இந்த விழாவைக் காணவும் தேவியைத் தரிசிக்கவும் வாய்ப்புப் பெற்றேன்.

5.10.13 ஆரம்பமான இப் பூசை காலையில் கோமாதா பூசை, அஸ்வபூசை இவற்றுடன் ஆரம்பமாகி திக் தேவதைகள் ஹோமகுண்டத்தைச் சுற்றி ஆவாஹனம் செய்யப்பட்டுப் பிரதான கலசம் ஸ்தாபனம் செய்யப்பட்டது. அடியிலே பிருதிவி தத்துவத்தின் அடையாளமாக மண் பரப்பப்பட்டு அதன் மேல் ஆளுயரத்துக்கு ஒரு கலசம் அமைத்து அதிலே நீர் நிரப்பி அபிடேகத்துக்கு வேண்டிய திரவியங்கள் சேர்த்து ஸ்தாபனம் செய்யப்பட்டது.

கலசத்தை அம்பாளாகவே அலங்கரித்து பூசனைக் குரியதானது. யாக குண்டத்தைச் சுற்றி வர அஷ்டலக்ஷ்மிகளும் துணை லக்ஷ்மிகளாக எட்டும் ஆக பதினாறு லக்ஷ்மிகளுக்கும் ஆராதனை இடம் பெற்றது. வாஞ்சாகல்ப கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் முடிந்ததும் மகாலக்ஷ்மி ஹோமம் விஷேடமாக இடம் பெற்றது. ஏழைப் பிராமணனுக்கு அருள வேண்டி ஆதிசங்கரர் பாடி நெல்லிக் கனிகளை (தங்கமழையாக) பொழிவித்த கனகதாரா ஸ்தோத்திர ஹோமம் நடைபெற்று நெல்லிக்கனிகள் ஆகுதியாக ஹோமத்தில் அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஸ்ரீராஜ ராஜேஸ்வரிக்கு விஸ்தாரமான பஞ்ச சூக்த அபிடேகமும், விசேட அலங்காரமும் இடம் பெற்றது. சூக்தங்களை ஐயாவின் மாணவர்கள், சிஷ்யர்கள், முறைப்படி ஐயாவிடம் தீட்சை பெற்றவர்கள் எனப் பெருந் தொகையானோர் ஓதுவது குறிப்பிடக் கூடிய ஒன்று. மந்திர தீட்சை பெற்றவர்கள் முறைப்படி வேதங்களைப் பயின்று இன பேதமின்றி சிறியவர், பெரியவர் என ஒன்று சேர்ந்து சுருதி சுத்தமாக ஓதுவது ஒரு புரட்சி என்றே சொல்லலாம்.

லலிதா சஹஸ்ர நாமத்துடன் பூசை இடம் பெற்று சர்வ தேவதா பலிக்குப் பின்னர் மதிய உணவு பிரசாதமாக நிற்பவர்கள் எல்லோருக்கும் வழங்கப்படும். எல்லோரும் வந்தோம், தரிசித்தோம், பசியாறினோம், போவோம் என்றில்லாமல் கோயிலிலே தங்கியிருந்து மாலை நேரம் நடைபெறும் ஸ்ரீசக்கர பூசைக்கு நின்று அம்பாளைத் தரிசிப்பார்கள். இடைவேளைகளில் ஐயா கூறும் அறிவுரைகளைக் கேட்டுப் பயன் பெறுகிறார்கள்.

மணிக்கணக்காக அலுக்காமல், சலிக்காமல் சூக்தங்களை ஓதுவதும் ஓதாதவர்கள் கூடக் கேட்டுக் கொண்டிருப்பதும் ஒரு அதிசயமான நிகழ்வு.ஐயாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிஷ்யர்களே இந்த அபிடேகம், அலங்காரம், ஆராதனை இவைகளையெல்லாம் செய்வதற்குப் பயிற்றப்பட்டிருக்கிறார்கள்.

விபூதி, ருத்திராக்கம் அணிந்து நம் பாரம்பரிய உடையில் பூசை செய்வதும், ஓடியோடித் தொண்டுகள் செய்வதும் அதிசயமான நிகழ்வு. இப்படி இரண்டு நாட்களும் தொடர்ந்து நடைபெற்று மூன்றாம் நாள் மாலைப் பூசைக்குப் பின் தேவி ஸ்ரீ துர்கையாக ஆலயத்தை வலம் வந்து அருளை வாரி வழங்கினாள்.

எட்டு நாட்களும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு லட்சுமிகளுக்கு உரிய சத நாமாவளிகள் சொல்லி ஆராதனை செய்யப்பட்டனர். இந்த வரிசையில் மூன்றாம் நாள் வீர லட்சுமியாக ஆராதிக்கப்பட்டாள். ஐந்தாம் நாள் மாலை அன்னை காமதேனு வாகனத்தில் ஸ்ரீமகாலட்சுமியாக ஆரோகணித்து வீதி வலம் வந்து அருள் செய்தாள். சலனமற்ற சிவன் படுத்திருக்க அதன் மேல் தேவி உட்கார்திருப்பது போன்ற ஓர் உருவச்சிலை ஆலயத்தின் கருவறையில் உண்டு.

அம்பாளின் இந்தச் சிலைதான் அன்றைய பரிக்கிரமாவில் இடம் பெற்றது. சிவனிலிருந்து தோன்றிய சக்தியை உருவகப் படுத்திய நிலை அது. எட்டாம் நாள் மாலைப் பூசைக்குப் பின் தேவி ஸ்ரீ சரஸ்வதியாக எழுந்தருளி ஆலயத்தை வலம் வந்தது கண்கொள்ளாக் காட்சி. மாலை நேரம் இரண்டு சகோதரிகள் கோயிலுக்கு வந்து தேவியைப் பாடி அருள் பெற்றுச் சென்றார்கள்.

ஒன்பதாம் நாள் அதிகாலையில் இருந்தே விஸ்தாரமான சண்டி ஹோமம் செய்து ஸ்தாபனம் செய்யப்பட்டிருந்த பிரதான கலசம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டுத் தேவிக்கு அபிடேகம் செய்யப்பட்டது. விசேட அலங்காரங்களுக்குப் பின் ஆராதனை இடம் பெற்று தேவி தேரில் காட்சி தந்தாள். அன்று விடுமுறை தினமாக இருந்ததால் வெளி மாநிலங்களிலிருந்தும், கனடாவிலிருந்தும் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர். ஐயாவும் அவர் துணைவியும் ஆலயத்தை தங்கள் மூச்சாகவே கருதி பராமரித்து வருகின்றனர்.

ஐயாவின் சிஷ்யர்கள் பல வருட காலம் ஐயாவிடம் பயின்று தேவியின் திருவருளும், குருமுதல்வரின் பேரருளும் பெற்று இவையெல்லாம் செய்கிறார்கள். ஹரன் ஐயா பசியுறக்கம் பாராது தனது சிஷ்யர்களுடன் நேரத்தைச் செலவழிப்பதும், அவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாக பதில் கூறுவதும் உள்ளத்தைத் தொடும் ஒன்று. ஆன்மிகமா, அரசியலா, சரித்திரமா எந்தெந்தத் துறையில் கேள்வி கேட்டாலும் அவரிடமிருந்து உடனே பதில் கிடைக்கும். சுருக்கமாகச் சொன்னால் அவர் ஒரு நடமாடும் கலைக் களஞ்சியம் ( **Encyclopedia** ) என்று கூறலாம்.

பூசைகள் எல்லாம் முடிந்து பக்த கோடிகள் எல்லாம் சென்று கோயில் கதவு சாத்தப்பட்ட பின்னரும் ஐயா சாதாரணமாக அமர்ந்திருந்து இளம் சிஷ்யருடன் அளவளாவி அவர்களுடைய விளையாட்டுத் தனமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளுக்கெல்லாம்,அவர்கள் வழியிலேயே விளையாட்டுத்தனமாகவும், நகைச்சுவையாகவும் பதில் சொல்லி அவர்களை நல்வழிப் படுத்துவதைப் பார்க்கும் போது ஒரு தந்தையின் அன்பை ஐயாவிடம் பார்க்க முடிகிறது.

ஐயாவுக்கு சிறுவயதில் ஆசிரியராயிருந்த ஒரு மூதாட்டியைக் கோயிலில் சந்தித்தேன். தன்னுடைய மாணவரிடமே உபதேசம் பெற்று அவரைக் குருவாக ஏற்றுக்கொண்டு வணங்குகிறார் என்றால் குருவின் மகிமையை வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியுமா? இப்படி ஒரு குருவை நமக்களித்த ராஜ ராஜேஸ்வரியின் மகிமையை எப்படிப் போற்றுவது.

தாந்திரீக முறையில் அமைந்த இந்தக் கோயிலில் தேவியைத் தொட்டு வணங்குவதற்கு தடையில்லை. தொடாமலே அம்பிகையின் பார்வை (எப்போதும் கண்களைத் திறந்து நம்மைப் பார்ப்பது போல) மனதுக்குள் ஊடுருவிச் செல்கிறது.

வாழ்க ஸ்ரீராஜ ராஜேஸ்வரி பீடம்
ஸ்ரீ சைதான்யானந்த சரஸ்வதி வாழியவே
ஸ்ரீ ஞானம்பா சமேத சைதான்யானந்த நாத சரஸ்வதி
வாழிய வாழியவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேசியாவில் சைவமும் தமிழரும்

தமிழர் செல்லுமிடமெல்லாம் தாங்கள் வழிபடும் தெய்வங்களையும் எடுத்துச் சென்று கோயில் கட்டி வழிபடுவது நாம் அறிந்த ஒன்று. மலேசியாவிலும் இத்தகைய நம்மவர் கோயில்களை, என்னுடைய மலேசியாப் பயணத்தில் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. என்னுடைய நெருங்கிய நண்பி கமலம் அம்மாவின் எண்பதாவது பிறந்தநாளை அவருடைய பிள்ளைகள் விமரிசையாகக் கொண்டாடினார்கள். எனக்கும் அந்த விழாவில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்த காரணத்தால் எனக்கு மலேசியாப் பயணம் அமைந்தது.

மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூருக்கு அருகில் ஏழு மைல் தொலைவில் அமைந்துள்ள பத்துமலை முருகன் கோயில் விஷேடமாகப் பேசப்படும் ஒன்று. தைப்பூசத் தினத்தன்று தமிழகத்தைப் போலவே பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு காவடி, கரகம், பால் சொம்பு எனத் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றார்கள். வெளிநாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் அங்கே வாழும் பிற இனத்தவர்கள் என எல்லோரும் மலை ஏறிச் சென்று குன்றாடும் குமரனைத் தரிசித்துச் செல்கிறார்கள்.

மலையடிவாரத்தில் ஒரு பெரிய முருகன் சிலையை சில வருடங்களுக்கு முன் அமைத்திருக்கிறார்கள். வானத்தைத் தொடுவது போன்ற தோற்றம் கொண்ட அந்தச் சிலை உலகத்திலேயே உயர்ந்த முருகன் சிலை எனச் சொல்லலாம். காலைக் கதிரவன் பொன்னொளியில் ஏற்கனவே பொன்னிறமான சிலை தக தகவென ஜொலிப்பது கண் நிறைந்த காட்சி. சூரபத்மனுக்கு காட்சி கொடுத்த விஸ்வரூபத்தை மனதில் கொண்டு செய்யப்பட்டது போல் தோன்றுகிறது. கோயிலைத் தரிசிக்க மலை மேலே முந்நூறு படிகள் ஏறிச் செல்ல வேண்டும். என்னுடன் என்னுடைய எண்பது வயது நண்பியும் அவர் குடும்பத்தினரும் மலையேறி முருகனை தரிசிப்பதாக ஏற்பாடு.

என்னுடைய உடல்நிலையில் மலையேறிச் செல்வது சுலபமானதாக இருக்கவில்லை. இருந்த போதும் என்னை விட வயதில் மூத்தவரான கமலம் அம்மா தானும் மேலே ஏறி வந்து என்னை முருகனைத் தரிசனம் செய்ய வைக்க வேண்டும் என மனம் துணிந்த போது என்னால் இயலாது என்று கூற முடியவில்லை. உடம்பில் தோன்றும் பலவீனத்தின் பிறப்பிடம் மனதினுள் தான் இருக்கிறது என்பது அறிஞர்கள் கருத்து. உடல் உள்ள படியே மனத்தால் செயல்படுத்தப் படுகிறதாகவும் அறிஞர்கள் சொல்வதுண்டு. எஜமான் தன்னை அதிகாரம் செய்ய வேலைக்காரனுக்கு இடம் கொடுத்து விட்டால் சீக்கிரமே அந்த வேலைக்காரன் எதேச்சாதிகாரியாகி விடுவது போல் மனமும் உடலின் ஆளுகைக்கு உட்பட்டு விட்டால் அடங்கிப்போய் விடுவதைத் தவிர வேறு வழியில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலின் ஆளுகைக்கு இடம் கொடுக்காமல் மனதை ஒரு முகப்படுத்தி ஏறத் தீர்மானித்தேன். பத்துப் படிகள் ஏற மூச்சு திணறும் எனக்கு முந்நூறு படிகளும் ஏறிச் செல்வதில் சிரமம் தெரியவில்லை. நான் முதலிலே மேலே சென்று விட்டேன். மேலே சென்றதும் குகை போன்று கீழே இறங்கிச் செல்ல வேண்டும். சென்றால் ஈழத்துக் கதிர்காமத்தில் கதிரமலையில் கோயில் கொண்டுள்ள வேல் முருகன் ஞாபகத்துக்கு வருகிறது. நாங்கள் சென்று சேர்ந்த சமயம் வேல் முருகனுக்கு அபிடேகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கண்குளிர அபிடேகத்தைப் பார்த்ததில் ஏறி வந்த களைப்பே தெரியவில்லை. அபிடேகம் முடிந்து அலங்காரம் செய்யும் நேரம் திருமுறைகள், திருப்புகழ்கள் என பக்திப் பாடல்களைப் பாடினோம். "அளப்பில் கீதம் சொன்னார்க்கு அடிகள் தாம் அருளுமாறே" என்று நாவுக்கரசரின் பாடலுக்கு உதாரணம் கமலம் அம்மா எனலாம். எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் பக்திப் பாடல்கள் இசைக்கத் தவறுவதில்லை. பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறுவது போல் அவருடன் சேர்ந்தால் பாடாதவர்களும் பாடிவிடுவார்கள்.

அலங்காரம் முடிந்து தீபாராதனைக்கு திரைகள் திறக்கப்பட்ட போது மெய் சிலிர்க்க வைக்கும் மலர் அலங்காரம் கண்டோம். வெறும் வேலாக அபிடேகத்தின் போது கண்ட முருகன் அலங்காரத்தில் (முருகனின் முழு உருவத்தை) தீபாராதனையில் அற்புதமான முருகன் திரு உருவத்தை தரிசித்தோம். இதன் பின்னர் பிரசாதம் பெற்றுக்கொண்டு இன்னும் சில படிகள் ஏறிச்சென்றால் வள்ளி, தெய்வயானை, வேல் இவைகள் சகிதமாக மயிலுடன் முருகனைத் தரிசித்தோம். இந்த இடத்தில் வெளிச்சம் வருவதற்கு அமைந்தது போல் வானத்தைக் கூரையாகக் கொண்டு ஒரு பிரகாரம் உண்டு.

அந்தப் பிரகாரத்தில் சுவாமிநாதனாகக் காட்சியளிக்கும் ஒரு சிலையும், சிவகாமி சமேத நடராஜப்பெருமானின் சிலையும் உண்டு. நம்முடைய மூதாதையர்கள் அங்கு வெகு சுதந்திரமாக உலாவுகிறார்கள். அர்ச்சனைப் பொருட்களை யாரும் திருப்பிக் கொண்டுவர முடியாது. கொடுத்தே தீர வேண்டும். இல்லையென்றால் தாங்களாகவே பறித்துக் கொண்டு விடுவார்கள். தரிசனம் முடிந்ததும் சிரமமின்றி படியிறங்கி வீடு வந்து சேர்ந்தோம்.

அடுத்து கோலாலம்பூரிலிருந்து 140 மைல் தொலைவில் பஹாங் மாநிலத்தில் குவாந்தானிலிருந்து ஜெரண்டுட் செல்லும் பாதையில் 67வது மைலில் மாரான் நகரில் கோயில் கொண்டிருக்கும் மரத்தாண்டவர் ஆலயம். மலைச்சரிவில் சோலை சூழ்ந்த இடத்தில் காட்டாற்றின் அருகாமையில் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது. ஜெரண்டுட் சாலை அமைக்கும் போது குறுக்கே நின்ற மரத்தை வெட்டவும் மரத்திலிருந்து ரத்தம் கொப்பளித்தது. அதைக் கண்ட தொழிலாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டாமல் சென்று விட அவ்வழியே வந்த ஒரு பெரியவர் அந்த மரத்தடியில் வேல் ஒன்றை நாட்டி வைத்தார். மரமாகி நின்ற முருகன் வேலாகி நாளடைவில் குடிசையில் வேல் தாங்கிய வேலவனாகி, இன்று பல்லாயிரக் கணக்கானவர்கள் வந்து வழிபடும் கோயிலாக உள்ளது. சன சந்தடியும் ஆரவாரமும் இல்லாது அமைதியாக வழிபாட்டுக்குரிய கோயிலாகவும் உள்ளது. தமிழ் நாட்டைச் சேர்ந்த குன்றக்குடி அடிகள், கிருபானந்த வாரியார், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஹென்றி முல்லர் ஆகியவர்கள் வந்து தரிசித்துச் சென்றிருப்பதாக கூறப்படுகிறது. பஹாங் மானில மன்னர் சுல்தானும் மரத்தாண்டவர் ஆலயத்தின் வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டவர். குறுக்கே மரம் நின்றதால் மரத்தைத் தாண்டி செல்ல வேண்டியிருந்ததால் மரத்தாண்டவர் எனப் பெயர் பெற்றது. பின்னாளில் சாலையைச் சிறிது தொலைவுக்கு மாற்றியமைத்து கோயிலை விரிவுபடுத்தி 7.2.73 அன்று மரத்தை உள்ளே பாதுகாப்புடன் வைத்து எழுப்பப்பட்ட கோயிலை பஹங் சுல்தான் திறந்து வைத்தார்.

கோட்டூர் மலை விநாயகர் கோயில் அடுத்து மலேசியாவில் நான் தரிசித்த கோயில். விநாயகருக்கு ஒரு சந்நிதி மட்டுமே உள்ள சிறிய கோயில். சிறு கோயில் என்ற போதும் கிறனைற் கல்லினால் உயரிய வேலைப் பாட்டுடன் கூடிய கருவறை அமைந்துள்ளது. கருவறையின் சுற்றுப் பிரகாரத்தில் சுவரில் விநாயகரின் வித விதமான தோற்றங்கள் சிலாரூபத்தில் பொருந்தியுள்ளன.

கோஷ்டத்தில் மற்றத் தெய்வங்களின் உருவங்கள் உண்டு. இத்தனை சிறிய கோயிலில் பூஜைகள் பிரமாண்டமாக நடைபெறுகின்றன. தினந்தோறும் ஆயிரத்தெட்டுச் சங்குகள், ஆயிரத்தெட்டுக் கலசங்கள் கொண்டு விநாயகருக்கு அபிடேகம் நடைபெறுகிறது. தாமரை மலர்கள் அர்ச்சனைக்கு பாவிக்கப்படுவதுடன் தமிழில் அர்ச்சனை நடைபெறுகின்றது. பூஜை முடிந்ததும் விதவிதமான உணவு வகைகள் அடியார்களுக்கு வழங்கப்படுகிறது.

செட்டியார்கள் சமூகம் இந்தக் கோயிலை ஆதரிப்பதால் இந்தப் பிள்ளையாரை மலேசியாவிலேயே பணக்காரப் பிள்ளையார் எனப் பேசிக்கொண்டார்கள். தினமும் ஒவ்வொருவர் பூசை செய்கின்றனர். வருட ஆரம்பத்திலேயே 365 நாட்களுக்கும் ஆட்களைப் பதிவு செய்து விடுவார்களாம். அடுத்து காமாட்சியம்மன் கோயில் இரு நாழி நெல் கொண்டு அண்டம் எல்லாம் உய்ய அறம் செய்வாள் அம்பிகை என்பது அபிராமிப்பட்டர் வாக்கு இத்தகைய காமாட்சியின் கோயில் ஏனோ நன்றாக பராமரிக்கப்படவில்லை. தரிசிப்பவர்களும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றார்கள் .ஆலயம் அமைந்த சூழலா? அல்லது நிர்வாகமா? காரணம் தெரியவில்லை. மலேசியாவில் உள்ள சைவக் கோயில்களில் இந்த நாலும் உதாரணமே ஒழிய இன்னும் பல கோயில்கள் அங்கே மக்களால் வழிபடப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியா கோயில் வழிபாட்டுக்குப் பிறகு அங்குள்ள தமிழர்களின் வரலாறு பற்றியும் மலேசியாவின் சரித்திரம் பற்றியும் என் நினைவு சென்றது. இலங்கையைப் போலவே பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முந்திய மலேசிய வரலாறு ஆதாரபூர்வமாக வரையறுத்துக் கூற முடியாததாகச் சொல்லப்படுகிறது. தொல்பொருள் ஆராட்சியில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள், மண்டை ஓடுகள் மூலமும், அரபிய, சீன யாத்திரிகர்களின் செய்திகள் மூலமும், சில கல்வெட்டுக்கள் மூலமும் சில செய்திகள் உண்டு. போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்பு சில காலம் ஸ்ரீவிஜய பரம்பரையினர் ஸ்திரமான ராஜ்யமாக ஆண்டதாக வரலாறு கூறுகிறது. வர்த்தகத்தில் தொடர்பு கொண்ட இந்தியர்களால் இந்து சமயமும், பௌத்த சமயமும் இடம் பிடித்தன. அரபியர்களால் இஸ்லாம் சமயம் உள் நுழைந்தது.

தொல்பொருள் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டவை மூலம் கருமை நிறம் கொண்ட நெக்ரிடோஸ் என்றழைக்கப்படும் ஒறாங் அஸ்லி இனத்தவர் இந் நாட்டின் ஆதிகுடிகளாவார். அரேபியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், சீனாமுதலிய நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களுடன் இணைந்து கொண்டு மலாய்மொழி பேசுபவர்களாகவும், இஸ்லாம் சமயத்தவர்களாகவும் பெரும்பான்மையானோர் மாறினர்.

பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர்களின் வருகையின் போது பெரும்பாலானோர்கள் ஏற்றுக் கொண்ட சமயமாக இஸ்லாமும், மொழியாக மலாயும் அமைந்தன. சுல்தான்களின் ஆட்சியில் மலாய் விளங்கியது. சுல்தான்களின் ஆட்சியில் இஸ்லாம் முதலிடம் வகித்தது. போர்த்துக்கேயர் ஆட்சியில் அவர்கள் கரையோர வர்த்தகத்தைக் கைப்பற்றி அங்கிருந்த மசூதியை அழித்து தங்கள் கோட்டையைக் கட்டத் தவறவில்லை. இவர்களின் வருகைக்குப் பின் சிலர் கிறிஸ்தவர்களாகவும் மாறினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டனின் ஆட்சி வலுப்பெறத் தொடங்கி ஆசிய நாடுகளில் தங்கள் வர்த்தகத்தை விஸ்தரித்த போது மலேசியாவிலும் காலூன்றத் தவறவில்லை. ஆங்கிலேயர் ஆதிக்கப் பரவல் ஏற்படத் தொடங்கிய காலத்தில் பல நூற்றாண்டு காலமாக பல விதமான கலாச்சாரங்களை உள் வாங்கியிருந்த மலேசியா ஆங்கிலேயர்களின் கலாச்சாரத்தையும் ஏற்றுக்கொண்டு விரைவாக வளர்ச்சி காணத் தொடங்கியது.

ஆங்கிலேயர்களின் தொழில் நுட்பத்தை, வாழ்க்கை வசதிகளை ஏற்றுக் கொண்ட மலேய் சமூகம் கிறிஸ்தவக் கல்வியையும், கோட்பாடையும் ஏற்றுக் கொள்ளாததுடன் இன்னும் பலம் பெற்ற இஸ்லாம் சமூகமாக நிலை கொண்டது. ஆங்கிலேயர்களின் ஆட்சியில் கடும் உழைப்பாளிகளான சீனர்களைக் குடியேற்றி அவர்கள் உழைப்பைப் பெற்று லாபம் பெற்றனர். அதனால் சீன இனத்தவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை கணிசமாக உயர்ந்தது. காலப் போக்கில் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிமுகப்படுத்திய பாராளுமன்ற ஆட்சி முறைக்கு மலேயும் மாறியது.

இலங்கையிலிருந்து யாழ்ப்பாணத் தமிழர்களை வரவழைத்து அரசாங்க பதவிகளில் நியமித்தது. தென்னிந்தியாவிலிருந்து வசதி குறைந்தவர்களை வரவழைத்துத் தோட்டங்களிலும், வீதிகளிலும் வேலை செய்ய உபயோகப்படுத்தியது. இந்நேரம் செட்டி நாட்டவர்களின் குடியேற்றமும் அதிகரித்தது. மற்ற நாடுகளில் செய்தது போல் மாநில வாரியாகப் பிரித்து ஒற்றை ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்தது. இந்தக் காலகட்டத்தில் ஆங்கிலேயர் வழி மலேயா சென்றது என்ற போதும் இலங்கையிலும், இந்தியாவிலும் செய்யப்பட்டதைப் போல் ஆண்டு வந்த மன்னர் பரம்பரையை ஒரேயடியாக ஒழித்துக் கட்ட முடியவில்லை. நிர்வாகத்தில் அவர்களும் பங்கு பற்றும் வாய்ப்பு இருந்தது. (பதவிகளுக்கும், வசதிகளுக்கும் வளைந்து கொடுக்காது முஸ்லீம் சுல்தான்கள் உறுதியாக நின்றமை இதற்கு காரணமாய் இருக்கலாம்) இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எண்ணெய் தரும் ஒரு மரத்தை ( PALM) புதிதாக அறிமுகம் செய்தனர். இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் சில காலம் ஜப்பானியரின் ஆதிக்கத்திலும் மலேயா இருந்தது. அப்போது மலேயா அதிகாரிகள் ஜப்பானியர்களின் உதவியாளராகச் செயல்பட்டனர்.

1957ம் ஆண்டில் மலேய் சுதந்திரம் பெற்றது. மலேய் மொழி தேசிய மொழியாகவும் இஸ்லாம் சமயம் தேசிய சமயமாகவும் கொண்டு சட்டம் வரையப்பட்டது. எந்த இனத்தவராயிருந்தாலும் மலேயாவில் பிறந்தவர்கள் மலேய் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப் பட்டனர் என்றபோதும் இஸ்லாம் சமயத்தவர்களாகவும், மலாய்மொழி பேசுபவர்களாயும் இருப்பவர்களுக்கு முதலிடம் கிடைத்தது. இதனால் மற்றச் சமூகத்தினர் பெருஞ் சங்கடங்களை எதிர் கொள்ள வேண்டி ஏற்பட்டது. 1963ம் ஆண்டில் மலேசியா என்று பெயரிட்டு தேசம் உருவாகியபோது பல இன சமூகங்களுக்கிடையே ஏற்பட்ட ஆதங்கம் காரணமாக 1969ல் இனக் கலவரம் உண்டானது. பல இனத்தவர்கள் குடியேறிய நாட்டில் ஒரு இனத்தவர் மட்டுமே உரிமை பெறும் பட்சத்தில் மற்ற இனத்தவர்களுக்கு ஏற்படும் சங்கடங்கள் மலேசியாவில் வசிப்பவர்களுக்கும் உண்டு.

சமயத்தைப் பொறுத்தவரை இஸ்லாமுக்கு முதலிடம் என்ற போதும் மற்ற சமயத்தவருக்குத் தடை விதிக்கப்படாததால் மற்ற சமயத்தவர்கள் தங்கள் வழிபாடுகளை சுதந்திரமாகச் செய்கின்றனர். கடைசியாகப் பிறந்தநாள் விழாவுக்கு வருகிறேன். சைவத் தமிழர்களின் பாணியில் வாசலில் பெரிய விநாயகர் சிலை ஒன்று ஆலயம் போன்ற அமைப்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கிறது. மங்கள வாத்தியம் முழங்க, பட்டாசு கொளுத்தி விழாவின் நாயகியை மண்டபத்துக்கு முதலில் அழைத்து வருகின்றனர். கமலம் அம்மாவின் பேத்தி அபிராமி அம்மைக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதம் இசைத்து விழாவை ஆரம்பித்து வைக்க, நடனப் பெண் ஒருத்தி மயில்போல் நடனமாடி வரவேற்க, நவீன பாணி இசை, நண்பர்கள் வாழ்த்துக்கள், சுவையான உணவு வகைகளுடன் விழா சிறப்பாக நடைபெற்றது.

அம்மாவைக் கௌரவிக்கும் வேளை நானும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தேன். அது சமயம் என்னைச் சபையோருக்கு அறிமுகம் செய்து வைத்தார். என்னுடைய ஆன்மீகப் பயணங்கள் பற்றியும், அதைப்பற்றி நான் எழுதிய புத்தகம் பற்றியும் விபரித்து வெளியீட்டின் போது கிடைத்த தொகையை இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குக் கொடுத்தது பற்றிச் சொன்ன போது பலத்த கரகோஷம் எழுந்தது. இது மலேசியாவிலும் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாளர்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்த்தியது. மலேசியாவில் தமிழ் படிக்கத் தடையில்லை அரசாங்கம் அதை ஆதரிக்கிறது. ஆனால் மலேய் மொழி படித்தால் மட்டுமே வேலை கிடைக்கும் என்பதால் மலேய் மொழியையும், உலக பாசையாக ஆங்கிலத்தையும் படிக்க விரும்புவதால் வசதியுள்ளவர்கள் மத்தியில் தமிழ் விரும்பிய பாடமாக இல்லை.

முதலாவது தமிழாராய்ச்சி மகா நாட்டைச் சிறப்பாக நடாத்திக் காட்டியவர்கள் மலேசியாத் தமிழர்கள். சீனர்கள் ஒற்றுமையாக தங்கள் சொந்தப் பணத்தில் சீனமொழிப் பள்ளிகளைக் கட்டி நடத்துகிறார்கள். தமிழர்கள் கோயில் கட்டிய அளவுக்குப் பள்ளிக்கூடம் கட்டவில்லை. கட்டிய கோயில்களிலும் ஒற்றுமையாக செயல்படுவதில்லை. அதிலும் பிரிவுகள். இது தமிழினத்தின் சாபக் கேடு போலும்.

எங்கு சென்றாலும் பிரிவினையை கூடவே எடுத்துச் சென்று விடுகிறார்கள். மலேசியாவின் தேசிய சின்னமாக கோலாலம்பூர்க் கோபுரம், ( twin tower) என்று அழைக்கப்படும் இரட்டைக் கோபுரங்களும் இஸ்லாமியரின் சின்னமாகப் பிறை நட்சத்திரமும், இந்துக்களின் அடையாளமாக இன்று வானளவு உயர்ந்து நிற்கும் பத்து மலை முருகனின் உருவமும் விளங்குகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகப் பயணத்தின் இனிய நினைவுப் பகிர்வு

## நூல் பற்றிய எண்ணப்பதிவுகள்

திருமதி இராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்துக்கு எனது வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டு மல்ல அவர் பல வகைகளில் பாராட்டுக்குரியவர். என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவிப்பது மிகவும் அவசியமானதாகும்.

(1) இந்த வயதில் இப்படி ஒரு நூலை வெளியிட்டமை

(2) எல்லோரும் நினைப்பதை எழுத்தில் வடித்த உழைப்பு

(3) எழுதுவதற்கு ஒரு துணிவு தேவை என்ற நினைப்பைத் தகர்த்த துணிச்சல்

(4) யாவரும் எழுதலாம் என்று எழுத நினைப்பவர்களுக்கு எல்லாம் ஒரு முன் உதாரணம்

இப்படி எல்லா வகையிலும் அவர் பாராட்டப்படவே வேண்டியவர் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். ஒரு வகையினர் தமது கல்விப் புலத்தை கொண்டு எழுதுபவர்கள், இன்னொரு வகையினர் தாம் எழுதுவதை விளக்கப் பெரும் பாடுபடும்படி எழுதுபவர்கள், எதை எழுதினாலும் அதனால் காசு வரும் என்ற எண்ணத்தில் எழுதுபவர்கள் இன்னொரு வகையினர், சிலர் எழுதலாம் என நினைத்து தேவையற்றவைகளை எல்லாம் எழுதி குப்பையாக்குபவர். எழுதினால் அது யாவருக்கும் பயன்படும் வண்ணம் எழுதுவதே சிறந்த எழுத்தாகும்.

இந்த வகையில் யாவரும் விளங்கும் வண்ணம் யாவருக்கும் பயன்படும் விடயங்களை தன்னகத்தே கொண்ட வண்ணம் திருமதி இராஜேஸ்வரி அவர்கள் எழுதியிருக்கின்ற காரணத்தால் அவரின் எழுத்து பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எழுத்தாளர் கல்கியை அறியாத தமிழ் வாசகர்கள் இல்லை என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு யாவரையும் ஈர்க்கும் வண்ணம் எழுதும் ஆற்றல் கொண்டவர் கல்கி. அவர் மண்ணைப் பற்றியோ, மரத்தைப் பற்றியோ எழுதினால் கூட அந்த எழுத்தில் கவற்ச்சியும், எழுச்சியும் இருக்கும். வாசிப்பவரை அங்கு, இங்கு, எங்குமே நகரவிடாத ஆற்றல் அவரின் எழுத்துக்கு உண்டு என்பதை யாவரும் ஏற்றுக் கொள்ளுவர்.

இதை இங்கு நான் குறிப்பிடுகிறேன் என்றால் திருமதி இராஜேஸ்வரியும் கல்கியின் அடியொற்றியே இந்த நூலில் மிகவும் கவற்ச்சியான எழுத்து நடையில் விடயங்களை விபரித்து வளர்த்துச் செல்லும் பாங்கை என்னால் கண்டு உணர முடிந்தது எனலாம். இந்த நூலில் முப்பது தலைப்புக்களில் தனது நினைவுகளைப் பகிர்ந்துள்ளார். வீட்டில் இருந்து ஆரம்பிக்கும் நூல் - நிறைவில் வீடு இடம் பெற்ற நாட்டினைப் பற்றிய பார்வையில் நிறைவு பெறுவது வீட்டில் நிறைவு பெறுவதாக கொள்ளலாம் அல்லவா?

வீடு பற்றிய பகிர்வு தொடங்கும் போதே மல்லிகை மலரும் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறுமணமுமே. ஆரம்பமே நூலின் அத்தனை அம்சங்களையும் நறுமணம் மிக்கதாக்கி விடுகிறது எனலாம். தென்னிந்திய, வட இந்திய யாத்திரை பற்றிக் குறிப்பிடும் பொழுது ஒரு கற்பனை என்னிடம் உருவாகியது. விசா எடுக்காமல், விமானச்சீட்டு வாங்காமல், எதுவித செலவுகளுமே செய்யாமல் எங்களையெல்லாம் வடநாட்டுக்கும், தென்னாட்டுக்கும் திருமதி இராஜேஸ்வரி அழைத்துச் சென்று வந்தாரோ என்பது தான் அந்தக் கற்பனை. இது கற்பனையல்ல நிஜம் என்பதை இந்த நூலை வாசிக்கும் போது அன்பர்கள் நிச்சயம் புரிந்து கொள்வார்கள்.

இமயம் சென்ற காக்காய் என்று சுவாமி விபுலானந்தர் தம்மைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியதாக ஒரு ஞாபகம். அதைப் படித்த உணர்வு மீண்டும் என்னிடம் இந்த நூலில் இமயம் பற்றியயாத்திரையை படித்ததும் ஏற்பட்டது.

ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு எல்லாம் சென்று அங்குள்ள கோயில்கள், அவற்றின் செயற்பாடுகள் எல்லாவற்றையும் படம் பிடித்தது போல் காட்டியுள்ளார். திருமதி இராஜேஸ்வரி தான் கண்டதை மற்றவரும் காண வேண்டும் என்ற பேரவாவை திருமதி இராஜேஸ்வரி அவர்களின் நூல் கொண்டிருக்கிறது மட்டுமல்ல அவரின் சமய பக்தியை, ஆன்மீக ஈடுபாட்டைக் காட்டி நிற்கிறது எனலாம். கோயில்கள் பற்றிய தனது மனக் கருத்துக்களை எந்தவித தயக்கமும் இன்றி குறை நிறைகளைச் சுட்டிக்காட்டி இருப்பது அவரின் அநுபவ முதிர்ச்சியையும் மனத் துணிவையும் காட்டி நிற்கிறது எனலாம்.

நாங்களும் பிரயாணம் செய்வோம் கோயில்களைப் பார்ப்போம், பல பேருடன் உரையாடுவோம். ஆனால் மனதில் வைத்திருப்பது என்பதோ மிகவும் குறைவாகவே இருக்கும். அப்படி நினைவு வைத்திருந்தாலும் கூட மற்றவர்களுக்கு அலுப்புத் தட்டாமல் எடுத்துச் செல்வது என்பது இயலாததாகி விடும். ஆனால் திருமதி இராஜேஸ்வரியோ அப்படிப் பட்டவரல்ல. எதைக் கண்டாரோ அதனைத் தனது மனதில் இருத்தி மற்றவர் பயன்படும் படி எழுத்தில் காட்டி விட்டார். இது இறைவனால் இவருக்குக் கொடுக்கப்பட்ட வரம் என்று தான் நினைக்கிறேன். இவரது நினைவாற்றலுக்கும் அதனை யாவரும் விரும்பும் வண்ணம் எழுத்துருவில் இந்த வயதில் கொண்டு வந்தமைக்கும் மேலும் பாராட்டுக்கள்.

இந்த நூலைப்பற்றிய எண்ணங்களை வெளியிடுமாறு அவர் என்னிடம் கேட்டிருந்தார். தவிர்க்க முடியாத காரணத்தால் என்னால் அது முடியவில்லை. எனவே என்னுடைய எண்ணத்தை இக் கட்டுரையின் மூலம் அறியப்படுத்தியுள்ளேன். எல்லாம் வல்ல இறைவன் துணையுடன் மேலும் பல ஆக்கங்கள் வெளியிட எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ம. ஜெயராம் சர்மா **(m.phil (edu) dip.lm.sol)**
முன்னாள் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகப் பயணத்தின் இனிய நினைவுப் பகிர்வு

## நூல் வெளியீட்டு விழா பற்றிய ஒரு நினைவு

காடு எல்லாம் கழைக் கரும்பு
கா எல்லாம் இழைக் குரும்பு
மாடு எல்லாம் கருங்குவளை
வயல் எல்லாம் நெருக்குவளை
கோடு எல்லாம் மட அன்னம்
குளம் எல்லாம் கடல் அன்ன
நாடு எல்லாம் நீர் நாடு
தலை ஒவ்வா நலம் எல்லாம்

இது சோழநாட்டைப் பற்றிச் சேக்கிழார் சுவாமிகளின் கருத்து. இத்தகைய வளங்கள் நிரம்பிய நாட்டு அரசசபை மன்னரும், புலவர்களும் அமர்ந்திருக்கிறார்கள். மன்னருக்கு அரசசபைப் புலவர்களின் பாட்டுக்களை விட உயர்ந்த பாட்டு யாராவது பாட மாட்டார்களா என ஆதங்கம் எழுந்தது. எனவே மன்னரைப் புகழ்ந்து பாடுபவர்களில் உயர்ந்த பாட்டுப் பாடுபவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என முரசறையச் செய்தார்.

நாங்கள் இதுவரை பாடாத பாட்டா அதை யார் பாடப் போகிறார்கள் என அலட்சியமாக இருந்தார்கள் புலவர்கள். இந்த அறிவிப்பைக் கேட்ட சாதாரண குடிமகன் ஒருவனுக்கு இந்தப் பரிசைத் தான் பெற வேண்டும் என நினைவு உண்டாகியது. அவனுடைய மனைவி அவன் சம்பாதிப்பது போதவில்லை என்று அவனை எப்போதும் நச்சரித்துக் கொண்டிருந்தாள். இதனால் தான் பாடி அந்தப் பரிசைப் பெறும் எண்ணம் உண்டானது. ஆனால் பாட்டுக்கு எங்கே போவது சிந்தித்தபடி தெரு வழியே சென்று கொண்டிருந்தான்.

காகா என்று கத்தியபடி காகம் ஒன்று பறந்து சென்றது. அப்போது அவனுடைய மூளையில் மின்னல் போல ஒரு நினைவு பளிச்சிட்டது. காகிறையே என ஒரு வார்த்தையை எழுதி பாட்டின் முதலடியை எடுத்தான். அடுத்து கூகூ என ஒரு குயில் கூவிக் கொண்டே பறந்து சென்றது. ஆகா என்று கூகிறையே என ஒரு வார்த்தையைச் சேர்த்துக் கொண்டான். இப்பொழுது அவனுக்குச் சிறிது உற்சாகம் பிறந்தது. கொஞ்சம் வேகமாக நடந்தான். மண்ணுக்குள்ளே ஒரு பாம்பு நெளிந்து கொண்டிருந்ததைக் கண்டவுடன் மண்ணுண்ணியே என இன்னுமொரு வார்த்தையை எழுதிக்கொண்டான்.

இப்பொழுது இன்னும் வேகமாக நடக்கத் தொடங்கினான். மாப்பிள்ளை ஊர்வலம் ஒன்று அவனைக் கடந்து சென்றது. மாப்பிள்ளையே என இன்னுமொரு வார்த்தை சேர்த்துக் கொண்டான். இப்படியே பாட்டைத் தேடிச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு வீட்டில் கணவனும் மனைவியும் சண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக் கொண்டிருந்தார்கள். சண்டையின் நடுவில் கணவன் உன் அப்பன் என்று உரத்துக் கத்திய இரண்டு வார்த்தைகள் இவன் காதில் எட்டின. உடனே உன் அப்பன் என்ற வார்த்தையை எழுதிக் கொண்டான். இப்போது உற்சாகம் கரை கடந்தது. கோயிலுக்குள்ளே சென்றான். தான் எழுதிய பாட்டிற்குப் பரிசு கிடைக்க வேண்டும் என வேண்டிக் கொண்டான். அப்போது பெருச்சாளி அவன் கண்ணில் படவும் கோயில் பெருச்சாளியே என இன்னும் ஒரு வரி எழுதினான். பாட்டு எழுதியது போதும். பாட்டை அரச சபைக்கு எடுத்துச் செல்வோம் என எண்ணிக்கொண்டு வெளியே வந்தான். கோயில் வாசலில் நண்பர்கள் எதிர்ப்படவும் பாட்டை நண்பர்களிடம் காட்டினான். என்னடா கன்னா பின்னா வென்று ஏதோ எழுதியிருக்கிறாய் என ஒரு நண்பன் கேட்டான் . மற்ற நண்பன் மன்னா சோழங்கப் பெருமானே எனக் கூப்பாடு போட்டுச் சிரித்தான். உடனே கன்னா, பின்னா, மன்னா, சோழங்கப் பெருமானே என இன்னுமொரு வரிஎழுதிக் கொண்டு நண்பர்களைச் சட்டை செய்யாது அரச சபைக்குச் சென்றான்.

சபையில் இருந்த புலவர்களைப் பாட்டைக் கூறும்படி மன்னன் சொன்னான்.

காகிறையே கூகிறையே
மண்ணுண்ணி மாப்பிளையே
உன் அப்பன் கோயில் பெருச்சாளி
கன்னா பின்னா மன்னா
சோழங்கப் பெருமாளே

என்று பாட்டைக் கூறிவிட்டு புலவர்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அப்போது பரிசு பெற வேண்டிக் கவிதையை எழுதிய கவிஞனுக்கு எப்படி இருந்திருக்கும். கிட்டத்தட்ட அவனுடைய மன நிலையில் தான் எனது ஆன்மீகப் பயணத்தின் நினைவுப் பகிர்வு நூல் வெளியீட்டு விழாவின் போது நின்றேன் எனலாம்.

என்னுடைய பயணங்கள் கல்விக்கான பயணங்களாகவே ஆரம்பித்தன. அந்தப் பயணங்களில் கிடைத்த ஆலய தரிசனங்கள் மேலும் பல ஆலயங்களைப் பார்க்கத் தூண்டியது. இதனால் சுற்றுலாக் குழுவினருடன் பயணம் செய்யும் வாய்ப்புக் கிட்டியது. இதன் பின்னர் நீண்ட காலம் இவை சேமித்து வைக்கப்பட்டு இருந்தது. பின்னாளில் சேமித்து வைக்கப்பட்ட உணர்வுகள் என் கடமை முடிந்த நிலையில் ஒரு தேடலாகவே பரிணமித்தது.

தேடலில் குருவைக் கண்டேன், இன்னும் பல பெற்றேன் எனலாம். பயணங்களிலே கண்டதை, கேட்டதை, வாசித்ததை எழுதினேன். மூத்தோர்கள் ஒன்று கூடும் போது என்னுடைய பிரயாண அநுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்படி கேட்பதுண்டு. பேசுவதற்குரிய திறமையோ, குரல்வளமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இல்லையானதால் எழுதி வைத்திருக்கிறேன். உங்களுக்குக் காட்டலாம் அதை என்று நான் சொன்னேன்.

எழுதி வைத்திருந்தால் புத்தகமாக வெளியிடுங்கள் எல்லோரும் வாசித்துப் பயன் பெறலாம் என ஊக்கம் தந்தனர். நாங்களே வெளியிடுகிறோம் என்றும் சொன்னார்கள். அந்நேரம் மூத்தோர் சங்கத்தின் தலைவராயிருந்த திரு. அருளேஸ்வரன் ஊக்கம் தந்ததோடு நின்று விடாது வாழ்த்துரையும் தந்தார்.

என்னுடைய முதல் புத்தகத்தின் பயணம் இந்த வகையில் ஆரம்பமானது. என்னுடைய எழுத்துப் பயனுள்ளதாக அமையுமா? அல்லது குப்பையாகப் போகுமா என்று அடி மனதில் சஞ்சலம் இருந்து கொண்டேயிருந்தது. பேராசிரியர் ஞானகுமார் அவர்கள் கூறிய ஆலோசனைகளை முன்னுரையாக ஏற்றுக் கொண்டேன். ரஞ்சனா பரமேஸ்வரன் அவர்கள் கூறிய ஆலோசனைப்படி வெறும் பயணக் கட்டுரையாக இல்லாது உயிரோட்டமுள்ள ஒரு நூலாக்கினேன்.

என்னுடைய மகனின் நண்பர்கள் இருவர் எழுத்துலகில் பிரபலமானவர்கள் திரு ஜீவகுமாரன், திரு சக்திதாசன் இருவரும் தரமான விமர்சனம் தந்து புத்தகத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். அடுத்து நண்பர்கள் வைத்திய கலாநிதி ராமரத்தினமும், தனேஸ்வரனும் அன்பான வாழ்த்துரை தந்து புத்தகம் இன்னும் கொஞ்சம் கனமேறியது. இவைகளை எல்லாம் பார்த்த பிறகு பாதிக் கிணறு தாண்டிய நிலை வந்தது. இருந்த போதும் அவுஸ்திரேலிய எழுத்துலகம் என்ன சொல்லுமோ, இந்த வயதில் இது தேவைதானா எனவும் எண்ணம் உண்டானது.

முடிவில் புத்தக வெளியீட்டு நாளும் வந்தது. திருவாளர்கள் நிர்மலன் சிவா, சிவசம்பு மாஸ்ரர், திருமதிகள், சாந்தா ஜெயராஜ், சாந்தி புவனேந்திரராஜா இவர்கள் நால்வரும் ஊடகத்துறையிலும், எழுத்துத் துறையிலும் அநுபவம் நிறைந்தவர்கள். இந்நால்வர் பெருமக்கள் நூலை ஆய்வு செய்து சமர்ப்பிக்க முன்னனி எழுத்தாளர் பாடும் மீன் சு. ஸ்ரீகந்தராஜா அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கி புத்தகத்தை வெளியிட்டும் வைத்தார்.

இப்போது சோழநாட்டு அரச சபைக்குத் திரும்பி வருகிறேன். எள்ளி நகையாடியவரின் கொட்டத்தை அடக்க கம்பர் பெருமான் எழுந்து மன்னா இது பரிகசிக்க வேண்டிய பாட்டு இல்லை பரிசளிக்க வேண்டிய பாட்டு என்றார். பாட்டுக்கு விளக்கம் கூறும்படி மன்னர் கூறவும் ,

காக்கும் கடவுளான விஷ்ணுவுக்கு நிகராக நாட்டையாளும் மன்னனே, மண்ணையுண்ட மாயவனின் மருகனான முருகனைப் போன்ற அழகனே, கர்ணனுக்குப் பின்னால் கொடைக்குச் சிறந்த வள்ளலே, உன்னுடைய முன்னோன் பெரிய கோயில் கட்டி பெயர் பெற்ற சோழ வம்சத்தில் வந்த பெருமானே என விளக்கவும் பாடியவனுக்கு பரிசு கிடைத்தது என்பதைச் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேண்டுமா?பரமானந்தமாகப் பரிசைப் பெற்றுச் சென்றான் மனைவிக்காகப் பாட்டை இயற்றியவன்

இந்த வேடிக்கையான கதை ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரான் அவர்கள் கம்பராமாயாண விரிவுரையை ஆரம்பிக்கும் போது கம்பரின் பெருமையைக் கூறுவதற்காகச் சொன்னது. நூல் வெளியீட்டின் பின் என்னை ஒரு சில வார்த்தைகள் சொல்லச் சொன்னார்கள். அப்போது என்னுடைய நினைவுக்கு வந்த இந்தக் கதையைக் கூறினேன். இந்தக் கதையை நான் கேட்டு முப்பது வருடங்களுக்கு மேலாகியிருக்கும். ஆனாலும் தம்பிரான் சுவாமிகளின் கணீரென்ற குரலில் அன்று கேட்டது இன்னும் நினைவில் பதிந்துள்ளது. அதைக் கேட்டு சபையோரும் அறிஞர்களும் ரசித்தனர்.

பார்த்து, கேட்டு, படித்து, உணர்ந்து, அநுபவித்ததை மனதில் அலசி , வடிகட்டி, வேண்டிய முறையில் சிலதை மாற்றி, சிலதை சேர்த்துப் பகிர்ந்து கொள்வதுதான் எழுத்து. அது வாசகர்களின் சிந்தனையைத் தூண்டி அதையும் தாண்டி மனதில் இடம் பிடித்தால். அது எழுத்தின் வெற்றி இது எழுத்தாளர் சிவசங்கரி அவர்களின் கருத்து. இந்த வகையில் என்னுடைய எழுத்துக்குக் கிடைத்த சிறு வெற்றி என்னை மறுமுறையும் எழுதத் தூண்டியது எனலாம். இவற்றுக்கு மூல காரணமாயிருப்பது

குருவருளும் திருவருளுமே

என்பது என்னுடைய திடமான நம்பிக்கை.



நூறாண்டுக்கு மேல் பழைமையான ஆத்தியடி பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவாக ஒரு நினைவு

விடிந்தும் விடியாத காலைப் பொழுதில் சூரியனை அபூர்வாக சில நேரம் மட்டும் பார்க்கும் மார்கழி மாதம். தூவலாகக் கொட்டிய பனித் துகள்கள் பாறைபோல் உருகி பின்னர் இறுகும் போது கண்ணாடி போன்றாகிறது. அதன் பின் மழைத்துளிகள் பட்டு ஈரமாகும் போது வழ வழ என வாகனங்கள் வழுக்கிச் செல்லும் வாகனம் ஓட்டுபவர்கள் மிகவும் நிதானமாக ஓட்ட வேண்டும். அல்லவெனில் பயங்கர விபத்துக்கள் சம்பவிக்கும் வாய்ப்பு உண்டு. நடந்து செல்பவர்கள் கூட கவனமாக காலடியெடுத்து வைக்க வேண்டும். இல்லையெனில் வழுக்கி விழுந்து எலும்புகளை ஒடித்துக் கொள்ளும் அபாயம் உண்டு. இந்தத் தொந்தரவுகள் எதுவும் இல்லாது என்னுடைய மகன் பவானந்தன் காரை ஓட்ட பக்கத்தில் அமர்ந்து டென்மார்க் நகர வீதிகளில் பயணம் செய்து கொண்டிருந்தேன். குளிர் காலத்துக்கு உரிய கோலத்தில் மரங்கள் எல்லாம் இலையை உதிர்த்து விட்டு வெறும் குச்சிகளாக நிற்கின்றன .நத்தார்ப் பண்டிகையையொட்டி இந்த மரங்களும், கட்டிடங்களும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஜெகஜ்ஜோதியான இந்தக் காட்சி வேறு ஏதோ ஒரு உலகத்தில் பயணம் செய்வது போன்ற உணர்வை உண்டாக்கியது.

என்னுடைய நினைவுகள் ஒரு சில தினங்களுக்கு முன் நடந்த என்னுடைய எழுபத்தைந்தாவது பிறந்தநாள் விழாவை நோக்கிச் செல்கிறது. "என்னை நன்றாகப் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்பது திருமுலரின் வாக்கு. என்னைப் படைத்து, இந்த முக்கால் நூற்றாண்டு காலம் வாழ வைத்து, இன்ப துன்பம் என்ற இரண்டினையும் அநுபவிக்க வைத்து அதன் மூலம் முக்கியமான பேறாக தன்னைச் சிந்தனை செய்யக் கூடிய மனம் அமைத்துத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்தும் விழாவாக எனது பிறந்த நாள் விழா அமைய வேண்டும் என்பது என்னுடைய அவாவாக இருந்தது.

விழாவுக்கு முன்பு குரு தம்பதிகளான ஹரன் ஐயாவிடமும், அம்மாவிடமும் ஆசீர்வாதம் பெற வேண்டும் என அவர்களிடம் ஆசி பெற்று வந்த பிறகு பிறந்தநாள் விழாவை டென்மார்க் வேல் முருகன் ஆலயத்தில் நடத்தி வைக்கலாம் எனத் தீர்மானித்தோம். வேல்முருகனுக்கு விசேட அபிடேகம், அலங்காரம், ஆராதனை இவைகளுடன் ஸ்ரீமாதுல சர்மா அவர்கள் இதைச் சிறப்பாகச் செய்து வைத்தார்.

டென்மார்க் நாட்டில் வாழும் அடியார்கள், அறிஞர்கள் நூறு பேருக்கு மேல் வந்திருந்து வாழ்த்திச் சென்றார்கள். இந்த ஆலயம் மூன்றாண்டுகளுக்கு முன் வாடகைக் கட்டடம் ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டது. இங்கே தான் என்னுடைய முதல் புத்தகமான ஆன்மீகப் பயணத்தின் இனிய நினைவுப் பகிர்வு நூல் அறிமுகம் இடம் பெற்றது. அப்பொழுது இந்த அடியார்களின் உற்சாகத்தைக் கண்டு வெகு விரைவில் சொந்தமான நிலத்தில் ஆலயம் அமைய வேண்டும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் பிரார்த்தித்தேன்.

இப்பொழுது வேல் முருகன் அருளால் சொந்தமான நிலத்தில் ஆலயம் உருவாகி வருகிறது. இதற்கென அடியவர்கள் பலர் பசியுறக்கம் பாராது உழைத்து வருகிறார்கள். உழைப்பு, அதன் பின் உல்லாசம் என்பவற்றோடு நின்றுவிடாது சரியை நெறியிலே தொண்டு செய்யும் அந்த அடியார்களின் செயல் பாராட்டக் கூடிய ஒன்று.

பாராட்டுக்கள் மனித மனத்திற்குத் தெம்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். இவர்களே கட்டிய மலர் மாலைகள் இறைவனை அலங்கரித்து அவர்கள் தயாரித்த உணவுகள் பிரசாதமாகி அடியவர்கள் எல்லோருக்கும் அமிர்தமாகியது.

திரு தர்மராஜா அவர்கள் அன்னையின் பெருமையைக் கூறும் ஒரு பாடலைப் பாடி வாழ்த்தினார். ஒரு பாடகர், நடிகர் என இவருக்குப் பல முகங்கள் உண்டு. திரு ஜீவகுமாரன் அவர்கள் ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தி என்னை வாழ்த்தினார். திரு ஜீவகுமாரன் விழாவில் கூறிய இந்தப் பழைய சம்பவம் என்னை அந்த நாளுக்கு அழைத்துச் சென்றது

கிராமத்து வீடு ஒன்று, சிறுமி ஒருத்தி வாசலை நோக்கியபடி எதையோ எதிர் பார்த்துக் காத்து நிற்கிறாள். என்ன என்று கூற முடியாத உணர்வுகள் பல அவள் மனதை நிரப்பியிருக்கிறது. அடிக்கடி மணியைப் பார்ப்பதும், வாசலைப் பார்ப்பதுமாக மனம் நிலை கொள்ளாது தவிக்கிறாள். இதற்கெல்லாம் காரணம் இன்று பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் விழாவில் நடைபெறும் நாடகத்தில் பங்கு பற்றும் சந்தர்ப்பம் அவளுக்கு அமைந்திருந்தது. வீட்டில் பெற்றோருக்கு இது தெரிவிக்கப் படவில்லை. அதை அவர்களிடம் கூறும் துணிவும் அந்தப் பெண்ணிற்கு இல்லை.

பெண்கள் பலர் பார்க்க மேடையேறி நடிப்பதோ, நடனம் ஆடுவதோ அவர்களுக்கு பிடிக்காத ஒன்று. நாடகத்திற்கென்று ஆசிரியை தேர்ந்தெடுத்த போதே இதை அவரிடம் கூறினாள் அந்தப் பெண். ஆனால் அந்த ஆசிரியையும் அவர் குடும்பத்தினரும் இவள் தந்தையின் குடும்ப நண்பர்கள் இதனால் அவர்களிடம் கதைத்து நான் அநுமதி பெறுகிறேன். நீர் கவலைப்பட வேண்டாம் என பயிற்சியில் சேர்ந்து கொள்ளச் சொல்லி விட்டார். தான் கேட்டால் மறுக்க மாட்டார் என்பது ஆசிரியையுடைய நம்பிக்கை.

பெண்ணுக்கோ அப்படி அவர் கூறும் போது மறுக்க முடியவில்லை என்பது ஒரு பக்கம், எல்லாப் பிள்ளைகளையும் போலத் தானும் நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் ஆர்வம் மறுபக்கம் ஆக நாடகத்திற்குப் பயிற்சி அளிக்கப் பட்டு ஒத்திகையும் முடிந்து நாடகம் அரங்கேறும் தினமும் வந்து விட்டது. பெற்றோரிடம் அநுமதி பெறுவது இது வரைக்கும் நடைபெறவில்லை. பெற்றோரிடம் கதைப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவேன் என்று கூறிய ஆசிரியையும் வரவில்லை. இப்போது இந்தப் பெண்ணின் தவிப்பிற்கு இது தான் காரணம்.

போய் நாடகத்தில் பங்கு கொள்வதா இல்லை வீட்டிலேயே பேசாமல் இருந்து விடுவதா இரண்டுக்கும் இடையில் போராடிய மனது வருவது வரட்டும் நாடகத்தில் நடிப்பது எனத் தீர்மானித்தது பாடசாலைக்கு பிள்ளைகளை ஏற்றிச் செல்லும் காரும் வந்து சேர்ந்தது. காரில் ஏறிச் சென்று நாடகத்தை நிறைவேற்றிப் பாராட்டுக்களும் பெற்று வீடு வந்த பெண் ஒன்றும் நடைபெறாதது போல படுத்துக் கொண்டாள்.

ஆங்கில நாடகம் ஒன்றில் அரசன் வேடம் ஏற்று நடித்த காரணத்தால், அரசனுக்குரிய உடைகள் எல்லாம் சீன்காரர்களே தந்த காரணத்தால் உடை தேட வேண்டிய தேவையும் இருக்கவில்லை. இந்த விழாவுடன் பாடசாலை விடுமுறை தொடங்கி விட்டதால் வீட்டிலேயே பொழுது அமைதியாக கழிந்தது.

ஒரு சில தினங்களில் அந்த அமைதிக்கு முற்றுப்புள்ளி வைக்க அந்தப் பெண்ணின் தந்தையின் நெருங்கிய உறவினரும், நண்பருமான ஒருவர் வந்து சேர்ந்தார். "நீர் ஏன் மச்சான் பெற்றோர் தின விழாவுக்கு வரவில்லை"? என வந்த நண்பர் பெண்ணின் தந்தையை கேட்கிறார். அதற்குப் பெண்ணின் தந்தை "உன்னுடைய மகளைப் போல் என்னுடைய மகளும் மேடையேறி நடித்திருந்தால் அல்லவோ நான் வர வேண்டும் எனப் பதில் சொன்னார்." அவருடைய மகள் எப்போதும் நாடகம், நடனம் இவைகளில் பங்கு பற்றுவதும் அதை பற்றி அவர் பெருமையாக பேசுவதும் இவருக்கு தெரிந்த ஒன்று. அப்போது நண்பர் "உன்னுடைய மகளும் அரசனாக வந்து கம்பீரமாக நின்றாளே" என குட்டை உடைத்து விட்டார். தனக்கு தெரியாத ஒன்றை நண்பர் மூலம் கேட்டறிய அவர் மனதில் எத்தனை கோபம் மூண்டிருக்கும் என்பது ஊகிக்கக் கூடிய ஒன்று. அதற்கு மேல் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது வெளியே தெரியாத செய்தி. நண்பருடைய கேள்விக்குச் சிரித்தே சமாளித்திருப்பார், சமயத்தில் கோபத்தை சிரித்தே அடக்குவதில் கை தேர்ந்தவர் இந்தப் பெண்ணின் தந்தை.

வழமையாக இங்கு ராணுவச் சட்டம் தான் அமுல் படுத்தப்படும். தாங்கள் வைத்த சட்டத்தை மீறுபவர்களுக்கு உடனடியாக தண்டனை வழங்கப்பட்டுவிடும். விசாரணை, மன்னிப்பு இவைகள் இங்கே இல்லை. தண்டனையில் இருந்து தப்புவதற்கு மார்க்கம் வேறு இல்லை. இரண்டு ஆண் சகோதரர்கள், ஒரு பெண் இவ்வளவு தான் இந்தக் குடும்ப அங்கத்தவர்கள். மூத்த சகோதரரும் கடைக் குட்டிப் பெண்ணும் அடிக்கடி சட்டத்தை மீறித் தண்டனை அநுபவிப்பதுண்டு. நடுச் சகோதரர் கொஞ்சம் உடல் பலமுள்ளவராக இல்லாத காரணத்தால் சட்டத்தை மீறுவதும், தண்டனை வாங்குவதும் குறைவு.

நண்பர் சொன்னது உண்மையா? இவ்வளவு தான் விசாரணை. இம் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையான பிரம்படியுடன் பாடசாலைக்கு இனிச் செல்லத் தேவையில்லை என்ற மேலதிக தண்டனையும் வழங்கப்பட்டது. வருவது வரட்டும் எனத் தீர்மானித்தே நாடகத்தில் பங்கேற்கச் சென்றிருந்த படியால் பெண் இதைப்பற்றி வருந்தவில்லை. சில நாட்களில் இந்தப் பெண் பருவமடைந்தாள். இதனால் பாடசாலைக்கு ஏன் போகவில்லை என்ற காரணம் ஊராருக்கு பெரிதாக தெரியாது.

பிள்ளைகளுக்கு உணவு, உடை, வீடு, வசதி இவைகளிலே தான் செல்லம் கொடுக்கலாம் ஒழிய கட்டுப் பாடுகளை தளர்த்திச் செல்லம் கொடுப்பது என்ற கொள்கையில் தாய், தந்தையார் இருவரும் மனமொத்து அமுல் படுத்துவார்கள். ஆனால் இம்முறை பெண்ணினுடைய கல்வியில் மட்டும் தாய்க்குக் கொஞ்சம் வித்தியாசமான அபிப்பிராயம். இதனால் பருவமடைந்த பெண் உடம்பு தேறியதும் ஒரு சில மாதத்தில் பாடசாலைக்கு அனுப்பலாம் என தீர்மானிக்கப்பட்டது. தூரதிருஷ்டவசமாக பெண்ணிற்கு உடம்பு தேறும் முன்பே காலதேவன் தந்தையை அழைத்துச் சென்று விட்டான்.

மனமுடைந்த தாயார் வீட்டுப் பொறுப்பு இவைகளுடன் கல்வி பற்றிய நினைவுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. தந்தையின் ஆண்டுத் திதி வந்து முடிந்த பிறகு மனம் தேறிய தாய் பெண்ணைக் கல்வி புகட்டாது வீட்டில் வைத்திருந்தால் வருங்காலம் சிறப்புற அமையாது என பாடசாலைக்கு அனுப்பத் தீர்மானித்த வேளை பெண்களுக்கு கல்வி எதற்கு வீட்டையும், கணவனையும் பார்க்க தெரிந்தால் போதும் என ஒரு ஆண் மகனின் தாயார் (நெருங்கிய உறவினர்) இந்தப் பெண்ணை தன்னுடைய மருமகளாக ஏற்றுக் கொள்ள முன் வந்தார். உலகின் நிலையாமையை மனதில் கொண்ட தாயாரும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டு விட்டார். பிறகென்ன கொட்டு மேளம் தான். கல்வி பின்னுக்குத் தள்ளப்பட்டு திருமணம் முன்னே வந்தது. இத்தனை நிகழ்வுகளும் முழுமையாக இரண்டு வருடங்களுக்குக்குள்ளேயே நடை பெற்று முடிந்தது. பாடசாலைக் கல்வி கிடைக்கவில்லை இதனால் இளமைப் பருவத்தில் கிடைக்க வேண்டிய அனுபவங்கள் எதுவும் கிடைக்க வில்லையென மனம் ஓய்ந்துவிடவில்லை. உலகம் என்ற பாடசாலையில் அநுபவம் என்ற பாடத்தை நன்றாகப் படித்து இன்று எழுபத்தைந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடி முடிக்கின்ற நான் தான் மேற்கூறிய கதையில் கதாநாயகி என்பதை தெரிந்து கொண்டிருப்பீர்கள். ஜீவகுமாரன் விழாவில் கூறிய இந்தச் சம்பவம் என்னை அந்த நாளுக்கு அழைத்துச் சென்றது.

"யான் பெற்ற இன்பம் இவ் வையகம் பெறுக" என உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். என்னுடைய நினைவுகள் என்ற இந்தப் புத்தகத்திற்கு ஆலோசனைகள் கூறி வாழ்த்துரையும் தந்த ரஞ்சனா பரமேஸ்வரன், புத்தகத்தை மேற்பார்வை செய்து அணிந்துரை தந்த அவுஸ்திரேலியாவின் பாடும் மீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீகந்த ராஜா அவர்கள், கனடா வாழ் திரு Dr . சண்முகவடிவேலு அவர்கள், ஆத்தியடிச் செல்வன் திரு திருச்செல்வம் அவர்கள், (இவர்கள் இருவரும் எங்கள் ஊரையும் உறவையும் சேர்ந்தவர்கள்) திரு ஜெயராமஐயர் அவர்கள், இப் புத்தகத்தை சிறப்புற பதிப்பித்த சினேகன் பதிப்பகம் இவர்கள் எல்லோரும் என்றென்றும் நன்றிக்குரியவர்கள்.

இப் புத்தகத்தை அச்சேற்றுவதற்கு கணனி மூலம் உதவி செய்த என் பிள்ளைகள் பவானநந்தன், பாலநந்தினி, பவானி ஆகியோர்கள் காரணமாகிறார்கள். டென்மார்க் வேல்முருகன் ஆலயத்தில் பிறந்தநாள் விழாவிற்கு வந்திருந்து அன்பளிப்புக்கள் செய்து வாழ்த்திச் சென்றவர்களுக்கும் நன்றி கூற கடமையுள்ளேன். அன்பளிப்புகளில் ஒரு சில பொருட்களையும், அன்பையும் மட்டும் நினைவுக்கு எடுத்துக் கொண்டு அன்பளிப்புத் தொகையை வேல்முருகன் ஆலயத்துக்கு கட்டிட நிதிக்கு அளித்து அவுஸ்திரேலியா சேர்ந்தேன். விமான நிலையத்துக்காக காரில் செல்வதற்கு காரில் செல்லும் போது எழுந்த நினைவுகள் தான் இந்தக் கட்டுரையாக அமைந்தது.



நூலாசிரியரும் கணவரும் (1952)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






9 788192 709802

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org